032

# ஸ்ரீகரன்

## ஒரு தமிழ் நாடகம்

No —
20 JUN 1922

K. சேஷாத்திரி ஐய்யர்
ஹைகோர்ட் வக்கீல்,
மாயவரம்.

*All Rights Reserved.*

PRINTED AND PUBLISHED
BY THE COMMERCIAL PRESS,
MADRAS.
1922.

224210

[விலை ரூ. 1—4—0.

# ஸ்ரீகான்

## ஒரு தமிழ் நாடகம்


K. சேஷாத்திரி ஐயர்

ஹைகோர்ட் வக்கீல்,

மாயவரம்.



*All Rights Reserved.*



PRINTED AND PUBLISHED

BY THE COMMERCIAL PRESS,

MADRAS.

1922.

Price Rs. 1—4—0.] [விலை ரூ. 1—4—0.

B

OFFICE OF THE REGISTRAR ...
No.——
20 JUN 1922
MADRAS

In affectionate memory of
My earliest and best friend,
Prematurely gathered to the womb of the Kauveri
in the year 1894.

# நாடகபாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| சோமதத்தன் | ... | தொண்டைநாட்டரசன் |
| ஸ்ரீகரன் | ... | இளவரசன் |
| அஹிம்ஸன் | ... | இளவரசனின் தோழன் |
| ஹிதோபதேசன் | ... | மந்திரி |
| சுத்தபிரம்மசர்மன் | ... | குரு |
| ரணபாஸ்கரன் | ... | ஒரு ராணுவத்தலைவன் |
| ஹரிஹரசாஸ்திரி | ... | அரண்மனை ஜோஸியர் |
| மிருத்யுகண்டகர் | ... | அரண்மனை வைத்தியர் |
| ஸாகரன் | ... | விகடன் |
| ராமய்யா நாயுடு<br>ரங்கய்யா நாயுடு | ... | சேவகர்கள் |
| வடிவேலுபிள்ளை | ... | கொத்தவால் |
| கேசவய்யா | ... | ஓர் புஷ்பக்காரன் |
| கோபால ராவ் | ... | ஓர் விகடன் |
| திம்மப்பன் | ... | ஓர் கூலிக்காரன் |
| சரபவர்மன் | ... | புகார் நாட்டரசன் |
| ஸுபாஷிணி | ... | சோமதத்தன் மனைவி |
| லலிதை | ... | ஒருதுறவிப் பெண் |
| மாதங்கி | ... | சரபவர்மன் புத்திரி |
| சோர்ணம் | ... | ஒரு கூலிக்காரி |

இன்னும் சேவகர்கள், தோழி முதலானோர்.

இடம்.—பெரும்பாலும் தொண்டை நாட்டிலும் கொஞ்சம் புகாரிலும்.

---

* * * இக்குறிப்புகண்ட விடங்களில் பாட்டுகள் போட்டுக் கொண்டு ஆடலாமென்று நூலாசிரியரின் அபிப்பிராயம்.

20 JUN 1922
22421

MADRAS
No.——
20 JUN 1922

# ஸ்ரீகரன்

## முதலாவது அங்கம்

### 1-வது காக்ஷி

**இடம்—ஸுபாஷிணியின் ஓர் அறை.**
**காலம்—மாலை.**

ஸுபாஷிணி ஒரு மஞ்சத்தின்மீது சாய்ந்திருக்க அஹிம்ஸனும், ஸாகரனும் வருகிறார்கள்.

அ.—அம்மணி! நமஸ்கரிக்கின்றேன். அவஸரமாக இப்பொழுது என்னை இங்கு அழைத்தது என்ன காரணம்? ஏதோகொஞ்சம் மனவருத்தத்துடன் இருப்பது போல் காண்கிறீர்கள். என்ன விசேஷம்?

ஸு.—அஹிம்ஸா! என்னைப்போன்ற துர்ப்பாக்கிய சாலி இப்புவியிலும் உண்டோ? என் மனக்குறை எவ்வாறு நீங்கும்? நான் எவ்வளவோ போதித்தும் ஒரே பிடியாய் நிற்கிறானே ஸ்ரீகரன். "பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பதும் உண்மையாயிற்றே. அஹிம்ஸா! இதற்கு யாதும் உபாயம் இல்லையா?

அ.—அம்மணி! சிறுபிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பது ஆச்சரியமா? மேலும் ஸ்ரீகரன் சொலுவது அங்கீகரிக்கத் தக்கதல்லவென்று எப்படி சொல்லக்கூடும்? எதற்காக அம்மா, மனங்கொண்டு கட்டுண்டு திண்டாடுகிறது?

அதனால் உண்டாகும் கஷ்டமும் நிர்ப்பந்தமும் இவ்வள வென்று சொல்லிமுடியுமா?

ஸஹ.—ஆம், அம்மா, என்ன கஷ்டம்! என்ன கஷ்டம்!! வேணும்; வந்து பார்க்க நம்பாத்திலே. வாண்டாம் வாண்டங்கச்சே, கொண்டு போய் மாட்டிப்பிட்டேளே! ஐயோ, ராகவா!

ஸா.—விகடா, சற்று பேசாமலிரு. அஹிம்ஸா! உன்னை எவ்வளவோ புத்திசாலி யென்றல்லவோ இது வரை மதித்து வந்தேன். நீ இப்படிப் பேசுவது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது! உன்னைத் தெரியாதவன் என்று சொல்லவும் நியாயமில்லை. ஒருக்கால் உன் தோழன் அவன் பக்ஷமாகவே பேசும்படி உனக்கு ஏதாவது கட்டளையிட்டிருக்கிறானோ?

ஸா.—அம்மணி! அதில் என்ன சந்தேகம்!

அ.—அம்மணி! அப்படி யொன்றுமில்லை.

ஸா.—பின்பு நீ ஏன் என் அபிப்பிராயத்திற்கு விரோதமாகப் பேசவேண்டும்? நான் சொல்லுவதோ உலகத்தார் ஒப்புக் கொள்ளக்கூடியதே தவிர வேறில்லை. அப்படியிருக்க,இப்படித் தாறுமாறாய்ப் பேசுவது உசிதமாகுமா? இதற்குத்தானோ ஸ்ரீகரனுக்கும் உனக்கும் வேற்றுமையில்லாமல் இது வரையில் வளர்த்து வந்தேன். எங்களுடைய இஷ்டத்திற்குக் கீழ்ப்படியாமல் ஸ்ரீகரன் நடப்பது உனக்கும் சம்மதிதான் போலும்!

ஸா.—நான் வண்ணாச் சொல்ரேன், கேளுங்கோ. இவர் உட்கை இல்லாதே, ஒண்ணுமில்லேண்ணு வச்சுக்குங்கோ.

அ.—அம்மணி! இளவரசுக்கு மணங்கொள்ளவே மனமில்லாதிருக்குமாயின், தாங்கள் நிர்ப்பந்திப்பது நியாயமல்லவென்றே எனக்கும் தோன்றுகிறது. ஆயினும் தங்களுடைய கருத்திற்கு மாறாக மதிக்கவேண்டாம்.

ஸா.—அப்படி வாருங்கோ.

ஸ.—அஹிம்ஸா! நீ உலகத்தை அறியாதவன்போல் பேசுகிறாயே? உன் புத்திக்கும், நீ கற்ற கல்விக்கும் இதுதானோ அழகு? வயது முதிர்ந்த தந்தையாரது தலைச்சுமையை ஏற்றலன்றோ பருவமடைந்த மக்களுக்கு மேன்மை? அதல்லவோ முறைமை? வம்சத்தில் உதித்த புத்திரன் மணங்கொள்ளாது எவ்வாறு தன் முன்னோர்களின் கடன்களைத் தீர்ப்பான்? மேலும் நீதிவழுவாது அரசுசெலுத்திவரும் செங்கோன் மன்னனது பிரஜைகள் அனைவரும், ஸகல நற்குணமும் பொருந்திய இளவரசனது மணக்கோலத்தைக் கண்டுகளிக்க எவ்வளவு ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் மனம்நோக நடப்பதோ, உயர்குலத்திற்பிறந்த இராஜகுமாரனுக்கு லக்ஷணம்?

* * * *

ஆ! அஹிம்ஸா! இதற்கு ஒருமார்க்கமும் இல்லையா? மன்னர் மன்னனுக்கு மகளாய்ப்பிறந்து தனதனும் வியக்கத்தக்க செல்வமும் செழிப்பும் வாய்ந்த இந்நாட்டுக்கதிபதியாய் விளங்குகின்ற மன்னனுக்கு மாலையிட்டு, ஒப்பிலாமாணிக்கம்போன்ற ஸகல குணசீல சம்பன்னனான அருமை மகனைப்பெற்றெடுத்தும் புலர்நகைக்கும்படி என் வாழ்வெல்லாம் குன்றிவிடும் போலிருக்கிறதே!

அ.—அம்மணி! நான் இதுவரை இவ்விஷயத்தில் நடந்து வந்ததைத் தாங்கள் கவனிக்கலாகாது. தங்களுடைய மனோரதத்தை, இனி எவ்விதத்திலும் பூர்த்திசெய்ய முயலுகிறேன். * * * *

ஸு.—அஹிம்ஸா! இது உண்மைதானா? மறுபடியும் ஸ்ரீகரனைக்கண்டதும் மாறிவிடுவாயோ?

ஸா.—சத்தியம் வாங்கிக்குங்கோ. அம்மா! சத்தியம்.

அ.—இதென்னம்மா இப்படி கேட்டீர்கள்? தங்களுடைய மனநிலைமையை நான் அறியாமலிருக்கிறேனா?

ஸு.—நல்லது! அப்படியானால் உனக்குத்தான் தெரியுமே! என்பதியின் அபிப்பிராயம். அதற்கென்ன சொல்லுகிறாய்?

அ.—செஞ்சி நாட்டரசன் மகள்தானே?

ஸு.—ஆம். எந்தவிதத்தில் அவளுக்குக் குறைவு சொல்லக் கூடும்?

அ.—அம்மணி! எப்படியாவது ஸ்ரீகரன் விவாஹம்செய்து கொள்ளவேண்டு மென்பதுதானே, நமது முக்கிய கருத்து! அப்படிக்கிருக்க, அவன்யாரை விவாகம் செய்துகொண்டால் நமக்கென்ன?

ஸு.—ஆனால் அவளைக்காட்டிலும் மேலாக வேறொரு பெண்ணும் என் கண்ணுக்குப் புலப்படவில்லையே!

ஸா.—ஆம் அம்மா. படத்திலே பார்க்கச்சயே இவ்வளவு லக்ஷணமாயிருக்காளே! ஆ! இந்த ரம்பே கிம்பேன்னு சொல்லுவாளே, அவா கூடகிட்டவரமுடியாது.

அ.—அம்மா, நான் சொல்லுவதைக்கொஞ்சம் கவனித்துக் கேட்கவேண்டும். அவன் எப்படியும் அக்கன்னியைக்

கைப்பிடிக்கமாட்டான். அவளிடத்தில் அவனுக்குக் கொஞ்சமும் பிடித்தமில்லை. ஆதலின் அவன் மன திற்கிசைந்த பெண்ணைத்தான் நாம் ஒப்பவேண்டும்.

ஸு.—சரி, இருக்கட்டும்; அப்படித்தான் யாராவது இருக்கிறார்களோ? உன்னிடத்தில் ஏதாவது இரகசியமாய்த் தெரிவித்திருக்கிறானோ?

ஸா.—இருக்கும்!' இருக்கும்!' இவருக்குத்தெரியாதது ஒன்றுமில்லை.

அ.—அப்படியொன்றுமில்லை. இருந்த போதிலும், ஸ்ரீகரனுக்கு மணங்கொள்ளவே இஷ்டமில்லை யென்று நினைக்க மாத்திரம் இடமில்லை போல் எனக்குத் தோன்றுகிறது. அவனுக்கு ஏதோ வேறொரிடத்தில் இச்சை ஏற்பட்டிருக்கவேண்டும் என்று சந்தேகிக்கிறேன். ஆயினும் சந்தேகமே ஒழிய வேறில்ல; அது நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை.

ஸா:—நான் முன்னியே சொல்லல்லே! எல்லா இவரை முடுக்கினாத்தான் விஷயம் வெளியாகும்; இல்லாவிட்டால் இல்லேன்னு.

ஸு.—உனக்கப்படி சந்தேகம் ஏற்படுவதற்கு என்ன காரணம் நேர்ந்தது?

அ.—அம்மா, சொல்லுகிறேன் கேளுங்கள். சில தினங்களுக்குமுன் நாங்களிருவரும் வேட்டையாடித் திரும்புங்கால் நமது நகருக்கருகாமையிலுள்ள வனத்தில் ஒரு துறவிப்பெண்ணை ஸ்ரீகரன் தற்செயலாய்ப் பார்க்க, அவனது முகம், ஒரு விகாரத்தை அடைந்தது. அதுமுதல் அவன் தனிமையில் எங்கோசென்று காலம்கழிக்கிறான் போல் தோன்றுகிறது. அப்

பெண்ணைத்தான் தேடித்திரிகிருன் என்று நான் நினைக்கிறேன்.

ஸ.—நீ அவனைக் கேட்டுத் தெரிந்துக் கொள்ளக் கூடாதோ?

அ.—கேட்டேன். கேட்டதில் ஏதோ குறிப்பின்றி பேசுகிருனேயொழிய என்னிடத்தில் உண்மையைக் கூறுவதில்லை. ஒருக்கால் அப்பெண்ணிடத்தில் காதல் கொண்டிருப்பானுயின் நமது எண்ணமெல்லாம் நிறைவேறிவிடுமென்று நினைக்கிறேன்.

ஸா.—ஆம்! நான் ஏதோ இப்படி ஒண்ணு இருக்கணுமின்னே நிணைச்சேன்.

ஸ.—அப்படியாளுல், அதைத்தீர விசாரித்தறிய வேண்டுமே! என்ன செய்யலாம்?

அ.—அதோ அவனே வருகிருன். நான் கேட்கிறேன். என்ன சொல்லுகிருன் பார்ப்போம்! அவனுக்கு மறைத்துப் பேசத்தெரியாது. பார்த்தீர்களா, வரும் அலங்கோலத்தை? பசிதாகத்தால் வருந்தியவன் போலும் இராக்கண் விழித்தவன்போலும், தள்ளாடித் தள்ளாடிவருகிருன். நான் சந்தேகித்ததுதான்! இதோ வெகு சீக்கிரத்தில் எல்லாம் வெளியாக்குகிறேன்.

ஸ்ரீ கரன் வருகிருன். * * *

ஸ.—கண்ணே! வா, உட்கார்; என்ன இவ்வளவு முகவாட்டம்? கண்கள் சிவந்து முகம் வெளுத்து நித்திரை நீத்தவன் போலும், கவலையுற்றவன்போலும் காண்கிருய்? உனக்கு என்ன கவலை இருக்கக்கூடும்? என்னிடம் தெரிவிக்கலாகாதா?

ஸ்ரீ.—ஒன்றும் விசேஷமில்லையம்மா. நேற்றையதினம் வெகுநேரம் காட்டில் வேட்டையாடும்படி நேர்ந்தது. அதனால் உண்டான களைதான் இன்னும் தீரவில்லை.

ஸா.—ஆமம்மா! வேட்டை ரொம்ப கடுமை! இவாரெண்டு பேரும் ஒரு பெண்மானைத் தொரத்திண்டு வெகுதூரம் வேகமாப் போனா. நான் ஒரு மரத்தடியில் கொஞ்சம் தலைசாச்சேன். அப்படியே தூங்கிப்போய்ட்டேன். மஞ்சவெய்யிலோடே ஏந்திருந்து பார்த்தேன். அப்பவும் இவா வல்லே.

ஸ்ரீ.—ஸாகரா வெகு சீக்கிரம் எழுந்திருக்கிறாய் என்பதில் சந்தேகமில்லை. உன் வேட்டையே வேட்டை! மிக்க சிரமத்தினால் கொஞ்சம் களைப்பாறினாய் போலும்!

ஸா.—கண்மணி! என்னிடம் மறைக்க முயலுகிறாயே! மூன்று நாள் அஹோராத்ரம் வேட்டையாடினாலும் உனக்குக் களை என்பதே நேராதே! வேறு ஏதோ காரணம் இருக்கவேண்டும். உனக் கிஷ்டமில்லாதிருக்குமாயின், நான் கேட்கவில்லை.

அ.—எனக்கும் அப்படியேதான் தோன்றுகிறது. வேறு ஏதோ விசேஷமிருக்கவேண்டும். அப்பா!
என்ன அதிசயத்தைக் கண்டு வியந்தாய்? அல்லது என்ன அதிசயத்தைக் காணவிரும்பி காணாது நொந்தாய்? தயவுசெய்து சொல்லுமே!

ஸ்ரீ.—நீ குறிப்பிடுவதெல்லாம் நான் அறிவேன். அது விஷயம் பிரஸ்தாபம் செய்ய வேண்டாமென்று நான் உனக்கு எத்தனைமுறை உரைப்பது?

அ.—நான் இப்பொழுது என்னப்பா சொல்லிவிட்டேன்? அப்பெண் என்று கூட வார்த்தை எடுக்கவில்லையே!

அந்தச் சங்கதியைப்பற்றி நான் யாரிடமாவது கூறின தாய் உன்னால் நிரூபிக்கமுடியுமா? நான் அன்றைக்கு நடந்ததை யெல்லாம் அன்றைக்கே மறந்து விட்டேனே.

ஸா.—இப்பதானாகட்டும் நீங்கள் ஏதாவது சொன்னீர்களா என்ன? ஒன்றுமில்லையே!

ஸு.—என்ன அஹிம்ஸா! என்னவோ அப்பெண் என்றாய்? நிறுத்திவிட்டாயே என்ன சமாசாரம்? என்றைய தினம்? என்ன நடந்தது? குழந்தாய்! அதைப்பற்றி என்னிடங்கூடவா சொல்லக்கூடாது? நான் உன்க்ஷேமத்தையே கருதினவளல்லவோ? உன் இஷ்டத்திற்கும் சுகத்திற்கும் பாதகத்தைக் கனவிலும் நினையேனென்று நான் சொல்லவும் வேண்டுமோ?

ஸ்ரீ.—அஹிம்ஸா, இப்படிக்கெல்லாம் கொண்டுவந்து விட்டு விட்டாயல்லவா? நான் இப்பொழுது என்னசெய்கிறது?

அ.—உண்மையைத் தெரிவித்தால் போகிறது! நான்ஏதோ வாய்தவறிக் கூறிவிட்டேன்; அது பிழைதான். இருக்கட்டும். இவையெல்லாம் அன்னையிடமல்லாது வேறு யாரிடம் தெரிவிப்பது?

ஸ்ரீ.—என்ன உண்மை! என்ன சொல்லுகிறது? ஒன்றுமில்லையம்மா! கேளுங்கள், சிலதினங்களுக்கு முன் நாங்கள் வேட்டையாடித் திரும்பிவரும்வழியில் கோட்டை மதிலுக்கு அருகாமையிலுள்ள வனத்தில் ஒரு பெண்ணை அகஸ்மாத்தாய்ப் பார்த்ததுண்டு. பிறகு அவளது ரூபலாவண்யத்தைப்பற்றி நாங்களிருவரும்

சற்று வேடிக்கையாய் வர்ணித்து வார்த்தையாடினது முண்டு. இதைத்தவிரவேறென்றுமில்லை.

அ.—எப்படி? எப்படி? நான் கூடவா வர்ணித்தேன்? நான் அப்பெண்ணை நன்றாய்க்கூட பார்க்கவில்லையே! அது போகட்டும். எவ்வளவு முறைபார்த்திருப்பாய்?

ஸா.—அதைக்கேளுங்கோ.

ஸ்ரீ.—எவ்வளவு முறைபார்த்தால் உனக்கென்ன?

அ.—ஒன்றுமில்லை. கேட்கக்கூடாதா?

ஸா.—எதற்காக அஹிம்ஸா அதைகேட்கிறாய்? எத்தனை முறை பார்த்தால் தான் என்ன? அதில் என்ன தவறு இருக்கிறது? அவன் இச்சித்தபெண்ணை அவன்மனம் போல் மணந்து எப்படியாவது சுகமாய் வாழவேண்டு மென்பதுதானே நமது கோரிக்கை.

அ.—ஆம், தாயே. அதுதான் நான் சொல்லுவதும். நண்பனே! சிலதினங்களாக, நீ இதுவரையில் இல்லாத படி, என்னை விட்டுத்தனியாய் எங்கேயோசென்று காலங்கழிக்கிறாய். உன்னையும் என்னையும் பிரித்தவ ளிடத்தில் எனக்குக் கோபம் வரவேண்டியது நியாய மாயிருந்தாலும், உன்னுடைய நன்மையையே நான்எப் பொழுதும்நாடினவனாதலால், எனக்கு வருத்தமில்லை. ஆனால் என்னையும் அழைத்துக்கொண்டு போகலா காதா? நான் ஏதாவது அந்தக் காட்டு மிருகத்தைக் கண்டு கலங்கி உனக்குப் போட்டியாய்வந்துவிடப்போ கிறேனோ என்று நீ பயந்துவிட்டாயோ?

ஸ்ரீ.—அம்மா, அப்படிக்கொன்றுமில்லை. இவன் என்னென் னவோ பிதற்றுகிறான்.

அ.—ஐயோ! உண்மையைத் தெரிவித்தால் என்னவந்து விடும்? அப்பெண்ணிடத்தில் காதல் கொண்டா யென்பதில் சந்தேகமில்லை. அவளைத்தான் விவாகம் செய்துகொள்ளப் போகிறேன் என்று ஒப்புக்கொள் ளக்கூடாதா? எங்களுக்கெல்லாம் எவ்வளவு கவலை நீங்கும்? "உற்றதைச் சொன்னாலன்றோ அற்றது பொ ருந்தும்."

ஸ்ரீ.—அப்படியே எனக்கிஷ்டமிருக்கிற தென்றே வைத் துக்கொள்ளுவோம். எனக்கு மட்டும் இஷ்டமிருந் தால் போதுமா? அப்பெண்ணின் சம்மதியும் வேண் டாமா?

அ.—அப்பா, இதைமுன்பே தெரிவித்திருக்கலாகாதா? எங் களுக்கெல்லாம் எவ்வளவு கவலை ஏற்படுத்திவிட்டாய்! நீ எங்கு விவாகமே செய்து கொள்ளமாட்டாயோ என்றல்லவோ வருந்திவருகிறோம்! முன்பே இதைத் தெரிவித்திருந்தால் இப்பொழுது விவாகமாகி எவ்வ ளவு காலமாயிருக்கும்?

ஸா.—இப்பொழுது வீமர்த்தத்துக்கு நாள் வக்கணுமே!

ஸு.—கண்ணே! ஸ்ரீகரா! இப்பொழுது என்மனம் எவ் வாறு குளிர்ந்திருக்கிறது! இதோ இப்பொழுதே சொல்லியனுப்பி அத்துறவியை வரவழைக்கிறேன். விவாகத்தையும் நிச்சயம் செய்துவிடுகிறேன். ஸாகரா! சீக்கிரம் அரண்மனை ஜோஸ்யரை அழைத்து வரச் செய்; முகூர்த்தம் வைக்கவேண்டும்.

ஸா.—அப்படியே, அம்மணி!

ஸ்ரீ.—அம்மா என்ன அவசரம்? ஒருக்கால் அப்பெண் முடிவில் சம்மதியாமற் போனாலும் போவாள்போ

விருக்கிறது. நாம் பிறகு வருத்தப்படுவதில் என்ன பயன்? அவளுடைய சம்மதத்தைத் தெளிவுறத்தெரிந்து கொள்ளுவதற்குமுன் நாம் யாதொரு எத்தனமும் செய்வது சரியன்று. நான் காலையில் சென்று முடிவாய்த் தெரிந்துகொண்டுவருகிறேன்.

ஸா.—அப்பா! உனக்கென்ன தெரியும் ஸ்திரீகளின் அழுத்தலெல்லாம்? * * * *

உன்னை மணங்கொள்ள அவள் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும்? நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். இனி உன்கவலையைத்தீர்ப்பது என் கடமை. நீ நேரில்போய் பேசிவருவதிலும் எனக்கு யாதொரு ஆக்ஷேபமும் இல்லை.

ஸ்ரீ.—ஒருக்கால சம்மதியாமல் போனால்?

அ.—அப்படி ஒருக்காலும் நேராது. நீமட்டும் தவறாமல் காலையில் போய்வா; கொஞ்சமும் மன வலுவைத் தளர்த்தாமல் பேசிவா. அப்படியும் முடியாவிடில், நான் இருக்கிறேன்; பார்த்துக்கொள்ளுகிறேன்.

ஸா.—ஆமாம்! ஆமாம்! இவர் இருக்கார்; பாத்துக்குவார்.

ஸ்ரீ.—ஸாகரா, நீ சமயம் தெரியாமல் பேசுகிறாய். அம்மா நான் சென்றுவருகிறேன்.

ஸ.—அப்படியே, அதைரியப்படாதே. எல்லாம் ஜயமாகும். அதோ உன் தந்தை குரல் கேட்கிறது. உன்னைக் கண்டால் ஏதாவது கடிந்து மொழிந்தாலும்மொழிவார். நான் ஒருத்திதானே அவரைத்திருப்பினால் திருப்பினது. நான் பார்த்துக்கொள்ளுகிறேன்; நீ சென்றுவா.

ஸா.—போகச்சேமாத்திரம் அப்படிஜில்லன்று அலங்காரமா ஷோக்கும்படியா போகணும். தெரியுமா!

ஸ்ரீ.—சரிதான் ஸாகரா தெரியும்.

ஸ்ரீகரன் போகிறுன்.

ஸோமதத்தன் வருகிறுன். எல்லோரும் எழுந்து வணங்குகிறுர்கள்.

ஸோ.—பிரியே, எங்கு உன்மகன்? அவன் இங்கு இருக்கிருனென்று கேள்விப்பட்டல்லவோ இங்கு வந்தேன்!

ஸா.—இப்பொழுதுதான் சற்றுமுன்பாக எங்கோ சென்ருன். சீக்கிரம் வந்துவிடுவான். என்ன சமாசாரம்?

ஸோ.—என்ன, இன்னும் பிடிவாதந்தானே? அல்லதுகீழ்ப் படிந்து பேசுகிருனே? பெற்ருேர்சொல்லைப் பிள்ளை தட்டினுன் என்னும் அபசப்தம் நம் குலத்திற்கே கிடையாதே. இவன் எங்கிருந்து உதித்தான்? அவன் மாத்திரம் நாம்குறிப்பிட்டிருக்கும் கன்னியைக்கொள் ளாமலிருக்கட்டும்; பிறகு சொல்லுகிறேன். இன்னும் மூன்று தினங்களுக்குள் பதில் தெரியவேண்டும். அவன் சம்மதியாவிடில் இனி என்முகம் நோக்கா தொழிவான். என்ன அஹிம்ஸா? ஒன்றும் தெரியாத ஏழைப் பூனைபோல் பேசாமலிருக்கிருய்? உன் நண்பன் நடத்தையை நீயும் ஒப்புகிருய் போலும்!

ஸா.—பிராணபதி! தாங்கள்கோபம் கொள்ளலாகாது. தங்களுக்குத்தெரியாதது ஒன்றுமில்லை. எப்படியும் குழந்தையைக்கொஞ்சம் விட்டுத்தான் பிடிக்க வேண்டும்.

ஸோ.—அவன்பிடிவாதம் பிடிப்பதற்கெல்லாம் நாம்உடன் படவேண்டுமோ?

ஸா.—அப்படியல்ல; நான் ஒன்று கேட்கிறேன். தாங்கள் தயவுசெய்து உத்தரம்கூறவேண்டும்.

ஸோ.—என்ன, சொல் பார்ப்போம்.

ஸு.—பிறகு கோபிக்கலாகாது.

ஸோ.—என்ன பெரிய அஸ்திவாரம் போடுகிருய்? இல்லே. சொல்.

ஸு.—தாங்களே யோசித்துப்பாருங்கள். ஸ்ரீகானுக்கு இந்தப் பிடிவாதம் எங்கிருந்து வந்தது?

ஸோ.—இதில் என்னசந்தேகம்? நான் எத்தனையோமுறை எடுத்துரைத்திருக்கிறேனே! எல்லாம் உன்பிறந்த அகத்து பாக்கியந்தான்!

ஸா.—ஆமாம், இல்லாட்டா நம்பாத்திலே பிடிவாதம்வது? ஓங்க கல்லியாணகோல மெல்லாம்தெரியாதா? எவ்வ ளவு சல்லீஸ்! எவ்வளவு சல்லீஸ்!

ஸோ.—ஸாகரா, உன் விகடத்தைக் கொஞ்சம் நிறுத்து.

ஸு.—ஸாகரனே எதற்காகக் கோபிக்கிறது? ஸ்ரீகானுக்கு இந்தப்பிடிவாதம்பித்ரார்ஜிதசொத்துஎன்று சொல்லக் கூடாதோ? நான் தங்களுக்கு வாய்த்தது, தங்கள்பிடி வாதத்தாலன்ரே? எல்லாம் மறந்துவிட்டீர்களா என்ன? என் விவாகவிஷயத்தில் தங்களுக்கும் மாமாவுக்கும் ஏற்பட்ட தகரார் எல்லாம் எவ்வளவு முறைபெருமையுடன் என்னிடம் எடுத்து பெருக்கப் பெருக்கச் சொல்லியிருக்கிறீர்கள்? தங்களேப்போல் தான் தங்கள் புத்திரனும்! "மகனறிவு தந்தையறிவு"

ஸோ.—ஆரம்பித்து விட்டாயா உன் கதையெல்லாம்! நீ எப்பொழுதும் உன் மகன் பக்ஷம்தானே பேசுவது! உனக்கென்னதெரியும், என் சிரமமெல்லாம். நீயோ எப்பொழுதும் அந்தப்புறத்தில் சேடிமார்களுடன்

உல்லாஸமாய்க் காலங்கழிப்பவள். மகனை யடக்கி ஆள சக்தியற்ற பேடியென்று ஏளனமாய்ப் பேசுகிறார்களே, என்மீது அஸூயை கொண்டவர்கள். இதையெல்லாம் நீ எங்கு கவனிக்கிறாய்?

ஸூ.—பிராணேசா, இன்னும் இரண்டு மூன்று வாரங்களுக்குள், நம்மனம் திருப்தியடையும்படி விவாகத்திற்கு ஒப்புக்கொள்ளுவான். அவன் புத்தி மாறியிருக்கிறது. இனி கவலைப்படவேண்டாம். ஆனால்ஒன்றிருக்கிறது. அதில் நாம் கொஞ்சம் தணிந்துதான் போகவேண்டும். அவன் மனதொப்பிய பெண்ணைத்தான் நாம் அவனுக்கு விவாகஞ் செய்துவைக்க வேண்டும். அவன் யாரை விவாகம் செய்துகொண்டால் நமக்கென்ன ? அவன் எப்படியாவது விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்பதுதானே நமது முக்கிய கருத்து! அவனைப்போல் நாமும் பிடிவாதம் பிடிப்பது தானா நமக்கழகு! யோசித்துப் பாருங்கள்.

ஸோ.—ஆம். ப்ரியே! நீசொல்லுவதும் உசிதமென்றுதான் தோன்றுகிறது. அவன் அப்படி யாரையாவது குறிப்பிட்டிருக்கிறானோ?

ஸா.—அதுதான் என்னமோ மூடுமந்திரமா யிருக்கு.

ஸூ.—அது இன்னும் தெளிவாக விளங்கவில்லை; ஆயினும் யாரையோ குறிப்பிட்டிருக்கிறான் என்று நிச்சயமாய்த் தெரிகிறது. தாங்கள் இனிக்கவலைப்படவேண்டாம்.

ஸோ.—சந்தோஷம். ஆனால் இதையெல்லாம் நீ எப்படி அறிந்தாய் ?

ஸூ.—இதையறியக்கூடவா எனக்குப்புத்தியில்லை. எல்லாம் பின்பு விஸ்தாரமாய்த் தெரிவிக்கிறேன்.

ஸோ.—நல்லது நீ எப்படியும் நிரம்பவும் புத்தியும் யுக்தியும் வாய்ந்தவள்தான். என் செங்கோலின் பெருமையெல்லாம் உன்திறமையாலல்லவோ ? நீ ஒருத்தி பக்கத்திலிருந்து சமயோசிதமாய் யோசனைகள் சொல்லிவராமலிருந்தால், என்கோபத்திற்கும் தாபத்திற்கும் என் பிரஜைகள் என்னிடம் இவ்வளவு விசுவாஸமாய் இருப்பது அரிது.

ஸா.—அதிலென்ன ஆக்ஷேபம் ?

ஸோ.—ஸுபாஷிணி! நான் சென்று வருகிறேன். ஸ்ரீகரன் சீக்கிரத்தில் ஒழுங்காய் மறுமொழி கூறுதிருப்பானுயின், உடனே என்னிடம் தெரிவிப்பாய். நான் தக்க சிக்ஷை விதித்துக் கீழ்ப்படியும்படி செய்கிறேன்.

ஸு.—பிராணநாதா ! அப்படியொன்றும் நேராது.

ஸோ.—நேரக்கூடாதென்றுதான் நானும் பார்க்கிறேன். நல்லது நான் போய்வருகிறேன். (போகிறுன்)

ஸு.—அஹிம்ஸா, ஸ்ரீகரன் காலையில் திரும்பிவந்தவுடன் விஷயமெல்லாம் தெரிந்துகொண்டு என்னிடம் வந்துசேர். நான் அதற்குள் முகூர்த்தத்திற்குச் சில ஏற்பாடுகளெல்லாம் சித்தம் செய்கிறேன்.

அ.—அப்படியே அம்மா.

(எல்லோரும் போகிறுர்கள்)

## அங்கம்—ஒன்று

### 2-வது காக்ஷி

இடம்—வனம்.
நேரம்—காலை.

லலிதா வருகிறாள்.

ல.—ஆ! ஆ! எச்செல்வமும் படைத்த சக்கரவர்த்தித் திருமகனான இந்த ஸ்ரீகரனை மணங்கொள்ள விரும்பித்தவம்புரியும் எவ்வளவோ இராஜ கன்னிகைகள் இருக்க, அவர் என்னை உத்தேசித்து இங்குவருவது ஆச்சரியமன்றோ! வனத்தின்கண் துறவியால் எடுத்துவளர்க்கப்பட்டு, இராஜவம்சத்தில் பிறந்தாலும் இராஜரிகம் இன்னதென்று அறியாது ஒழிவுமார்க்கத்தில் புத்திமுற்றிலும் செலுத்திவரும் என்னை இளவரசன் வற்புறுத்துவதனால் என்னபயன்? ஆனால் காமிகளால் அளக்கப்படும் வசனங்களை நான் எவ்வளவோ நூல்களின் மூலமாய் அறிந்திருந்தும், சிறுபிள்ளையாகிய இவரது ஸம்பாஷணை மிகவும் விநோதமாய் இருந்ததைக்கண்டு, இவருடன் சில தினங்களாக வார்த்தையாடிவந்தேன். அதிலிருந்து, நான் ஏதோ அவர் மனதிற்கிசைந்திடுவேனென்று நினைத்துவிட்டார்போலும்! பிறகு என் பிழையைத்திருத்திக்கொண்டு என் மனதைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட்டு வந்திருக்கிறேன். திடீரென்று தெரிவித்தால், எங்கு அவர் மனம் மிகநொந்து, ஏதாவது கெடுதி அடைவாரோ என்று பயந்து, படிப்படியாய்த் தெரிவிக்கவேண்டியதாயிற்று. என்நோக்கத்தைத் தெளிவாய்த் தெரிவிக்கவே

அவரது செந்தாமரைமலர் போன்ற முகம்வாடி மிகவும் பரிதபிக்கக்கூடிய நிலைமையை அடைந்தது. அவரது வேண்டுகோளுக்கு இணங்காவிடில் இராஜகுமாரன் விசேஷமான துன்பத்திற்கு ஆளாவான் என்பதற்கையமில்லை. ஆயினும் அவரிடம் சற்றும் பற்றில்லையென்றால் நான் எவ்வாறு இணங்குவது? நான் இணங்குவேனாயின், அவருக்கு எப்பொழுதும் துன்பத்தை விளைவிக்க ஹேதுவாவேன். ஆகையால் இப்பொழுதே, இராஜகுமாரனுக்கிருக்கும் ஆவலைக் களைந்துவிட்டால்தான் சரி. அவரது மனம் தற்காலம் நொந்தாலும், பிறகாவது எல்லாம் மறந்து, தனது நிலைமையை அறிந்து சுகமாய் வாழ்வார். அவர் குறித்த வண்ணம் அவர் இப்பொழுது இங்குவருவாராயின், நல்ல புத்திகளை எடுத்துரைத்து அவர் இனி இங்கு நாடாதவழி பார்க்கவேண்டும். அவர் வருமுன் தந்தையாரது பூஜா திரவ்யமான இவ்வனத்திலுள்ள புஷ்பங்களைக்கொய்து மாலைகட்டிவருவோம்.

(புஷ்பங்களெடுத்து உலவுகிறாள்)

ஸ்ரீகரன் வருகிறான்.

ஸ்ரீ.—(ஆத்மகதம்) இவ்வனிதையைக் கண்டதுமுதல் என் மனம் முற்றிலும் மாறி, இவ்வுலகில் இதுவரை நான் இன்பமென்று நினைத்து வந்ததையெல்லாம் இப்பொழுது வெறுத்துச்செல்கிறேன். வேட்டைமுதலிய உஸ்ஸாகங்களிலும் ஊக்கம் இல்லை. கனவிலும் நினைவிலும் இவளது உருவே என் முன்னிற்கின்றதே! நான் என்னசெய்வேன்? இப்பூவையை அடைய நான் பூஜை செய்திருப்பேனோ? இவ்வரசியின் பாததூளிபெறுமோ, இம்மூவுலகும்? மணங்கொள் என்று இவளைக்

கேட்க எனக்கு என்னதகுதியிருக்கிறது? அவ ளெங்கே? நானெங்கே? காட்டில் வெருண்ட பெண் மான்போலுள்ள அவளது விழிகளும், மதனன்வில்லை யொத்த அவளதுபுருவங்களும் இளம்பிறைச்சந் திரன் போன்ற அவளது நெற்றியும், மின்னிலிடை யும், அன்ன நடையும் என்மனதை எவ்வாறு கவர்ந்து கொண்டுவிட்டன! கண்ணே! என்னை ஒருக்கால் அன்புடன் கண்ணோக்கலாகாதா? நான் ஜன்மமெடுத்ததே சபலமாய் விடுமே! ஐயோ! சிற்றின் பத்தைத் துறந்து, பேரின்பத்தின் பெருமையையே எடுத்து நிரூபிக்கும் இவளது மனம் ஒருநாளும் சலியாது போலிருக்கிறதே! ஆ! இவள் என்னை மறுப்பாளேல் நான் இறக்க வேண்டியது தான். காலம் சென்று விட்டதே! இன்னும் ஏன் அவள் வரவில்லை? ஆ! ஆ!! அதோ ஈசுவர கைங்கரியத் தின் பொருட்டு புஷ்பங்களெடுத்து மாலைகட்டி வருகிருள். ஐயோ! அம்மாலையை என் கழுத்தில் போட்டு, என்னைக் கட்டியணைய லாகாதா? (லலிதா சமீபத்தில் வருகிருள்)

பெண்ணே * * * * * *

இதுகாலம் புஷ்பங்கள் சேகரித்து வந்தசிரமத்தால் உனது முகம் சிவந்து முத்து முத்தாய் வியர்க்க எனக்கு எவ்வளவு அஸஹ்யமா யிருக்கிறது? சற்று இத்தடாகத்தின் படிக்கட்டில் அமர்ந்து களைதீர்த்துக் கொண்டு செல்லலாகாதா?

ல.—எனக்குக் கொஞ்சமும் களைப்பில்லை. ஆயினும் தாங் கள் இளவரசல்லவோ? நான் தங்கள் வார்த்தை

யைத் தட்டிக்கழிக்கலாகாது. அப்படியே. (உட்காருகிருர்கள்.)

ஸ்ரீ.—நீ இன்னும் எத்தனை காலம் இப்படி மானேடு மானுய் விளையாடிக் காலம் கழிக்கப் போகிருய்? உனக்குப் பருவகாலம் வாய்ந்தும், உனக்குத் துல்லியமான பதியினிடத்து உன்னை அர்ப்பணம் செய்யாமல், உன் தந்தை தன் கடமையையும்பாராது உனது யௌவனத்தையெல்லாம் வீணுக்குகிருரே! எல்லாமறிந்த பெரியவர் நடத்தையை உலகத்தார் எப்படி அங்கீகாரஞ் செய்வார்கள்?

ல.—நான் தந்தை என்றழைப்பவர் என்னை எடுத்து வளர்த்தவரே. அதுதவிர, அவர் என் விஷயமாக முடிக்க வேண்டிய கடமைகள் யாதொன்றுமில்லை. மேலும் என்னை வளர்த்து வந்தவரையில் எனக்கு ஏராளமாய் வித்தை கற்பித்து, பிறகு நான் நடந்து கொள்ள வேண்டிய விஷயத்தில் எனக்கு முழு சுதந்தரமும் கொடுத்துவிட்டார். ஆதலால் நான் விவாகம் செய்து கொள்ளுவதென்ருல் எல்லாம் என்னுடைய இஷ்டமே தவிர வேறில்லை. நான் கற்றுணர்ந்ததிலும் இல்லற வாழ்க்கை யென்பது சொற்பஞுவஸ்தைபோல் தோன்றி மறைவதை நாம் பிரதியக்ஷமாய்ப் பார்க்க, மானிடர்கள் நிரந்தரமான பேரின்பத்தை யல்லவோ அடைய முயல வேண்டும்?

* * * * * * * * *

ஆனதுபற்றித் தாங்கள் மேலும் மேலும் இது விஷயத்தில் சொல்லி என்னபயன்? உலக வாழ்க்கையில் எனக்குக் கொஞ்சமும் பற்றில்லை. மோக்ஷமார்க்கம் மிகக்கடின மானுலும் அதைப்பற்றிச் செல்ல

வேண்டியதே என் கடமை என்பது என்தீர்மானம்.
"துறந்தார் பெருமைத்துணைக்கூறின் வையத்திறந் தாரைக் கொண்டற்று"

ஸ்ரீ.—இதற்குத் தானே நான்முகன் இப்படி ஓர் அபூர்வ சிருஷ்டி செய்தான்! அவளது மௌட்டியம் நன்கு விளங்குகின்றது! புஷ்பம் போன்ற இம் மெல்லிய சரீரமோ துறவிமார்க்கத்திற்கு ஏற்கும்? இரதிபோ லுள்ள உனது அகமோ யோகத்தை நாடக்கூடியது? முற்றிலும் மோகினி அவதாரம்போல் உன்னை யும் படைத்து உனக்கு நிகரான காதலன் ஒருவனை யும் படைத்து இருவரையும் கூட்டிவைத்தாலன்றோ பிரம்ம சிருஷ்டியின் பெருமை விளங்கும்? மணந் திடும் மலர் மங்கையரது முடியிலல்லவோ மகி மை வகிக்கும்? உனது திருவுருவைக் கண்டமங்கை யர்களும் ஆண்டன்மையை விரும்புவார்களே! யோக சித்திகளடைந்த மாமுனிவர்களும் உன் வதனம் ஒரு முறை நோக்கின் உன் பாதம் தஞ்சமென்றடைவார் களே! அவ்விதம் கடினசித்தமுடையவர்களையும் கலக் கும் நீயோ மோக்ஷமார்க்கத்தை அனுஷ்டிப்பது? அது சாத்தியமென்று நான் எளிதில் நம்பேன்.

ல.—இராஜகுமாரரே! இவ்வளவுதானா தாங்கள் கற்றறிந்தது? கேவலம் இவ்வுடலைப்பற்றியா இவ்வளவு வர்ணனை? இந்த மாமிசப்பிண்டம் எதற்குப் பிரயோஜனம்? உண வுக்குக் கூட உபயோகமில்லையே. தாங்கள் இவ்வாறு என்னைத் தொடர்ந்து அலைந்திடலாகாது. முதலில் இச் சிறப்புள்ள நாட்டுக்கு நாளைக்கதிபதியாகி இராஜ்ஜியம் வகிக்க இருக்க, தங்கள் புத்தி விநோதத்திலும் அற்ப சுகத்திலும் அலைந்திடலாகாது. தங்கள் தந்தையாரது

வீரியமும் பிரதாபமுமல்லவோ, இந்நாடு முழுவதையும் அடக்கி ஆளுகிறது? அவர் தலைசாய்ந்தால் இராஜ்ஜியத்தைச் சின்னபின்னமாக அடித்து விட, எத்தனையோ கப்பங்கட்டு சிற்றரசர்கள் காத்திருப்பார்களே! அப்படி சிற்றரசர் படையெடாதன் பொருட்டு, தங்களது இராஜ்ஜியம் நிலைநிற்கும் வண்ணம் தக்க பலமுள்ள இராஜனது மகளை மணந்தல்லவோ தங்களது ஸ்திதியை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்? சாதாரணமான ஜனங்களைப்போல் தங்கள் மனப்போக்குப்படி தாங்கள் மணந்திட ஏலுமோ? தங்களால் தேர்ந்தெடுக்கப்படும் கன்னியைப் பொருத்ததன்றோ ஒருவாறு தங்களது இராஜ்ஜியத்தின் க்ஷேமம்? அதற்கு நான் எப்படித் தக்கவளாக ஆகுவேன்? ஆதலின் தங்களுக்குச் சமமான இராஜகுமாரியைத் தாங்கள் மணம் புரிவதுதான் உசிதம். என்னை மணந்தால் உலகத்தார் நகையார்களோ?

மேலும் தாங்கள் என்னிடம் வைக்கக்கூடிய காதலுக்கு நான் எப்படிப் பிரதி செய்வேன்? காதலில்லாது என்னைத் தாங்கள் விவாகம் செய்து கொண்டால், நான் எப்பொழுதும் பின்பு தங்களுக்கு மனச்சஞ்சலத்தை உண்டாக்கக் காரணமாவேன். தாங்கள் என்னை நாடுவதில் யாதும் குணமில்லை. என்னிடம் தாங்கள் ஒரு சகோதர பாவம் வைப்பதுதான் உசிதம். வேறு விதமாய்த் தாங்கள் எண்ணலாகாது. நான் இவ்வாறு கண்டித்துப் பேசுவதைத் தாங்கள் மன்னிக்க வேண்டும். எல்லாம் தங்கள் நன்மையை உத்தேசித்தே.

ஸ்ரீ.—ஐயோ! நீ வாய்திறந்தருளியதெல்லாம் என் செவி

யில் சற்றும் ஏறவில்லையே! குயில்போன்ற உனது இனிய குரலுக்கு மாத்திரம் என் மனம் செவிகொடுக்க இசைகிறதே ஒழிய, விஷயம் சற்றும் ஏறவில்லையே! என் புத்தியை முற்றிலும் பேதித்து, பிறகு இவ்வுபதேசமெல்லாம் எதற்காக? என்னை வருத்துவதில் உனக்கு என்ன லாபம். என்னிடத்து உனக்கு காதலில்லா விட்டாலும் நான் படும்பாட்டைக் கண்டாவது என்னிடத்து இரங்கலாகாதா? ஆபாதமஸ்தகம் மன்மதபாணத்தால் துளைக்கப்பட்டு என் சரீரமெல்லாம் புண்பட்டிருக்கிறதே! உனது அழகிய கரத்தால் ஒரு முறை தழுவி புண்ணாற்றலாகாதா? உனது புத்திக்கும் ஸௌந்தரியத்திற்கும் நான் எவ்வளவோ தாழ்ந்தவன் என்பதை நன்கு உணர்வேன். ஆயினும் பூவோடுகூடி நாரும் மணம்பெற்றதுபோல் நானும் உன்னேடுகூடி புகழடைவேன். கண்ணே! இம் மெல்லியசரீரத்தில் இக்கடினசித்தம் எங்கிருந்து உதித்தது? என்கண்ணின் கருமணியே! நான் உயிருடன் இருக்கவா? அல்லது இறக்கவா?

ல.—நானெடுத்துச் சொன்னதெல்லாம் வீணுகுமென்று நினைக்கவில்லையே! ஆனல் காமோன் மத்தர்களிடத்தில் என்ன சொன்னல்தான் என்ன? ஒன்றும் பிரயோஜனமில்லை * * * * * *

அரசே! நெடுநேரமாகிறது. நான்சென்றுவருகிறேன். இனியும் என்னைத்தொடர்வீராயின் நான்இவ்வனத்தைவிட்டு எங்காவது தொலைவாகச் செல்லவேண்டியதுதான். தந்தைகாத்திருப்பார். நான் போகிறேன். (போகிருள்)

ஸ்ரீ— * * * * * * * *

ஐயோ, இப்படியாயிற்று என் விதி? ஆனால் நான் மறுபடியும் இம்மங்கையைப் பார்க்கமுயன்றால் யாருமறியாதபடி எங்காவது ஓடிவிடுவாள். இங்கிருந்தால் தானே நாளடைவிலாவது மனமிரங்குவாள் என்று ஆசையாவதுகொண்டிருக்கலாம். இனி என்னசெய்வது? அன்பனிடத்திற்சென்று ஆறுதலடைய முயலுவோம். (போகிறான்.)

## அங்கம்—ஒன்று

---

### 3-வது காக்ஷி

இடம்—ஹொஸூர்மால்
நேரம்—காலை

ஸுபாஷிணியும், ஸாகரனும்

ஸு.—ஸாகரா, நமது அரண்மனை ஜோஸியரை அழைத்து வரச்சொன்னேனே!

ஸா.—அம்மணி, அவர் இங்கே வந்து காத்துக்கொண்டிருக்கிறாரே! அதைச்சொல்லத்தானே இப்பவந்தேன்.

ஸு.—எங்கு இருக்கின்றார்?

ஸா.—இதோ வாசற்படியில் நிக்கறாரே! கூப்படரேன். (ஹரி ஹரி சாஸ்திரிகள் வருகிறார்.) வாருமைய்யா! உமக்காரய்யாசொன்னார். ஜோஸ்யரோல்லியோ, உமக்கு சமயம் தெரியாதா என்ன? வாரும், ஜோதிடக்களஞ்சியமே.

ஹரி.—விகடா, எப்பொழுது பார்த்தாலும் பரிகாசம்தானு? இப்பொழுது மகாராணி பேட்டியாகுமா?

ஸா.—கழுகுக்கு மூக்கிலே வேர்க்கும்னு சொல்லுவாளே, சரியாயிருக்கு! உமக்கு இப்பவரவேண்டிய சமயம்னு யாரையா சொன்னது?

ஹரி.—என்ன விகடா! இதைக்கூட அறியாமல்போனுல், நான் என்ன ஜோஸியன்?

ஸா.—சரிதான், வாரும்.

ஸு.—என்ன, ஜோஸியரே, நீர்சமயத்தில் வருகிறதில்லை.

ஹரி.—மன்னிக்கவேண்டும். எப்பொழுதும் காத்துக் கொண்டிருக்கிறேனே. எனக்குவேறு என்னவேலை யிருக்கிறது?

ஸா.—ஓய், மற்றவாளைப்போல நீரும் ஏன்வச்சுக்கணும். எப்பவரணும்னு ஜோஸ்யத்தாலே பார்த்துண்டு நீ ராகவே சமயத்திலே வந்தூடவாண்டாமா? இவ்வளவு தானு உம்மஜோஸ்யம்!

ஸு.—விகடா, சற்றுபேசாமலிரு. சாஸ்திரிகளே இப்பொ ழுது எதற்காக வரவழைத்தது தெரியுமா?

ஸா.—அம்மா, சித்தேபொறுக்கணும்.எதுக்காக ஐயா, உம் மைவரவழைத்தது சொல்லும், பார்ப்போம்? எங்கே, உங்கஜோஸ்யத்தை!

ஹரி.—(புன்சிரிப்புடன்) விகடா,நீங்களெல்லாரும் இப்பொ ழுதுகல்யாணம்போல் பேசிக்கொண்டிருப்பதை நான் பார்க்கவில்லையா?

ஸு.—விகடா, பார்த்தாயா, நம்முடைய ஜோஸ்யரின் யோக்கியதையை. அவரையா பரீக்ஷிக்கப் பார்க்கிருய்?

கல்யாண விஷயம் என்று சொல்லிவிட்டாரே! நீ இப்பொழுது என்ன செய்வாய்?

ஸ்ரீ.—ஆமாம், ஆமாம், என்ன ஜோஸ்யம்! என்னஜோஸ்யம்! பளிச்சுன்னு அடிச்சூட்டாரே! ஏ அப்பா!

ஸ்ரீ.—சாஸ்திரிகளே விவாகத்திற்கு நாள் வைக்கவேண்டும். இன்னும் ஒருவாரத்திற்குள் பார்த்துவிடும். தெரியுமா? சீக்கிரம்.

ஹரி.—(ஆத்மகதம்) யாருக்குக் கல்யாணம்? என்ன சங்கதி? ஸ்ரீகரரோ விவாகமே வேண்டாமென்று தடுத்துவிட்டார். பிறகுயாருக்கு இருக்கலாம்? அதையும் கேட்கக் கூடாது. என்னசெய்யலாம். இருக்கட்டும், ஒரு யுக்திசெய்வோம். அம்மா! பொருத்த நிமித்தமெல்லாம் பார்த்தாய் விட்டதா?

ஸ்ரீ.—என்ன பொருத்தம்? மனப்பொருத்த மிருந்தால் போதும் என்று, நீரே எத்தனையோ முறை சொல்லியிருக்கிறீரே!

ஹரி.—ஆமாம், அம்மணி, அது சரிதான். ஆனால் நாள் வைக்கவேண்டுமானால் இரண்டுபேருடைய நக்ஷத்திரத்தையும் பார்த்தல்லவோ வைக்கவேண்டும்?

ஸ்ரீ.—ஆம், ஸ்ரீகரனுடைய நக்ஷத்திரம்தான் உமக்குத் தெரியுமே. பெண் நக்ஷத்திரத்திற்குப் பார்க்கவேண்டுமோ? பிள்ளைக்குப் பொருந்தியிருந்தால் போதாதோ?

ஹரி.—போதும், அம்மணி. உலகநடையை அனுசரித்துச் சொன்னேனே ஒழிய வேறில்லை. ஜோஸ்யத்தின் நுட்பம் இவ்விடத்தில் எவ்வளவு நன்றாய்த் தெரிந்திருக்கிறது? ஆனால்—

ஸ்ரீ.—என்ன ? சீக்கிரம், சொல்லும்.

ஸா.—என்னங்காணும் மென்னுமுழுங்கிறீர் ? இதோ பாரும் ஜோஸ்யத்தாலேயே பெண் நக்ஷத்திரம், ஜாதகம் எல்லாம் பாத்துடும். நீர் இருக்கிறீரென்றுதான் பொண்ஜாதகம் கூட வாங்கல்லே. சீக்கிரம். தாமசிச்சா, மகாராணிக்குக் கோபம்வந்துடுன்னு தெரியாது ?

ஹரி.—இதோ ! (ஏடுகளைப்பிறட்டுகிறான்) (ஆத்மகதம்) இதென்னடா சங்கடமாய் முடிந்தது. இப்பொழுதோ இளவரசுக்குக் கடூரமான அஷ்டமாதிதசை நடக்கிறது. மேலும் உக்கிரமான மாரகாதிபதியின் புத்தி. கோசாரப்படியோ, ஜன்மத்தில் சனி. கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை எல்லாம்ஒன்றாய்ச் சேர்ந்திருக்கிறது. இப்பொழுது ஒரு பெரிய கண்டம்நேரிட வேண்டும். உயிர் தப்புவதே அரிது. க்ரஹநிலைகள் இப்படியிருக்க சுபம்என்பது எப்படி நடக்கும்? அதையும் இராஜாங்கத்தில் தெரிவிக்கக்கூடாது. இதற்கென்ன செய்யலாம்? ஓர் உபாயம்செய்து பார்ப்போம். அதுவும் பலிக்காமல் போனால் நாம் என்ன செய்யலாம்? உள்ளதுபோல நடக்கும்.

அம்மணி, இந்த மாதத்திலேயே நல்லநாள் அகப்படவில்லையே.

ஸா.—ஓய், பழசு, கிரஹங்களை இன்னொருதரம் பெரட்டி பாருங்காணும். இல்லாட்டா, வேறே நம்பர் பஞ்சாங்கத்தைப் பாருங்காணும். அதும்படி கிரஹங்கள் வீடு மாறியிருந்தாலும் இருக்கும். அதுவும், சரிப்படாட்டா ஒண்ணிலே இருக்கிறகத்தை இன்னொண்ணிலே தூக்கிப் போடுமே, உமக்குத்தான் தெரியுமே.

ஹரி.—விகடா, என்னடா இது ? க்ரஹங்கள், என்ன புளி மூட்டைகளா ? என்ன வார்த்தை சொன்னாய் ? யாரைப் பார்த்துச்சொன்னாய் ?

ஸா.—இவ்வளவுதானா உம்ம ஜோஸ்யம்? போங்கனும் கட்டுப் பெட்டி கூப்பிட்டுண்டுவரச் சொல்லட்டுமா, உம் மதம்பியை ? நகத்துவன்; எப்படி வேணுமனாலும் பாட்டுக் கொட்டுவன். சனிக்கிழமைகூட பார்க்க மாட்டான்; ராகுகாலம் கவனிக்க மாட்டான். கேட்டாக்கே எப்படி கக்ஷி பேசுவான்! இந்தக்ரஹம் பார்வேம்பான். அந்தக்ரஹம் நீசன்பான். இன்னொரு க்ரஹம் அஸ்தமிச் சுட்டுதும்பான் கக்ஷியையும் நிலைநிறுத்துவான். கூப்பிடட்டுமா ?

ஹரி—வேண்டாம், வேண்டாம். அந்தவாக்குச் சனியனைக் கூப்பிடாதே. நல்லவேளையாய் நாள் அகப்பட்டுவிட்டது. இன்றைக்கு நாலாவது நாள் உதயாதிபத்தரை நாழிகைக்குமேல் சிம்மலக்கினம் பார்த்திருக்கிறேன். ஆனால் சனிபார்க்கிறான்.

ஸா.—அதுக்கென்ன, உமக்குத்தான் தெரியுமே! ஒருசனிப் ரீதி செய்துட்டால் போறது. நீர்தான் இருக்கீர். இல்லாட்டா நான் இருக்கேன். எள்ளுஞ்சாதமா எத்தச்சாலில் கொட்டினாப்போச்சு.

ஹரி.—விகடா, நீகூட என்ன ஜோஸ்யத்தில் கைதேர்ந்து விட்டாயே ?

ஸா.—உம்மோடேகூட இத்தனை நாள் அழுதுப்புட்டு இது கூடத்தெரியவாண்டாமா?

ஸா.—ஆனால் அந்த முகூர்த்தம், பொருந்தினதுதானே?

ஹரி.—ரொம்ப நன்ருய்ப் பொருந்தியிருக்கிறது. ஆனுல் சனீசுவரனுக்கு ஒருப்ரீதிசெய்துவிட்டு, அதாவது பிராமணனுக்கு அன்னமும் போட்டு நீலவர்ணமான பீதாம்பரங்களும் வாங்கிக்கொடுத்துவிட்டு, தங்கள் குல தெய்வத்திற்குப் பிரார்த்தித்து மஞ்சத்துணியில் முடிந்துவிட்டு, ஆரம்பித்தால் எல்லாம் சுபமாய் முடியும்.

சேவகன்.—அஹிம்ஸர் வந்திருக்கிருர்.

ஸா.—சீக்கிரம் அழைத்துவா.

(அஹிம்ஸன் வருகிருன்.)

ஸா.—அஹிம்ஸா, என்ன சமாசாரம்? என்ன ஒருமாதிரியாக இருக்கிருய்?

ஹரி.—என்ன இவர்வருமுன், இவர் குறிப்பைப் பார்க்கின், இவர் ஏதோ அதிருப்தியான சமாசாரத்துடன் வந்திருப்பதாகத் தெரிகிறது. நாம் தெரியாமலே நகர்ந்துவிடுவோம்.

ஸா.—சாஸ்திரிகளே! எங்கே நழுகப்பார்க்கிறீர்? கொஞ்சம் பொருத்துப் போகலாம்.

ஹரி.—(ஆத்மகதம்) சரி இன்றைக்கு ஏதோ ஆபத்துத்தான். நல்லவேளையாய் மஹாராஜா இல்லை. பார்த்துக் கொள்வோம்.

ஸா.—அஹிம்ஸா! என்ன ஒன்றும் தெரிவிக்காமல் கல்லாய் நிற்கிருய்?

அ.—அம்மணி ஒன்றுமில்லை. கொஞ்சம் யோசனைசெய்து பார்த்தேன். மேல் நடத்தவேண்டிய விதத்தைப்பற்றி—

ஸா.—என்ன, யோசனை? சீக்கிரம் சொல்லு.

அ.—ஸ்ரீகான் மிக வருத்தத்துடன் கவலையுற்றவனுய்த் திரும்பி வந்திருக்கிருன். என்னுடன்கூட பேச வில்லை. மஞ்சத்தின்மீது சாய்ந்து விட்டான். நான் மிகவும்வருந்திக்கேட்க, ஏதோ அப்பெண்சரிவர உத் தரம் கூறவில்லை யென்று தெரிவித்தான். நான் இன் றைக்கே அவளிடம் சென்று எல்லாவற்றையும் நேர்செய்து, விவாகத்தையும் முடித்து வருகிறேன். எனக்கு விடைகொடுங்கள்.

ஸ்வா.—அஹிம்ஸா, அவளது ஸ்திரீ ஜாதிக்குரித்தான சாக சக்கியமெல்லாம் நானல்லவோ நன்ருய் அறிவேன். இதெல்லாம் நாம் தணிந்துபேசும் வரையில் தான் நிராகரித்துஒருவார்த்தைபேசிஞல்,உடன் திரும்பிவிடு வாள் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஸ்ரீகர னுடைய அழகுக்கும் ஐசுவரியத்திற்கும் பார்க்குமள வில்,இந்தக்காட்டில் வளர்ந்துவரும் பெண்ணு அவனை மறுப்பது? நான் ஒருக்காலும் உண்மையென்று நம் பேன். நீ சீக்கிரம் சென்றுவா. நான் அதற்குள் சில தெய்வகாரியங்களை யெல்லாம் எத்தனம் செய்கிறேன். (அஹிம்ஸன்போகிருன்.)

ஹரி.—(ஆத்ம) எனக்கப் பொழுதே தெரியும். நான்சொன் ஞல் யார் கேட்பார்கள். இப்பொழுது என்ன மாசுபம் நடக்கும்?

ஸா.—ஜோவியரே, எப்பேர்ப்பட்ட நாள் வைத்தீர்?

ஸ்வ.—ஜோவியரே,இன்னெருதரம் நன்ருய்ச் சோதித்துப் பார்த்து நாள் வைத்து விடும். நான் சென்றுவருகி றேன்.

## அங்கம்—ஒன்று

---

### 4-வது காக்ஷி

இடம்—வனம்.

நேரம்—மாலை.

*லலிதா வருகிருள்.*

ல.—நான் நன்மதிகள் எவ்வளவோ எடுத்துரைத்தும் பல விதத்தில் போதிக்க முயன்றும், ஸ்ரீகரன் மனதில் சற்றும் பதியவில்லையே. அவரோ, காமவெறிகொண்டு "கொக்குக்குஒன்றேமதி" என்பதுபோல், தாம் சொன்னதையே சொல்லுகிருர். என்னை நோக்கும் பொழுதெல்லாம் அவருக்கு துக்கம் அதிகரிக்கிறது. நான் ஏதாவது கடுமையாய் மொழிந்தால் உடன் சர்ப்பம் சீறுவதுபோல் பெருமூச்செறிந்து கண்கள் சிவந்து, நீர் ததும்பப் பார்க்க மிகச் சங்கடமாயிருக்கிறது. நிர்மலமான தடாகத்தை மதம் பிடித்த ஒருயானை இறங்கிச் சேருடன் கலக்குவதுபோல் அவருடைய சித்தத்தை மன்மதன் கலக்கியிருக்கிருன். அவரது மனம் எளிதில் தெளிவடையாதுபோல் தோன்றுகிறது. இனி நான் அவருக்கு ஹிதோபதேசம் செய்வதில் என்ன பயன்? வேறு யாராவது அவருக்கு நெருங்கிய அந்த ரங்கமானவர்களைக் கொண்டுதான் இனி அவருக்குச் சொல்லச்சொல்ல வேண்டும். அப்படி யார் இருக்கிருர்கள்?

அதோ யாரோ ஒருவர் வருகிருர்போலிருக்கிறது. * * *

இங்கே வரும் காரணம் என்ன? இக்குடிசையை

நோக்கி வரும் இம்மகாபுருஷன் யாராயிருக்கலாம்? இவரது ஆண்டன்மையும், காம்பீரமும் மிகவும் வியக்கத்தக்கன! நடந்து வருங்கால் இவருக்கு மூவுலகாகட்டும் மும்மூர்த்திகளாகட்டும் லக்ஷிய மில்லை போல் காண்கிறது. ஸத்தான விஷயம் தவிர யாதும் கனவிலும் நினையார் போலும். இவரது பிர புத்துவமும், தீரமும், முகத்தில் எவ்வளவு ஸ்பஷ்ட மாய் விளங்குகிறது! முகவடிவைத் தான் என் னென்று சொல்வது? இவ்விடம் வரும் விஷயம் என்னவோ?

அ.—(ஆத்ம) எனது நேசன் வருந்துங்கால், எனக்கு என்ன குதுகலம் இருக்கக்கூடும்? ஸ்ரீகரனைத் திர ஸ்கரிக்கும் தைரியமுடைய இவளது செருக்கே செருக்கு! ஒருக்கால் உண்மையிலேயே உலகவாழ்க் கையில் விருப்பம் இல்லாதவள் தானோ? இவளோ, கல்வியில் மிகவும் சிறந்த சீமாட்டியென்று ஸ்ரீகரன் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். உலகத்தில் வித்தை யின் அகங்காரத்திற்கு உரைபோடக் காணுமோ, ஐசு வரியத்தின் அகங்காரம்? மேலும் உலகவாழ்க்கையை வெறுத்து மோக்ஷமார்க்கத்தை நாடிச் செல்லு கிறோம் என்கிற மமதையும் சேர்ந்துவிட்டால், தான் ஏதோ பரமபதத்தின் படிக்கட்டின் உச்சியில் இருப் பதாயல்லவோ நினைவுவந்துவிடுகிறது? அப்புறம் அவர்களைக் கட்டிப்பிடிக்கவும் கூடுமோ? மேலும் இவ் வளவும் ஒரு ஸ்திரீயிடத்தில் சேர்ந்து விட்டால் பிறகு கேட்கவேண்டுமோ? அவர்களுக்கு பிறகு யார் தான் நிகர்? இருக்கட்டும், நேரில் கண்டு இவள் மன நிலையை அறிந்து கொள்வோம். (சமீபத்தில் சென்று)

பெண்ணே ! இங்குள்ள மாமுனிவர் இங்கிருக்கிறாரா, அல்லது வெளியில் சென்றிருக்கிறாரா ? நான் அவரிடம் சற்று சம்பாஷித்துப் போக வேண்டியதாய் இருக்கிறது. எங்கு காணலாம் ? எப்பொழுது காணலாம் ?

ல.—இங்கு கொஞ்சம் அதிதி சத்காரம்பெற்று இளைப்பாறினால் அதற்குள் வந்துவிடுவார்.

அ.—வருவதற்குக் கொஞ்சம் நேரமாகுமாயின் திரும்பி வருகிறேன், கொஞ்ச நேரத்திற்கெல்லாம்.

ல.—என் வேண்டுகோளின்படி கொஞ்சம்இக்குடிசையைக் கௌரவப்படுத்து வீராயின், அதற்குள் வந்துவிடுவார்.

அ.—ஆனால், அப்படியே. (உட்காருகிறான்)

ல.—தாங்கள் யார் என்று நான் இன்னும் அறிந்திலேன்.

அ.—நான் இந்நாட்டதிபதியின் பந்துதவிர, இளவரசனது உயிரும் என்னுடைய உயிரும் ஒன்றே என்று உணர்வதில் மிகப் பெருமை யடைபவன்.

ல.—நிரம்பவும் சந்தோஷம். முனிவர் தங்களைப்போலொத்தவர்களைக் காத்திருக்கும்படி செய்ய நேரிட்டதைப் பற்றி நான் துன்புறுகிறேன். தங்களுடைய நண்பர் ஸௌக்கியம் தானே?

அ.—கொஞ்சம் ஸௌக்கியக் குறைவுதான். அவன் விஷயத்தைப் பொருத்துத்தான் நானும் இப்பொழுது வந்தது. முனிவருக்கு ஒரு பெண் ணிருப்பதாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவள் இங்கு இருக்கிறாளா ? அல்லது, முனிவருடன் சென்றிருக்கிறாளா ?

ல.—மாமுனிவர் எனது தந்தை. மாமுனிவருக்கு வேறு மகளில்லை.

அ.—(ஆத்மகதம்). ஸ்ரீகரனுக்கு எவ்விதத்திலும் தகுதியானவள்தான். ஆ! நண்பனே! மெச்சினேன் உன் புத்திகூர்மையை. இல்லாவிடில் நீயா ஏமாந்து போவாய்? ஆனல் இவ்வளவு மிருதுவாய்ப் பேசுகிறவள் ஸ்ரீகரனை நிராகரிக்க எவ்வாறு துணிந்தாள்? இதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். அப்படியா? நீதானு?

ல.—ஆம் அதில் என்ன ஆச்சரியம்? அதுபோகட்டும். தங்களுடைய நண்பர் பொருட்டு இவ்விடம் வந்ததாக முதலில் தெரிவித்தீர்களே! நானும் அவர்பொருட்டு தங்களைப் போன்றவர்களிடத்தில் கொஞ்சம் பேசவேண்டுமென்று இருந்தேன். தாங்கள் வந்தகாரணத்தை நான் விவரமாய்க் கேட்கலாமோ?

அ.—அதிலொன்றும் தவறில்லை. எனது தோழனை நீ நன்ருய் அறிவாய் போலும்!

ல.—ஆம், அவர் இங்கு சிலதினங்களாக வருவதுண்டு.

அ.—என் நண்பனை நினைக்குங்கால் என் உள்ளம் எவ்வாறு பூரிக்கின்றது! உலகத்தில் அவனைப் போன்ற உத்தம புருஷனுமுண்டோ? * * அவனுக்கு நிகராக நான் யாரைச் சொல்வேன்?

ல.—தாங்களிருவரும் ஒருவரை யொருவர் புகழ்வது ஓர் ஆச்சரியமா, தங்களிருவருக்கும் இருக்கும் நட்புக்கு?

அ.—அப்படிக்கல்ல. நான் சொல்வதைச் சற்று நிதானித்துக் கேள். எவ்விதத்திலும் சாக்ஷாத் அமரேந்திரனும் அவனுக்கு ஒப்பில்லையென்றே சொல்லவேண்டும். அவ்வருமகனைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்கள்

என்ன புண்ணியம் செய்தார்களோ முன் ஜன்மத்தில்? அவர்களைத் தரிசித்தாலே போதும்; கலிதீரும். அவனை என்னுருயிர்த்தோழனுகப் பெற நான்தான் என்னபுண்ணியம் செய்தேனே? ஆ! அவனை மணமகனுகக் கைப்பற்றக் கொடுத்து வைத்தவள் எவளோ?

ல.—தங்களுடைய நண்பருக்கு இன்னும் ஏன் விவாகம் ஆகவில்லை. வயதுவந்த மகனுக்குக் காலத்தில் விவாகம் செய்துவைப்பதல்லவோ தந்தையாரது கடமை?

அ.—ஆம். அவனுக்குத் தக்கவளாய்க் கிடைத்தாலல்லவோ? அவன் சம்மதித்திருந்தால் முன்பே நடந்திருக்கும். அவன் மனதிற்கிசைந்த பெண்ணை யல்லவோ அவனுக்கு விவாகம் செய்துவைக்க வேண்டும்? எவ்வளவோ இராஜகன்னிகைகள் காத்துக் கொண்டிருக்கிறார்களே அவனது கரத்தைக் கைப்பற்ற. இன்னும் தேவமாதர்களுக்கு ஒப்பான அநேகர் அவனுக்கு விவாகமான பின்தான், தாங்கள் விவாகம் செய்து கொள்ளுகிறதென்று விரதம் பூண்டிருக்கிறார்கள். அவனே ஒருத்தியையும் ஒப்புவதில்லை. அவனுக்கு எப்படியாவது மணம்முடித்து வைத்தால்தான் என்கவலை நீங்கும்; எப்பொழுது ஏற்படுமோ.

ல.—அப்படியல்ல. இப்பொழுது அவர் ஒருத்தி மீதும் காதல் கொள்ளாமல் போனாலும், பெரியோர்கள் தேர்ந்தெடுத்து ஒரு பெண்ணை விவாகம் செய்ய எத்தனித்தால் நற்குணம் வாய்ந்த ஸ்ரீகரர், தமது கடமை கண்டு, தந்தையாரது சொல்லுக்கிசைந்து விவாகம் செய்துகொள்ள உடன்படுவார். பிறகு கொடுத்து வைத்தவள் தானே கொண்டவன் மனதைக் கவ்விக் கொள்ளுகிறாள்.

அ.—ஆம், நீ சொல்வதெல்லாம் என்னவோ வாஸ்தவம் தான். ஆனால் ஒருத்தியிடத்திலும் இதுவரை அவன் காதல் கொள்ளாமலிருந்தாலல்லவோ? அவன் யாரை யாவது கண்டு மோஹித்திருந்தால்?

ல.—அப்படியிருந்தால் தான் என்ன? தக்க இடமாயிருந் தால் விவாகத்தைப் பூர்த்தி செய்துவைக்கலாம். தகாத இடமாயிருந்தால் தங்களைப் போன்றவர்கள் காரியாகாரணங்களை யுக்தியுடன் எடுத்துக்காட்டி அவர் மனதைத் திருப்பவேண்டாமா?

அ.—பெண்ணே! இதெல்லாம் வீண் வார்த்தை. எத்தனை யோ உத்தமமான இராஜகன்னிகைகள் இருந்தபோதி லும், உன்னை அடைவதிலேயே அவன் விசேஷ அபிப் பிராயமுள்ளவனாய் இருப்பது உனக்குத்தெரியாதா? ஏன் வீணில் சுழற்றிப் பேசுகிறாய்?

ல.—நானா சுழற்றிப் பேசுகிறேன்? ஆம் நான் தான் சுழற் றிப் பேசுகிறேன்! தாங்கள் நேராகத்தான் பேசுகிறீர் கள்! என்னைப்பற்றிய அளவில், உமது நண்பருக்கு நேரிலேயே தெளிவாக உத்தரம் கூறிவிட்டேன். தங் களையும் மிகவும் வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் இனி இங்கு நாடாதபடி எப்படியாவது அவர் மனதைத் திருப்ப வேண்டியது உங்கள் பொறுப்பு.

அ.—பெண்ணே! உனக்கிஷ்டமில்லாததுபோல் பேசுவதை நான்எவ்வாறு நம்புவது? இதிலெல்லாம் விளையாட் டாகப் பேசலாமா?

ல.—தாங்கள் கொஞ்சமும் தவறாக எண்ணவேண்டாம்; சிறிதுகூட விளையாட்டில்லை; முற்றிலும் உண்மை யைத்தான் கூறினேன். தங்கள் நண்பரது மனதிலே

மையை நன்ருய் அறிந்தும் நான் விளையாடுவேனே? அப்படித் தாங்கள் கொஞ்சமும் எண்ணலாகாது.

அ.—இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது. அவனை ஏற்றுக் கொள்வதில் என்ன இடர் இருக்கக்கூடும்? அவனிடத்து என்ன குறை கண்டாய்? நீ எந்த வகையில் அவனைத் தள்ளக்கூடும்?

ல.—நான் அவரிடத்தில் குறை கண்டதாய்ச் சொல்லவில்லையே! எல்லாம் என்குறைவை உத்தேசித்துத் தான் நான் அவருக்குத் தகுதியல்லவென்று அறிந்து அவ்வாறு விடைகூறினேன்.

அ.—ஐயோ! பேதைமையால் ஒன்றும் தவறிக் கூறி விடாதே; பிறகு வருத்தமடைவாய். இப்பொழுதே சொல்லுகிறேன் கேள். அவன் உன்மேல் காதல் கொண்டது உன்னுடைய விசேஷமான அதிர்ஷ்டமல்லவா? அப்படி நீ எதிர்பார்க்கக் கொஞ்சமும் நியாயமில்லையே! அவனுக்கு நீ எந்த விதத்தில் ஈடு என்று நினைக்கிருய்? என்மீது நீ வருத்தமடையலாகாது.

ல.—நான் நினைத்ததைத் தானே தாங்களும் சொல்லுகிறீர்கள். நான் எதற்காக வருத்தப்படுவது? நான் என் தாழ்மையை நன்கு அறிவேன்; அதை நான் பன்முறை எடுத்துரைத்தும் ஸ்ரீகாருடைய செவியில் சற்றும் ஏறவில்லை. எப்படியாவது அவர் புத்தியை மாற்றலாகாதா?

அ.—இப்படிக்கெல்லாம் ஓடவிட்டுப் பேசுவதில் என்ன பயன்? ஒருகால் இராஜகுமாரன் கோபமூண்டு உன்னைத் திரும்பிப் பாராமலே இருந்தாலும் இருந்து

விடுவான். பிறகு வருத்தப்படுவதில் என்ன பிரயோசனம்? இளவரசன் மிகவும் வைராக்கியமுள்ளவன்.
* * * * * பிடிவாதம் பிடித்தால் பிடித்ததுதான். பெண்ணே! இன்னும் நன்ருய் ஆராய்ந்து பார்த்து முடிவைத் தெரிவிப்பாய். இளவரசன் கோபம் எதில் வந்து முடியுமோ? போனுல் வராது.

ல.—நான் ஆராய்ந்து சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. கோபமுண்டாக்கியாவது அவர் இங்கு வாராதபடி செய்வீராயின், எனக்கொரு பேருதவி செய்ததாக நான் எந்நாளும் தங்களிடத்தில் நன்றியுள்ளவளாக இருப்பேன்.

அ.—புத்திசாலியாயும், விசேஷப் படிப்புள்ளவளாயுமுள்ள உனக்கு நான் இன்னும் என்ன சொல்வது? இன்னும் நீ முக்கியமாய் யோசிக்கவேண்டியது ஒன்றுண்டு. இராஜகுமாரன் மனதுவைத்தால் ஆகாத காரியமென்பது உண்டோ? அது உனக்குத் தெரியாதா? நல்ல வார்த்தை பயன் படாவிடில், பிறகு இராக்ஷஸ விவாகம் செய்துகொண்டாலும் செய்துகொள்வான். அப்படிச் செய்ய க்ஷத்திரியர்களுக்குச் சாஸ்திரங்களும் இடங்கொடுக்குமல்லவா? இவைகளை யெல்லாம் கவனித்து நீ உடன்படுவதே உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது. இதை நான் உன் நன்மையையும் உத்தேசித்துத் தான் சொல்லுகிறேன்.

ல.—என்ன, நான்குபாயங்களைக் கொண்டும் பார்த்துவிடவேண்டியது என்று கருதியதுபோலும்! பயங்காட்டுவதனுல் ஆவது ஒன்றுமில்லை யென்று நிச்சயமாய் நம்புங்கள். தாங்கள் அப்படி யொருக்கால் யுக்தி சொன்ன

லும், முற்றிலும் நீதிமானுய்த் தோன்றும் தங்கள் நண்பர் அதை ஒருக்காலும் ஒப்பமாட்டார். ஒருக்கால் ஒப்பி பலாத்காரம் செய்தாலும் இந்தக் கட்டைமாத்திரம் உடன்படும்படி நேரிடுமே ஒழிய, என்மனம் ஒருக்காலும் கலங்காது. எல்லாங் கற்றுணர்ந்த தங்களுக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. இன்னும் மனமில்லாவிடில் ஸ்திரீ ஜாதிகள் பகவத் அனுக்கிரஹத்தால் ஸாகஸம் முதலிய எவ்வளவோ சாதுர்யங்களை இப்பேர்ப்பட்டவர்கள் நிமித்தமே அமைக்கப்பெற்றிருக்கிருர்கள். நாங்கள் எப்படியும் தப்பித்துக்கொள்வோம்.

அ.—(ஆத்ம) இதெல்லாம் இவளிடத்தில் பலிக்காது; இவளோ மிகவும் கெட்டிக்காரியா யிருக்கிருள். இனி என்ன செய்யலாம்? இன்னும் ஒரு உபாயம் இருக்கிறது; பார்ப்போம்.

பெண்ணே! நீ ஏதோ ஒரு பெண்ணுருவைத் தரித்திருக்கிருயென்பது வாஸ்தவந்தான். ஆனல், உன் நெஞ்சைப் பார்க்கின் நீ ஒரு பேயென்றே எண்ணவேண்டும். என் தோழன் ஸ்திதியை நீ நன்ருய் அறிந்திருந்தும் இவ்வாறு பேசுவது தர்மமாகுமா? அவன் உன்திருவுருவைக் கண்டது முதல் மோகினியைக்கண்ட காயாரிபோல் உனக்கு ஈடுபட்டான். தந்தையாரது வார்த்தையையும் தள்ளி விவாகமே வேண்டாமென்று தடுத்தான். வேளையில் நல்லுணவில்லாமலும் நித்திரையை நீத்தும், இராஜரீகத்தில் யாதும் கவனமில்லாமல் உன்னையே எப்பொழுதும் நினைந்து நினைந்து வாடி வதங்கி உருகுகிருன்.

ஐயோ! அவனது நிலைமைக்குக் கல்லும் கரையுமே! உன்நெஞ்சம் இளகவில்லையே! * * * நீ இணங்காவிடில் அவனுக்கு எல்லா உற்சாகமும் குன்றி, வரவர தேகம் மெலிந்து, ஒருக்கால் அவன் சித்த பேதத்தைத்தான் அடைவானோ? அல்லது நோய் கொண்டுதான் இறப்பானோ? அப்படி ஏதாவது நேரிடுமாயின், அவன் தாய்தந்தையர்கள் எக்கதி அடைவார்கள்? பிறகு இந்த இராஜ்ஜியம் என்ன தான் ஆகும்? இவைகளை யெல்லாம் நீ கவனிக்கலாகாதா? இவ்வளவு ஆபத்திற்கும் காரணமாகிறோம் என்றாவது நீ யோசிக்கலாகாதா? ஏன் வீணில் இப்பெரும் பாபத்தைக் கட்டிக் கொள்கிறாய்? ஸ்திரீகளுக்குக் கருணையென்பது ஒரு பிறவிக்குணம் என்று சொல்வார்களே. அதெல்லாம் பொய்யோ? நீ அவன் செய்த பாபத்திற்கெல்லாம் தண்டனை சொரூபமாக வந்து தோன்றினையோ? தயவுசெய்து அவனிடத்துப் பரிதபிப்பாய். பெண்ணே! இதைக்காட்டிலும் இப்பாரில் வேறு தர்மம் இல்லை. இன்னும் இதற்குமேல் நான் என்ன சொல்லக்கூடும்?

ல.—நீர் சொல்வதை யெல்லாம் நான் நன்றாய் அறிவேன். தாங்கள் இவ்வளவு விவரமாய் எடுத்துச் சொல்ல அவசியமே இல்லை. எனக்கு இராஜகுமாரரிடத்தில் கொஞ்சமும் இரக்கமில்லாதிருந்தால் முதலெடுப்பிலேயே கண்டித்திருப்பேன். அவரது நிலைமைக் கிரங்கித்தான் நான் இவ்வளவு இடங் கொடுக்கும்படி நேரிட்டது. அது பற்றியே, திடீரென்று ஒன்றும் தெரிவிக்கலாகாதென்று மனதிலுள்ளதைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளியிடலானேன்.

நான் எவ்வளவு வாதித்தும் பயன்படவில்லை. தங்களைப்போல் அவருக்கு ஹித முரைப்பவர்களைக் கொண்டாவது தேறுதல் சொல்ல முயலவேண்டு மென்றிருந்தேன். நல்லவேளையாய்த் தாங்களும்வந்து சமயத்தில் தோன்றினீர்கள். எப்படியாவது இராஜ குமாரர் தன் புத்தி ஸ்வாதீனத்தை யடைந்து சுக மாய் வாழவேண்டிய வழியைத் தேடுவது தங்களையே சேர்ந்த கடமை. ஸ்ரீகரருடைய பின் வாழ்க்கைக்கு நீரே காரணமாகிறீர். எனக்கோ அவருடன் கூடப் பிறந்த ஒரு சகோதரபாவம் தவிர காதலென்பதே சற்றுமில்லை யென்பதை நிச்சயமாய் நம்புங்கள். அப்படியிருக்க நான் அவரை மணப்பேனுயின் சுருதி யில்லாத கீதம் போலல்லவோ ஆகும்? என்னை இளவரசர் அடைந்தால் எங்கள் வாழ்நாட்களெல் லாம் துன்பமானதாகவே யிருக்கும். நான் அவ ரைக் கைக்கொள்வது அசாத்தியம். நான் அவ ரை அலக்ஷியம் செய்வதாய்த் தாங்கள் எண்ண லாகாது. உலகத்தார்போல் அரண்மனையில் சுகமாய்க் காலங்கழித்து உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து மனமகிழ விரும்பினேனுகில் தங்களுக்குச் சிரமமே வைத்திருக்கமாட்டேன். நான் இவ்வாழ்க்கையின் சுகத்தில் நம்பிக்கை யில்லாதவள் என்பது தங்களுக் குத் தெரிந்ததே.

அ.—(சற்றுபொறுத்து) நல்லது! ஆனுல் உன் வாழ்நாட் கள் முழுதும் இப்படியேதான் முடித்துவிடப் போகி ருயோ? அப்படித்தான் உன் தீர்மானமோ? இராஜ குமாரனை மணக்காவிட்டாலும், நீயேன் துறவியாய்க் காலங்கழித்து, உன் ஜன்மத்தை வியர்த்தமாக்க

வேண்டும்? உன்மனதொப்பிய ஒரு புருஷனை நீ யேன் அடைந்து மற்றவர்களைப்போல் வாழலாகாது?

ல.—தாங்கள் கேட்பது மிகவும் ஆச்சரியமாய் இருக்கிறது! நானோ வைராக்கிய மார்க்கமே சிறந்த தென்ற சித்தாந்தம் கொண்டவள். என் ஆத்மானந்தம் வேறு விதம் குறிப்பிடாதவரையில் தாங்கள் சொல்வதை நான் எப்படி யோசிப்பது? தாங்கள் இது விஷயத்தில் உட்புகுந்து கேட்பது எனக்கு மிக்க விநோதமாயிருக்கிறது!

அ.—பெண்ணே! நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். (ஆத்ம)என்ன இவ்விடம்விட்டுக் கால் எழவில்லையே! உன் தந்தையார் எப்பொழுது வருவார்?

ல.—வருங்காலம் சென்று விட்டது. ஏன் இன்னும் வரவில்லையோ தெரியவில்லை. என் தந்தையிடம் தெரிந்து கொள்ள வேண்டியது ஏதாவது இருக்கிறதோ?

அ.—(ஆத்ம) நான் இனி இங்கு தாமதிக்கலாகாது. தாமதித்தால் என் சித்தத்திற்கும் ஏதாவது மோசம் வந்தாலும் வந்து விடும். பெண்ணே! ஒன்றுமில்லை. எல்லாம் உன்னிடத்திலேயே தெரிந்து கொண்டுவிட்டேன். நான் சென்று வருகிறேன்.

ல.—தாங்கள் போகுமுன் ஒன்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இராஜகுமாரரது தேக ஸ்திதியைப்பற்றிக் கவலையாயிருக்குமாதலால், அடிக்கடி வந்து தெரிவித்துப் போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ.—நல்லது, அப்படியே.

ல.—மிகவும் சந்தோஷம்.

அ.—போய் வருகிறேன்.

ல.—சுகமாய்ப் போய் வாருங்கள்.

(உட்சென்று உற்றுப்பார்த்து நிற்கிருள்)

அஹிம்ஸன் போகிருன்.

அ.—(சொஞ்சதூரம் சென்று) இது என்ன புதுமை! அப்பெண்ணைக் கண்டதுமுதல் எனது சரீரமுழுதும் நான் எங்காளு மறியாத ஒருவித உத்ஸாகமும் பரபரப்பும் உண்டாகின்றன. ஸ்ரீகரனே இவள் நிராகரித்துப் பேசியதைப்பற்றி எனக்கு உள்ளபடியே வருத்தம் தானே அல்லது வேறு விதமோ? எனக்கே ஒன்றும் தெளிவுறப்புலப்படவில்லை. சீ! என் மனவுறுதி இவ்வளவுதானு? நானே என் நண்பனுக்கு துரோகம் நினைப்பேன்? அதை விட நான் முதலில் இறப்பேன். ஒன்றுமட்டும் நிச்சயமாய்த் தெரிகிறது. நான் இனி இங்கே வரலாகாது. எப்படியாவது இளவரசனது புத்தியைமாற்றவேண்டும். (விரைந்து செல்கிருன்.)

ல.—(வெளியில் வந்து) என்ன விந்தை! முற்றிலும் நிவர்த்திமார்க்கத்தையே அனுசரித்து வந்த என் புத்தியை இவ்வுத்தமன் எவ்வாறு ஒரு விஞடியில் கலேத்து விட்டான்? மன்மதனுக்கு இதுகாறும் இடங்கொடாமலிருந்த என்னை அவன் வலேயில் சிக்கும்படி இவனல்லவோ செய்து விட்டான்? பேரானந்த மென்பதே இவ்வுருவாக வந்து தோன்றியிருக்கிறதோ? என் புத்திமாறு மென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே! ஆம்! ஜன்மாந்தரீயமான கர்மபலனை யொட்டி நான்சம்சாரசாகரத்தில் ஆழ்ந்து அனுபவிக்கவேண்டி

யது மிகுதி யிருந்தால் அதைத் தடுப்பது எப்படி? எல்லாம் ஈசனது இஷ்டம்போல நடக்கும். எனக்கோ இவர் லபிப்பார் என்பது மிகக்கடினம். அப்படி யிருந்தும் அவர் உருவமே என் முன்பு நிற்கின்றதே. அவரை விட்டுப் பிரிந்தது முதல் எனக்கிருக்கும் தாபம் சகிக்கமுடிய வில்லையே! இதற்கு என்னசெய்வது? இவர் என் மனதிற்கு இசைவார் என்று எதிர் பார்க்க என்ன நியாய மிருக்கிறது? அவரோ தன் மித்திரனையே நினைத்துக்கொண்டு என்னைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. ஒருக்கால் அவர் நண்பனை நான் ஏற்றுக்கொள்ளவில்லை யென்று என்மீது சினங் கொண்டிருந்தாலும் இருப்பர். அப்படியானால், நான் எடுத்துச்சொன்ன நியாயங்களையெல்லாம் ஒப்புக் கொண்டாரே! இருந்தாலும் என் மனதிலுள்ளதை எப்படி வெளியிடுவது? நான் வாழ்க்கையைப்பற்றி வெறுத்துப் பேசியதை யெல்லாம் வேஷமென்று நினைத்து என்னை இகழ்வாகப் பேசுவார். எப்படியும் என்மன நோக்கத்தை ஒருநாளும் வெளியிடலாகாது. அவரை நான் எப்பொழுது மறுபடியும் தரிசிப்பேன்? மனதே துடிக்காதே; எல்லாம் பகவான் செயல். நாமொன்று நினைக்க தெய்வம் வேறொன்றையே நினைக்கும். அவர் இன்னொருமுறை இங்கு வருவாராயின் எனது அதிர்ஷ்டத்தை அறிந்துகொள்ளலாம். அது வரையில் பொறுத்துத்தான் ஆகவேண்டும்.

## அங்கம்—இரண்டு

### 1-வது காக்ஷி

இடம்—ஸுபாஷிணியின் அறை.

நேரம்—இரவு.

ஸ்ரீகரனும் ஸுபாஷிணியும்.

ஸ்ரீ—இதென்ன, அம்மா! இன்னும் அஹிம்ஸன் வரவில்லையே! போய் வெகுநேரமாய் விட்டதே!

ஸு.—குழந்தாய்! ஏன் கவலைப்படுகிறாய்? சீக்கிரம் வந்துவிடுவான். அவன் முனிவரையாவது அப்பெண்ணையாவது காண நேர்ந்ததோ, இல்லையோ.

ஸ்ரீ—அஹிம்ஸன் போய் ஒரு யுகத்திற்குமேல் ஆனதுபோல் தோன்றுகிறது. என்னபிப்பிராயம் என்னவென்றால், காரியம் ஒன்றும் சாதகமில்லையென்பேன். முடிவை நம்மிடம் வந்து தெரிவிக்க யோசித்துக்கொண்டு எங்கேயோ தங்கியிருக்கிறானென்று நினைக்கிறேன். இல்லாவிடில் இதுவரையில் வந்து சேராமலிருக்க நியாயமில்லை.

ஸு—அப்படிக்கெல்லாம் ஒன்றும் நினையாதே. சீக்கிரம் வந்துவிடுவான்; அதோவருகிறான் பார். கொஞ்சம் கவலையுடன் வருகிறதாகத் தெரிகிறது.

(அஹிம்ஸன் வருகிறான்.)

அ.—(ஆத்ம) இதென்ன விபரீதமாய் முடிந்ததே! அம்மாது சிரோமணியை தரிசித்ததுமுதல் எனக்கு ஒரே பிரமையாய் இருக்கிறது. வேறுஞாபகமே இல்லாமல் போய்விட்டது. ஸ்ரீகரனுடைய அவஸ்தையைக் காட்

டிலும் பதின்மடங்குஅதிகமாகவல்லவோ இருக்கிறது எனது அவஸ்தை. நான்போய் என் நண்பனிடத்தில் நடந்த விருத்தாந்தையெல்லாம் எப்படி தெரிவிப்பது? தெரிவிக்குங்கால், நான் என்னை அறியாது ஏதாவது உளறிவிட்டாலும் விடுவேன்போ லிருக்கிறதே. இதுவரையில் எனக்கும் என் நேசனுக்கும் கிரீடாத்தமாகக்கூட வித்தியாசம் என்பது ஏற்பட்டதில்லையே! அவனும் அவன் அன்னையும் என்னிடத்தில் எவ்வளவு பூரணமான நம்பிக்கைவைத்து அவளிடத்து அனுப்பினார்கள். அப்படியிருக்க நான் அப்பெண்ணின் மீது காதல் கொள்வேனாயின் எவ்வளவுபெரிய பாதகனாக ஆவேன். என் மித்திரனும் அப்படி ஏதாகிலும் சந்தேகம் கொள்வானாகில் என்னை எவ்வாறு வெறுப்பான்? அவன் வெறுத்தபின்னும் உயிர் தரிக்கவேண்டுமோ? எப்படியும் நம் மனவுறுதியை நிலைநிறுத்திக்கொண்டு, நம் புத்தியும் மாறுபாடு அடையாவண்ணம் விவேகத்தால் தடுத்து நண்பனுக்கு நன்மதிகளை எடுத்துபதேசம்செய்து அவன் சித்திவிருத்தியைத் திருப்ப வேண்டும். ஐயோ! எவ்வளவு ஆவலுடன் என்வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். அம்மணி! நமஸ்கரிக்கின்றேன்.

ஸ்ரீ.--அஹிம்ஸா! என்ன சமாசாரம்? சீக்கிரம் தெரிவிப்பாய்.

அ.—என்னுருயிர்த்தோழனே! நான் என்னென்று தெரிவிப்பது? உன்னால் சாதிக்கக்கூடாத காரியத்தை நான் சாதித்து விடலாமென்றல்லவோ சென்றேன்? எனக்கு, தக்க அவமானம் நேர்ந்தது. அதுவும் எனக்கு வேண்டும். என்ன இது! மனத்தளர்ச்சி

யடைந்து சாய்ந்து விட்டனையே! புருஷலக்ஷணங்களாகிற தைரியத்தையும் விவேகத்தையும் நீ கைவிடலாகாது.

ஸ்ரீ.—நடந்ததை யெல்லாம் விவரமாய் எடுத்துச் சொல். சீக்கிரம்; தயங்காதே.

அ.—அப்பா! இதுகாறும் அவ்விடத்தில்தான் இருந்து வருகிறேன். என்னுடைய சாமர்த்தியம் அனைத்தும் பார்த்துவிட்டேன்; ஒன்றும் பலிதமாகவில்லை. ஆயினும் நீ படும்பாட்டை அவள் நன்கு அறிவாள். உன்னிடத்துள்ள பரிதாபத்தால் உனக்கு எவ்விதத்திலாவது தேறுதல் சொல்லும்படிச் சொல்லுகிருளே ஒழிய அவள் மனம் சற்றும் மாறவில்லை. பின்பு அவள் பொருட்டுச் சிந்திப்பதில் என்ன பயன்? உயர்ந்த குணம் பொருந்தியவளாதலால் நீ எவ்வாறு புத்தி திரும்புவாய் என்று பலவிதமாய்க் கவலையுடன் யோசித்து வருகிருள். உனக்கேற்ற இராஜகன்னிகையை நீ மணந்து எப்படியாவது சுகமாய் வாழவேண்டுமென்று மிகவும் அக்கரைப்படுகிருள். உன் தேகஸ்திதியைப்பற்றி அடிக்கடி வந்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

ஸ்ரீ.—அஹிம்ஸா! நான் அவ்வளவு பாக்கியமாவது பெற்றேனே! என்கதி என்ன ஆனுல் என்ன என்றிராமல் என்மீது அவ்வளவு கவலையுற்றவளாகவாவது காண்கிருளே! அதுவே போதும். இன்னும் சொல்பகாலங்கழித்தால் அவளுக்கு முற்றிலும் தயவு வந்துவிடும். நான் எவ்வளவுகாலம் வேண்டுமானுலும் காத்திருக்கச் சித்தமாக இருக்கிறேன். நண்பனே! நீ மறுபடியும் நாளைக் காலையிற்சென்று எனது தேகஸ்திதி

யைத் தெரிவித்து, எனக்காக இன்னொருதரம் மன்ருடினுல் அவள் மனம் கனியும்.

ஸ.—அஹிம்ஸா! குழந்தை சொல்வது உசிதமென்றே எனக்கும் தோன்றுகிறது; வேண்டுமானுல், பார். இன்னும் இரண்டு தினங்களுக்குள் சம்மதம் கொடுத்துவிடுவாள். இதெல்லாம் எனக்கொன்றும் ஆச்சரியமில்லை. ஸ்திரீகளுக்குள்ள சுபாவ குணந்தானே! ஆகையால் நீ மறுபடியும் காலையில் செல்வாயாயின் காரியம் முடிந்துவிடும்.

அ.—அம்மணி! தங்களுடைய உத்தரவுக்கு விரோதமாய்ப் பேசுவதாய்த் தாங்கள் எண்ணலாகாது. இனி யொன்றும் பிரயோசனமில்லை என்பது திண்ணம். என்னுல் இயன்றமட்டும் பார்த்துவிட்டேன். இனி நான் அங்கு செல்வதில் என்ன சாரம்? ஒருக்கால் நமது குலகுருவைப்போல் யாரையாவது அவளது தந்தையிடத்து அனுப்பி ஏதாவது பேசி முடித்தால் முடித்தது. இனி என்னுல் ஆகக்கூடியது யாதுமில்லை. நானறிந்தமட்டில் அப்பெண் தாங்கள் சொல்லுகிறபடி எளிதில் உடன்படலாகாது என்று கபடஎண்ணங்கொண்டு மறுப்பதாகத் தெரியவில்லை. இளவரசனிடத்தில் காதல் ஏற்படாதிருக்குங்கால் அவனை மணந்துகொள்வது சரியல்லவென்பது அவளது கொள்கை. ஏன் இதில் வீண் பிரயத்தனம்?

ஸ.—உனக்கு இவ்விஷயத்தின்மர்மம் விளங்காது. நான் சொல்வதை நம்பு. நான் ஒன்று கேட்கிறேன்; பதிலுரைப்பாய். அவளுக்குள்ளபடியே இஷ்டமில்லாதிருக்குமாயின் ஸ்ரீகரனுடைய தேகஸ்திதியைப்பற்றி எதற்காக அடிக்கடி வந்து தெரிவித்துப் போகும்படி கேட்

டுக்கொண்டாள்? அப்பா! ஸ்திரீ ஜாலமெல்லாம் நானல்லவோ அறிவேன். நீ அதைரியமடையாதே. நீ தவறுமல் காலையில் சென்றுவா.

அ.—அம்மணி! நான் இன்னொருமுறை சொல்லுகிறேன்; கேளுங்கள். அவளோ ஸ்ரீகரன்பால் ஒரு சகோதரனிடத்திலுள்ள அன்பையும் கருணையையும் உடையவளாய் இருக்கிறுள் என்பதற்கையமில்லை; அது பொருட்டு அவள் தேகஸ்திதியைப்பற்றி தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டாளேதவிர வேறில்லை. எப்படியாவது ஸ்ரீகரன் விவாகம்செய்துகொண்டு சுகமாய் வாழவேண்டுமென்று கவலைப்படுகிறுள். அதிலிருந்து அவளுக்குக் காதல் ஏற்பட்டு விட்டது என்றும் மறைத்துப் பேசுகிறுள் என்றும் எவ்வாறு நினைப்பது? அம்மணி! காதல் என்பது ஒன்றுதானு பற்றென்பதை உண்டாக்கக்கூடும்? கேவலம் பழக்கத்தினுல் ஏற்படும் அன்பு பற்றை உண்டாக்கக்கூடியதல்லவா? தாங்கள் கொஞ்சம் நிதானித்துப் பாக்க வேண்டும். அம்மா! ஸ்ரீகரனுக்கு அவள் வாய்த்தால், எனக்கு எவ்வளவோ திருப்தியாயிருக்கும். ஆனுல் அப்படி லபிக்கும் என்று நினைக்க எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கையில்லையே!

ஸ.—அஹிம்ஸா! உனக்கு எத்தனை முறை சொல்லி உன்னுடன் வாதாடுகிறது? இதோ பார்க்கவில்லையா உன் நண்பன் படும் சங்கடத்தை? பிரமை பிடித்தவன் போல் மஞ்சத்தின் மீது சாய்ந்து கிடக்கிறுனே! அவனது உயிர்நிலை அவளது பதிலில் நிற்பதை நீ அறியவில்லையா? இனி இவ்வாறெல்லாம் தடுத்துப் பேசாதே. நான்சொல்லுவதைக் கேள். நீ சிறுபிள்ளை;

உலகானுபவமில்லாதவன். நான் சொல்லுகிறபடி காலை யில் சென்று கேட்டுவா. எல்லாம் நம்மனம்போல் முடியும்.

அ.—அம்மா! நான் செல்லுவதில் யாதும் குணமில்லை. தயவுசெய்து வேறு யாரையாவது அனுப்புங்கள்.

ஸா.—உன்னாலாகாதா? யுக்தியும் புத்தியும் வாய்ந்த உன் னால் முடிக்கக்கூடாத காரியத்தை வேறு யார்தான் முடிக்கப் போகிறார்கள்? மேலும் அவள் உன்னிடத் தில் கொஞ்சம் கலந்து பேசுவதாயும் தெரிகிறது. நீ ஒருமுறை அங்கு சென்று அவளுடன் பேசி அவள்மனதை அறிந்தவன். நீ சென்றால்தான் காரி யம் நிறைவேறும். எனக்கும் ஸ்ரீகரனுக்கும் நீ அவ் வளவு செய்யக்கூடாதா?

அ.—அம்மணி! என்ன அப்படிச் சொன்னீர்களே! நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். என் னுடைய உயிரையும் ஒரு பொருட்டாக எண்ண வில்லை. ஸ்ரீகரனுடைய விஷயத்தில் அதையும் அவசிய மானால் விடச் சித்தமாக இருக்கிறேன். ஆனால் இதில் மட்டும் மன்னித்துவிடுங்கள். நான் சென்றால் ஆவது ஒன்றுமில்லை. நான் அங்கு செல்லேன். என்னை நிர்ப் பந்தம் செய்யாதீர்கள்.

ஸா.—அஹிம்ஸா! என்ன இது? ஏது நான் இவ்வளவு சொல்லியும் நீ கேளாமல் தடுத்துப் பேசுகிறாய்?

அ.—அம்மா! தயவுசெய்ய வேண்டும். இது தவிர வேறு எதுவானாலும் கேட்கிறேன். இதுமாத்திரம் வேண் டாம். வீண் எத்தனம் என்பதும் நிச்சயம். பெரிய மனதுசெய்து என்னைக் காத்தருளவேண்டும்.

ஸ்ரீ.—அஹிம்ஸா! என்ன நிரம்பவும் விநோதமாயிருக்கிறதே! எனதன்னை இவ்வளவு வற்புறுத்திச்சொல்லியும் நீ கேட்காதிருப்பது யாதுகாரணம் பற்றி?

அ.—நண்பனே! கொஞ்சம் பொறுமையாய்க் கேட்க வேண்டும். ஒன்றும் விசேஷமில்லை. நான் உங்கள் வார்த்தையை அகாரணமாய்த் தட்டுவேனா? இது வரையிலும் என்வார்த்தையில் எவ்வளவு நம்பிக்கை வைத்து வந்தீர்கள்? அப்படியே இப்பொழுதும் நம்பலாகாதா? உபயோகமில்லாத காரியத்தில் எதற்காகப் பிரயாசப்படுவது? ஐயோ! என்ன சொல்லியும் உன் புத்தியில் படவில்லையே! இவளைக்காட்டிலும் எவ்வளவோ — எவ்விதத்திலும் உயர்ந்த இராஜகன்னிகைகள் இருக்கிறார்களே! ஐயனே! இவள் எவ்வளவு? நாம் எவ்வளவு? இவளையா நாம் மறுபடியும் கேட்பது? நமது வேண்டுகோளுக்கு இசையாள் என்றும் நிச்சயமாய்த் தெரிகிறது. அவள் என்னிடத்து மறுத்த பின்னும் நான் எப்படி மறுமுறை அங்கு நோக்கி அடியெடுத்து வைப்பது? அப்பா! உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன். என்னை மன்னித்துவிடு.

ஸ்ரீ.—நாங்கள் சொல்லுவதை நீ கேட்கமாட்டாயா? இது உண்மைதானா?

அ.—இதோ முழந்தாளிட்டு வருந்துகிறேன். அம்மா! மிக்க வணக்கத்துடன். வேண்டாம்.

ஸ்ரீ.—அஹிம்ஸா! அப்படியா சமாசாரம்? இப்பொழுதல்லவோ உண்மை விளங்குகிறது! நீ அவள்மீது காதல் கொண்டாயல்லவா? இல்லாவிடில் நீ இம்மாத்திரம் வாது செய்வாயா? .........* * அடடா! என்னபுத்தி

மோசம் போனேன்! நான் இதுகாறும் உன்னிடத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்து ஏமாந்தேன்? நீ யல்லவோ அவளை யடையவேண்டுமென்று இவ்வளவு நடிக்கிறாய்? ஆ! ஆ! எனக்கா துரோகம்செய்ய நினைத்தாய்? அதை உள்ளபடியே ஒப்புக்கொள்ளுகிறது தானே. இதைத்தவிர நீ அங்குசெல்வதற்கு என்ன இடையூறு இருக்கக்கூடும்?

அ.—என்ன வார்த்தை சொன்னாய்?.........* * * ஐயோ! நான் உனக்குக் கனவிலும் துரோகம் நினையேனே! அப்படியாயின் எனக்குப் பகவான் நூதன மாக ஒரு நரகம் சிருஷ்டிக்கட்டும். ஆனால் உன்மீது எனக்கு சற்றும் ஆயாசமில்லை. உன் புத்தி சுவாதீனத்தோடு நீ பேசவில்லை யென்று எனக்கு நன்றாய்த்தெரியும். ஈசா! என்னை இக்கதிக்குக் கொண்டுவந்து விட்டாயே! நானோ இப்பழிக்குப்பாத்திரன்? தலைவிதியை யார் தவிர்க்கக்கூடும்? என்மேல் இப்பொழுது சாட்டப் படும் குற்றத்தை நான் எவ்வாறு தீர்த்துக்கொள்ளு வேன்? அப்பா! நான் படும் கஷ்டத்தை நீ எப்படி அறியப்போகிறாய்? இதோ உனக்காகச் சென்று வரு கிறேன். எல்லாம் வினைபோல் நடக்கும். அம்மணி! நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ.—அஹிம்ஸா! என் மீது கடிந்துகொள்ளாதே. தவறிப் போய் கொஞ்சம் கொடுமையாய் மொழிந்து விட் டேன். என்னை எப்படியும் நீ கைவிடமாட்டாய் என்று எனக்குத் தெரியும். நீயோ எனக்கு வஞ்சகம் நினைப்பாய்! நான் அறியாமையால் சொல்லிய வார்த் தைகளை மறந்துவிடு. காலையில் தவறாமல் சென்றுவா. அம்மணி! வாருங்கள் போவோம்.

அ.—அப்பா! ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். காலையில் பேசுவதானால் சாவகாசம் போதாது. மாலையில் தவறாமல் போகிறேன்.

ஸ்ரீ.—ஆனால் உன்னிஷ்டப்படியே செய். நான் போய்வருகிறேன்.

(ஸ்ரீகரனும் ஸுபாஷிணியும் போகிறார்கள்.)

அ.—ஜகதீசா! இப்படியா வழிவிட்டாய்? நான் ஸ்ரீகரனுடைய நன்மைக்கென்று எண்ணிச் செய்வதெல்லாம் வேறு விதமாயல்லவோ முடிகிறது! நான்போய் என்ன செய்கிறது? அப்பெண்மணியோ ஒருக்காலும் சம்மதியாள் என்பது எனக்கு நிச்சயம். எனக்கோ அவள் முகத்தை நோக்குங்கால், என்புத்தி தடுமாறுகிறது. என்புத்திக்கு ஏதாவது மோசம்வந்தால் பிறகு நண்பனை எப்படி காண்கிறது? அவனைப் பாராமல் எப்படி ஜீவித்திருப்பது? நான் அவ்விடம் போகாமலிருக்க முயன்றாலும் என் எண்ணத்தைத் தப்பாய் நினைக்கிறார்கள். முன் வந்தால் புலியும், பின் சென்றால் சமுத்திரமும் போல் ஆயிற்றே என்கதி. நடு ஆற்றில் அகப்பட்டவன் எப்படியும் பிரவாகத்தின் வழியே சென்றால்அல்லது கரையேற மார்க்கம் இல்லையல்லவா? சர்வேசுரன் விட்டதுதான் வழி. ஆனால் ஒன்றிருக்கிறது. ஸ்ரீகரனையகற்றிய கரத்தால் என்னையா அணைய நினைக்கப்போகிறாள்? ஒருநாளுமில்லை. அவளது மனவுறுதி என்னை எப்படியும் விடுவிக்கும். இந்த ஆபத்திலிருந்து நாளை மாலைக்குள் என் மனதையும் நன்றாய் திடப்படுத்திக்கொண்டு போய் வருகிறேன். (போகிறான்.)......... * * *

## அங்கம்—இரண்டு

### 2-வது காக்ஷி

இடம்—வனம்.

நேரம்—மாலை.

(லலிதை ஒரு மரத்தடியில் கையில் ஒரு படத்துடன் உட்கார்ந்திருக்க, அலிம்ஸன் வருகிறான்.)

அ.—(ஆத்ம) நான் இதுகாறும் இவ்வனிதையின் முகத்தை நன்றாய்க் கவனித்துப் பார்த்ததில்லை. இவளது திவ்ய ரூபத்தைப்போல் நான் சித்திரத்திலும் கண்டிலேன். இவளது ஒளியைக்கண்டு தினகரனும் மறைகிறான். இவ்வனமெங்கும் இவ்வளவு இரம்மியமாயிருப்பது இவளது சான்னியத்தியத்தா லல்லவோ? இவளது அருகிலுள்ள வஸ்துக்களெல்லாம் இவளது வண்டு கள்போலுள்ள விழிகளினின்றும் பாயும் கிரணங்க ளால் எவ்வாறு பிரகாசிக்கின்றன? சுற்றுமுள்ள மலர் களெல்லாம் இவளது சுவாசம் கலந்த ஒரு நூதன மான நற்கந்தத்தையல்லவோ காற்றின் வாக்கில் வீசு கின்றன? ஆ! ஆ!.........* * * ஓ! ஓ! * என்ன ஏதோ வியாகூலத்தில் ஆழ்ந்தவள் போல் ஆகாயத்தைக் கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கிறாள்? ஏதோ தீர்க்காலோசனையில் இருப்பதாய்த் தெரிகிறது. ஐயோ! ஏதோ ஒரு பெருந் துக்கத்தால் இப்பிம்பம் பீடிக்கப்பட் டிருக்கிறதாகக் காண்கிறதே! என்ன நேர்ந்திருக்கக்கூடும்? கையில் வைத்திருப்பது ஏதோ ஒரு படம்போல் தோன்று

கிறது. அதில் ஏதாவது விசேஷ மிருக்கவேண்டும். அப்படத்தை எடுத்து மிக்க அன்புடன் தன் மடியின் மீதுவைக்க அப்படம் என்ன பாக்கியம் பெற்றது! ஐயோ! எனக்கு இக்கேவலமான மானிட ஜன்மம் வாய்க்காமல் அவ்வுத்தமமான காகிதத்தின் ஜன்மம் வாய்த்திருக்கலாகாதா? என்ன ஆச்சரியம்! அப் படத்துடன் ஏதோ சம்பாஷித்துக்கொண்டிருக்கிரு ளே! படத்தையும் முத்தமிடுகிருள். இப்படியே மரத்தண்டையே ஒளிந்து இன்னும் கவனித்துப் பார்ப்போம்.

ல.—(ஆத்ம) ஐயோ! நான் அனுபவிக்கும் துன்பத்தை யாரி டமாவது சொல்லி ஆறுதல் அடைவோமென்ருல், எனக்கு அந்தரங்கமான உற்ருர் உறவினர் தோழிமார் கூடக்கிடையாதே! இன்னும் கொஞ்சநாழி நீர் வாரா திருப்பீராயின், நான் உயிரிழக்க வேண்டியதுதான். ஆ! நான் அவரைப் பக்கத்தில் அடையப்பெறவில்லை யே என்று நினைத்து அவரைப்போய் ஓர் உரு எடுத்து வைத்தால், அதற்கும் அவருக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறது! ஒருக்கால் சாயை இருக்கிறதென்று வைத்துக் கொண்டாலும், இவ்வுயிரில்லாத அசேதன மான படம் என்னுடன் பேசுவதில்லையே! ஐயோ! என்முட்டாள்தனத்தை என்னென்று சொல்வது? முகம் தூக்கிஅண்ணர்ந்து பார்ப்பது போல் நான் வரைந்திருக்கலாகாதா? அவர் என்னுடன் சம்பா ஷித்தபொழுது இருந்தபடியே தலைகுனிந்த வண்ண மல்லவோ வரைந்துவிட்டேன். காதலரே! உமது அழகிய கரத்தால் என்னைத்தழுவி உஜ்ஜீவிக்கலா காதா? என்னிடத்தில் கருணை புரியலாகாதா? தாய்

தந்தையில்லாத இப்பேதையை தயவுசெய்து காத்தருளலாகாதா? தாங்களும் அது போலவே தாய் தந்தையில்லாதவர் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேனே! திக்கற்ற நாமிருவரும் ஒருவருக்கொருவர் துணையாய்எங்காவதுஓடிப்போய்க்காலங்கழிப்போமே! இனி எப்படிக் காலம் போக்குவது? படத்திலுள்ள குறைவுகளையாவதுதிருத்திப் பொழுது போக்குவோம். உட்சென்று வரையும் சாதனங்களை யெடுத்து வருவோம். (உட்செல்லுகிறாள்.)

அ.—இதுஎன்ன! நான் காண்பதும் கனவோ? அல்லது நான்விழித்துக்கொண்டுதான் இருக்கிறேனோ? இவ்வுத்தமி தன்காதலரையல்லவோ நினைத்து வருந்துகிறாள்? ஓ! ஓ! நண்பன் ஸ்ரீகரனை நிராகரித்த காரணம் இப்பொழுதல்லவோ நன்றாய் விளங்குகிறது. இவ்வனமாதரின் காதலைப்பெற்ற புண்ணிய புருஷன் எவனோ? பாபம்! இக்கொடியை இங்கு தவிக்கவிட்டு அக்கொடிய சித்தன் எங்கு தொலைந்து விட்டான்? இப்பொழுது அவன் என் கண்முன் தோன்றுவானாகில் நான் எவ்வாறு தண்டனைவிதிப்பேன்? ஐயோ! இராஜ குமாரனிடத்தில் உண்மையைத் தெரிவிக்கலாகாதா? எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்! என்னிடத்திலாவது ஒருவாறாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கலாமே! நானும்என்னென்ன சொப்பனம் கண்டு கொண்டிருந்தேன்? ஒருக்கால் எனக்கு ஏதாவது கொஞ்சம் அதிர்ஷ்டம் இருக்கலாமோ என்று சொல்ப ஆசைகொண்டிருந்தேன். நல்ல அழகு! நானோ அப்படி ஆசைகொள்வது? முடவன் கொம்புத்தேனை விரும்பியதுபோலிருக்கிறது.

நல்லவேளையாய் என் மனேபாவத்தின்படி ஒன்றும் பிதற்ருமல் அதுவரையில் தப்பித்தேன். நண்பனுக்கு துரோகம் நினைத்ததாக என்னை எவ்வளவு இகழ்வாக மதித்துப் பேசியிருப்பாள்? அதுவரையில் என் பாக்கியம்தான். ஆனல் பெண்ணுசையென்பதையே நான் இவளால் உணரும்படி நேரிட்டது. அது இவளுடனே மரிக்கவும் மரித்தது. ஆனல் நான் முன் போலஆவதற்கு இன்னும்வெகுநாள் ஆகும்.........*
நானும் இனிவனஞ்சென்று வைராக்கியத்தைக் கைக்கொண்டு, இவள் உயர்வென்று உபதேசித்துவந்ததையெல்லாம் அனுஷ்டிக்க வேண்டியதுதான். இனி பிரபஞ்சத்தினிடத்து எனக்குக் கொஞ்சமும் அபிருசியில்லை. ஆ! ஆ! இம்மங்கை துறவறம் பூண்ட சங்கதி இப்பொழுதல்லவோ விளங்குகிறது! பிறனுடைய காதலியாகிய இவ்வுத்தமியை நாம் கண்ணெடுத்தும் பார்க்கலாகாது; இவ்வனத்தின்பக்கமே வரலாகாது. இவளது காதலைப்பெற்ற புண்ணியவான் யாரோ? யாரா யிருக்கலாம்? இதோ அப்படத்தை வைத்துவிட்டு சென்றிருக்கிருள். ஒருக்கால் அவளது காதலன் படமாயிருந்தாலும் இருக்கலாம். என்னபடம் ஜில் என்று நனைந்திருக்கிறது? கண்ணீர் பட்டதாலோ? பார்ப்போம். (நன்ருய் ஒருமுறை இரண்டுமுறை உற்றுப் பார்த்து), கண்ணே! நானே இப்பெரும் பாக்கியம் பெற்றவன்? உனதுள்ளம் எள்ளளவும் அறியாத மடையனையா நீ விரும்பினய்? உனக்கடிமைத்தொழில் கூட புரிய எனக்காதமில்லையே! நான் இதுகாறும் உன்னை வருத்தியதற்கு நீ யென்னை மன்னிப்பாய். நான் என்புத்தி பூர்வமாய் யாதும் பிழைசெய்ய வில்லை.

எனக்கிப்பொழுதிருக்கும் ஆனந்தத்தை நான் எவ்வாறு எடுத்துரைப்பேன்? என் சரீரமுழுதும் இன்பம் நிரம்பி ஒவ்வோர் அங்கமும் பூரித்து இரத்த ஓட்டமே நின்று விடும்போலிருக்கிறது. நான் இப்பொழுதே இறந்தால் என்ன? இருந்தால் என்ன நேருமோ? ஆயினும் நான் இறப்பேனுயின் என் கண்மணி எக்கதி அடைவாள் என்பதை உத்தேசித்தே நான் உயிர் தரிக்க வேண்டும். ஐயோ! அவள் எங்கு சென்றிருக்கக்கூடும்? இவ்வளவு தாமதத்திற்கு என்னகாரணம்? ஒருக்கால் விநோதத்தின்பொருட்டு இப்படம்வரைந்தாளோ, என்னவோ? இருக்கட்டும் இப்படத்தை எடுத்துக்கொண்டு, மறைந்து நிற்போம். என்ன செய்கிருள்பார்ப்போம்?

ல.—(திரும்பிவந்து) ஐயோ! இங்குதானே வைத்தேன்! எங்குபோய்விட்டது? ...... * * * மயில்களே! என்மீது அசூயைகொண்டீர்களோ? எங்கு கொத்திக்கொண்டு போய்விட்டீர்கள். ஆ! வனதேவதா! நீதான் ஒருக்கால் பொருமைகொண்டு என்காதலர் படத்தை அபகரித்தனையோ? உனக்கு நான் எவ்வளவோ பயபக்தியுடன் பூஜை செய்திருக்கிறேனே! கருணைகூர்ந்து என்காதலர் படத்தைத்திருப்பிக் கொடுக்கலாகாதா? உனக்கிஷ்டமில்லாதிருந்தால், இன்னும் நன்ருயும் அழகாயும் வரைந்து தருகிறேன். பிறகுபடத்தை எடுத்துச் செல்லலாம். ஐயோ! அவர்என்னை ஒருநாளும் கண்ணெடுத்துக்கூடப் பாராரே! அவரது படத்தையாவது பார்த்துக் கொஞ்சம் ஆறுதல் அடையலாமென்று ஒரு படம் வரைந்தால், அதைக்கூட என்னிடம் சேரவொட்டாதபடி, ஈசன் ஒளியவைத்தானே!

எனது அவஸ்தை அதிகரிக்கிறதே! அவரை மறப்பது சாத்தியமாயில்லையே! நான் என்னசெய்வேன்? உட் சென்று கொஞ்சம் தலை சாய்க்கலாமா? ஒரு அடி கூட எடுத்துவைக்க சக்தியில்லையே. அஹிம்ஸா! உன்னை நினைத்து நினைத்து நீ வாராதது கண்டு எனது ஐம்புலன்களும் எவ்வாறு சோர்வடைகின்றன? உனக்கு அஹிம்ஸன் என்று யார் பெயர்வைத்தது? இதோ இறக்கிறேன்; உனது ஹிம்ஸை சகியாமல். (ஒரு சார்மமனையின் மீதுசாய, அஹிம்ஸன் ஓடிவந்து தாங்கி)

அ.—கண்ணே! என்னால் நீ இனி ஹிம்ஸை அடையாய். நான் உனதுள்ளம் அறியாமல் இவ்வளவு காலம் வருத்தியதற்கு என்னை மன்னிப்பாய். உனது காதலைப் பெற்ற எனக்கு இனி இம்மண்ணிலோ, அல்லது விண் ணிலோ விரும்பக்கூடியதென்னை? என்னரும் பொன்னே! உன்னைத் துன்பத்திற்குள்ளாக்கியதற்கு என்னை நீ எவ்விதத்தில் சிக்ஷித்தாலும் சரி, உட்படு கிறேன். நான் உன்னை அலக்ஷியம் செய்ததாகக்கொஞ் சமும் நினையாதே. காரணமெல்லாம் பின்னறிவாய். இதோ தீனன் நின்பாதம் தஞ்சமடைந்தேன்.

ல.—ஆ! இதென்ன நிஜந்தானா? அல்லது நான் ஏதாவது சொப்பனவஸ்தையில் இருக்கிறேனா?........* * * இதையெல்லாம் நான் எப்படி நம்புவது? லலிதையோ தங்களுடைய காதலைப்பெறக் கொடுத்து வைத்தவள்? வானவர்களுக்கும் தாங்கள் வாய்ப்பதென்றால் அரி தாயிற்றே! தாங்களும் அவர்தானோ? அல்லது என் மனப் பிராந்தியோ?

அ.—கண்மணி! தஞ்சமென்றடைந்த பின்னும் தண்டனேயா? ஏன் என்னை வீணில் வருத்துகிருய்? லலிதா! எனக்கிப்பொழுதிருக்கும் ஆனந்த பாவசத்தை நான் எவ்வாறு எடுத்து உரைப்பேன்? ஓ! ஓ! உன்னைத் தொடலாகாதா? நல்லது அப்படியே ஆகட்டும். உன திஷ்டப்படி நடப்பதைக் காட்டிலும் எனக்கு வேறு இன்பமும் உண்டோ? சற்று எனதருகிலாவது உட்காரலாகாதா?

ல.—பிரபோ சாஸ்திர புரஸ்ஸரமாய் என்னை விவாகம் செய்துகொண்டாலல்லது தாங்கள் எப்படி என்னிடம் சுதந்தரம் பாராட்டுவது?

அ.—பிரியே! க்ஷத்திரியருக்குரித்தான காந்தர்வ முறைப்படி இதோ உன்னைக் கைபிடித்தேன்...... * * *

ல.—இனி எல்லாம் என்பதியின் இஷ்டந்தான். லலிதையின் சுதந்தரம் இன்ருேடு முடிவடைந்ததல்லவோ?

அ.—அப்படியாயின் இப்படிவா.

ல.—ஸ்திரீ ஜாதிக்குரித்தான வினயத்தைத் தாங்களே நஷ்டம் செய்யலாமா? நாம் ஏகாந்தத்தில் இருந்தால்—? சரி, தங்களுடைய அடிமையாயினும் நான் கொஞ்சம் நாணமுறுகிறேன்.

அ.—பிரியே! இப்பூஞ்சோலையில் சற்று உலாவி உல்லாஸமாய்ச் சுற்றிவருவோமே! பார்த்தனேயா, இச்செடிகளிலுள்ள மலர்களெல்லாம் நன்ருய் விகசித்து அவைகளும் நம்முடன் ஆனந்த மடைகின்றன? இவைகளெல்லாம் நமது விவாகத்தை எப்படி தெரிந்து கொண்டன? ஆனல் இந்தப் பக்கத்துச் செடிகளிலுள்ள முகைகளெல்லாம் இன்னும் நன்ருய் மலா

வில்லை. சந்திரனைக்கண்டும் உன்னைப்போல் கொஞ்சம் நாணமுறுகின்றன.

ல.—அப்படிக்கல்ல, நாதா! எனததிர்ஷ்டத்தைப் பார்க்க அவைகளுக்குப் பொறுக்கவில்லை.

அ.—அப்படியானால் நாமிங்கு இருக்கவேண்டாம். அதோ காற்றினால் தழைந்து தழைந்து நம்மைக் கும்பிட்டழைப்பதுபோலிருக்கிற அந்த மகிழ மரத்தினிடம் போவோம் வா. (சற்று உலாவுகிறார்கள்.)......... ***

ல.—பிராணேசா! என்ன முகம் ஒருவாறு நிலைகுலைந்திருக்கிறது? தாங்கள் என்னைச்சேர்ந்த விஷயத்தில் ஏதாவது அதிருப்தி அடைந்தீர்களோ? அப்படியானால் உங்களுக்கு யாதும் வருத்தமில்லாதிருக்கும்படி தாங்கள் எனக்குச் செய்து கொடுத்த சத்தியத்தினின்றும் இதோ விடுவித்து விடுகிறேன். என் கதி என்ன ஆனபோதிலும், தங்கள் மனம் கோணும்படி நான் நடக்கலாகுமோ? ஒருநாளும் கூடாது. எனக்கு இவ்வுலகில் இனி என்ன பேறுவேண்டும்? தங்களுடைய காதலைப்பெற்றேன் என்னும் உணர்ச்சி ஒன்றே போதுமல்லவா?

அ.—பிரியசகி! எங்கு நோக்கினும்—இப்பிரபஞ்ச முழுதும் நூதனமான ஓர் அழகைப்பெற்று ஆனந்தம் என்னும் ஆதிமூலத்தின் சொரூபம் எங்கும் பரவியிருப்பது எவ்வளவு நன்றாய் விளங்குகிறது! என் பேரன்பே! உனதவதாரத்தாலல்லவோ இப்புவிக்கு வாழ்வு என்பது ஏற்பட்டது? உன்னையே அடைந்த பின்னும் எனக்குக் குறையென்பதும் உண்டோ? என்றாலும், நீ மன்னிப்பாயாயின் என்மனதில் ஓர்

உருத்தல் இருந்துகொண்டிருக்கிறது; அதை உன்னிடம் தெரிவிக்க வேண்டியதே என்கடைமை. இனி உன் மனமறியாது என்மனதில் ஏதாவதிருக்கலாமா?

ல.—காந்தா! தங்களிடத்தில் உள்ளன்பு கொண்ட என்மனமறியாதோ, தங்கள் மனதிலுள்ளதை?

அ.—ஆம் கண்மணி! நீ அறியக் கூடாதது ஒன்றுமில்லை. இருந்தாலும் சொல்லு பார்ப்போம்!

ல.—நண்பர் பற்றியல்லவோ, தாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவர்விஷயமாய்த் தாங்கள் நடந்துகொண்டது சர்வேசுவரனுக்கு ஒப்பாகுமா என்றும், எல்லாமறிந்த பின், நண்பர் என்ன நினைப்பார் என்றும், தங்களிருவருடைய நட்பு இனி எப்படி நிலைநிற்கும் என்றும் பலவாறாகக் கலக்கப்படுகிறீர்களல்லவா?

அ.—ஆம் கண்மணி!

ல.—நான் சொல்லுகிறேன் கேளுங்கள். தங்கள்நடத்தையில் யாதொருதோஷமுமில்லையென்று நிச்சயமாய் நம்புங்கள். தங்கள் மனச்சாட்சியிருக்கிறது. அதற்கொப்பாய் நடந்துகொள்வது தானே சாத்தியம்.

அ.—ஆம். எவ்வளவு தெளிவாய் என்மனதிலுள்ள சங்கடத்தை எடுத்துச்சொன்னாய்? என் விஷயம் எனக்கே எப்படி நன்றாய் விளங்கும்? நீ கூறியபடித்தான் என்மனம் கொஞ்சம் சஞ்சலமடைந்தது. இதோ சொல்லுகிறேன் கேள். பஞ்சபூதசாட்சியாக நான் என் நண்பனுக்கு வஞ்சகம் நினைத்திருந்தால் பகவான் என்னை உடனே தண்டிக்கட்டும்.

அவனுக்காக நான் உன்னிடத்தில் முதலில் சம்பாஷித்த காலத்தில் உன்னை நான் கவனித்துக் கூடப் பார்க்கவில்லை; தலைகுனிந்த வண்ணமே பேசிவந்தது உனக்குத் தெரிந்ததே. பிறகு என் மனவுறுதி எனக்கே நிச்சயமில்லாதது கண்டு, இனிஇங்கு வருவதில்லையென்று தீர்மானித்தேன். என்னைத் திரும்பியும்உன்னிடம் போகும்படி ஸ்ரீகரன் நிர்ப்பந்திக்க,நான் ஒப்புக்கொள்ளாததுகண்டு, நான் உன்மீது காதல்கொண்டுவிட்டதாகவும், அதற்கு யுக்தியாய்ப் பேசுவதாயும் என்னை அவன் ஏச, நான் பொறுக்காது இவ்விடம் வரும்படி நேரிட்டது. மேல்நடந்த விருத்தாந்தமெல்லாம் உனக்கே தெரிந்தது.

ல.—என்னிடத்தில் எதற்கு இப்படித் தாங்கள் பிரமாணம் செய்யவேண்டும்? எனக்குத் தெரியாதா, தங்கள் நடத்தையில் யாதொரு மாசுமிருக்காதென்று? நல்லவேளையாய் ஸ்ரீகரருடைய பிடிவாதத்தால் நான் பிழைத்தேன். இல்லாவிடில் இங்கு திரும்பியிருப்பீரா?

அ.—ஆம், மாட்டேன். ஆனல் பகவத்ஸங்கல்பம் இப்படியிருக்கே. ஆனல்—

ல.—என்ன ஸ்ரீகரருடைய நல்லபிப்பிராயத்தை எங்கு இழந்து விடுவோமோவென்று ஏங்குகிறீர்களல்லவா?

அ.—ஆம், கண்ணே! அப்படிச் சம்பவிக்குமாயின் நான் உயிர் துறப்பேன்.

ல.—நாதா! ஸ்ரீகரருடைய உயர்ந்த குணத்தை நானறிந்த மட்டில், அவர் உண்மையெல்லாம் அறிந்து கொண்டால், தங்களிடத்தில் அன்புகூர்ந்து தங்களுடைய நடத்தையை அங்கீகாரம் செய்வார். தாங்கள்அவ

ரிடத்தில் எல்லாவற்றையும் ஆதியோடந்தமாய்த் தெரிவித்தலே உசிதமென் றெண்ணுகிறேன். தெரிவிக்குங் கால், என்னிடத்தில் அவருக்கு யாதொரு ஆயாசமும் உண்டாகாத வண்ணம் தெரிவிக்கவேண்டும். நான் எனது காதலை வெளியிட ஒருநாளும் துணிந்திருக்கப்போவதில்லை. தாங்களும் அப்படித்தான் என்று எனக்குத்தெரியும். தாங்கள் சொல்லியபடி அவர் பிடிவாதம் தானே நம்மிருவரையும் சேர்ப்பித்தது? ஈசுவர யத்தினத்தை யார் தடுக்கமுடியும்?

அ.—முதலில் கண்டபொழுது கொஞ்சமாவது உன் மனநோக்கம் தெரிந்திருந்தால், மோசம் வருமென்று நான் கட்டாயம் வராமலிருந்திருப்பேன். ஸ்ரீகரனைத் திரஸ்கரித்த நீ என்னிடத்தில் ஒருக்காலும் காதல்கொள்ளாய் என்று நம்பி வந்தேன்; நம்பிவந்த என்னை மோசம் செய்தாய்.

ல.—தாங்களும் கொஞ்சமாவது உமது நோக்கத்தை வெளியிட்டிருந்தால், நான் முதலில் மித்திரனுக்குப் பேதம் நினைத்தவர் என்று உங்களைக் கொஞ்சமும் மதித்திருக்கமாட்டேன்.

அ.—நல்லது, மேல் நீ சொன்னபடி நான் எவ்வாறு நண்பனிடத்தில் தெரிவிப்பது? தற்காலம் அவன் மனநிலையை யோசிக்குமளவில், அது அசாத்திய மென்று தோன்றுகிறது. முதலில் அவன் தேக ஸ்திதி இப்பொழுது மிகக் கேவலமாயிருக்கிறது. எல்லாவற்றையும் உடனே தெரிவித்தால், ஏதாவது ஒருக்கால் இடி இடித்தால் போல் ஆனாலுமாகும். ஆதலின் நாளடைவில்தான் தெரிவிக்கவேண்டும். ஒருக்கால்

எல்லாவற்றையும் அறிந்த பின், என்னைப்பொய்ய னென்றும், துரோகியென்றும் மதித்தாலும் மதிப் பான். இருந்தபோதிலும் அவனுக்கு யாதொரு கெடுதியும் நேராதபடி நடக்க வேண்டியது எனது முதன்மையான கடமை. ஆகையால் நமது விவா கத்தை நாம் கொஞ்சகாலம் மறைத்துவைத்து, பிறகு தான் பகிரங்கம் செய்யலாம். நான் ஒன்று யோசிக்கிறேன். இதற்கு சுமார் பத்து மைலுக்கப் பால் எனக்குச் சொந்தமாயுள்ள மாளிகையில் நீ கொஞ்சகாலம் வசித்துவந்தால், நான் சீக்கிரத்தில் தோழனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு உன்னைச் சேருவேன். இது உனக்குச் சம்மதிதானே ?

ல.—நாதா ! தங்களை விட்டுப்பிரிந்திருக்க எவ்வாறு மனந் துணிவேன் ? உடலுயிர்போலவும் சொல் பொருள் போலவும் உள்ள நாமிருவரும் எப்படி ஒருவரை விட்டு ஒருவர் தனித்திருப்பது ? நாமெங்காவது ஒரு வரும் காணாதபடி தொலைவாய்ச் சென்று காலம் கழிப் போமே. என்னைவிட்டுப்பிரிவது தங்களுக்கு தர்ம மாகுமா ? பிரிவீராயின் பிறகு என் சவத்தைத்தான் காணலாம்......... * * *

அ.—கண்ணே! என்ன இப்படிப் பேசுகிறாய் ? நீயல்லவோ எனக்கு தைரியம் சொல்லவேண்டும்? உனக்குச் சம் மதமில்லாதிருக்குமாயின் நான் திரும்பி ஓர் அடி கூட எடுத்து வைப்பதில்லை; என் தோழனை நான் இனிப் பார்ப்பதுமில்லை. (பெருமூச்செறிகிறான்).

ல.—நான் அறிவின்மையால் மொழிந்த வார்த்தைகளை யெல் லாம் தாங்கள் தயவுசெய்து மறந்துவிடவேண்டும்.

தங்கள் நோக்கம்போல் நடப்பதுதானே எனக்கேற்பட்ட தர்மம்? நான் உத்தம பத்தினியாகில் விரோதம் சொல்லலாகுமோ? ஆயினும் எனக்கு மிகக்கஷ்டமும் துக்கமுமா யிருக்குமாதலால், அப்படி தெரிவித்தேன்.

அ.—நான்மட்டும் ஏதோ உன்னைவிட்டுச் சுலபமாய்ப் பிரிந்திருப்பேனென்றல்லவோ நினைத்துக்கொண்டாய்? அரை நிமிஷங்கூட உன்னைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்; எப்படி பிரிந்து இருப்பது என்று எனக்கே தெரியவில்லை. ஒவ்வொரு தினமும் உன்னைக்கண்டு உன்னுடன் எவ்வளவு காலம் கூடி யிருக்கலாமோ அவ்வளவு காலம் கூடியிருப்பேன் என்று நான் உனக்குக் கூறவும் வேண்டுமா? எல்லாம் கொஞ்ச காலத்திற்குத்தானே;—பிறகு நாமிருவரும் நம்மிஷ்டம்போல் இருப்பதில் யாதும் ஆக்ஷேபனையில்லை.

ல.—தாங்கள் எவ்வளவு சொன்னபோதிலும் நாம் விவாகமான தம்பதிகள் என்பதை மறைப்பதென்றாலே என் மனம் அங்கீகரிப்பதில்லை. தாங்கள் சொல்லுகிறபடி நான் அந்த இடத்தில் தனித்திருக்க, தாங்களும் ஒருவரு மறியாதபடி அம்மாளிகைக்கு வந்துபோக, ஊரார் என்ன நினைப்பார்கள்? நான் ஏதோ தங்களுடைய போகத்திற்குமட்டும் ஏற்பட்ட விலைமாதுபோலல்லவோ நினைக்க ஹேதுவாகும்? ஆனால் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. எது யுக்தமென்று தோன்றுகிறதோ அப்படி செய்வதில் தடையில்லை. நான் தங்களுடைய உத்தரவுக்கு மாறாய்ச் சொல்ல என்ன நியாயம் ஏற்படும்? ஆனால் கூடிய சீக்கிரத்தில் விவாகத்தை வெளிப்படுத்த வேண்டும். காலதாம

தத்தால் ஏற்படக்கூடிய பெயர் குறைவு தங்களையும் சார்ந்ததன்றோ?

அ.—நான் பெயர்க்குறைவு வரக்கூடாதென்றுதான் இவ்வளவு உபாயம் தேடுகிறேன். இல்லாவிடில் எதற்காக இவ்வளவு யோசனைசெய்வது? கவலைப்படாதே. இன்னும் இரண்டுவாரத்துக்குள் உன்னைப் பலரறிய ஊர்வலத்துடன் என்னுடைய நகரமாளிகைக்கு அழைத்துச்செல்லுகிறேன். வேண்டுமானால் எவ்விதத்திலும் பிரமாணம் செய்து கொடுக்கிறேன்.

ல.—தாங்கள் சொன்னால் போதாதா? அதைத்தவிர பிரமாணம் செய்தால்தான் தவறக்கூடாதென்றும் வாக்கினால் சாதாரணமாய்ச் சொன்னால் தவறலாமென்றும் உண்டோ?

அ.—கண்ணே! உலகத்தார் வழக்கத்தை அனுசரித்துச் சொன்னேனே ஒழிய வேறில்லை. உன்னையும் மற்றவர்கள் போல நினைத்துப் பேசியதற்கு மன்னிப்பாய். நேரமாய்விட்டது. சென்றுவருகிறேன். எனக்கு அந்தரங்கமான யாரையாவது அடையாளமாக இந்த மோதிரத்துடன் அனுப்புகிறேன். அவன் உன்னை அழைத்துச் செல்லும்படி ஏற்பாடுகள் செய்துவைக்கிறேன். அவனிடம் நான் கொடுத்தனுப்பும் லிகிதப்படி நடப்பாய். எனக்கு விடைகொடு. நண்பன் என்ன ஆயினனோ?

ல.—பிராணநாதா! என்னையும் அழைத்துச் செல்லுங்கள். நான்எப்படியாவது இராஜகுமாரருக்கு நமஸ்காரம் செய்தாவது கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இனி உங்களைவிட்டு அரைநாழிகூட தனித்திருப்பது என்பது அசாத்தியம்.

அ.—கண்ணே! என்னசெய்வேன்? அப்படியானால் நானே போகவில்லை. இவ்வளவுதானே. என்ன வேண்டுமானாலும் ஆகட்டும். நண்பனும் உலகத்தாரும் என்னை ஒரு பெரிய மகாபாதகனாக நினைப்பார்கள். நினைத்தால் நினைக்கட்டும்; பழித்தால் பழிக்கட்டும்.

ல.—பிராணநாதா! வருத்தமடையலாகாது. சென்றுவாருங்கள். என்மீது கோபங்கொள்ளலாகாது.

அ.—எனக்கே போக மனமில்லை. நான்போகிறதில்லை. என்ன ஆபத்து வந்தாலும் வரட்டும்.

ல.—இது என்ன இது? தாங்கள் எனக்குச்சொல்ல வேண்டியிருக்க, நான் உங்களைத் தேற்றவேண்டியிருக்கிறதே! எழுந்திருங்கள்! சீக்கிரம் சென்று வாருங்கள். எல்லாமின்னும் இரண்டுவாரத்திற்குத்தானே!

அ.—ஆனால் எனக்கு விடைகொடு; நான் போய்வருகிறேன்.

ல.—சுகமாய்ப் போய்வாருங்கள்.

அ.—போகவா?

ல.—போகிறதென்றால் உடனே சொல்லாமல் போகக்கூடாதா? என்னை எதற்காகத் திரும்பித் திரும்பிப் பார்த்து உத்தரவு கேட்கிறீர்கள்?

அ.—புத்தி. கண்ணே! இதோ திரும்பிப்பாராமல் போகிறேன். (சிறுதூரம் சென்று) என்னசொல்லுகிறாய்?

ல.—ஒன்றுமில்லை. போய்வாருங்கள். (போகிறான்)—(சற்றுப் பொறுத்துத் தாமாக) எங்கும் இருள் மூடிக்கொண்டதுபோலிருக்கிறது. எங்கு திரும்பினும் பாழாய்க் காண்கிறதே! இனி அவரைக்காணு

மளவும் எங்ஙனம் காலம் போக்குவது? பொழுதே தொலையாதுபோலிருக்கிறதே! என்ன செய்யலாம்? அவரது சௌந்தரியத்தையும் குணாதிசயங்களையும் கீதத்திலேற்றியாவது ஸ்மரணம் செய்வோம். பிறகு சென்று பிரயாணத்திற்குத் தயார்செய்துகொள்ள வேண்டும். நல்லவேளையாய் என் தந்தை காசிக்குப் போனார். இன்னும் திரும்பிவர இரண்டுமாதம் பிடிக்கும். பிறகு எல்லாம்சொல்லிக்கொள்ளலாம். அஹிம்ஸா! அஹிம்ஸா! என்ன அழகு! பெயர் ஒன்றே போதுமல்லவா? (போகிருள்)

## அங்கம்—இரண்டு

### 3-வது காக்ஷி

இடம்—அரண்மனையில் ஒரு விடுதி.
நேரம்—காலை.

ஸுபாஷிணி, மிருத்யுகண்டகர், ஸாகரன்

ஸு.—வைத்தியரே! கைபார்த்தீர்களே, எப்படி இருக்கிறது?

மி.—அம்மணி! கைபார்த்ததில் கொஞ்சம் பித்த நாடி ஓங்கியும், வாதம் அழுந்தியும், அணில் முதுகுபோல தாதுக்கள் பேசுகின்றன.

ஸா.—ஓய், கர்னாடகமே! உம்மை அணிப்பிள்ளை முதுகு போலிருக்கா, இல்லாவிட்டா கீரிப்பிப்பிள்ளை முதுகு போலிருக்கான்னு யாராவது கேட்டாளா? நேத்திக்கு இன்னுக்கு அனுகூலமாயிருக்கா இல்லியா சொல்லுங் நாணும்.

மி.—அப்பா! அதைத்தானே சொல்ல வந்தேன்? அதற்குள் அவசரப்பட்டால் என்ன செய்கிறது?

ஸா.—சொல்லித் தொலையுமே சீக்கிரம். அம்மா படும் கவலை தெரியல்லே?

மி.—இதோச் சொல்லுகிறேன். வந்து....*** (பாடுகிறான்)

ஸ.—ஐயோ! ஸாகரா, அவரோ மிகவும் வயதானவர். அவசரப்படுத்தாமலிரு.

ஸா.—சொல்லுமையா; சாவகாசமாச்சொல்லும்.

மி.—தாதுவில் நேற்றைக்கிருந்ததற்கும், இன்றைக்கிருப்பதற்கும் வித்தியாசமிருக்கிறது.

ஸா.—அது என்ன வித்தியாசம்? குணமா, இல்லியா அதைச் சொல்லுமே ஒரு வார்த்தையிலே.

மி.—இந்த வாரத்தில் கொஞ்சம் ஒரு தெறிப்பு உண்டாயிருக்கிறது. அந்த இடத்தில் தேரையர் சொல்லுகிறார்...............(பாடுகிறான்) ..................***

ஸா.—எங்களுக்கு தேரையரும் வாண்டாம்; தப்பனையரும் வாண்டாம். விஷயத்தைச் சொல்லுமே.

மி.—அப்பா! என்ன சிறுபிள்ளையா யிருக்கிறாயே? எல்லாம் நான் சொல்வதா என்ன? நான் நோயாளியின் சரீரத்திற்குள்ளா புகுந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன்? எல்லாம் சாஸ்திரத்தை அனுசரித்துத்தானே சொல்ல வேண்டும்? ஸ்கந்தகிரியின் உச்சியில் சாக்ஷாத் சுப்பிரமணியத்தின் அருள்பெற்ற தேரையர், அகத்தியர், தன்வந்திரி முதலான மகா ரிஷிகளின்வாக்கின்படித்தானே நான் சொல்லவேண்டும். தேரையர் சொல்லுகிறார், .........(பாடுகிறான்).........***

ஸா.—நாசமாய்ப் போச்சு நீர் வைத்தியம்பண்ணி. சங்கதியைச் சொல்லுமே.

மி.—அதுதான் கேளு.........(பாடுகிறான்).........* * *
......அதாவது நேற்றையதினம் வாதம் பித்தம் ஐயம் மூன்றும் துவந்தவமாய்ப் பேசின. இன்றைக்கு மூன்றும் பிரிந்துவிட்டன. தெரிந்துகொண்டாயா?

ஸா.—ரொம்ப நன்னா தெரிஞ்சுது! மேலே சொல்லுமே!

மி.—மேலே சொல்லுகிறேன்கேள்......(பாடுகிறான்)...***

ஸா.—ஐயய்யோ! வியாதியின் கூறைக்கேட்டால் பாடுகிறீரே! உமக்கு மூளை கீளை இருக்கோ? பாட்டையா பாடச்சொன்னம்? அது போகுமே வெகுதூரம்!—எனக்குத் தெரியாதா?

மி.—இன்றைக்கிருக்கும் குறிப்பைப் பார்க்குமளவில், இப்பொழுது ஒன்றும் சொல்லமுடியாது.

ஸா.—என்ன, இப்பொழுது ஒன்றும் சொல்ல முடியாதா?

மி.—அப்படியென்றால் சௌக்கியத்திற்குவர இன்னும் சிலநாள் பிடிக்கும்.

ஸா.—சௌக்கியத்திற்கு வந்துவிடுமா? அதைச் சொல்லும். எதுமுதல் சௌக்கியத்திற்கு வர ஆரம்பிக்கும்?

மி.—அம்மணி! சந்தேகப்படவே வேண்டாம். நான் கெடுவைத்தும் தவறுவதுண்டா?

ஸா.—சரிதான்! சரிதான்!

மி.—அம்மணி! இந்த வியாதி மூளையைச் சார்ந்தது. இந்த வியாதிக்கு மூன்றுநாள் கடுமையான அதிகாரம். நான்காவதுநாள் காலையில் இப்படிக் குதிக்கிறதோ, அப்படிக் குதிக்கிறதோ?

ஸு.—என்ன, என்ன?

மி.—அது வியாதியின் தன்மை. அதன் கடுமையை நமது திறத்தால் அடக்கிவிடலாம்; கவலைப்படவேண்டாம். ஆனால் செய்யவேண்டிய ஒன்றிருக்கிறது. இளவரசுக்கு எப்படியாவது ஆகாரத்தைச் செலுத்திக் கொண்டே வரவேண்டும். எப்பொழுதும் தாங்களாவது அஹிம்ஸாராவது பக்கத்தில் இருந்துகொண்டிருக்கவேண்டும். அவர் விழித்துக்கொள்ளும்பொழுதெல்லாம், அவருக்குப் பிரியமாயுள்ளவர்கள் எதிரில் இருந்துவர வேண்டும்; தைரியம் சொல்லிக்கொண்டு வரவேண்டும்.

ஸு.—அப்படியே பார்த்துக்கொண்டு வருகிறோம். இதைக் காட்டிலும் எங்களுக்கு வேறு என்ன வேலையிருக்கு?

மி.—ஆனால்—உம்—நாம் என்ன செய்வது? அனுபவிக்க வேண்டியதிருந்தால் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்? இல்லாவிட்டால் இப்படி சோதனைபோல் நேருமா?

ஸு.—என்னசோதனை? என்ன நேர்ந்துவிட்டது?

மி.—ஒன்றுமில்லை. ஒரு மாத்திரையுண்டு—அதை ஒரு முறை தாய்ப்பாலில் இழைத்துக் கொடுத்துவிட்டால் இந்தவியாதி யாருக்கு வந்ததென்றுகூட தெரியாமல் ஓடிப்போய்விடும்.

ஸு.—அதை உடனே ஏன் பிரயோகம் செய்யக்கூடாது?

மி.—அதென்னம்மா அப்படி கேட்டீர்கள்? தாங்கள் சொல்லுகிறவரையில் வைத்துக்கொள்வேனா? மருந்து கையிலிருந்தால் இதுவரை வியாதியை எட்டுதரம் நிறுத்தியிருக்க மாட்டேனா? பாருங்கள் சோத

னேபோல் அந்த மருந்து இந்த சமயம் கையில் இல்லே. நாம் என்ன செய்கிறது? இளவரசுக்குப் போதாத வேளே; மருந்துடப்பி காலியாயிருக்கிறது.

ஸா.—ஐயோ! உமக்கு இவ்வளவு தெரியவில்லேயே! உடனே தயார் செய்துவிடக் கூடாதாங்ஙாணும்?

மி.—அப்பா! நீ சொல்லவும் வேண்டுமோ? நானுகவே செய்துவிட மாட்டேனு? சரக்குகளேச் சேகரித்து நூற்றெட்டுப்புடம் போடுவதானல் இப்பொழுது ஆரம்பித்தால்கூட, நாளே மாலேக்குத்தானே ஆகும் என்று யோசித்தேன். நம்முடைய அவசரத்திற்கு ஆகாதே. ஆனல்...........

ஸா.—விறகையும் முட்டையையும் வச்சுக் கொளுத்தினல் போறது; உடனே ஆயிடறது. இது தெரியல்லியே.

மி.—என்னப்பா, நல்ல பிரகஸ்பதியா யிருக்காய்! உனக்குத் தெரியாத விஷயத்தில் நீ தலே நீட்டாதே. அப்படி செய்தால் சாம்பலும் கரியும்தான் மிச்சமாகும்; மருந்து ஒன்றும் ஆகாது.

ஸா.—பின்னே என்னதான் செய்கிறது? மருந்து உடனே தயார் செய்யவேணுமே.

மி.—அதற்குத்தான், இன்றைக்கே தயார்செய்ய ஏதாவது உபாயம் இருக்கிறதா என்று பார்க்கிறேன். ஆம்! ஆம்! இப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது. ஒரு சரக்குண்டு. அதைச்சேர்த்துப் புடம்போட்டால் மருந்து தயாராய்விடும். ஆனல் அது அகப்படுவதோ மிகக் கடினம். கடையில் அகப்படாது. என்ன செய்யலாம்? ஓர் இடத்தில் ஒரு செட்டியிடம் இருக்கும். அவனே எளிதில் கொடுக்கமாட்டான்.

ஸா.—இராஜாங்கத்துக்குன்னு வாங்கிண்டுவந்துடரேன். யாரவன்? எந்தச்செட்டி? எந்தத் தெரு?

மி.—இராஜாங்கத்துக்கென்று சொன்னேமோ, விலைகேட்க தாக்ஷண்ணியமாயிருக்குமென்று, சரக்கே இல்லை என்று சொல்லிவிடுவான்.

ஸு.—பின் என்ன செய்கிறது?

ஸா.—நீரே நேரில் கேட்டாத்தான் கிடைக்குமோ?

மி.—அப்படித்தான் செய்யவேண்டும். அந்தப்பாபி இது தான் சமயம் என்று பூராவாக விலை கேட்பான். அது தவிர கொஞ்சம் ரேக்குகள் வாங்கவேண்டும். எல்லா மாக,—அம்மணி! இதையெல்லாம் நான் எப்படி இங்கு தெரிவிக்கிறது? அரண்மனையில் எப்பொழுதும் ஏராள மாய் வாங்கிக்கொண்டு, இப்பொழுது மருந்து செல வுக்குப் பணமில்லையென்று எப்படி கேட்பது? எல் லாம் என் தரித்திரத்தின் கொடுமை.

ஸு.—வைத்தியரே! ஒன்றும் யோசிக்காதீர்கள். நீர் ஒரு பெரிய சம்சாரி என்றும், எவ்வளவு சம்பாதித்தாலும் செலவாய்விடும் என்றும் எனக்குத் தெரியாதா? இப் பொழுது என்னவேண்டும்? சொல்லும்.

ஸா.—என்னங்நாணும்? சொல்லுமே. வைத்தியர் கடனைத் தொலைச்சாத்தானே வியாதி சொஸ்தமாகும்.

மி.—அப்பா! என்ன செய்கிறது? மருந்து செய்கிறதென் ருல் நாள் முழுதும் செல்லுமே, பையனும் ஊரி லில்லையே என்று யோசிக்கிறேன். இருந்தால் அவனை யாவதுகொண்டு அந்தக்காரியத்தைப் பார்க்கச்சொல்ல லாம்.

ஸா.—என்ன காரியம் வந்துட்டது ?

மி.—என்னவென்று சொல்லுகிறது? நான் இப்பொழுதே குத்திக்கொண்டு பிராணனை விடவா? எல்லாம் இப்பொழுதுதானா வந்துசேரவேண்டும்.?

ஸா.—என்ன சொல்லுமே? என்ன கஷ்டம் வந்துட்டுது?

மி.—இல்லை. சம்மந்திக்கு இப்பொழுது என்ன அவசரம்?

ஸா.—வைத்தியரே! சம்மந்தி என்ன அவசரப்படுத்துகிறார்? என்ன நிர்ப்பந்தம்? பதறாமல் சொல்லும்.

மி.—இல்லையம்மா, கேளுங்கள். மேலமாதம் ஆகட்டும் என்று சொன்னேன். அதெல்லாம் சரிப்படாதென்றும், இப்பொழுதே செய்யவேண்டுமென்றும் எழுதியிருக்கிறாரே இது நன்றாய் இருக்கிறதா? நம்முடைய ஸௌகரியா ஸௌகரியத்தையும் கவனிக்கவேண்டாமா?

ஸா.—எந்தச் சம்மந்தி? என்ன சமாசாரம்?

மி.—கேளப்பா, நம்முடைய குழந்தை பாலமிருக்கிறாளோ, இல்லையோ, அவளுடைய மாமனார் நாளைக்கு மறுதினமே தன்பிள்ளைக்கு சாந்திகல்லியாணம் வைத்துக் கொள்ளவேண்டும்என்று எழுதியிருக்கிறார். பணத்துச்குப் பையனை அனுப்பி யிருக்கிறேன். மாலையில் வந்துவிடுவான். வெறுங்கையாய் வந்தால் எப்படி நடத்துகிறது?

ஸா.—எப்படிநடத்துவதா? பெண்ணை அனுப்பிச்சுட்டா போறது. மாப்பிள்ளை யிருக்கான்; நடக்கறது சாந்தி.

மி.—அவ்வளவுதான் போலிருக்கிறது? இப்பொழுது சீர்வகைக்கு ஆயிரம் பொன் இளக்கணும். இல்லாவிட்டால் பெண்ணைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டான்.

ஸா.—தொலேச்சுப் பிடறத்தானே?

மி.—ஆமப்பா, உன்னைப்போல் பணம் சிறகுமுளைத்திருந்தால் சரிதான். கடன் வாங்க வேண்டியிருந்தால் என்ன செய்கிறது? கடன் கேட்டுப்பார்க்கவேண்டும். இந்தக்காலத்தில் எவன் கடன்கேட்டவுடன் கொடுக்கிறான்? பந்தகம்வைக்க வேண்டுமென்பான். உனக்கு ஐந்தில் ஒருபாகம் தானே, வீடுமாத்திரம் போதாதென்பான். எவ்வளவு கஷ்டம் என்று நினைக்கிறாய்?

ஸா.—எனக்சப்பவே தெரியுமே! உங்காத்திலே எல்லாக் கல்லியாணமும் இப்பவே வந்துடுமே!

மி.—விகடா என்ன வார்த்தை சொன்னாய்? அவன் பெண்ணைச் சேர்த்துக்கொண்டாலும்சரி, தள்ளினாலும் சரி என்னிடம் செருப்பாலடித்த காசுகூட கிடையாது. அதுவிஷயம் பலிக்காது. இங்கோ இப்படி இருக்கிறது. நான் ஒன்றையும் கவனிக்கப்போகிறதில்லை. வீட்டுக்குப்போனால் அவள் ஒருபக்கம் சண்டையாடி வருவாள். ஆனால் நான் வீட்டுக்குப்போனால்தானே! அரண்மனையிலேயே சாப்பிட்டுக்கொண்டிருந்து விடுகிறேன். எது வேண்டுமானாலும் நடக்கட்டும். இதைக் காட்டிலும் வேறு எனக்கு என்ன வேலையிருக்கு?

ஸா.—வைத்தியரே! இன்னும் இரண்டுமாதம் கழித்து முகூர்த்தத்தை வைத்துக்கொள்ளும்படி எழுதிவிட லாகாதா? அப்படிச்செய்யுங்கள்.

மி.—செய்து விடுவேன். ஆனால் இந்த மாதம் வேறு நல்ல நாளும் கிடையாதாம். மேலமாதமோ பிள்ளைக்குப் பிறந்த மாதமாம்; கூடாதாம். மேலும் சுபஸ்யசீக்கிரம் என்று, எல்லாம் காலாகாலத்தில் நடக்கவேண்டியது

தானே! இங்கே அரண்மனையில் இப்படியிருக்குமென்று சம்மந்திக்கு எப்படி தெரியும்? இனி நிறுத்தினால் ஏற்பாடுகளெல்லாம் வீணாய்ப் போய்விடும். பெண்டுகளும் குறித்தமுகூர்த்தந் தவறினால் அவசகுணமென்று நினைப்பார்கள்.

ஸா.—அப்படியானால் இதென்ன பிரமாதம்! ஆயிரம் பொன்தானே? உடனே எடுத்துக்கொண்டுபோங்கள். உமது தம்பியையாவது போகச்சொல்லவேண்டுமே ஒழிய, நீர்போகக்கூடாது. எல்லாம் அவர்பாடு என்று விட்டுவிடும்.

மி.—அதென்ன அம்மணி, நீங்கள் சொல்லவும் வேண்டுமா? எனக்குத்தெரியாதா? நான்போவேனா? நான் போகவேண்டியதில்லை. சம்மந்திக்கு நான்வரவில்லையென்னும் குறை ஒருநாளுமிராது. சீர்களைமட்டும் குறைவில்லாமல் செய்துவிடவேண்டும். அவ்வளவுதான் அம்மணி.

ஸா.—அப்படியானால், விகடா உடனேசென்று பணத்தை வாங்கிவா.

மி.—அம்மணி! இவ்விடத்தை ஆசிரியத்தவர்களுக்கு என்ன குறைவு? இந்த சமயம் இப்படிக்கெல்லாம் கேட்கவேண்டியதாயிற்றே என்று மாத்திரம் வருத்தமாயிருக்கிறது.

ஸா.—ஆனால் மாத்திரை சாயங்காலம் தவறாமல் முடிந்துவிடுமல்லவா?

மி.—அதற்கென்ன ஆக்ஷேபம்? ஒருசமயம் எல்லாம் வீட்டுக்குப் போய்வந்து சொல்லுகிறேன்—அம்மணி.

ஸா.—என்ன விசேஷம்? இன்னும் என்னதடை?

மி.—தடையொன்றுமில்லை; மருந்து உடனே தயார்செய்து விடுகிறேன். இல்லையம்மணி, நம்முடைய வீட்டுக்காரி யிருக்காளே, அவள் நான் ஏதாவது உயர்ந்த மருந்து தயார் செய்துவைத்தால் அதில் எப்படியாவது கொஞ் சம்திருடிவைப்பதுண்டு.ஓர் அவசரத்திற்குக்கேட்டால் முதலில் இல்லையென்று சொல்லுவாள். பிறகு அவ ளுக்குத் தேவையாயுள்ளதைக் கொடுத்தால், தேடிப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொஞ்சம் கொண்டுவந்து கொடுப்பாள். அப்படியும் கேட்டுப்பார்த்தேன். கொஞ் சம் கூட இல்லையென்று சொல்லிவிட்டாள். ஆனால் வெகுநாளாய் ஒரு விரதங்களுக் குபயோகப்படும்படி ஒருபீதாம்பரம் கேட்டுக்கொண்டிருந்தாள். மேல மா தம்பிறந்ததும்வாங்கித்தருகிறேன்என்றும் சொல்லிப் பார்த்தேன். சரியென்று ஒத்துக்கொண்டாளே தவிர, மருந்து இல்லையென்று சொல்லிவிட்டாள். ஒருக் கால்—

ஸா.—என்ன ஒருபீதாம்பரம் கொண்டுபோய் கேட்டாள் கொடுப்பாளோ? அப்படித்தானே?

மி.—அதுதான். அப்படிப்பார்க்கலாமோ என்று நினைத் தேன். கொஞ்சமாவது இருந்தால் ஒருதரத்துக்கா வது கொடுக்கலாமே என்று பார்த்தேன்.

ஸா.—ஆனால் உடனே உயர்ந்ததாய் ஒருபீதாம்பரம் எடுத் துக்கொண்டு போங்கள். விகடா, எடுத்துக்கொடு.

ஸா.—சரி. மருந்து இருக்கு; நிச்சயம். வைத்தியரே! இன் னும் ஏதாவது வேணுமோ? இப்பவே கேட்டிடும்.

மி.—என்னப்பனே, அவள் புத்தி அவ்வளவுதான். அதற்கு என்னசெய்கிறது? அது என் தலையில் எழுத்து.

அநேகமாய் மருந்து எடுத்துக்கொண்டு இப்பொழுதே சீக்கிரம் திரும்பிவருகிறேன்.

ஸ.—ஸாகரா! உடனே சென்று வேண்டியதை வாங்கிக் கொடு.

ஸா.—இதோ அம்மணி! வாருமையா; போவோம். நீர் நல்ல வேலைக்காரர்காணும்! இப்பொழுது தெரிகிறது!

சேவகன்.—அம்மணி! அஹிம்ஸர் வந்திருக்கிறார்.

ஸ.—அஹிம்ஸா! நான் என்னசெய்வேன்? என்னருமை மைந்தனுக்குக் கண்டிருக்கும் வியாதி மிகக்கொடியது போல் காண்கிறது. தெய்வம் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறதோ தெரியவில்லையே? என்னை இப்பொழுதே கொண்டுபோகலாகாதா? * * * * நான் ஒரு பிராணிக்கும் கனவிலும் கெடுதி நினைத்ததேயில்லையே? நமது நாட்டிலுள்ள தெய்வாலயங்களிலெல்லாம் உற்சவாதிகள் எவ்வளவு விமரிசையாக நடந்துவருகின்றன! நம்முடைய அன்ன சத்திரங்களிலெல்லாம் விசேஷ அன்னதானங்கள் செய்யப்பட்டு வருகின்றனவே! நான்கு வர்ணத்தாரும் அவரவர்களுக்குரித்தான தர்மங்களை வழுவாது நடத்தி வருகின்றனர்களே! என்னையும் தெய்வம் சோதித்தால் அடுக்குமோ? நான் என்ன பாவம் செய்தேனோ முன் ஜன்மத்தில்? ஐயோ! அப்பா, வியாதியல்லவோ இவ்வளவு சம்பவித்தது! நல்ல வேளையாய் ஊரையாவது விட்டுத்தொலைந்தாளே.

அ.—அம்மா! அப்பெண்மீது குற்றம் சாட்டுவதில் என்ன பயன்? தாங்கள் சொல்லியதுபோல எல்லோருக்கும் கடவுள் அவரவர்கள் முன் வினைப்படி படியளக்கிறார்.

எல்லாம் நம்மனம்போல் நடக்குமாகில், பிறகு கடவுளுக்கு என்னபெருமை? பின் நாமே எல்லாம்வல்லவருக்குச் சமமாய்விடுவோமல்லவா? அம்மணி! தாங்கள் இனிக்கவலைப்பட வேண்டாம். இன்னும் மூன்று தினங்களுக்குள் வியாதி சௌக்கியத்திற்கு வந்துவிடும் என்று வைத்தியரும் சொல்லுகிறார்; ஜோஸியரும் சொல்லுகிறார். எனக்கும் அப்படியேதான் தோன்றுகிறது. இன்று விடியற்காலமுதல் எனக்கு தைரியமாயிருக்கிறது. கொஞ்சம் நிதானமாய்ப் பேசுகிறான். தங்களையும் மகாராஜாவையும் விசாரித்து அதிகமாய் கவலைப்படாமல் பார்த்துக்கொள்ளச்சொன்னதும் தவிர, என்னைப்பக்கத்திலேயே எப்பொழுதும் இருக்கும்படி சொன்னான்.

ஸ.—அவளைப்பற்றி ஏதாவது பிரஸ்தாபம் செய்தானோ?

அ.—இல்லை. அவள் வார்த்தையே எடுக்கவில்லை. ஆனால் இரண்டொருமுறை துக்கித்தாற்போல பெருமூச்சுவிட்டான். எனக்கோ வருத்தம் சகிக்கமுடியவில்லை. அம்மா! எல்லாம் மகாராஜாவின் நன்மைக்கும் தங்களுடைய தெய்வபக்திக்கும் பகவான் நல்லவழியே விடுவார். கலக்கமடைய வேண்டாம்.

ஸ.—அப்பா! இந்த சமயத்தில் நீ படும் பாட்டைப்பார்த்தால் எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. உன் தலையிலல்லவோ எல்லாபளுவும் ஏறிவிட்டது? உனக்கு யார் தேறுதல் சொல்லுகிறது? உன்னிடத்தில் நாங்கள் எவ்வளவு உபகாரத்தை அடைந்து விட்டோம்? எப்படி பிரதிசெய்து எங்கள் கடனைத்தீர்த்துக்கொள்ளப் போகிறோம்?

அ.—அம்மா! தாங்கள் அப்படி சொல்லலாமா? தாய்தந்தையில்லாக்குறையைக் கொஞ்சமும் நினையா வண்ணம் தாங்கள் வளர்த்து வந்ததற்கு இதையெல்லாம் ஒரு பெரிதாகச் சொல்லலாமா? தாங்கள் அப்படிக்கெல்லாம் சொல்லி என்னை வருத்தலாகாது. நான் எப்பொழுதும் தங்கள் அன்பை இழக்காத வண்ணம் நடந்துகொள்வேனாகில் அதுபோதும் எனக்கு. நானோ சிறுபிள்ளை. எவ்வளவோ குற்றம்குறை இருக்கும். நான் என்னபிழை செய்தாலும் என்னை மன்னிப்பதாக வாக்களியும்.

ஸா.—இதெல்லாம் என்னபேதமை! நீயாவது குற்றம் செய்யவாவது? உன்னால் சாத்தியமில்லை யென்று எனக்குத்தெரியாதா? அப்படி ஏதாகிலும் செய்தாலும் ஸ்ரீகரன் செய்தால் தண்டிப்பேனோ? அப்படித் தானே நீயும்?

அ.—அதற்காக இல்லையம்மணி. என்முன்னோர்கள் செய்த பூஜா விசேஷத்தால் நான் தங்களுடைய அன்பைப்பெறப்பெற்றேன். இராஜாங்கத்தில் எத்தனையோ பேர் என்மீது அசூயை கொண்டிருப்பார்கள். சமயம் பார்த்து எப்படியாவது முடிந்து விட்டாலும் முடிந்துவிடுவார்கள். அப்படிக்கு ஏதாவது நேருமாயின் என்னைக் கேளாமல் என்னை சிக்ஷிப்பதில்லை என்று வரம் கொடும்.

ஸா.—அப்படியே தந்தேன்; எழுந்திரு. ஐயோ! அந்தப் பாவி வேறு ஒருவனிடத்தில் காதல் கொண்டிருக்கிறேன் என்று முதலிலேயே சொல்லியிருக்கலாகாதா? என்மகன் அப்பொழுதே ஆசையொழித்திருப்பானே.

இத்தருணத்திலோ நீ வந்து அதைச் சொன்னாய்? அதிலிருந்து அல்லவோ, மூர்ச்சையாகி, ஜொரம் கண்டு, பிறகு ஜன்னி, பிதற்றல் முதலானதெல்லாம் படிப்படியாய் ஏறிவிட்டன?

அ.—அம்மணி! சொன்னதே நலமென்று நினைக்கிறேன். இன்னும் தெரிவிக்காமலிருந்தால் மேன் மேலும் காதல் விருத்தியாகிவிடுமே! பிறகு என்னசெய்வது? இதைத் தெரிவித்தபின் சிரேஷ்ட குணம் பொருந்திய ஸ்ரீகரன் அவள் பேச்சையே எடுப்பதில்லை. அம்மணி! தாங்கள் கவலைப்படவேண்டாம். இன்னும் மூன்று தினங்களுக்குள் வியாதி சௌக்கியத்திற்கு வந்துவிடும்.

ஸ—.— நான் போய்வருகிறேன். வைத்தியர் சொற்படி இப்பொழுதுதான் மிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இரவும்பகலும் நாம் கண்கூட கொட்டக்கூடாது. ஸ்ரீகரன் எழுந்து எங்கும் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். தவிர அவன் விழித்துக் கொள்ளும்பொழுதெல்லாம், நீயாவது நானாவது எதிரில் இருக்கவேண்டும். குழந்தையின் அறையை விட்டு சற்றுகூட அகலக்கூடாது. தெரியுமா? ஜாக்கிரதை. ஜகதீசா! ஜகதீசா!

அ.—ஐயோ! என்னென்ன விபத்துக்கள் நேருகின்றன? நான் ஒருவழியும் போகமுடியவில்லையே! இவ்விடம் விட்டோ ஒரு நிமிஷங்கூட போகமுடியவில்லை. என் கண்மணியோ, என் பிரிவாற்றாமையால் கொஞ்சங் கொஞ்சமாக தேகம்மெலிந்திடுகிறாள். இன்றைக்கனுப்பிய கடிதத்தில் என்மீது குற்றஞ்சாட்டி, நான் அல

க்ஷியம் செய்வதுபோல நினைத்து எழுதியிருக்கிறாள். இன்னும் இரண்டு தினங்களுக்குள் வராவிடில் உயிர் விடுவதாய்ச் சொல்லுகிறாள். நான் எப்படி அங்கு போவது? நான் போகாம லிருக்கவும் கூடாது. தன்னை ஊரார் கொஞ்சம் அவதூறாகப் பேசுவதாயும், விவாகத்தை பகிரங்கப் படுத்தவேண்டுமென்றும் எழுதியிருக்கிறாள். இதுவோ அதற்குத் தக்க சமயம்? என்ன புத்தியீனையா யிருக்கிறாள்? சீ, என் மதியை என்னென்று சொல்வது? என் கண்மணிமீதோ நான் கோபித்தேன்? அவளுடைய ஸ்திதியில் நான் இருந்து பார்த்தால் தெரியும். எப்படியும் நாளை நான் போகத்தான் வேண்டும். இன்றையதினம் சாயங் காலத்திற்குள் அநேகமாய் ஸ்ரீகரனுக்குக் கொஞ்சம் அனுகூலமாகத்தான் இருக்கும் என்று நினைக்கி றேன். எப்படியும் நாளை விடுமுறை அகப்படும். நாளையதினம் தவறாமல் வருவதாக எழுதிவிடுகிறேன். இன்னும் எவ்வளவுகாலம் இப்படி துன்பப்படுகிறது? ஐயோ! சிவனே!.........* * *

## அங்கம்—இரண்டு

---

### 4-வது காக்ஷி

இடம்—தோட்டமும் மாளிகையும்.
காலம்—பகல்.

ரணபாஸ்கரன்.

ரண.—அஹிம்ஸனது அதிருஷ்டமே அதிருஷ்டம்! தாய் தந்தையர் இன்னார் என்று அறியாத இவனல்லவோ

இந்த இராஜ்ஜியமுழுதும் ஆளுகிறான்? இளவரசனையும் மகாராணியையும் தனது சுண்டுவிரலில் சுற்றி ஆட்டிவைக்கிறான். அஹிம்ஸனைக் கலக்காமல் மகாராணி ஒன்றும் செய்வதில்லை. மகாராணியைக் கலக்காமல் மகாராஜா ஒன்றும் செய்வதில்லை. ஆகவே நம்போலுள்ளவர்களுக்கு ஏதாவது ஆகவேண்டியிருந்தால் இவன் தயவிருந்தால்தான் உண்டு. இவன் தகப்பன் ஏதோ மகாராணிக்கு எட்டின பந்துவாம். இருந்தால் என்ன? இவனும் என்னைப்போல் ஒரு போர்வீரன் மகன்தானே? இவன் தகப்பன் சேனாதிபதியாயிருந்து யுத்தத்தில் இறக்குங்காலத்தில்' இந்தத் தாயில்லாப் பிள்ளையைத் தாங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றானாம். குழந்தை அக்காலத்தில் மூன்று நான்கு வயதுள்ளதாயும், கொஞ்சம் அழகுடையதாயுமிருந்ததாம். மகாராணிக்கும் அக்காலத்தில் புத்திர ஸம்பத்தில்லாதிருக்கக் கொஞ்சம் அருமையுடன் எடுத்து வளர்க்கப்பட்டு வந்தான். அதிலிருந்து தான் இளவரசனுக்குச் சமானமென்றும் தனக்கு இராஜ்ஜியத்தில்கூட ஏதோ பாத்தியமுள்ளவன்போலல்லவோ இவன் நினைத்துக்கொண்டுவிட்டான்?

இவன் வாழ்வே வாழ்வு! இவனுக்கோ நம்போன்றவர்களிடம் கொஞ்சமும் கருணையில்லை. நானும் யுத்தத்தில் ஓர் உயர்ந்த போர்வீரனென்று இவனுக்கு நன்றாய்த் தெரியும். அப்படியிருந்தும் நம்மைக் கவனிப்பதில்லை. நானும் இரண்டொருமுறை நேரில் சொல்லிப் பார்த்தேன். காதில் கொஞ்சமும் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. இளவரசரோ மிகவும்

நற்குணம் வாய்ந்தவர்தான். ஆனால் இவன் சிபார்சு இல்லாமல் தாமாக ஒன்றும் செய்வதில்லை. இளவரச னுக்கும் இவனுக்கும் விரோதம் உண்டுபண்ணி, இவர்களை எப்படியாவது பிரித்தாலல்லது, நம் போன் றவர்களுக்குக் காலமில்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியும். சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்பொழுது சரியான சமயம் வாய்த்திருக்கிறது. இளவரசன் இச்சித்த ஒரு பெண்ணை இவன் விவாகம் செய்து கொள்ளும்படி நேரிட்டதாகவும் அதிலிருந்து மேல் நடந்த விருத்தாந்த மெல்லாம் வேறு மார்க்க மில்லாது இவன் என்னை நம்பி என்னிடம் தெரிவிக் கும்படியாயும் வந்துவிட்டது. இன்றையதினம் காலைமுதல் இளவரசனுக்குக் கொஞ்சம் வியாதி அதி கரித்திருப்பதை முன்னிட்டு, தான் எழுதியனுப்பிய கடிதத்தில்கண்டபடி தன்மனைவியிடம் போகமுடிய வில்லையென்று என்னைக்கொண்டு தன்மனைவிக்குத் தேறுதல் சொல்லும்படிக்கும், வராமுடியாமலிருக்கும் காரணத்தை நேரில் விவரமாய்ச் சொல்லும்படிக்கும் என்னை அனுப்பியிருக்கிறான். இதுதான் சரியான தருணம். சீக்கிரத்தில் எனது தந்திரத்தால் இவளது புத்தியை மயக்கி இவளை ஏமாற்றி, ஸ்ரீகரன், அஹிம் ஸன், அவன் மனைவி இம்மூன்று பேரும் இனி யொருவரையொருவர் பாராதவண்ணம் திக்குக்கொரு வராய் அனுப்பிவிடுகிறேன். ......... * * * யா ரங்கே, சேவகா?

சே.—தாங்கள் யாரையா?

ரண.—நான்தான் ரணபாஸ்கரன்.

சே.—யாரது? யாரது? ரணபாதகனு? யாரையா நீர்? இங்கு என்னவேலே? போம்; இங்கு நில்லாதீர்; சீக்கிரம் நடவும்.

ரண.—ரணபாஸ்கரனென்ருல் அழுதபிள்ளை வாய்மூடுமே! உனக்குத் தெரியாது.

சே.—ஓ! நீர் என்ன பூச்சாண்டியா? இங்கே குழந்தைகளில்லை. வந்த வழியைப்பார்த்துக்கொண்டு திரும்பிப் போய்விடும்.

ரண.—என்னடா, நீ சுத்த அதிகப்பிரசங்கியாயிருக்கிருய்? என்பெயரைச்சொல்லியும், நீ என்னிடம் பாராட்ட வேண்டிய மரியாதையைப் பாராட்டாமல் பிதற்றுகிருய். ஜாக்கிரதை; பார்த்துப்பிழை.

சே.—உம்முடைய பெயர் என்னவென்று சொன்னீர்? ஏதோ இதுவரையில் காதில்படாததும் வாயில் நுழையாததுமாய்ச் சொன்னீரே?

ரண.—என் பெயர் ரணபாஸ்கரன்.

சே.—நிரம்பவும் சந்தோஷம். இங்கே உம்மிடம் பேசிக்கொண்டிருப்பதற்குப் பொழுது இல்லை. மறுபடியும் இங்கே நின்றுகொண்டிருந்தால் பிடித்துத்தள்ளுவேன். மரியாதையைக் காப்பாற்றிகொண்டுபோ; சொன்னேன்.

ரண.—அடே மூடா, யாரென்று நினைத்துக்கொண்டாய்? அஹிம்ஸரால் அனுப்பப்பட்டிருக்கும் அவர் தோழன் என்று உட்சென்று தெரிவி. (சேவகன் உட்செல்லுகிருன்) இந்த அற்ப சேவகன் நம்மை இப்படிபேசும்படி யல்லவோ வந்துவிட்டது. இருக்கட்டும். அஹிம்ஸனுக்குத்தான் என்னென்ன நடக்கிறது!. இந்த

இடத்தை எவ்வளவு அழகாயும் சிங்காரமாயும் வைத்துக் கொண்டிருக்கிறன்! அஹிம்ஸா! உன் மகிமையே மகிமை! எல்லாவற்றையும் இன்றைக்கே தொலைத்து விடுகிறேன்.

(லலிதைவெளிவருகிருள்.)

ல.—வாருங்கள். தாங்கள் தாஞ ரணபாஸ்கரர்? என்ன விசேஷம்? எதற்காக இவ்வளவு தூரம் வரும்படி நேர்ந்தது?

ரண.—ஒன்றுமில்லை. தங்களுடைய பதி இன்றையதினம் தங்களுக்கெழுதிய கடிதத்தில்கண்டபடி வராமலிருக்கும்படி நேர்ந்ததிலிருந்து, உங்களைப்பார்த்து நேரில் சொல்லும்படி என்னை அனுப்பிவைத்தார்.

ல.—வாராதிருக்க என்ன விபத்து சம்பவித்தது? என்ன காரணமென்று தாங்கள் அறிவீர்களோ?

ரண.—அவைகளை யெல்லாம் நான் எப்படி தெரிந்துகொள்ளுவது? அவசரமாய் எனக்கவரிட்ட கட்டளையை சிரமேற்கொண்டுவந்தேனே ஒழிய எனக்கு யாதும் விபரம் தெரியாது.

ல.—என்னகாரணம் இருக்கக்கூடும்? இராஜகுமாரரது தேகஸ்திதி யெப்படி?

ரண.—கொஞ்சம் அனுகூலமாயிருப்பதாயும், இன்னும் இரண்டு தினங்களில் சௌக்கியத்திற்கு வந்துவிடுமென்றும் இனி பயமில்லை யென்றும் தெரியவரும்.

ல.—நிஜம்தாஞ? யார்சொன்னது?

ரண.—அஹிம்ஸரே சொன்னர். இன்னும் அங்கிருக்கும் சிலரும் சொன்னர்கள். அவர் இராணியம்மாளிடம்

பேசிக்கொண் டிருக்கும்பொழுது நான் கூடவே இருந்தேன்.

ல.—இது எப்பொழுது நடந்தது?

ரண.—இன்றுகாலையில் தான்.

ல.—அப்படியானால் அவர்நேரிலேயே வந்திருக்கலாமே?

ரண.—வந்திருக்கலாம்.

ல.—பின்பு ஏன்வரவில்லை? எங்கேபோயிருக்கலாம்?

ரண.—இன்று காலையில் மகாராணியுடன் பேசிக்கொண் டிருந்த பிறகு, அஹிம்ஸர் தாம் கொஞ்சம் இளைப் பாறுவதாய்ச்சொல்லிவிட்டு எங்கேயோபோயிருந்தார். எங்கு சென்றார் என்று யாருக்குத் தெரியும்? இப் பொழுதுதான் அவசரமாய்வந்து என்னை அனுப்பி னார். எனக்கு அவ்வளவுதான் தெரியும்.

ல.—அப்படியானால் இளவரசுக்கு விசேஷ அனுகூலமென் றே சொல்லவேண்டும்?

ரண.—ஆம். நேற்று காலைமுதல் குணத்திற்குவர ஆரம் பித்துவிட்டது. ஜொரம் இன்றைக்கில்லை. நேற்று இரவு நன்றாய்த்தூங்கினாராம். கொஞ்சம் ஆகாரமும் செல்லுகிறதாம். ஆனால் இன்னும் தள்ளாமை; அவ் வளவுதான்.

ல.—அப்படியா? உண்மைதானா? உங்களுக்கு நன்றாய்த் தெரியுமா?

ரண.—நன்றாய்த்தெரியும். இதில் என்ன சந்தேகம்?

ல.—பின்பு அவர் ஏன் வரவில்லை?

ரண.—என்னமோ! எனக்கெப்படி தெரியும்?

ல.—இருக்கட்டும். நான் ஒரு கடிதம் எழுதினேன். அதை நன்றாய்கவனித்துப் பார்க்கவில்லைபோலிருக்கிறது!

ரண.—நன்ருய்ப்பார்த்தார், எனக்குத்தெரியும். இரண்டு மூன்றுதரம் திருப்பித்திருப்பிப் பார்த்தார். தங்கள் கடிதத்தை அவர் வாசித்துப்பார்க்கும்பொழுது நான் கூடவே இருந்தேன்.

ல.—உம்! யாதேனும் வாய்திறந்து சொன்னுரோ?

ரண.—விசேஷமாய் ஒன்றுமில்லை. அம்மணி! ஆனுல்—

ல.—ஏதோ விழுங்குகிறீர்களே!

ரண.—ஒன்றுமில்லை—இருந்தபோதிலும்--அதுபோகிறது. அம்மணி!—

ல.—என்ன? சொல்லுங்கள்; ஒன்றும்பாதகமில்லை.

ரண.—தங்கள் உத்திரவானுல் ஒன்று கேட்கத் துணிகிறேன்.

ல.—கேளுங்கள்.

ரண.—இல்லை—தங்களுடைய கடிதத்தால் அவருக்குக் கோபம் வருப்படி ஏதாகிலும் எழுதியிருந்தீர்களோ? தாங்கள் அப்படி எழுதியிருக்கமாட்டீர்கள். இருந்தாலும் கேட்டேன்.

ல.—ஏன் அப்படி கேட்டீர்கள்? அப்படியொன்று மில்லையே. அவர் இங்கு வாராததைப் பற்றித்தான் திருப்பித் திருப்பிவருத்தப்பட்டுஎழுதியிருந்தேன். வேறென்று மில்லையே!

ரண.—சரிதான். ஆனுல் ஏதோ அவர்கொஞ்சம் கோபித்ததாயும் சற்றுவெறுப்புடன் ஜவாபு எழுத ஆரம்பித்ததாயும் தோன்றிற்று. அதைப்பொறுத்துத்தான் கேட்கலானேன். ஒருக்கால் ஸ்ரீகரனுடைய தேகஸ்திதியைப்பற்றியகவலையா யிருந்தாலும் இருக்கும். வேறென்றுமிருக்க நியாயமில்லை. ஆயினும் தங்களுக்குக்

கடிதம் எழுதுங்கால் வெறுப்படைய நியாயமில்லையே! ஒருக்கால்—

ல.—என்ன ஒருக்கால்?

ரண.—இல்லை. ஒருக்கால்—தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் அப்படிக்கெல்லாம் சொல்ல லாகாது.

ல.—ஒன்றும் பாதகமில்லை; சொல்லுங்கள்.

ரண.—ஒருவேளை தவறுதலாய் தங்களுடைய கடிதத்தில் —ஊர்வம்பைப்பற்றி—

ல.—(பரபரப்புடன்) ஊர்வம்பா? ஊரில் என்னவம்பு? என்ன சொல்லிக் கொள்ளுகிறார்கள்?

ரண.—ஒன்றுமில்லை யம்மணி. அதையெல்லாம் நாம்காதில் வாங்கிக் கொள்ளலாமா? ஊரார் பலவாறுகச்சொல்லு வார்கள். அதையெல்லாம் கவனிக்க சாத்தியமா? அவைகளைப்பற்றித் தாங்கள் கேட்கலாகாது.

ல.—சொல்லுங்கள்; ஒன்றும் தோஷமில்லை. எனக்கே கொஞ்சம் தெரியும்.

ரண.—தங்களுக்கு நான் வருத்தம் விளைவிக்க லாகாது. என்னை வற்புறுத்தவேண்டாம். தயவு செய்யவேண் டும்.

ல.—எனக்கு வருத்தமில்லை. நீங்கள் சொல்லாமற்போனல் தான் எனக்கு வருத்தமுண்டாகும்.

ரண.—நான் என்ன சொல்லுவது? இருக்கட்டும். தாங் களே யோசித்துப் பாருங்கள். இங்கு ஒருவருமறியாத படி தங்களை வைத்திருப்பது உசிதமாகுமா?

ல.—அதிலென்ன தவறு இருக்கிறது?

ரண.—தவறு ஒன்றுமில்லை. ஆனால் ஜனங்கள் சந்தேகிக்கிறார்களோ இல்லையோ? 'என்ன யாரோ ஒரு ஸ்திரீயை அஹிம்ஸன் ஒருவருமறியாதபடி இங்கு கொண்டு வந்து வைத்திருக்கிறானமே? தானும் கள்ளனைப்போல் இரகசியமாய் வந்து போய்க்கொண்டிருக்கிறானாம்? என்ன விசேஷம்? இப்பொழுது யாரை மறுபடியும் எங்கிருந்து கொண்டுவந்து வைத்திருக்கிறான்' என்று மனம் போனபடி யோசிக்க இடமுண்டாகிறதோ இல்லையோ?

ல.—இதென்ன புதுமை! இதெல்லாம் நிஜம்தானா? ஆனால் ஏதேனும் அப்படி முன்பு உண்டோ?

ரண.—அம்மணி! இப்படிக்கெல்லாம் கேட்கலாகாது. க்ஷத்திரியருக்கு யாதொரு வரம்புமில்லையே. இதற்கு முன் இதைப்போல் எவ்வளவோ! அம்மணி தாங்கள் கண்ணீர் விடலாகாது. தேவியைப்போலொத்த தங்களிடத்திலும் இப்படித்தானா என்றுமாத்திரம் எனக்கு வருத்தமா யிருக்கிறது. அம்மணி!—

ல.—(சற்று யோசித்து) ரணபாஸ்கரரே! அவ்வுத்தமரோ அவ்வாறு செய்யத்தக்கவர்? நீர் சொல்வதை நான் சற்றும் நம்பேன். எனது பர்த்தாவுக்குத் தெரிந்தால் நீர் அவரது அடங்காக் கோபத்திற் காளாவீர் என்பதை அறியும்; ஜாக்கிரதை.

ரண.—தாங்கள் கோபம் கொள்ளலாகாது. நான் சொல்வதாகவும் தாங்கள் நினைக்கலாகாது. வேண்டுமானால் இந்த ஊர்முழுதும் விசாரியுங்கள். அஹிம்ஸருடைய சரித்திரம் எல்லோருக்கும் தெரிந்தது தானே! அது போகட்டும். இங்கு வருவதாக எவ்வளவு முறைகூறித் தவறிவிட்டார்?

ல.—உம்.

ரண.—இன்றையதினமோ கண்டிப்பாய் வருவதாய் எழுதி யவர் ஏன் வரவில்லை?

ல.—ஆம். ஏன் வரவில்லை?

ரண.—அங்கேயோ யாதொரு அலுவலுமில்லை. இராஜகுமாரனுக்கு விசேஷமாய் அனுகூலமென்று எனக்குத் தெரியும்.

ல.—ஆம். அப்படித்தான் நீர் சொல்லத் தெரிகிறது.

ரண.—இதென்ன அம்மணி! உலகமறியாதவர்போல் பேசுகிறீர்களே? மேலும் மேலும் இராஜரீகத்தில் உயர்ந்து முதல் மந்திரி வரையில் ஆசைப்பட்டுக்கொண் டிருப்பவர், தங்களைப்போ லுள்ளவர்களை எப்படி பகிரங்கமாய் தன்மனைவி என்று ஒப்புக்கொள்வார்? தான்உயர்வடையும் வழியைத்தேடி, தக்க அந்தஸ்துள்ள ஒரு கன்னிகையை அல்லவோ அவர் மணங்கொள்வது உசிதம். தங்களைப்போலுள்ளவர்கள் கேவலம் அவர் உல்லாஸத்திற்கு மாத்திரந்தான் பாத்திர மாவீர். தாங்களில்லா விட்டால் எத்தனையோ பேர் அவர் கடைக்கண்ணால் ஒருதரம் பார்த்தால் போதுமென்று காத்துக்கொண்டிருக்கிறார்களே!

ல.—ஐயோ! இருக்கும்; இருக்கும்; உண்மையா யிருக்கும். ஐயோ! இந்த நாராசங்களெல்லாம் எனதுசெவிகளைத் துளைக்கின்றனவே. ஆயினும் நீர் சொல்வதை நான் எவ்வாறு நம்புவது?

ரண.—எந்தாய்! தாங்கள்கேட்டுவந்ததிலிருந்து நான் உண்மையையெல்லாம் கூறும்படி நேர்ந்தது. தங்களுக்கு அளவற்ற துக்கத்தை உண்டுபண்ணினேன். என்னை

மன்னிக்கவேண்டும். தாங்கள்வற்புறுத்தினதிலிருந்து நான் இவைகளையெல்லாம் தெரிவிக்கும்படியாயிற்று. இனி இவைகளை மறந்துவிடுங்கள். அஹிம்ஸர் எப்படியும் இங்குவருவார். அவர் நேரில்வந்து எப்படியாவது தங்களை நம்பும்படிசெய்து தங்கள் கண்களிலிருந்து நீர் பெருகாமலிருந்தால் எனக்குப் போதும். ஐயோ ! உங்களை ஆற்றுவார்கூட இல்லையே. உங்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக விருக்கிறது. அஹிம்ஸரை எப்படியாவது சீக்கிரம் இங்கு அனுப்புகிறேன். அம்மணி! தாங்கள் துக்கப்படலாகாது.

ல.—அவருக்கு இனி என்னிடத்தில் யாதும் அலுவலில்லை. ............ * * * எனக்குமப்படியேதான். நான் என் தந்தையிருக்குமிடத்திற்கு ஓடிப்போகவேண்டியதுதான். இதோ புறப்படுகிறேன். இனி அவர் கண்களில் படுவதில்லை.

ரண்.—அம்மணி! ஐயோ! எனக்கு மிக்க வருத்தமாயிருக்கிறது. நான் என்ன செய்வேன். நான் எப்படி தங்களை தடுப்பது. ஆனால் தாங்கள் இன்னுமிங்கிருந்து கஷ்டப்படுவதைக்காட்டிலும் ஒருவழியாக ஒழித்துவிட்டுப்போவதே நலமென்று நினைக்கிறேன். அம்மணி! எனக்கு நேரமாகிறது. தாங்கள் தயவுசெய்து என்மீது வருத்தமடையலாகாது. நான் போய்வருகிறேன்.

ல.—நல்லது எனக்கு தங்கள்பேரில் யாதும் வருத்தமில்லை. போய்வாருங்கள்.

ரண.—(ஆத்ம) எப்படியும் அஹிம்ஸன் இங்கு வராமலிருக்கமாட்டான். இளவரசுக்கு கொஞ்சம் குணமா

யிருந்தால் வந்திடுவான். நானறிந்தமட்டில் வியாதி மிகக் கடுமையாயிருக்கிறது. ஒருக்கால் வந்திடுவானாயின்,—நான் போய் தடுக்கவேண்டும்.

(போகிருன்)

வ.—ஐயோ! நான் இதற்காகவா பெண்பிறந்தேன். இந்த கதி எனக்குவருமென்று நான் கொஞ்சமும் நினைக்கவில்லையே. பேதையாகிய என்னை இப்படிமோசம் செய்ய தங்களுக்கு எப்படி மனம் வந்ததோ? தாங்கள் இவ்வளவு கடினசித்தமுடையவரா? எல்லா உயர் குணங்கணங்களுக்கும் இருப்பிடம் என்றுபாவித்த ஓர் உரு மறைந்ததே! சரணம் என்று அடைந்தவர்களை காத்தருளவேண்டியது பெரியோர்களின் கடைமையன்றோ? தங்களுடைய கடைமைகளையும் மேன்மை பொருந்தியகுணங்களையும் மறந்து இத்தீய தொழிலுக்கு தாங்கள் ஏற்படலாமா? ஆனல் பத்தினிக்கு பதியைப்பழிக்க பாத்தியமுண்டோ! நான் செய்தபுண்ணியம் அவ்வளவுதான். எனது துர்பாக்கியத்திற்கு அவர்மீதுகுற்றம் சாட்டி என்ன? அவரைத் தூஷித்தால் பாபம் வந்து சேரும். என்னபாபம் செய்தேனே முன்ஜென்மத்தில் இந்த கதி அடைய? இன்னும் ஏன் சுமத்தித்திக் கொள்ளவேண்டும்?

ஆனல் நான் தங்களை களங்கமின்றி அனுபவித்தது, அனுபவித்ததுதான். அதை இனித்தாங்கள் அபகரித்துச் செல்ல முடியாது. நான் கணவனென்று கைபிடித்தவரை இனிக்காணேன். இனி எனக்கு என்ன வாழ் விருக்கிறது? ஆ ஆ அவருடைய வார்த்தைகளை நினைக்குங்கால் அவரிடத்திலேயே மறுபடி புத்தி செல்லுகிறதே. ஐயோ அவரை எவ்வாறு

மறப்பது? நான் என்னமுயன்றும் என்மனம் திடப் படவில்லையே. நான் எவ்வாறு இத்துக்கத்தை சகிப் பேன்? அம்மா, என் நெஞ்சம் ஏதோ அடைக்கி றதே! எனக்கு மூர்ச்சை ஆகும் போலிருக்கிறதே! தெய்வமே! தெய்வமே! நான் என்ன செய்வேன். என் ஜீவன் இன்னுமிருக்கிறதே. உடனே போக லாகாதா?

ஆம்! நான் எந்த விதத்தில் அவருக்கு தகுதி? அவரை ஏகதேசத்தில் என் சொந்த ஆஸ்திபோல பாராட்ட எனக்கு என்ன நியாயம்? சந்திரனது குளிர்ச்சியையும் ஆஹலாத கரத்தையும் நான் ஒரு வளே அனுபவிக்க வேண்டுமென்று ஒருவள் முயல லாகுமோ?

இதெல்லாம் எப்படியிருந்த போதிலும் என் மானமல்லவோ போய்விட்டது. இனி இப்பூதளத் தின் மீது எவ்வாறு தலைகாட்டுவது? ............... ............... * * * ஜன்மத்தால் ஏற்படும் வேசி களுக்குக்கூட கொஞ்சம் கௌரவம் உண்டே. இறப்போமென்றால் அதற்கும் போதுமான தைரிய மில்லையே. இனி இங்கிருக்கவும் கூடாது. இங்கிருந் தால் மறுபடி வந்தாலும் வருவார். என்புத்தி அவ ரை நேரில் கண்டால் மாறிவிடும். அவரும் தன் னுடைய இனிய சொற்களால் என்னை இன்னொரு முறை ஏமாற்றி விடுவார். ஐயோ இரண்டுவாரம் என்றுசொன்னவர் இவ்வளவு காலமாயும் விவாஹத் தை பகிரங்கப்படுத்த யாதும் ஊக்கமில்லை. காலத் தைத் தள்ளிக்கொண்டே வருகிறார். ஆம், என்னைப் பத்தினியென்று பலரறிய அவர் எந்தவிதத்தில் ஒப்

புக்கொள்ள நியாயம்? அவர்கண்களில் படாமல் எங்காவது ஓடிப்போவதுதான் சரி. நான் எப்பொழுது அவருக்கு தகுதியல்லவென்று ஏற்பட்டுவிட்டதோ, அப்பொழுது நானும் அவரை விட்டு அகல வேண்டியதுதானே சரி. என்ன, ஆச்சரியம், உலகத்தில் வார்த்தைக்கும் நடத்தைக்கும் இவ்வளவுதூரமும் இருக்கமுடியுமா? எல்லாம் எனக்கு வேண்டும்! வேண்டும்! நாகரீக மற்று காட்டில் வளர்ந்துவந்த எனக்கு இவ்வளவு ஆசையா? இவ்வளவு பாக்கியம் எனக்குவாய்க்குமா? ஐயோ புறப்படவேண்டியதுதான் புறப்பட வேண்டியதுதான். இனி அரை நாழிகை கூட இங்கிருக்கக்கூடாது. ஐயோ இவ்விடம் விட்டு செல்லுவோம் என்று முன் ஓர் அடி எடுத்துவைத்தால் கால் பின் இழுக்கிறதே. என்னசெய்வது? ஒரு நிருபம் எழுதி வைத்துவிட்டுப்போவோம். (எழுதுகிருள்.)

இங்கு வைத்துவிட்டுச் செல்வோம். இங்கு வைத்தால் தான் அவர்கைகளில் கிடைக்கும். இனி இங்கு என்ன வேலே? புறப்படவேண்டியதுதான். இப்படி இருந்தபடியே நமக்கு முன்னிருந்த இந்த ஆடையே போதும். அவரால் நமக்கு கொடுக்கப்பட்டது யாதும்வேண்டாம். இதுதான் அவர் எனக்கு கடைசிமுறை எழுதியலிகிதம். இதைமட்டும் ஒருஞாபகக் குறிப்பாக எடுத்துச் செல்லுவோம். (புறப்படுகிருள்). இதுதான் அவர் வழக்கமாய் ஆசிரியிக்கும் ஆஸனம். இதுதான் அவரை முதலில் நான் எதிர்கொண்டழைத்த இடம். அவருடைய சுவேதாசுவம் வந்து முதலில் நின்ற இடம் இதுதான். இவ்விடத்தில்தான் நான் அவரை குதிரையின்மீதிருந்து கை

நீட்டி இறக்கியதும். அப்பொழுது அவர் என்னைக் கட்டியணைந்த அருமையெல்லாம் கனவோ? ஈசனே! ஈசனே ............ * * *

## அங்கம்—இரண்டு.

### 5-வது காக்ஷி.

இடம்—பூந்தோட்டம்.
காலம்—மாலை.

அஹிம்ஸன் வருகிறான்.

அ.—என் கண்ணே, என் சற்பகமே, நான் பகலில் வந்து உன்னைக்காணாது என்னெதிரில் உன் கடிதத்தை கண்டு மூர்ச்சையானேனே! அப்படியே என்னுயிர் போயிருக்கலாகாதா? பாபஜன்மமானதால் கல்லுப் போல் பிழைத்துவிட்டேன். நான் இனி எப்படி உயிர் வாழ்வது? தற்கொலை செய்து கொள்வோமென்றால், அதுவும் மஹாபாபம் என்று சாஸ்திரங்கள் முறை யிடுகின்றனவே. என் கண்மணியோடு ஒவ்வொரு நாளும் கூடியிருக்கவேண்டுமென்று எவ்வளவு முயன் றேன். எல்லாம் வீணாயினவே! ஐயோ கைக்கெட்டி யது வாய்க்கெட்டாமல் போயிற்றே. ஜகதீசனே, உனக்குப் பொறுக்கவில்லையே என் பாக்கியம்! இடை விடாது என் நண்பன் பக்கத்திலேயே இருக்கவேண் டியதாயிற்றே. என்னுடலங்கும் என்னுயிரிங்குமாகத் தானே இருந்தேன். கண்ணே, உன் மானம் என் மானமல்லவா? இவ்வளவு கூடவா நானறியேன். உனக்குத் துக்கம் விளைவித்து நான் எப்படி சுகிக்க நினைத்திருக்கக்கூடும், என்று நீ நிதானித்திருக்கலா

காதா? என்னை நம்பாததற்கு என்ன காரணம் நேர்ந்தது? நான் ஒன்றும் தவறுசெய்யவில்லையே. உன் மீது பிசகுசொல்ல கொஞ்சமும் நியாயமில்லை. என் வார்த்தையைச் சந்தேகிக்கும்படி நானல்லவோ நடந்து கொண்டுவிட்டேன்?

ஐயோ! நான் நல்லதென்று எண்ணிச்செய்யத் தொடங்கிய தெல்லாம் நஞ்சாயல்லவோ முடிந்தது? நான் விவாகத்தை வெளியிட்டால் அன்பனுக்கு ஏதாவது கெடுதி நேரிடுமோவென்று நினைத்துச் செய்ததாலன்றோ இவ்வளவும் விளைந்தது?ஐயோ! ஒரு மாசிலா மாணிக்கத்தின் வாழ்நாட்கள் முழுவதும் தொலைத்து விட்டேனல்லவா? நான் என்னகதி யடைவேனோ? என்மதியின்மையால் எவ்வளவுக்குக் கொண்டுவந்துவிட்டுவிட்டேன்? ஐயோ! நான்செய்த ஏற்பாடுகளை யெல்லாம் யுக்தமென்றே ஒப்புக்கொண்டாயே! பிறகு என்னைக்காணாமல், விட்டுப்போக எப்படி நினைத்தாய்?.............................. * * *
கண்ணே! என்மீது நீ வைத்திருந்த காதல்போல் உலகிலுமுண்டோ? சக்கரவர்த்தித் திருமகனையும் திரும்பிப்பாராது இந்தக் கொடும்பாவியைக் கொண்டனையே! நீ என் நிர்ப்பந்தங்களை யெல்லாம் உணராது அவசரப்பட்டு என்னை நீக்கினதாய் உன்மீது குற்றஞ் சொல்லக் கொஞ்சமும் நியாயமில்லை. உனதுயிருடன் உடலை அர்ப்பணம் செய்ததும் தவிர, வைராக்கியத்தை அனுஷ்டித்து, அடையக்கூடிய பரமபதத்தைக் கூடத் துறந்து என்னை நாடினையே. அப்படியிருக்க, உன்னை விட்டு நான் பிரிந்திருக்க என்ன நியாயம்? என் கட்டி முத்தே! உன்னைப்போலும் கற்பிற்கரசி

இப்பாரிலும் உளரோ? உன் கடிதத்தின் நேர்மை யைத்தான் நான் என்னென்று சொல்வது? இன் னொருமுறை படித்துப் பார்ப்போம்.—

"ஆரியரே! நான் இதுகாறும் தங்கள் வரவை பல முறை எதிர்பார்த்து, தாங்கள் வாராதது கண்டு, என் மனம் மிக்க நொந்தது. நான் தங்கள் அன்பிற்குக்கூட பாத்திரமில்லையென்பதை, நன்கறிவேன். பிறகு தங்க ளுடைய காதலை நான் எப்படி எதிர்ப்பார்ப்பது? தங் கள்மீது எனக்கு யாதும் ஆயாசம் இல்லையென்பதை நிச்சயமாய் நம்புங்கள். நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். தங்களுக்கு யாதும் தொந்திரவு கொடாமலிருப்பதுதானே எனக்கேற்பட்ட தர்மம்? அதை அனுசரித்து இதோ இந்நாடுவிட்டு விலகு கிறேன். நானணைந்த அஹிம்ஸர் எங்கோ அகன்றார். இனி நானும்அகலவேண்டியதுதானே? தங்களுடைய உடலுயிர் முழுதும் எனது ஆதினம் என்று நான் பாவித்த குற்றத்திற்கு என்னை மன்னிப்பீர்களாக. எனக்குத் தங்கள்மீதுள்ள காதலுக்கு இதுவாகிலும் செய்யலாகாதா? தங்களிஷ்டம்போல் தாங்கள் சுக மாய் வாழவேண்டுமென்பதுதான் என்கோரிக்கை. ஈசன் தங்களை இரக்ஷித்து வரும்படிக்கும், தாங்கள் மேலும் மேலும் சிறப்புடன் இடையூறின்றி சுகமாய் வாழ்ந்துவரவேண்டு மென்றும் எப்பொழுதும் பிரா ர்த்தித்து வரும், லலிதை."

ஐயோ! நிரம்ப உன் வாக்கினால் என்னை தூஷித் திருக்கலாகாதா? உன் பெருமையே பெருமை! நான் உன்னை அனாதரவு செய்ததாக எண்ணி என்னைப் பிரிந்து போகும் காலத்தில்கூட என்னை எள்ளளவும்

தூஷியாமல் உனது அதிர்ஷ்டத்தையே நொந்து கொண்டனையே! என்செல்வமே! உன்னை அடைந்தும் ஆண்டனுபவிக்கக் கொடுத்துவைக்காத பாவியானேனே!

என்கடிதத்தில் கண்டபடி நான் வாராதது கண்டு உன்னை அலக்ஷியமாய் நடத்தியதுபோல் நினைத்து, நீ எவ்வாறு தத்தளித்தனையோ? உன்மனம் எவ்வாறு குன்றினதோ? உனதுள்ளம் எவ்வாறுபதறியதுதோ? நீ என்மீது கோபமூண்டு சென்றிருந்தால் நான் ஒருவாறு சமாதான மடைவேன். ஆம் - நீ என்னசெய்வாய்? என்காதலெல்லாம் வேஷமென்று நினைக்கும்படி நானல்லவோ நடந்து கொண்டுவிட்டேன்? இனி உன்னை உயிருடனும் காண்பேனே? கண்டாலும் என்னைச்சேர நியாயமில்லை யென்று நினைப்பாய். அதுவும் சரிதானே. ஆனல் உன்னை ஒருமுறை கண்டு என்னை மன்னிக்கும்படி கேட்க வேண்டியது எனதுகடமை. என்னை எதிரில் கண்டால் ஒருக்கால் நீ மனமிரங்கினலும் இரங்குவாய். நீ என்மீதுவைத்திருந்த காதலை நினைக்குங்கால், நான் என்னபிழை செய்தாலும் என்னை மன்னிப்பாய் என்று எதிர் பார்க்கவும் நியாயமுண்டே! கண்ணே! நீ எப்பக்கம் சென்றயோ? யார்தான் துணையோ? உனது புஷ்பம் போன்ற மெல்லிய பாதங்கள் கல்முள்ளடர்ந்த கானகத்தின் வழி எப்படி சென்றனவோ? காட்டுமிருகங்கள் உன்னைக்கண்டு, நீ ஒருக்கால் ஒரு வனதேவதையோ என்று ஒதுங்கினலும், நீ அவைகளைக்கண்டு நடுநடுங்கி யிருப்பாயே! பசிதாகத்தால் எவ்வாறு வருந்தினையோ?...... * * *

ஐயோ! நான்தான் என்ன பெரியபிழை செய்தேன்? நான் எழுதியபடி வரமுடியாமல் மூன்றுநாள்கழித்து வந்தேன்; இவ்வளவுதானே? இதற்காகவா இவ்வளவு கொடுந்தண்டனை? என்னை நேராகக்கண்டு, என்னைக் கடிந்துகொண்டு, என்னை மன்னித்ததாக ஒருவார்த்தை சொல்லிப் பிறகு செல்லலாகாதா? கண்மணி! என்ன கேட்டதற்கு ஒன்றும் மறுமொழி கூறாது நிற்கிறாய்? கண்மணி! லலிதா! என்னை மன்னித்ததாக ஒருவார்த்தை. கண்மணி! கண்மணி! ஓரேவார்த்தை; ஓரேவார்த்தை. (ஒரு மரத்தின்மீது மோதிக்கொண்டு கீழே விழுகிறான்) ஐயோ! யார் என்னை இவ்விடத்தில் கூப்பிட்டது? காதலி கூவியதுபோல என் செவிகளில் ஏதோ பட்டதே! இதெல்லாம் பிரமை. ஏதோ லலிதை எதிரில் நிற்பதுபோல் தோன்றி அவளுடன் இதுவரையிலும் சம்பாஷித்துவந்தேன். இந்தப் பாழும் விருக்ஷம் என்னை இடித்ததும் என் ஞாபகம் மறுபடியும் வந்துவிட்டதே!

கண்ணே! நீ இம்மார்க்கம்தான் சென்றிருக்கவேண்டும். இதோ தெளிவாய் உனதடிகள் தெரிகின்றன. இதோ திரும்பித் திரும்பிப் போக எளிதில் மனங்கொள்ளாமல் நின்றுநின்று பார்த்திருப்பது, என் ஹிருதயத்தை எவ்வாறு பிளக்கிறது? ஐயோ! என்னென்ன நினைத்தனையோ? கண்ணே! இப்புவியில் இனி உன்னைக்காணாது இரேன். உன்னைக்காணுவேன்; அல்லது மாளுவேன். இதோ இப்படியே நீ சென்றிருக்கும் வழியாகவே நானும் செல்லுகிறேன். லலிதா! (போகிறான்.) லலிதா!—

இரண்டாம் அங்கம் முற்றிற்று.

22420

## அங்கம்—மூன்று.

### 1-வது காட்சி.

இடம்—சபாமண்டபம்.

காலம்—பகல்.

ஸோமதத்தர், சுத்த பிரம்மசர்மன், ஹிதோபதேசன், ரணபாஸ்கரன், இன்னும் சபையோர்கள்.

ஸோ.—சபையோர்களே! நான் இந்த இராஜ்ஜியத்தை இவ்வளவு காலம் ஆண்டுவந்ததில், கலகமென்றாவது, சிற்றரசர்கள் அடங்காமலிருந்தார்க ளென்றாவது, அயல் நாட்டரசன் நம்மீது படையெடுத்தானென்றாவது கிடையாது. நமது முக்கிய நண்பரும் நமக்கு எப்பொழுதும் வலதுகைபோல் பக்க பலமாயிருந்து வந்தவருமான சர்பவர்மனது நாடுகளை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டு, புகார் நகரத்தையும் முற்றுகை போட்டுவிட்டானும் பாண்டியன். இன்னும் மூன்று தினங்களுக்குள் உதவிவராவிடில் எதிரியைச் சரணாகதியடையவேண்டியதுதான் என்றும் தூதர்கள்வந்து தெரிவிக்கின்றார்கள். இப்பொழுது நான் எவ்வாறு உதவி செய்கிறது? எனக்கோ வயது சென்றிருப்பதுடன், மனம் மிக்கத் தளர்ச்சியடைந்திருக்கிறது. உதவி செய்யாமல் போனால் பிறகு நமது நாட்டின் மீது அந்தப்பாண்டியன் படையெடுத்தாலும் எடுப்பான். ஐயோ! நான் ஸ்ரீகரனை மகனாய்ப் பெற்றேன் என்று எவ்வளவுகர்வம் கொண்டிருந்தேன்? அவனது நடவடிக்கைகளைப் பார்த்தால், எல்லாவற்றையும் குலைத்து விடுவான்போலிருக்கிறது. கேவலம்

ஸ்திரீலோலனாய், விளையாட்டிலும் அற்ப சுகத்திலும் புத்தி செலுத்துகிறானே தவிர, இராஜ்ஜியத்தின் க்ஷேமத்தில் அவனுக்குக் கொஞ்சமும் ஊக்கமில்லை. ஏதோ பித்தம் பிடித்தவன்போல் காலம்தள்ளுகிறான். அவனைக்கொண்டு ஆவதொன்றுமில்லை. எந்த ஆபத்துக்கும் உதவுவான் என்று மடியின்மீது வளர்த்து வந்த அஹிம்ஸனும் எங்கோ சொல்லாமல் சென்று விட்டான். என்ன செய்வது?

ஹிதோ.—தாங்கள் இப்படிக்கெல்லாம் சஞ்சலப்படுவது மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறது! சுத்தவீரராகிய தங்களுக்குமா மனத்தளர்ச்சி? தாங்கள் சைன்னியத்துடன் புறப்பட்டு விட்டதாய்த் தெரிந்தாலே, எதிரி பறந்து விடுவானே! அப்படி யொருக்கால் எதிர்த்தாலும் பஞ்சிலிட்ட அக்கினிபோலல்லவோ கொளுத்தி விடுவீர்கள்! ஆனால் சமீபத்தில் ஸ்ரீகரனுக்கு ஏற்பட்ட பிணியினால் தங்களுக்குக் கொஞ்சம் மனக்கிலேசந்தான். இப்பொழுதோ ஈசுவர அனுக்கிரகத்தால் இளவரசுக்கு நன்றாய் சௌக்கியமாய் விட்டது. ஸ்ரீகரன் சௌக்கியமாக இருந்திருந்தால் தாங்கள் இதுவரை ஒருவரையும் கேளாது யுத்தத்திற்குச் சென்று யுத்தமும் முடிவடைந்திருக்கும். அஹிம்ஸனில்லாக்குறையும் குறைதான். இருந்தாலும், இந்த அற்ப விரோதியை ஜெயிக்க நானே போதும். சீக்கிரம் விடையளியுங்கள்.

ரண.—மகாராஜ்! தாங்கள் கொஞ்சங்கூட யோசிக்கவேண்டியதில்லை. என்னை மட்டில் அனுப்புங்கள். நான் ஒருவனாகவே நமது சைன்னியத்தில் பத்தி லொருபங்

கை மட்டில் அழைத்துச் சென்று ஜெயத்துடன் திரும்பிவருகிறேன்.

சே.—மகாராஜ்! இளவரசன் வருகிறுர். ஸ்ரீகரன் வருகிறுன்.

எல்.—வரவேண்டும்; வரவேண்டும்.

ஸ்ரீ.—பிதா! நமஸ்கரிக்கின்றேன். தாங்கள் மந்திரி குரு முதலான பெரியோர்களுடன் சேர்ந்து ஆலோசனை சபையிலிருக்க, உத்தரவின்றி பிரவேசித்ததை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸோ.—நீ செய்ததில் ஒன்றும் தவறில்லை. என்ன ஆச்சரியமாயிருக்கிறது, நீ இப்பக்கம் சபைக்கு வந்தது ஏது?

ஸ்ரீ.—பிதா! நான் இதுவரையில் செய்துவந்த தவறுகளை யெல்லாம் க்ஷமித்தருளவேண்டும். நான் இராஜரீகத்தின் விஷயமெல்லாம் கவனியாது நடந்து வந்ததொல்லாம் மிகவும் தூஷணைக்கிடம் என்பதை நன்ருய் அறிவேன். இனிஎன் விஷயமாயாவது, என்னைப் பொருத்த அளவில் இராஜரீக விஷயமாயாவது தாங்கள் கவலை யொழியுங்கள். இதோ நான் நமது படைகளுடன் சென்று புகார் நகரத்தாசனுக்குக் கைகொடுத்து, எதிரியை புறமுதுகாட்டி ஓடும்படி செய்து ஜெயகோஷத்துடன் திரும்பிவருகிறேன். சீக்கிரம் விடை கொடுங்கள்.

ஸோ.—அப்பா, ஸ்ரீகரா! இப்பொழுதெனக் கிருக்கும் குதூகலத்திற்கு அளவில்லை. நான் இன்றல்லவோ புத்திரவானுனேன்! இருந்தபோதிலும்—

ஸ்ரீ.—என்ன தயங்குகிறீர்கள் ? ஒருக்கால் யுத்தத்தில் தோல்வியடைந்தால் என்னும் சந்தேகமோ ?

ஸோ.—அப்படி யொன்றுமில்லே. ஆனுல் உன்சரீரத்தின் ஸ்திதியை யோசித்து உன்னே யுத்தத்திற்கு அனுப்ப எவ்வாறு துணிவேன்?

ஸ்ரீ.—பிதா ! எனக்கு சரீரத்தில் யாதும் பிணியில்லே; என் மனம் ஒரு விதத்தில் புண்பட்டிருப்பது தங்களுக்குத் தெரிந்ததே. அது எனக்குள்ள உத்ஸாகத்தை யெல் லாம் குறைத்து விட்டது. அதை யெல்லாம் இப்பொ ழுது பாராட்ட நேரமில்லே. யுத்தத்திற்கு உடனே செல்ல வேண்டியதுதான் எனது முதன்மையான கடமை.

ஹி.—மகாராஜ்! என்சொற்களேக் கொஞ்சம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இளவரசு மொழிந்ததெல்லாம் எனக் கும் உசிதமென்றே தோன்றுகிறது. மேலும் அவர் தெரிவித்தபடி யுத்தத்திற்குச் செல்வாராகில், வழியில் பற்பல தேசங்களேயும், ஆங்காங்குள்ள பற்பல வினே தங்களேயும், இன்னும் பல ஜனங்களேயும் பார்ப்பார். அதனுல் அவரது புத்தியும் மாறும்; வாழ்க்கை யில் அபிருசி உண்டாகும். தவிர க்ஷத்திரிய சிரேஷ்டர்களே யுத்தம் என்பது எவ்வாறு உத்ஸாகப் படுத்தக்கூடியது என்பதை நான் தங்களுக்கு எடுத் துரைக்கவும் வேண்டுமோ? எல்லாம் நமது நன்மைக் குத்தான் இந்த யுத்தம் நேர்ந்திருக்கிறது என்று எனக்குத் தோற்றம்.

ஸோ.—மந்திரி ! உன்னேப்போல் மேதையும், சமயத்தில் ஹிதமுரைப்பவரும் வேறுயார் இருக்கிருர் ? என்று லும் குழந்தையை யுத்தத்திற்கு அனுப்பிவிட்டு,—

ரண.—மகராஜ்! இது என்ன ஆச்சரியம்! ஸ்ரீகாருக்கு ஒரு குறைவும்வருமோ? இளவரசனது வீரத்தையும் தீரத்தையும் நானல்லவோ அறிவேன்? இளவரசு பாலியத்தில் ஒருமுறை யுத்தம்செய்த நேர்த்தியை நானல்லவோ கண்டுகளிக்கக்கொடுத்துவைத்தேன்? ரண களத்தின் மத்தியில் பிரளய காலத்து யுகாந்தனைப் போலல்லவோ ஜொலித்தார்! இளவரசர் வருகிறார் என்று தெரிந்தாலே எதிரி பறந்துவிடுவானே!

சுத்த.—ஸோமதத்த ராஜனே! எனது சொற்களைக் கொஞ்சம் அங்கீகாரம் செய்வாயாக. தாய்தந்தையர் அறிவரோ மகனது வீரத்தை? மகாராஜாவாயுள்ள தசரத சக்கரவர்த்திகூட அவதார புருஷனைக் கௌசிக மாமுனியுடன் கூட அனுப்பச் சம்மதியாமல், இராம லக்ஷ்மணர்களை அறியாப் பாலர்கள் என்று நினைக்க, முடிவில் வசிஷ்ட மாமுனிவருடைய சொல்லுக்கிசைந்து, அவர்களை தாடகி யுத்தத்திற்கு அனுப்பச் சம்மதித்தார். அப்படியிருக்க, நீ சஞ்சலமடைவது ஓர் ஆச்சரியமா? அதுபோலவே நீயும் என் வார்த்தையில் கௌரவம்வைத்து ஸ்ரீகரனை யுத்தத்திற்கு அனுப்புவாய். எனக்கு ஏதோ சுப சூசகம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீராமனைப்போலவே ஸ்ரீகரனும் மணக் கோலத்துடன் திரும்பிவருவான். சீக்கிரமாக ஆசிகூறி அனுப்பு.

ஸோ.—ஸ்ரீகரா (உச்சி முகர்ந்து) நீ அழியாப் புகழுடன் திரும்புவாயாக.

ஸ்ரீ.—குருமகராஜ்! நமஸ்கரிக்கிறேன்.

சுத்த.—அப்பா! உனக்கு சர்வமங்களமுமுண்டாகுக. இன்றயதினம் இருபத்திரண்டு நாழிகைக்கு நல்ல வேளை பார்த்திருக்கிறது. காலம் தவறாமல் புறப்பட்டு விடு.

ஸ்ரீ.—சபையோர்களே! நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். ரணபாஸ்கரா, சீக்கிரம் நமது சைன்னியங்களெல்லாம் அணிவகுத்துத் தயாராகஇருக்கட்டும். குலகுருபார்த்திருக்கும் நல்லவேளை தவறலாகாது. அதற்குள் எல்லாம் சித்தமாகவேண்டும். இன்னும் இரண்டு நாழிக்கெல்லாம் எனது அன்னையிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு நகரத்திற்குத்தென்புறமாயுள்ளகானகம் வந்து சேருகிறேன். அவ்விடத்தில் கூடாரம் அமைத்துவைப்பாய். பிதா, குரோ, அமாத்தியரே நான் சென்று வருகிறேன். அஹிம்ஸா! எங்குசென்றுவிட்டாய்? நீ இல்லாமல் நான் எவ்வாறு தனிமையில் யுத்தத்திற்குச் செல்வேன்? எங்கு சென்றாய் என்னை விட்டு.?

## அங்கம்—மூன்று

### 2-வது காக்ஷி.

இடம்—சாபவர்மனது அரண்மனையில் ஒரு விடுதி.

காலம்—பகல்.

சாப.—ஸ்ரீகரா! உனது வீரத்தை நான் எடுத்துரைக்க சக்தி வாய்ந்தவனல்ல. நீ செய்த யுத்தத்திற்கு நான் எதை ஒப்பிடுவேன்? உனக்கு நீதான் நிகர். பிரளய காலத்தில் பிரம்ம கபாலம் கையிலேந்திய கைலகிரியன் மும்மாரி பொழிந்தது போலல்லவோ, நீ அம்புகளைப்

பொழிந்து எதிரிகளின் சேனைகளைத்தாக்கினாய்? கண்ணிமைக்குள் லக்ஷக்கணக்காயல்லவோ பிணக்குவியல்கள் குவித்தாய்? இந்தக்காக்ஷி கிடைக்க நான் என்ன புண்ணியம் செய்திருந்தேனோ? உனக்குச் சமமாய் மற்றவர்களும் ஒரு வீரன்போல் சொல்லிக்கொள்ளவும் வேண்டுமோ? இந்தப்புகார் இராஜ்ஜியத்தை நீஜெயிக்காமல் ஜெயித்தாய். இனி இந்த இராஜ்ஜியம் உன் தந்தையினது ஆதீனம். எனக்கும் இவ்விராஜ்ஜியத்திற்கும் இனி யாதும் பாத்தியமில்லை. நீ செய்த பேருதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?

ஸ்ரீ.—தாங்கள் இவ்விதமாக ஸ்தோத்திரம் செய்யலாகுமா? பிரதி யுபகார மென்றும் கைம்மாறென்றும் தாங்கள் இனி சொல்லுவீர்களாயின் நான் பொறுக்கேன். இன்றைக்கே இவ்விடம்விட்டுப் புறப்பட்டுவிடுவேன். எங்களது இராஜ்ஜியத்தை நோக்கி நாம்ஜெயமடைந்ததோ முக்கியமாய்த்தங்களுடையபுத்திகூர்மையினாலேதான் என்பதுதிண்ணம். தாங்கள் சமயோசிதமாய் நமது சேனைகளை நடத்தி,எதிரி நமது வியூகங்களில் இருக்கக்கண்டு, அவைகளின் வழியே உட்புகுந்துவிட எத்தனித்த காலங்களிலெல்லாம், தாங்கள் கவனமாய் நமது படைகளைச் செலுத்திவந்த யுக்திகளால்தான் நாம்ஜெயமடைந்தோம் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். மேலும் நான் அன்றையதினம் சிலருடன் எதிரியின் சைன்னியத்தின் உட்செல்ல, அவர்கள் என்னை நாலாபக்கத்திலும் சூழ்ந்துகொள்ள, அதை கவனித்துப் பின்பக்கத்திலிருந்து தாங்கள் அதிவேகமாய் வந்து, தங்களுடைய குதிரைப்படைகளைக்

கொண்டு எதிரியைத்தாக்கி, ஒரு துறப்புத்துறந்ததா லன்றோ, நானும் பிழைத்து பிறகு அகோரயுத்தம் நேர்ந்தது. இவைகளெல்லாம் எப்படி இருந்தபோதி லும் நான் வருமுன் தங்களுடைய சேனைகளெல்லாம் தோல்வியடைந்தும், அநேகர் மாண்டும், அநேகர் ஓடி யும், தங்களுடைய ஒத்தாசைக்குச் சிலர் மட்டுந்தானி ருக்க, இந்தமூன்று மாதமாய், எதிரிக்குக் கீழ்ப்படி யாமல், கோட்டையைக் காத்துக்கொண்டு வந்த தங்க ளுக்குச் சமமான அரசரும் உண்டோ?

சா.—அப்பா! அக்கீர்த்தியெல்லாம், எனக்குக் கொஞ்சமும் பாத்தியமில்லை. அவை முழுதும் இதோ உட்கார்ந் திருக்கும் சிங்கத்திற்குச் சொந்தம். முதலில் உன்னை எதிரிகள் சூழ்ந்துகொண்ட சமயத்தில், மதிலின்மே லிருந்து கண்கொட்டாது கழுகுபோல் கவனித்துக் கொண்டுவந்த இவன், திடீரென்று குதிரையின்மேல் பாய்ந்து, அகழைக்கடந்து ஏகாகியாக என்னிடம் ஓடிவந்து தெரிவித்ததன் பேரில்தான் நான் படைக ளைத் திரட்டிக்கொண்டு நீ சென்றவிடம்வந்து சேரும் படி நேர்ந்தது. நான் எதிரிக்குக்கீழ்ப்படியாமல் நீ வரு மளவும் கோட்டையைக் காத்துக்கொண்டு வந்ததும் இவளது தைரியத்தால்தான்.

ஸ்ரீ.—அப்படியா? என்னவிந்தை! இந்தக்குழந்தையாலா? விவரமாய்ச் சொல்லுங்கள்.

சா.—இவளால்தான் அவ்வளவும். நான் எவ்வளவு சொல் லியும் கேளாமல் உனது வீரத்தையும் மேன்மைபொ ருந்திய குணங்களையும்கேள்வியுற்றிருந்த என்புதல்வி, எப்படியும் நீயாவது தந்தையாவது வந்துவிடுவீர்க ளென்று நிச்சயமாய் நம்பி, உதவி கட்டாயம் வந்து

சேருமென்று தைரியம் சொல்லிவந்தாள். அப்படி வாராதிருக்குமாயின் என்னசெய்வது என்று நான் வினவ,

ஸ்ரீ.—என்ன யுக்தி சொன்னாள் குழந்தை?

சா.—யுத்தத்தில் மடிந்துபோவதே மேல் என்று சொன்னாள்.

ஸ்ரீ.—ஓ! ஓ! ஆ! ஆ! உதவி வராவிடில் ஜயமென்பதற்கே ஹேது வில்லாதிருந்தாலும், யுத்தம் செய்து உயிரிழப்பதுதவிர, கோட்டையில் இராணுவத்தாரல்லாதவர், பாலர்கள், வயோதிகர், ஸ்திரீகள், இன்னும்புகார் நகரத்து பேர்போன்ற இரத்தினம் முதலிய தனங்களையும் எதிரிக்கு இரைகொடுத்து விடுவதாகத் தீர்மானித்து விட்டீர்கள்போலும்!

மா.—இதென்னயிது? தாங்கள் சொல்லுவதுவிசேஷமான ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறதே! கோட்டையையும் இரத்தினங்களையும் காப்பதன்பொருட்டு எதிரியைச் சரணடைவதுதான் உசிதம்போலிருக்கிறது! தாங்கள் அப்படித்தான் செய்வீர்களோ? தயவுசெய்து உத்தரம் கூறவேண்டும்......... * * * அப்படியே எல்லாவற்றையும் காப்பாற்றிக் கொள்ளுகிறோம் என்றே வைத்துக்கொள்வோம். பிறகு தங்களைப்போலுள்ள வீரர்களைக் கண்டபொழுதெல்லாம் வெட்கத்தினால் தலைகுனிந்து அநேகமுறை மரணமடைவதைக்காட்டிலும், ஒரேதடவையில் போர்முன் கையில் வில்லுடனும் உருவியவாளுடனும் இறப்பது மேலென்று நினைத்தது தவறோ?

ஸ்ரீ.—ஆ! ஆ! மெச்சினேன், மெச்சினேன் உனதுதீரத்தை; விசேஷ ரோஷமுள்ளவளாய்க் காண்கிறாய்.

சா.—ஸ்ரீகரா! இன்னும் கேட்கவேண்டும். இதுதவிர, என்னுடன்கூட ஆண்ஆடைகொண்டு, குதிரையின் மீது சவாரிசெய்து, மதில்களைச்சுற்றிச்சுற்றி வந்து கொண்டு உன்னுடைய வரவை எதிர்பார்த்து, நீ பத்து மைலுக்கப்பால் வரும்பொழுதே ஓடிவந்து, "அதோ மேகம்போல் தூளிகளைக்கிளப்பிச் சூரியனை மறைத்துக் கொண்டு ஸோமதத்தரும் பெருஞ்சேனையுடன் வந்து விட்டார். இனி என்னகவலை?" என்று முதலில் நல்ல சமாசாரம்கொண்டுவந்து என் மனதைத் தேற்றினள். எனதுஇராஜ்ஜியம் போனால்தான் என்ன? என்னுயிர் போனால் தான்என்ன? யுத்தத்தில் அபஜயப்பட்டிருந் தால் என்செல்வி என்னகதி அடைந்திருப்பா ளென்று நினைக்க என்மனம் நடுங்குகிறது.பகவானைக் குறித்து எப்பொழுதும் தியானம்செய்து கொண்டி ருந்தேன். இனி அக்கவலை நீங்கிற்று.

ஸ்ரீ.—தாங்கள் மொழிந்ததெல்லாம் உண்மையாயின், இவள் ஓர் ஆண்குழந்தையாய்ப் பிறந்திருக்கவேண் டும். பிரம்மன் தவறிப்போய் விட்டதாய்த்தெரிகிறது.

சா.—அதினின்றும் ஏதோ மிகத்துணிந்தவள் என்று நினைக்கவேண்டாம். ஸ்திரீகளுக்குரித்தான வினயம் முதலிய உத்தம குணம்வாய்ந்தவள். உயர்ந்த க்ஷத் திரிய குலமானதாலும், தாயில்லாது தகப்பன் கைக் கீழ் வளர்ந்து வந்தமையாலும், கொஞ்சம் படபடப்பும் பொருமையுமுண்டு. கல்வியில் மிகவும் பயிற்சியுடை யவள். இரண்டொரு வருஷங்களாக, இந்த இராஜ்ஜி யத்தை இவளே ஆண்டுவருகிறாள் என்றுசொல்லவும் ஒருவாறு நியாயமுண்டு.

ஸ்ரீ.—மிகவும் சந்தோஷம். எனக்கு இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. நான் முதலில் பார்த்தபொழுதே அறிந்துகொண்டேன் அவளது திறமையை.

சா.—அப்பா! நான் மண்ணின்மீது இனி அதிகநாள் இருக்க ஹேதுவில்லை. இதோ இவளை உனது அன்னையின் பொருட்டு உனது கையில் ஒப்புவித்தேன்; உனது அன்னையிடத்தில் சேர்ப்பிப்பாயாக. இவளை இனி பாதுகாப்பது உன் கடமை. நீ யுத்தத்தில் உயிர்பிச்சை கொடுத்தது ஒரு பெரிதல்ல. நீ செய்த உபகாரத்தைப் பூர்த்திசெய்யவேண்டும். இவள் இனி உன்கையடை.

ஸ்ரீ.—சீக்கிரத்தில் தக்கபுருஷனைத் தேர்ந்தெடுத்து இவளுக்கு விவாகம் செய்துவைப்போம். நீ யாருக்கு மாலையிடப்போகிறாய் குழந்தாய்? என்ன கேட்பதற்கு மறுமொழி கூறாமல் அப்புறம் திரும்பிக்கொண்டாய்?

மா.—ஐயா! தாங்கள் எங்களுக்கு பெரிய உபகாரம் செய்தீர்கள். நாங்கள்மிகவும் கடமைப்பட்டு விட்டோம். ஆதலால் நான் ஒன்றும் மரியாதைக் குறைவுபோல் பேசக்கூடாது. இருந்தபோதிலும் என்னை எப்பொழுதும் பரிகாசம் செய்வதுதானா? நானென்ன, தாங்கள் அவ்வளவு அலக்ஷியம் செய்யும்படி மறைவாக வைத்துக்கொண்டு விளையாடும் பாபாவா?

ஸ்ரீ.—என்ன குழந்தாய் உனக்கு இவ்வளவு கோபம்? இதைக் கொண்டே நீ குழந்தையென்று ஏற்படவில்லையா?

மா.—யார் கோபித்துக்கொண்டது! நான் ஒன்றும் கோபித்துக்கொள்ளவில்லை.

ஸ்ரீ.—அப்படியானால், என் கேள்விக்கு உத்தரம் கூறுவாய்.

மா.—என்ன உத்தரம்? எதற்கு உத்தரம்?

ஸ்ரீ.—நீ யாரை விவாகம் செய்து கொள்ளப் போகிருய்?

மா.—நான் ஒருவரையும் விவாகம் செய்து கொள்ளப் போகிறதில்லே, போங்கள்: நான் விவாகமே செய்து கொள்ளப் போகிறதில்லே. எதற்காக எனக்கு எப்பொழுதும் கோபம் உண்டாகும்படி பேசுகிறீர்கள்?

ஸ்ரீ.—ஆனல், நீ விவாகமே செய்து கொள்ளப் போகிறதில்லேயோ?

மா.—இல்லே.

ஸ்ரீ.—நிச்சயந் தானு?

மா.—எனக்கொன்றும் தெரியாது; நான் போகிறேன் அண்ணு.

ஸ்ரீ.—இதோ பார் மாதங்கி! அழத்தொடங்காதே. நீ ஒரு பெரிய போர் வீரளாயிற்றே! அழலாமா? அழாதே. மாலேயில் உனக்கு ஏதாவது பளபளவென்று ஓர் ஆபரணம் வாங்கித்தருகிறேன்.

மா.—(அழுதவண்ணம் போகிருள்.)

ஸ்ரீ.—மாதங்கி! இதோ பார். நீ அழலாகாது. நான் சொல்வதைக்கேள். நான் வேடிக்கையாய்ச் சொன்னேனே ஒழிய வேறில்லே. இனி அப்படிக்கெல்லாம் பரிகாசம் செய்வதில்லே. கண்களேத் துடைத்துக்கொள். அண்ணு என்மீது கோபமாய்ப் பார்க்கிருர். நான் சொல்வதைக் கேள்.

மா.—என்னசெய்யவேண்டு மென்கிறீர்கள்? (கண்களேத் துடைத்துக் கொள்ளுகிருள்.)

ஸ்ரீ.—உட்கார், சொல்லுகிறேன்.

மா.—நல்லது. அப்படியே.

ஸ்ரீ.—உனது தந்தை சொல்லுவதிலிருந்து, நீ குதிரை சவாரி செய்வதில் மிகவும் சமர்த்தை என்று தெரிகிறது. இன்றுமாலை நாமிருவரும் குதிரைப்பந்தயம் போவோமா? நான் என் நண்பருடன் குதிரைப்பந்தயமாடி வெகுநாளாயிற்று. என்ன சொல்லுகிறாய்?

மா.—அப்படியே ஆகட்டும். எந்நேரத்திற்குப் புறப்படுவோம்? என்னைப்பற்றிய மட்டில் நான் இப்பொழுதே புறப்படத்தயார்.

ஸ்ரீ.—நல்லது. ஆனால் மாலையாகட்டும். நான் உனது தந்தையிடத்துக் கொஞ்சம் சம்பாஷித்து வரவேண்டும்.

மா.—அப்படியே ஆகட்டும். ஆனால் பந்தயம் என்ன?

ஸ்ரீ.—என்ன பந்தயமா? நல்லது! நல்லது! சரி. நீ புறப்பட்டு ஒருநாழிகழித்து நான் புறப்படுகிறேன். வேண்டுமானால் நமது குதிரைகளை மாற்றிக்கொள்வோம். பத்துமைலுக்குள் நான் உன்னைப்பிடித்துவிடுகிறேன்.

மா.—அரசே! அப்படி யொன்றும் வேண்டாம். தாங்கள் வேண்டுமானால் ஒருநாழி முன்புறப்படுங்கள். என் குதிரையே எனக்குப்போதும். நான் தங்களை ஒன்பது மைலுக்குள் தாண்டிவிடுகிறேன். எல்லாம் சவாரி செய்கிறவர்களைப் பொறுத்ததே ஒழிய, குதிரையைப் பொறுத்தது கொஞ்சந்தானே?

ஸ்ரீ.—அப்படியானால் ஒரே இடத்திலிருந்து புறப்படுவோம்.

மா.—அவரவர்கள் குதிரையேபோதும். ஒரே இடத்திலிருந்து ஒரேசமயத்தில் புறப்படுவோம்.

8

ஸ்ரீ.—பின்பு அவமானம்வந்தால் நீ அழக்கூடாது; இப்பொழுதே சொன்னேன்.

மா.—தாங்களும் பின்பு தோல்வியடைந்தால்—ஒரு ஸ்திரீயால்--அதுவும் குழந்தையால்—அவமானம் நேர்ந்தால் வருத்தமடையலாகாது.

ஸ்ரீ.—நீயோ குழந்தை. மேலும் பெண்பிள்ளை. உன்மீது வருத்தமடைவேனே சந்தோஷிப்பதை விட்டு? இன்னொருமுறை கேட்கிறேன். இப்பொழுதே சொல்லிவிடு. வேண்டுமானால் முன்பு புறப்பட்டுவிடு. பிறகு ரோஷப்படுவதில் பயனில்லை.

மா.—நானும் இன்னொருமுறை சொல்லுகிறேன். அப்படி வேண்டியதில்லை. தாங்கள் மாத்திரம் இவ்வளவுவீரர்களையும் யுத்தத்தில்ஜயித்து, குதிரைப் பந்தயத்தில் ஒரு பெண்பிள்ளையிடம் அபஜயப்பட்டால் மிகவும் வெட்கம்; ஞாபகமிருக்கட்டும்.

ஸ்ரீ.—என்னைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நீதான் குழந்தை யாயிற்றே என்று யோசித்தேன்.

மா.—மறுபடியும் ஆரம்பித்தீர்களே, குழந்தை, குழந்தை என்று! இருக்கட்டும் எல்லாம் குதிரைப் பந்தயத்திற்குப்பின் சொல்லுகிறேன். அதுபோகட்டும். என்ன பந்தயம் வைக்கிறீர்கள்?.......... * * *

ஸ்ரீ.—நீ என்ன பந்தயம் வைக்கிறாய்?

மா.—தாங்கள்முன்பு சொல்லுங்கள். என்னபந்தயம் வைக்கிறீர்கள்?......... .........* * *

ஸ்ரீ.—நீ என்னபந்தயம் கேட்டாலும் வைக்கிறேன். தடையில்லை...............* * *

மா.—நல்லது. சரிதானே. நான் என்ன கேட்டாலும்சரி, கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளுங்கள். பின்பு அசத்திய வாதியாகக் கூடாது. எதுகேட்டாலும் உடன்பட வேண்டும்.

ஸ்ரீ.—ஆ! என்ன இப்பொழுதே ஜெயித்துவிட்டதாய்த் தீர் மானித்துக் கொண்டனையோ? ‘துள்ளுகிறமாடு பொதி சுமக்குமா’ தெரியாதோ? நல்லது அப்படியே வாக் களித்தேன்.

மா.—அகப்பட்டுக் கொண்டீர்! ஏமாந்தீர்! ஏமாந்தீர்!

ஸ்ரீ.—எப்படி?

மா.—எல்லாம் பின்னறிவீர்கள்.

ஸ்ரீ.—உன்பந்தயம் என்ன?

மா.—தங்களைப்போல் சொல்லுவதற்கு என்னிடம் போது மானமில்லை. ஆயினும் நான் தோல்வியடைந்தால், தங்களுக் கடிமையாவேன்.

ஸ்ரீ.—நீயும் அப்புறம் அசத்திய வாதியாகக் கூடாது. உனக்கிருக்கும் பொறுமைக்கு நீ எப்படி அடிமைத் தொழில்புரிவாய்?

மா.—நான் தோல்வியடைந்தால் தானே!

ஸ்ரீ.—ஒருக்கால் தோல்வியடைந்தாய்? பின்பு—* *

மா.—தோல்வி யடைந்தால், பிறகு ரோஷமும் பொறுமை யும் எதற்காக? பின்பு உயிர் தான் இருக்குமோ? இருக்குமாயின் அடிமைத் தொழில்தான் தகும்.

ஸ்ரீ.—அப்படியானல் நான் பந்தயத்திற்கு ஒப்புவதில்லை. ஒருக்கால் நீ இறந்தால் உன் தந்தை எவ்வளவு கஷ்டப்படுவார்?

மா.—ஆனல் தமக்கென்ன?

ஸ்ரீ.—நானும் உன்னுடன் கொஞ்சம் பழகிவிட்டமையால் வருத்தப்படுவேன் என்று நினைக்கிறேன்.

மா.—போகிறது. அப்படியானல் நான் இறப்பதில்லை. அப ஜயப்பட்டால் அடிமைத் தொழிலுக் குட்படுகிறேன்.

ஸ்ரீ.—ஆனல் மாலையில் புறப்படலாமா?

மா.—மாலை இருபத்திரண்டு நாழிகைக்கு நகர்ப்புறத்தி லுள்ள ஆற்றங்கரைப் பாலத்தினிடத்து குதிரையின் மீது தங்களைத் தவருமல் காணலாமா?

ஸ்ரீ.—காணலாம்.

மா.—நான் சென்று வருகிறேன் அண்ணு.

சா.—நல்லது. உன்னை விட்டு நான் எவ்வாறு பிரிந்திருப் பேன்? இன்னும் சில தினங்கள் இங்கு தங்கிக் காலங் கழித்துப் பிறகு செல்லலாகாதா? ஐயனே! என்ன, உன் முகம் ஒருவாறு எப்பொழுதும் குன்றியிருக் கிறது? உன்னுத்தரவானல்,ஒன்றுகேட்கிறேன். நான் உன் க்ஷேமத்தையே கருதினவன் என்று நினைத்து மறுமொழி கூறவேண்டும்.

ஸ்ரீ.—என்ன?

சா.—நான் உன்னைக்கவனித்து வந்ததில் உனக்கு மனதில் ஏதோ பெருங்குறையிருப்பதாய்த் தெரிகிறது. உனக் கிருக்கும் செல்வத்திற்கும் வளப்பத்திற்கும் உனக்கு என்ன குறையிருக்கக்கூடும்? என்னிடம் தெரிவித் தால் என்னல் இயன்றமட்டும் தேறுதல் செய்து பார்க்கலாமென்று நினைக்கிறேன்.

ஸ்ரீ.—என்னை மன்னிக்க வேண்டும். நான் இப்பொழுது ஒன்றும் விவரமாய்ச் சொல்வதற்கில்லை. என்றாலும்

எனக்குத்தாங்கள் ஒரு பெரிய உபகாரம் செய்வதற் குண்டு. திருப்தியிருந்தால் தங்களுடைய இப்புதல்வி யைப்போல் உயர்ந்த இரத்தினம் நான் எங்கும் கண்ட தில்லை. நானும் என்மனவருத்தத்தை ஒருவாறு மறக் கும்பொருட்டே யுத்தத்திற்குப் புறப்பட்டேன். அதி லுண்டான ஜெயம் தவிர, குழந்தை மாதங்கியிடம் எனக்கு ஒரு விசேஷ அன்பு ஏற்பட்டுவிட்டது. அவ ளுடன்விளையாடும்பொழுதுதான் நான் எல்லாவற்றை யுங்கொஞ்சம்மறக்கிறேன். இவளைவிட்டுஇனிஎனக்கு பொழுது போவதும் மிகக் கடினம். நான் வாராதது கண்டு எனது தந்தையர்கள் வருத்தமடைவார்கள். நான் சீக்கிரம் போகவேண்டும். தாங்கள் தயவுசெய்து தங்களுடைய குழந்தையுடன், சிலகாலம் எங்கள் இராஜ்ஜியத்தில் தங்கி யிருக்கலாகாதா ? நான் மிகவும் வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சா.—இது ஒரு பெரிதா? அப்படியே ஆகட்டும். சீக்கிரத் தில் மந்திரியிடம் இராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டுப் புறப்பட்டுவிடுவோம். (போகிறார்கள்.)

## அங்கம்—மூன்று

### 3-வது காக்ஷி

இடம்—ஒரு விடுதி.

காலம்—முற்பகல்.

ஸ்ரீ கரனும் ரணபாஸ்கரனும்.

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! அஹிம்ஸன் எங்குசென்றுவிட்டான்? ஒன்றும் துப்புத்தெரியவில்லை; நீ ஏதாவது கேள்விப் பட்டனேயோ ?

ரண.—நானும் விசாரித்துத்தான் வருகிறேன். நான் ஒன்றும் கேள்விப்படவில்லையே!

ஸ்ரீ.—அவன் என் பக்கத்திலில்லாமல் என்புத்தி ஒரு விஷயத்திலும் செல்லுவதில்லையே! என்னைவிட்டுத் தனித்திருக்க அவனுக்கு எவ்வாறு மனம்வந்ததோ?

ரண.—தங்களுக்குக் காலம்கழிப்பது மிகவும் சிரமம்தான். ஆனால் அவருக்கு அப்படியிருப்பதாய்த்தெரியவில்லையே! அவரைக் கண்டுபிடிப்பதற்கு என்னசெய்யலாம்?

ஸ்ரீ.—என்ன ஆச்சரியமாயிருக்கிறது! எங்குசென்றுவிட்டான்? அவனுக்கு உலகத்தில் வேறு பந்துக்கள்கூட இல்லையே!

ரண.—என்னவோ, நூதனமாய் யாராவது பந்துக்களைத் தேடிக்கொண்டானோ என்னவோ? ஏன் ஒருவரிடமும் சொல்லாமல் போய்விட்டான்?

ஸ்ரீ.—ஆம். சொல்லாமல்தான் போயிருக்கிறான். ஏன் தெரியப்படுத்தாமல் போகவேண்டும்?

ரண.—அதைத்தான் நானும் கேட்கிறேன். ஏதோ தப்பு செய்தவர்போலல்லவோ இருக்கிறது? அப்படிஏதாவது இருக்குமா என்ன?

ஸ்ரீ.—என்ன சொல்லுகிறாய்?

ரண.—ஒன்றும் விசேஷமாயில்லை. போகும்பொழுது ஏன் ஒருவருமறியாதபடி கள்ளன்போல போகவேண்டுமென்றேன்.

ஸ்ரீ.—சீ! என்னவார்த்தை சொன்னாய்? அஹிம்ஸனைக் குறித்தா அவ்வாறுநினைப்பது? அவனாவது குற்றம் செய்யவாவது?

ரண.—அதுசரிதான். அவருடையகுணங்களை நாமறியோமா? அவர் அடிகளை மிதித்தவர்கூட குற்றம் செய்யாரே! இருந்தாலும், தாங்கள் சொல்லுவதுபோல சொல்லிக்கொண்டுபோவதில் என்ன தோஷமிருக்கக்கூடும்? தங்களிருவருக்கும் இருக்கும் அந்தரங்கத்திற்கும் நட்பிற்கும் தங்களுக்குக்கூட தெரிவிக்காமல் போயிருப்பது என்பது நம்பக்கூடியதாயில்லையே!

ஸ்ரீ.—என்னிடங்கூட தெரிவிக்காமல் போயிருப்பது கொஞ்சம்ஆச்சரியம் தான். ஏதாவது மறைந்திருக்கிறானா? அல்லது போனவிடத்தில் ஏதாவது நோய் கொண்டானா? அல்லது வேறுஏதாவது ஆபத்தடைந்தானா?

ரண.—அப்படிக்கெல்லா மிருந்தால் உடனே தெரியாமல் போகாது. அப்படிக்கெல்லாம் சந்தேகிக்க நியாயமே இல்லை. எங்கேயாவது உல்லாஸமாய்ப் போயிருப்பார். சீக்கிரம் வந்துவிடுவார்.

ஸ்ரீ.—என்ன போய் நான்குமாதத்திற்கு மேலாயிற்று, இன்னும்வரவில்லையே? என்னை முற்றிலும் மறந்துவிட்டான்போ லிருக்கிறதே! எங்கெங்கேயோ விசாரித்து வருகிறேன், தெரியவில்லை. உனக்குஎன்ன தோன்றுகிறது?

ரண.—எனக்கு என்னதோன்றப்போகிறது? இருந்தாலும் சிறுபிள்ளையாயிற்றே,—அப்படியிருந்தாலும் இருக்கலாமோ,—என்று ஒருவிதமான சந்தேகம் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது.

ஸ்ரீ.—எப்படி? சிறுபிள்ளையானல்என்ன? நீ சொல்லுவது ஒன்றும் தெளிவாயில்லையே!

ரண.—நானொன்றும் மறைபொருளாச் சொல்லவில்லையே! எல்லாம் உலகத்திலுள்ளதுதானே! பாவியாவஸ்த்தை பொல்லாதென்று பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோமே என்றேன். அவ்வளவுதான்.

ஸ்ரீ.—அப்படிக்கெல்லாம் சந்தேகிக்க அஹிம்ஸனை யார் என்று பார்த்தாய்? உலகத்திலும் எல்லோரும் அவரவர்களைப்போலவே பிறரையும் எண்ணுகிறார்கள். அவன்புத்தி அப்படிக்கெல்லாம் செல்லாது என்பதை நிச்சயமாய் நம்பு. அவன் மனநிலையை நானல்லவோ அறிவேன்? நீ அறியாமையால் மொழிந்துவிட்டாய்.

ரண.—இருக்கலாம். நான் தவறியிருப்பேன். இருந்தாலும் தங்கள் உத்தரவானால் ஒன்று கேட்கத்துணிகிறேன்.

ஸ்ரீ.—என்ன? கேள் பார்ப்போம்.

ரண.—விசேஷமாய் ஒன்றுமில்லை. அஹிம்ஸர் ஆண் பிள்ளைதானே என்று கேட்டேன்.

ஸ்ரீ.—ஆம். இருந்தால்—?

ரண.—பின்பு ஏன் கேட்கவேண்டும்? எல்லாமிருக்கக்கூடியதுதான்; சகஜந்தான் என்றே என் அற்ப புத்திக்குத் தோன்றும். தாங்கள்என்னை மன்னிக்கவேண்டும்.

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! வெகுநேர்த்தி! பொதுவாய் நீ உலகத்தார் விஷயத்தில் சொல்லுவது சரியாயிருக்கலாம். அஹிம்ஸனைப்பற்றி நீ ஒருக்காலும் அப்படிஎண்ணாதே. அப்படியேயிருந்தால்தான் என்ன? அதற்கு ஒளிந்து மறைவாய் இருப்பானேன்? தன்மனம் நாடினவளைத் தன் இஷ்டம்போல் மணந்து சுகமாய்வாழ்வதில் யாருக்கு என்ன ஆக்ஷேபம் இருக்கக்கூடும்? எதற்காக இவ்வளவு இரகசியம்?

ரண.—தாங்கள் உலகநடையை ஒத்தல்லவோ பேசவேண்டும்? அப்படிச்செய்வதற்கு எவ்வளவோ நிர்ப்பந்தங்கள் உண்டே. தங்களுக்குத் தெரியாதா? ஒருக்கால் அவர்மனம் நாடினவள் விவாகம் செய்து கொள்வதற்கு அர்கமில்லாதவளா யிருந்தால்—?

ஸ்ரீ.—உன்புத்தி கூர்மையை என்னென்றுரைப்பது? ஒருவனிடத்தில் மனம்நாடினுல் அவள் விவாகத்திற்கு அர்கம் இல்லை என்பதும் உண்டோ?

ரண.—என்னை மன்னிக்கவேண்டும். தாங்கள் கக்ஷிபேசும் பொழுது நானும் எனக்குத் தெரிகிறவரையில் சொல்லித்தானே ஆகவேண்டும்? கொஞ்சம் பொதுவாய் லோகாபிராமமாய் விவகரித்துப் பார்ப்போம். அஹிம்ஸரைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசவேண்டாம். சாதாரணமாய் இராஜரீகத்தில்மேல்பதவியாகிய முதல் மந்திரி நிலைக்கு ஆசைப்பட்டுக் கொண்டிருப்பவர் புத்திசாலியானுல், விவாகத்தின் பொருட்டு தன் மனதிற்கு இசைந்தவள் என்ருவது, கண்ணுக்கு லக்ஷணமா யிருக்கிருளா யென்ருவது பார்த்தால் போதுமா? அப்படி முறைப்படி விவாகம் செய்து கொள்ளவேண்டுமானுல் மகாராஜா, மகாராணி இவர்களுடைய சம்மதமும் உத்தரவும் வேண்டாமா? முக்கியமாய் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கலக்க வேண்டாமா? தாங்கள் எல்லோரையும்கேட்டுக் கொண்டல்லவோ இப்படிக்கு ஓர் எத்தனம்செய்ய வேண்டும்? ஓர் அக்காத்திப் பெண்ணைக் கண்ணுக்குப் பளபளப்பாய் இருக்கிருள்என்ருவது புத்திசாலியா யிருக்கிருள் என்ருவது விவாகம் செய்து கொள்ளலாமா அவர் ஸ்திதியிலிருப்பவர்கள்? தாங்கள்தான் எப்படி

சம்மதம் கொடுப்பீர்கள் ? தாங்கள் எல்லோரும் முதல் மந்திரியின் புத்திரியைத்தான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்ருல் அவர் எப்படி தடை சொல்லுகிறது ? இப்படிக்கெல்லாம் இருப்பதனுல் தான் அப்படிக்கெல்லாம் சந்தேகப்படுகிறேன்.

ஸ்ரீ.—அப்படியானுல் யாரோ ஒரு பெண்ணைக் கைபற்றிக் கொண்டு சென்றிருக்கிருன் என்று ஊகிக்கிருயோ ?

ரண.—ஆம். அப்படித்தான் எனக்கு சமுசயம் உண்டாகிறது.

ஸ்ரீ.—அப்படியானுல் எப்பொழுது திரும்புவான் என்று நினைக்கிருய் ?

ரண.—சீக்கிரத்தில் அவருக்கு அவளிடத்தில் களைத்துப் போனதும் அவளுக்கு ஏதாவது செய்தி சொல்லி ஏமாற்றிவிட்டுத் திரும்பிவிடுவார்.

ஸ்ரீ.—அப்படி ஒரு பெண்ணை ஒரு கதியும் இல்லாமல் கெடுத்துவிட்டுத் திரும்பினுல் என் முகத்தில் விழிக்க எப்படி துணிவான் ?

ரண.—அவர் திரும்பிவந்து, தாங்கள் நம்பும்படி பொருத்தமாயும் சாமார்த்தியமாயும் பேசினுல் தாங்கள் நம்பிவிடுவீர்கள். அதற்கு வேண்டிய யுக்திகள் அவருக்குத் தெரியும்.

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! இப்படிக்கெல்லாம் உரையேற்றி என்னை ஏமாற்றி நம்பும்படி செய்து விடலாமென்று நினையாதே. நான் எளிதில் நம்பிவிடமாட்டேன்.

ரண.—தாங்கள் நம்ப மாட்டீர்களென்று எனக்கும் நிச்சயமாய்த் தெரியும். அவருக்கும் நிச்சயமாய்த் தெரியும். அப்படிக்கெல்லாம் எனக்கேற்பட்ட சந்தேகத்தைத்

தெரிவித்தேனே தவிர வேறில்லை. அதுவும் தாங்கள் கேட்டதிலிருந்து நான் சொல்லும்படி நேர்ந்தது. நாளுக ஒன்றும் சொல்ல எத்தனப்படவில்லை. எனக்கு ஒன்றும் நிச்சயமாயும் தெரியாது. என்னை மன்னிக்க வேண்டும். ஆனல் தங்களுக்கு ஏதோ ஊகம் தோன்றியிருக்கவேண்டும். அவருடைய நடவடிக்கைகள் தங்களுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கக்கூடியதாகையால், இப்படித்தான் இருக்கவேண்டுமென்று, ஏதோ சித்தாந்தம் செய்துகொண்டிருக்கிறீர்களல்லவா?

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! அப்படி யொன்றுமில்லை. எனக்கொன்றும் தோன்றவில்லை. ஆனதால் உன்னைக் கேட்டேன். நீ சொல்லுவதோ நம்பக்கூடியதாயில்லை. நான் எவ்வாறு நம்புவது? நீ சொல்லுவதெல்லாம் உண்மையாயிருக்கக்கூடுமோ? நீ நிச்சயமாய்ச் சொல்லக்கூடுமோ?

ரண.—இளவரசே! நான் எப்படி உறுதியாய்ச் சொல்லக் கூடும்? ஒருக்கால் இப்படி இருக்கலாமோ என்று நினைக்க இடமிருக்கிறது என்று தோன்றுகிறது. அவ்வளவே ஒழிய எப்படி நிச்சமாய்ச்சொல்லக்கூடும்? நான் கூடயிருந்துகொண்டா பார்த்துக்கொண்டிருந்தேன் அவர்போன பொழுது?

ஸ்ரீ.—அப்படியிருக்கலாமென்றே வைத்துக் கொள்வோம். யாரை அவன் அழைத்துச்சென்றிருக்கலாம்? என் கண்களில் படாத யாரை அவன் பார்த்திருக்கக்கூடும்? அவன் எளிதில் யாரையும் ஒப்புக்கொள்ள மாட்டானே!

ரண—ஆம். அது என்னவோ வாஸ்தவந்தான். ஆனால் ஆதியோடந்தமாய் எல்லா வரலாற்றையும் யோசித்துப் பார்க்குமளவில் என் சந்தேகம் வலுவடைகிறதே ஒழிய வேறில்லை.

ஸ்ரீ.—என்ன வரலாறு? என்ன ஆதியோடந்தம்? ஏதோ பெரிய சரித்திரம் ஆரம்பிக்கிறாய்போலிருக்கிறதே! என்ன விஷயம்? ஒன்றும் புரியவில்லையே!

ரண.—தாங்கள் கொஞ்சநேரத்திற்குமுன் யாரை கூட்டிச் சென்றிருக்கலாமென்று கேட்டீர்கள்?

ஸ்ரீ.—ஆம் கேட்டேன். யாராயிருக்கலாம்?

ரண.—யாராயிருக்கலா மென்றுதான் நானும் யோசிக்கிறேன். யாராயிருக்கலாம்? தாங்கள் அறியாதவளாயிருக்க நியாயமில்லையென்றும் சொல்லுகிறீர்கள். அதுவும் யுக்தமாய்த்தான் தோன்றுகிறது. ஏனெனில் தாம்தான் எப்பொழுதும் அவர்கூடயிருந்து காலங் கழிப்பவர்களாயிற்றே! அப்படி அவருக்கும் தெரிந்து தாங்கள் யாரை அறிவீர்கள்?

ஸ்ரீ.—ஆம் அப்படி யார் எங்கள் இரண்டுபேருக்கும் தெரிந்தவள்?

ரண.—அந்த இடத்தில்தான் சந்தேகம். நான் நினைப்பது என்னவெனில்—ஒருக்கால்—சீ! அப்படியிருக்க முடியாது.

ஸ்ரீ.—என்ன நினைத்தாய்? எப்படி இருக்க முடியாது?

ரண.—ஒன்றுமில்லை. நினைக்க இடமிருந்தாலும், என் வாக்கினால் அதைச் சொல்லக்கூடாது.

ஸ்ரீ.—ஏன் சொல்லக்கூடாது? ஒன்றும் பாதகமில்லை. சொல்.

ரண்.—இல்லே—ஊர்வதந்திதான். ஒருவேளே—நிஜமாயிருக்கலாமோ என்று நினேத்தேன்.

ஸ்ரீ.—எப்படி ? எப்படி ? என்ன ஊர்வதந்தி ? தெளிவாய்ச் சொல்வாய்.

ரண.—இளவரசே! ஜனங்கள் மனம்போனபடிக்கெல்லாம் வம்பளப்பார்கள். அதையெல்லாம் எப்படி வாஸ்தவம் என்று நினேக்கிறது? ஆனல் ஊர்வம்புக்குப் போதுமான இடமிருக்கிறது. அதுதான் இதிலுள்ளவிசேஷம். மேலும் "அள்ளாமல் குறையாது இல்லாமற் பிறவாது" என்று தாங்கள் கேள்விப்பட்டதில்லேயோ?

ஸ்ரீ.—என்ன இடிஇடித்தாற்போல் பேசுகிருய் ? அஹிம்ஸனேப்பற்றிக்கூடவா ஊரில் வம்பளக்கிருர்கள்?

ரண.—ஐயனே! ஊராரைச் சொல்லி என்ன செய்கிறது? நாமல்லவோ ஊரார் தூஷியாவண்ணம் நடந்து கொள்ளவேண்டும்?

ஸ்ரீ.—ஆம். அதென்னவோ உண்மைதான்.

ரண.—மேலும் பாருங்கள், தாங்கள் சந்தேகிக்கிறபடி அவர் ஏன் ஒருவருமறியாதபடி ஓடவேண்டும்? பிறகு ஏன் இவ்வளவுகாலம் மறைந்திருக்கவேண்டும் ? என் மனம் என்னவோ ஒன்றையும்ஒப்புவதில்லே. எனக்கு எல்லாம் பிசகாய்த்தான்படுகிறது. எனது சுபாவம் அப்படியிருந்தால், அதற்கு நான் என்னசெய்து கொள்ளுகிறது? எனக்கு எளிதில் நம்பிக்கை வருவதில்லே.

ஸ்ரீ.—என்ன ரணபாஸ்கரா? நீ பேசுகிறதெல்லாம் பெரிய புதுராயிருக்கிறது? ஸ்பஷ்டமாய்ச் சொல்லக்கூடாதா ?

ரண.—நான் எப்படி ஸ்பஷ்டமாய்ச் சொல்லக்கூடும்? எல்லாம் ஸ்பஷ்டமாய்த் தெரிந்தால் ஸ்பஷ்டமாய்ச்சொல்லக்கூடும். இதிலிருப்பது என்ன விசேஷமென்ருல், நான் நினைப்பதும் ஊரில் பரவியிருப்பதும் ஒத்திருக்கிறது. அவ்வளவுதான். எனக்கு ஒன்றும் நேரில் தெரியாது. பிறகு எல்லாம் பிசகாய் முடிந்தாலும்முடியும். அப்பொழுது என்னைக் கோபிக்கலாகாது. உத்தரவு கொடுத்தால் ஊரார் சந்தேகத்தைத் தெரிவிக்கிறேன்.

ஸ்ரீ.—ஒன்றும் பயப்படவேண்டாம். தெரிந்ததைச் சீக்கிரம் உரைப்பாய்.

ரண.—அதை நான்தான் ஏன்சொல்லவேண்டும்? யோசித்துப் பார்த்தால் தங்களுக்கே தெரியவேண்டியது தானே?

ஸ்ரீ.—நான் என்னுல் முடிந்தமட்டும் யோசித்துப் பார்த்து விட்டேன்; எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

ரண.—முன்பின் நன்ருய் கவனித்துப் பாருங்கள்.

ஸ்ரீ.—என்ன முன் ? என்ன பின் ?

ரண.—அஹிம்ஸர், எதுமுதல் கண்களுக்குத் தெரியாமல் போய்விட்டார்?

ஸ்ரீ.—சுமார் நான்குமாதத்திற்குமேல் ஆயிற்று. எனக்குக் கொஞ்சம் சௌகரியமானதும்—வைத்தியர் இனி பயமில்லை என்று சொன்னதுமுதல் காணேம்.

ரண.—ஆம்—உம்—

ஸ்ரீ.—என்ன தடுமாறுகிருய் ? சொல், தைரியமாய்.

ரண.—இல்லை—தாங்கள் வருத்தப்படலாகாது.

ஸ்ரீ.—இல்லை. சொல்.

ரண.—இல்லை—தாங்கள்—கானகத்தில் கண்டீர்களே ஒரு துறவிப்பெண்ணை—

ஸ்ரீ.—உம்—

ரண.—அவள் எப்பொழுது கானகம் விட்டுப்போனதாய்த் தெரிகிறது?

ஸ்ரீ.—அதற்குக் கொஞ்சகாலம் முன்முதல் காணுமலிருப்பதாய்த் தெரிகிறது.

ரண.—அதிலிருந்து என்ன நினைக்கவேண்டியதாயிருக்கிறது?

ஸ்ரீ.—அப்படியா? அப்படியா?

ரண.—தாங்கள் ஆயாசப்படலாகாது.

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! சற்று வெளியில் போயிரு. பிறகு சொல்லியனுப்புகிறேன். (ரணபாஸ்கரன்போகிருன்.)

என்ன ஆச்சரியம்! எனக்கு சப்தசாகரமும் ஒன்ருய்ப் பொங்கிவந்ததுபோ விருக்கிறதே! ஆ! ஆ! அடே துரோகி! உன்னை எவ்வளவு மதித்து, உன்னிடத்தில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன்? எல்லாம் பொய்யாயிற்றே! அடா நீயே இவ்வளவு அயோக்கியனுனல் இனி உலகில் யாரை நம்புவது? அடே பாபி என்னை எவ்வாறடா மோசம் செய்தாய்? தாய் தந்தை பெண்பிள்ளை எல்லோரிடத்திலும் வைக்கக்கூடிய அன்பையெல்லாம்சேர்த்து ஒன்ருய்த் திரட்டி உருட்டி உன்மீது வைத்தேனேயடா! ஆ! ஒருக்கால் யாரையாவது மணந்து கொண்டால் உன்னைவிட்டு எப்படியும் கொஞ்சம் பிரியும்படி

இருக்குமே என்றுகூட நினைத்தேனே ! ஓ! ஓ! ஆகை யால் தான் வேறிடத்தில் காதல் கொண்டிருக்கிருள் என்று அப்பொழுதே தெரிவித்தனையோ ? ஐயோ! ஒன்றையும் ஒளிக்காமல் உண்மை முழுதையும் கூறி யிருக்கலாகாதா? நான் அங்கீகாரம் செய்திருப்பே னே ! என்சுபாவம் உனக்குத் தெரியாதா? ஒருநாளும் ஆருப் புண்ணுக்கி விட்டனையே ! ரணபாஸ்கரா !

ரண.—மகாராஜ்!

ஸ்ரீ.—உனக்குத் தெரிந்ததை யெல்லாம் ஒளியாமல் கூறி விடு. இல்லாவிடில் உனக்கு ஆபத்துத் தான். ஜாக்கிர தை. அவள் கானகம் விட்டுச்சென்று சிலநாள் கழித் தல்லவோ, அவன் காணமற் போயிருக்கிருன்?எனக்கு நம்பிக்கையில்லே. இருவரும் ஒரேகாலத்தில் காண மற் போயிருந்தால் நீ சொல்லுவது ஒருக்கால் சரியா யிருக்கும். அப்படியில்லேயே! பிரமாணமாய்ச் சொல். பொய் சொல்வாயாகில் உன் உயிர் போய்விடும். தெரி யுமா?

ரண.—இளவரசே! தாங்கள் இனி என்ன செய்தாலும் சரி. நான் இறந்தாலும் இறக்கிறேன். தாங்கள் வற்புறுத்தி கேட்டதிலிருந்து நான் எனக்குத் தெரிந்ததைச் சொல்லும்படி நேர்ந்தது. நான் இதில் இவ்வளவு தூரம் இறங்கின பிறகு பின் வாங்குவதில்லே. எனக் குத் தெரிந்ததையும் நான் கேள்விப்பட்டதையும் சொல்லுகிறேன்.

தங்களுக்காக முதலில் அவுமிம்ஸன் அவளிடம் போய் பேசுவதற்கு முன்னமேயே, அவர்கள் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டிருக்க வேண்டும். பிறகு

தங்களுக்குப் போக்குக்காட்டிவிட்டு, அவளை விவாகம் செய்து கொள்வதாய்த் தானேற்றுக்கொண்டு, அவளைக் கொண்டுபோய் பத்து மைலுக்கப்பாலுள்ள தன் மாளிகையில் வைத்துவிட்டு, இங்குமங்குமாக இருந்து கொண்டுவந்தார். தங்களுக்கு நோய் அதிகரித்திருந்த பொழுதுகூட தான் சிரமபரிகாரம்செய்து கொள்வது போல அவ்விடம் சென்று உல்லாஸமாய்க் காலம் கழித்தார். தங்களுடைய உயிர் பிணியினால் தத்தளித்துக் கொண்டிருக்கும் பொழுதுகூட அவருக்கு எவ்வாறு இந்த லீலைகளிலெல்லாம் புத்திசென்றதோ? ஆனால் சிலதினங்களுக்குப் பிறகு அவருக்கும்களைத்துப் போய்விட்டாற்போலிருக்கிறது. தன்னை முறைப்படி விவாகம் செய்துகொள்ளும்படி அவளும் நிர்ப்பந்தம் செய்ய, அவர் அதற்குடன்படாமல், அவளுக்கு சாக்குப்போக்குச்சொல்லி, அவள் தன்னிடத்துவைத்த காதலைக்கொண்டு அவளை ஏமாற்றி, அவளுடன் கூடி பிறகு அவளை விவாகம் செய்யாமலே, தன் போகஸ்திரீயாக வைத்துக்கொள்ள எத்தனித்தார். அதற்கு அவள் கொஞ்சமும் சம்மதியாமலிருந்ததைக் கண்டு அவர் அவளை அனாதரவு செய்துவிட்டார். பிறகு அப்பெண்ணும் தன் கற்பு கெட்டபிறகு இங்கிருக்கலாகாதென்றெண்ணி, எங்கேயோ சென்றுவிட்டாள். அவள் எங்கு யாரிடமாவது வெளியிட்டு விடுவாளோ என்று பயந்து, அவரும் அவளைத்தொடர்ந்து சென்றிருக்கவேண்டும்.

ஸ்ரீ.—இதையெல்லாம் நீ எப்படி அறிந்தாய்?

ரண.—எனக்கேகொஞ்சம் தெரியும். மேலும் அங்கிருந்த வேலைக்காரர்களைக்கொண்டும் தெரிந்து கொண்டேன்.

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! உடனே அஹிம்ஸனைப் பிடித்துக் கொண்டுவருபவர்களுக்குப் பதினாயிரம்பொன் இனும் என்று நாடெங்கும் விளம்பரம் போடச்சொல்லும். அவனைப்பிடித்து வந்ததும், விலங்கும் கையுமாக என்னெதிரில் கொண்டுவந்து நிறுத்துவாயாக. சீக்கிரம்; தாமதம் செய்யாதே.

(ரணபாஸ்கரன் தயங்குகிருன்)

அடா கொலைக்காரா! இப்படியா சூது செய்தாய்நீ ஒன்றுமறியாப் பெண்ணை? பெண்வதை பொல்லாதடா! நல்லவேளையாய் என் கையில் சிக்கிக்கொண்டாய்; உனக்கு தக்கதண்டனை விதிக்கிறேன். ரணபாஸ்கரா!

ரண.—மகாராஜ்!

ஸ்ரீ.—அவன் அந்தப்பெண்ணை விவாகம் செய்துகொள்ளவில்லை என்று உன்னால் உறுதியாய்ச்சொல்ல முடியுமா?

ரண.—இருந்தால் அவர் ஏன் பகிரங்கமாய் வெளியிட்டிருக்கலாகாது?

ஸ்ரீ.—ஒருக்கால் நான் ஏதாவது கோபித்தால் என்னசெய்கிறது என்று யோசித்திருக்கலாகாதா?

ரண.—தங்களுடைய உத்தம சுபாவத்தை அவர் அறியாரோ? தங்களிடத்தில்காதலில்லாதவள் யாரைமணந்து கொண்டால் தமக்கென்ன?

ஸ்ரீ.—ஒன்றுமில்லை. இருந்தாலும் என்மனநிலைமையைக் கண்டு, சொல்லத் துணியாமலிருந்தாலும் இருக்கலாமல்லவா?

ரண.—அப்படியானால் அவனை அவர் அடையவே முயன்றிருக்கலாகாது. மேலும் அப்படியே இருக்குமென்றாலும் அப்பெண் ஏன் ஓடவேண்டும்? விவாகமாயிருந்தால் அப்பெண் எல்லாவற்றையும் இராஜாங்கத்தில் வந்து தெரிவித்திருக்க மாட்டாளா?

ஸ்ரீ.—அவள்தான் கற்பு கெட்டபிறகு இங்கிருக்கலாகாதென்று ஓடிப்போய்விட்டாள். இவன் ஏன் ஓட வேண்டும்? அதல்லவோ விளங்கவில்லை!

ரண.—நான் சொன்னபடிக்குத்தான் இருக்கவேண்டும். இப்படி மடக்கி மடக்கிக் கேட்டால் நான்என்ன செய்கிறது? எனக்குத்தெரிந்ததை நான் சொன்னேன். தாங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலுஞ் சரி.

ஸ்ரீ.—நீ சொல்வ தெல்லாம் உண்மையென்றுதான் தோன்றுகிறது. நல்லது, சீக்கிரம் அவனை என் உத்தரவுப்படி கண்டுபிடித்துவா. தக்கசிக்ஷை விதிக்கிறேன்.

ரண.—நேரில் வந்தால் தங்களுடைய உயர்ந்த குணத்திற்கும் அவனிடத்துள்ள அன்பிற்கும் எல்லாம் நேராய்ப் போய்விடும். ஒருக்கால தங்களை அவன் ஏமாத்தி விட்டாலும், பகவானை ஏமாத்தமுடியாது; அவர் கட்டாயம் தக்க சிக்ஷை விதிப்பார். அப்பெண்ணின் கண்ணீர் ஒருநாளும் வீணாகாது.

ஸ்ரீ.—அதென்ன அப்படி மொழிந்தாய்? அவனிடத்துள்ள விசுவாசத்தை முற்றிலும் ஒழித்தேனென்று நினை. இனி அவனை ஒருநாளும் விடமாட்டேன். சந்தேகப்படாதே. குற்றவாளிஎன்று தெரிந்தபிறகும் மன்னிப்பேனா? அவனிடத்து இரங்குவதற்கு என்ன இருக்கிறது?

ரண.—இளவரசே! என் மீது கோபித்துக் கொள்ளக் கூடாது. எப்படியாவது அவன் தப்பிப்பிழைத்தால் எனக்கு திருப்திதான். ஆனால் எதற்காகச் சொல்லு கிறேன் என்றால், அவனோ பெரிய வாசாலன்; தங்க ளுக்கோ வெளுத்ததெல்லாம் பால்; கருத்ததெல்லாம் காக்கை. அப்படியிருக்க, தாங்கள் ஒருதரம்தான் ஏமா ந்து போனீர்களே! போதாதா? இன்னொரு தரமும் ஏமாத்திவிடப்போகிறானே நாட்டார்நகைக்க என்று மட்டுந்தான் யோசித்தேன். எப்படியாவது தங்களுக் குண்மை தெரியாவண்ணம், தன்வேஷத்தால், எல் லாவற்றையும் மறைத்துத் தாங்கள் நம்பும்படிசெய்து விடப்போகிறானே. பிறகு தங்களுக்கு அவமானம் நேருமே என்று யோசித்தேன். அவ்வளவு தான்.

ஸ்ரீ.—ரணபாஸ்கரா! இன்னொருமுறை சொல்லுகிறேன் கேள். மறுபடியும் ஏமாறமாட்டேன். இனியும் அவன் வார்த்தையை நம்புவேனோ? கவலைப்படாதே. சீக்கிரம் விளம்பரம் போடச் சொல்லு. நான் போய் வருகிறேன் (போகிறான்).

ரண.—சபாஷ், ரணபாஷ்கரா! தீ பிடித்துக்கொண்டு விட் டது. இந்தஜ்வாலைக்கு யாரார் ஆகுதியோ? நடக்கட் டும், எல்லாம் அவரவர்கள் செய்த கருமபலன். நாம் என்ன செய்வது? எனக்கு இப்படி தீயதொழில் ஏற்படுத்தியதும் ஈசன்தான். இல்லாவிடில் என் கதி என்ன ஆகிறது? என்பேரில் என்ன பிசகு? எய்கிற வன் எய்தால் அம்பின்மேல்தானா குற்றம்?

(போகிறான்)

## அங்கம்—மூன்று

---

### 4-வது காக்ஷி

இடம்—அடர்ந்த கானகம்.

காலம்—மாலே.

ரங்கய்ய நாயுடும், ராமய்யா நாயுடுவும்.

ரங்.—ஏ அண்ணே ! பாத்தியா, நல்லாப்பாரு.

ரா.—என்னடா பாத்தியங்கரே ?

ரங்.—ஏ அண்ணே! நல்லாப்பாரு; அந்தாலே பாரு. யாரவர்ரான் தெரியலே.

ரா.— யார்ரா வர்ரான்? எங்கிட்டுடா வர்ரான் ?

ரங்.—மாட்டிக்கிட்டான் ! மாட்டிக்கிட்டான் !

ரா.—எவண்டா மாட்டிக்கிட்டான்? எங்கடா மாட்டிக்கிட்டான்?

ரங்.—ஏ அண்ணே! உனக்கென்ன தண்ணியில்ல, ஒண்ணும் புரியலே!

ரா.—ஏலே! யார்ராதண்ணி? பொடறியைக்கட்டிப் போட்டேன்னுப்பாரு. யார்ரா த—த—தண்ணி ?

ரங்.—ஆமண்ணே நீ தண்ணிக்கிண்ணி இல்லே, இந்தாலே வா; இப்படி நெதானமா.

ரா.—அப்படிச்சொல்லு. எனக்கா தண்ணி? எனக்கோ ஓனக்கோடா தண்ணி? பார்ரா என்ன நெதானமா நடந்துவர்ரேன்? ஏலெ! தண்ணிபோட்டாத் தான் என்ன? நெதானம் தப்பாது நினேச்சுக்க.

ரங்.—ஆமண்ணே, அந்தா வர்ரானே அந்த ஆளை அமுக் கணமே!

ரா.—லவையூண்டு கண்ணெமூடிட்டு வர்ரேண்டா. கொஞ் சம் பொர்ரா.

ரங்.—நல்லா இருந்திச்சு. இப்ப தூங்கிட்டயோ, போச்ச, தூங்கினவன் கிடாக்கண்ணு தெரியாது.

ரா.—ஏண்டாலே இப்ப என்னடா வந்திடுச்சு?

ரங்.—வந்திடுச்சா? பாக்கலே இந்த ஆளே? வேசம்போட் டுக்கிட்டு வர்ரானே? இவனைப்பிடிக்கவாணும். உட் டுட்டுமோ, பொறக்கி ஆப்படுவானே? பொன்னு என்னு? பதினுயிரம் காபகம் இருக்கட்டும்.

ரா.—ஏண்டா தம்பி! உனக்கென்ன, பித்தங் கித்தம் தலை க்கு ஏறிச்சா என்ன? சரிதான்! சரிதான்! யாரெ டாலே சொன்னே? கிட்ட கிட்டபோவாதே. கண்ணை கிண்ணை தொறந்து பாத்துடப் போறுரு. பாத்துட் டாரோ போய்ட்டே. சாமியார்ராலே சாமியாரு. ஓன் துடுக்கெல்லாம் காட்டாதே பத்திரம். வெண்ணு துண்ணூறு வாங்கிட்டுவா. நான் கிட்ட கிட்ட வரட் டேன், தண்ணியில்லே. எதுனுச்சியும் ஏவிக்கீவி உட்டக்கா?

ரங்.—ஏ. அண்ணே! நான் சொன்னு நீ கேட்பாயா? சரி! ஆனு பொன்னிலே பாதிவாணும் ஓனக்கு!

ரா.—ஏலே நான் சொல்ரேன் கேளு. நீ வாணுப்போய் அப் படி பேச்சிட்டுப்பாரு. நானும்பொறத்தாலே வர்ரேன். நம்ம ஆளாயிருந்தான், சாடைகாட்டு, பட்டுன்று பொறத்தாலே அமுக்கிடரேன். இல்லாட்டி மூச்சு

கீச்சிப் பறியாதே. பேசாமே, துண்ணூறு வாங்கிட்டு வந்திடு.

ரங்.—சரி, அப்படினு, நீ இங்குட்டுதானே நின்னுக்க நான் போறேன். ஏ அண்ணே! ஆறு, என்னமோ வளர்ந்த ஆளு. எதிருச்சியும் செவிட்டுக்கட்டை உட்டான்னு?

ரா.—ஓடியாரேன். ஒரே அமுக்கு! உட்டுடுவேனே? இவன் கிடக்கிறுண்டா. போ. நான் இங்குட்டுதானே இருக்கேன். இந்தப்பக்கம் போவாமே பாத்துக்கரேன். இல்லாட்டி இந்தப்பக்கம்உட்டுடுவான் சவாரி.

ரங்.—ஐயோ, பாவம்! என்ன ஆளு, கட்டி யணைக்க உதவாது! துரும்பாட்டியும் ஆய்ட்டானே!

(அஹிம்ஸன் வருகிறுன்.)

அ.—ஐயோ! இவ்வளவுகாலமாய் எங்கெங்கேயோ அலைந்து, அநேக நாடுநகரமெல்லாம் சென்றும் என் கண்மணியைக் காணவில்லை. யாதொரு துப்பும் தெரியவில்லை. எங்குதான் சென்றிருப்பாள்? உலகத்தில் விசேஷ வெறுப்பும் வைராக்கியமுமுள்ளவர்கள், காசி க்ஷேத்திரந்தான்போய் தங்கள் பாபங்களைத் தொலைத்துக் கொள்வது நமது வழக்கம். அவ்விடத்தில் அவளது தந்தை யிருப்பதாயும் சொல்லியிருக்கிறுள். அங்குதான் சென்றுளோ? அல்லது அவரை மீண்டும் தரிசனம் செய்ய வெட்கி, ஒருக்கால் ஏதாவது பெரிய மடங்களில் புகுந்து, யாராவது பெரியோர்களை ஆசிரியித்து வருகிறுளோ? அல்லது கங்காப் பிரவேசம் தான் செய்து விட்டனளோ? அப்படி செய்திருந்தால் என்னையல்லவோ சேரும் அப்பெரும்பழி? ஐயோ! நான் என்னசெய்வேன்? ஜகதீசா! உனக்கு

என்மீது கருணையில்லையா? நான் என்ன அபசாரம் செய்தேன்? எதற்காக என்னை இவ்வாறு தண்டிக்க வேண்டும்? நான் மனமறிந்து ஒரு பாபமும் செய்ய வில்லையே?........................ * * * தொண்டை நாட்டுச் சமாசாரமும் ஒன்றும் தெரியவில்லை. என் நண்பன் என்னவாயினனோ? சரீர சௌக்கியத்திற்கு ஒன்றும் குறைவில்லையென்று தெரிகிறது. என்னைப் பற்றியும் என் நடத்தையைப்பற்றியும் என்னென்ன எண்ணியிருக்கானோ? யாரார் என்னென்ன சொல்லி யிருக்கிறார்களோ? ஆனால் இனி அவனைப்பார்க்க ஹேதுவில்லை. ஐயோ! நான் இன்னும் எதற்காக உயி ருடன் இருக்கிறேன்? எவ்வளவோ பசியால் வருந்தி யும், மழையால் நனைந்தும், வெயிலில் காய்ந்தும், காடு களிலும் மலைகளிலும் எவ்வளவோ அவஸ்தைப்பட் டும் எனக்கு ஒரு தலைநோவு கூட உண்டாகவில் லையே! எனது சரீரத்திற்கு ரக்ஷைகட்டினதுபோ லிருக்கிறது. இன்னும் தேகத்தில் சக்தியிருக்குமளவும் அலைந்து திரிந்து பார்ப்போம். கடைசியாக காசிநகர் சேர்ந்து ஜகத்மாதாவான விசாலாக்ஷியையும் தரி சித்து, பிறகும் என் கண்மணியைக்காணவிடில் கங் கையில் வீழ்ந்து முக்தியாவது அடையவேண்டுவது தான். இதுதான் என்முடிவு. இந்தக்காட்டினின் றும் வெளிப்பட யாதும் மார்க்கம் தோன்றவில்லையே! என்ன செய்யலாம்? அதோ யாரோ இருவர் பேசிக் கொண்டு நிற்கிறார்கள். என்வரவையும் கொஞ்சம் எதிர்பார்த்து நிற்பதாய்த் தெரிகிறது. அவர்களை விசா ரித்து பார்ப்போம். காட்டின் வெளியே போகும் வழி அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். (சமீபத்தில் வந்து) அப்பா,

ரங்.—உம் !

அ.—இந்தக் காட்டினின்றும் வெளிப்படும் மார்க்கம் அறி வாயா ?

ரங்.—தெரியுங்க.

அ.—கொஞ்சம் வழிகாட்டுகிறீர்களா ?

ரங்—காட்டுகிறோம். ஆனா, தாங்க யாருங்க ? எந்த ஊருங்க ?

அ.—நான் ஒரு துறவி.

ரங்.—துறவிண்ணா என்னா ?

ரா.—(சமீபத்தில் வந்து) எண்டாலே இதுகூடவா தெரி யாது ?

ரங்.—என்னாண்ணே, நீதான் சொல்லேன்.

ரா.—இந்த லோவத்தை தொறக்கிறவருடா.

ரங்.—என்னா? என்னா ?

ரா.—தொறக்கிறவறண்ணா, சாவிவச்சுக் கிட்டிருக்கவரு.

ரங்.—விளங்கச் சொல்லண்ணே.

ரா.—அதாண்டாலே, நம்மையெல்லாம் படைச்சானில்லே?

ரங்,—ஆமா.

ரா.—நம்மைப் படைச்சுட்டு, புத்திகொடுத்துட்டு, பொற, ஒரு மோசம் பண்ணினா.

ரங்—என்னாண்ணே?

ரா.—மாகையாமில்ல, என்னமோ போட்டு மூடிட்டான். அதான் இப்படி போட்டு ஆட்டுதோம் துரோபதையம் மன் கோயில்லே பாடல்லே பூசாரி?

ரங்.—அது கிடக்கண்ணே.

ரா.—அதென்ன பாட்டுடாலே! இர்ராலே!

வந்தானே தர்மராஜாவும்!
வந்தானே பீமனும் அர்ச்சுனனும்!
வந்தாளே துரோபதையும்!
(துரோபதையும் குதிக்கிருள்.)

ரங்.—அண்ணே! வந்தவேலே என்ன? என்னவோ பாடரே, ஆடரே, குதிக்கிறே. ஏ!

ரா.—ஆமாண்டாலே, ஆமாம் அப்படித்தாண்டாலே.

ரங்.—ஐயா, தொறவின்ன என்ன?

அ.—அப்படியென்ருல் உலகத்தில் பற்றில்லாதவன், உலகத்தை வெறுத்தவன், பகவத்தியானத்தில் ஆழ்ந்தவன். தெரிந்துகொண்டனேயா?

ரா.—நல்லா! நல்லா!

ரங்.—என்னண்ணே, ரொம்பரொம்ப தலேயாட்டரே? ரொம்ப தெரிஞ்சிகிட்டயோ?

ரா.—ஒனக்கென்னடாலே தெரியும்? நேத்திப்பயல். சாமி யாரு நல்லாச் சொல்லுராங்களே. சொல்லுங்க சொல்லுங்க. எந்த ஊராங்க?

அ.—என்னேப்போலுள்ளவர்களுக்கு ஊர் என்பதும், நாடென்பதும் கிடையா. நாமெங்கெங்கு செல்லுகிருேமோ, அங்கெல்லாம் எங்கள் நாடுதான்.

ரங்.—அப்படிச் சொல்லுங்க, இப்ப எங்கிட்டுபோறீங்க?

அ.—நான் காசிக்ஷேத்திரம் நோக்கிச் செல்லுகிறேன். நீங்கள் எந்த நாடோ?

ரங்.—நாங்க தொண்டநாடுங்க.

அ.—அப்படியா, நிஜந்தானா ?

ரங்.—சத்தியமாங்க.

அ.—அரசன், இளவரசன் எவ்லோரும் க்ஷேமந்தானா ?

ரா.—அல்லாரும் சாமந்தானுங்க. குட்டிராஜாமட்டிலே, என்னவோ கொஞ்சம் வருத்தங்க. வேறொண்ணு மில்லே.

அ.—என்ன வருத்தம் ?

ரா.—என்னமோ, யாரோ,ஏண்டாலே சொல்லேண்டாலே.

ரங்.—இல்லிங்க அவர்கூடவே இருந்துகிட்டு இருந்தாங்க, ஒத்தரு அவர் கூட்டாளிபோலே, அவர் பேர் என்னண்ணே ? சொல்லண்ணே.

ரா.—நீதான் சொல்லேண்டாலே, எனக்கு வாயிலே வராதப்பா. பள்ளிக்கூடத்திலே அம்மா வருசம் படிச்சயே சொல்லேண்டாலே.

ரங்.—எனக்கு ஞெனிப்பில்லே அண்ணே.

ரா.—அதாண்டா என்னமோ, கஷமிஷன்னு வருண்டா.

ரங்.—ஆமண்ணே, அம்மிஷர் ! அம்மிஷர் ! இப்ப இல்ல, வந்திச்சு. எங்கையோ போட்டாராம் ; அதான்.

அ.—அப்படியா? ஆ ! (துக்கப்படுகிறான்.)

ரங்.—அண்ணே, இப்பஞச்சியும் தெரிஞ்சுகிட்டயா ?

ரா.—ஆமண்டா, நல்ல ஆளுரா, என்கண்ணே யில்ல கட்டிட்டான்.

ரங்.—ஜாக்கிரதை ; மாட்டிடு.

ரா.—இர்ரா. நயத்திலே பாப்பம்.

ரங்.—நீங்கயாரு? உள்ளதைக் கக்கிடுங்க; ஒளிக்காதீங்க; எங்களுக்கு ஒண்ணும் தெரியாதுன்னு நினைக்காதீங்க. முட்டாளல்ல.

ரா.—ஓ! ஓ! டேய் முளிக்கிருண்டா! பொன்னு பலிச்சு தடா. (குதிக்கிருன்)

அ.—நான் ஒரு துறவி யென்றேனே.

ரங்.—அதுகிடக்கு, அந்த தோழரை எங்கினுச்சியும் கண் டிங்களா?

அ.—எனக்கு எப்படி தெரியும்?

ரா.—தெரியுமா, தெரியாது! தெரியாது!

ரங்.—அண்ணே, நேரமாவது. உம் ஒன்வேலையைப்பாரு.

ரா.—இன்னும் கொஞ்சம் பாப்பம். ஐயா, இதெல்லாம் வா ணும். அதல்லாம் ஒளிச்சுக்கலாம்னு நினைக்காதீங்க. ஒண்ணும் பலிக்காது.நாங்க ஆருன்னு எண்ணி னீங்க. மராதை யோடே நிசத்தைச் சொன்னுப் போச்சு. இல்லாட்டி.—

அ.—இல்லாவிடில் என்ன செய்து விடுவீர்கள்?

ரா.—அடேதம்பி! அதெல்லாம் உதவாது. மயிலே மயி லேன்ஞ இறவு போடுமா?

ரங்.—ஆமண்ணே, நீட்டுங்கையா கையை.

அ.—எதற்காகக் கைநீட்டச் சொல்லுகிறீர்கள்? கிட்டவந்தீர் களோ—ஜாக்கிரதை.

ரா.—அந்தக்கதை'யல்லாம் வாணும். மராதையா கை நீட் டிடுங்க. (கிட்டநெருங்கிக் கைகளைப் பிடிக்க, அஹிம் ஸன் கைகளை உதறி, இரண்டு பேரும் ஒருவர் மீது ஒருவர் விழுந்து புறள்கிருர்கள்.)

ரங்.—(எழுந்து) அண்ணே, எந்திருச்சுடு, எந்திரிச்சுடு. ஐயா தயவு பண்ணுங்க. எங்ககிட்ட கோவிச்சுக்கிட்டு என்ன, இந்தாப்பாருங்க குட்டிராசா உத்தரவு. நாங்க என்ன சேவோம்? நாங்க இல்லாட்டீ வேறே யாரூ புடுச்சூடு வாங்களே ஒழிய, உட்டுட மாட்டாங்க.நாங்க ஏழைங்க; புள்ளெ குட்டிக்காரங்க.பொற ஓங்க தயவு.

அ.—ஆ! இப்படியும் ஒருகாலமா? ஆனால் இனி எனக்கு என்ன நேர்ந்தால் தான் என்ன? உயிர் தரிப்பதிலோ, கிஞ்சித்தும் இச்சையில்லை. என் கண்மணியையோ நான் இனி காண்பதென்பது அரிது. ஸ்ரீகரனையும் நானாகப் பார்ப்பது என்பதற்கில்லை. அவனும் இப்படி என்னை வரவழைத்தாலல்லது, என்னைக்காண நியாயமில்லை. இந்த உடலை இதுகாறும் வளர்த்து வந்த ஸுபாஷிணி யம்மானுக்கும் எனது நண்பனுக்கும் நான் அடிமை யல்லவோ? அவர்களுக்குத் தானே, இந்தச் சரீரம் சொந்தம்? அவர்களுடைய சொந்தப் பொருளை அவர்கள் இஷ்டம் போல் செலவிட பாத்தியமில்லையோ? அவன் மனம் போல என்னை என் நண்பன் நடத்துவதைக் காட்டிலும் எனக்கு வேறு என்ன மனமகிழ்ச்சி? அவனுக்கு இருக்கக்கூடிய கோபத்தை இன்ன தென்று நான் ஒருவாறாக ஊகிப்பேன். ஆனால் நிச்சயமாய் முழுஉண்மையையும் அவன் அறிந்திருக்க நியாயமில்லை. ஒருக்கால் கோபா வேசத்தில், என்னைக் கொலை செய்யும்படி உத்தரவளித்தாலும் அளிப்பான். அப்படி இறப்பதிலும் எனக்கு திருப்தி தான். ஆனால் நகர வாசிகளுக் கெல்லாம் உண்மை தெரியக்கூடாத தால், என்னைப் பெரும்மோசக்காரன் என்று நினைக்க

இடமிருக்கும். அதை எப்படி தடுப்பது? ஒருக்கால் ஸுபாஷிணியம்மாள்தான் கொடுத்தவரத்தைக் காப்பாற்றுவாள். ஆனால் நான் இந்த சமயம் எப்படி கேட்பது? எதற்காக கேட்பது? என் கண்மணியையே இழந்த பிறகு, இதை இழந்தால் என்ன? அவளே என்னைத் தவறுதலாக எண்ணியபிறகு உலகத்தார் என்னை எப்படி எண்ணினால் தான் என்ன? ஆகையால் ஒன்றும் தடை செய்யாமல் இராஜாக்னைக்கு உட்படுவோம். அப்பா இப்படி வாருங்கள். விலங்கைப் பூட்டுங்கள். வீதிகளின் வழியே அழைத்துச் செல்லுங்கள். என் நண்பனுக்குச் சம்மதமானால் எனக்கும் சம்மதம் தான். .............. * *

மூன்றும் அங்கம் முற்றிற்று.

## அங்கம்—நான்கு.

1-வது காக்ஷி

இடம்—ஸ்ரீகரன் அறை.

காலம்—காலை.

ஸ்ரீகரன் வருகின்.

ஸ்ரீ.—நான் பலமுறையோசித்ததிலும், அஹிம்ஸன் ஏற்கனவே சொல்லிவந்த வார்த்தைகளை யெல்லாம் பரீசீலனை செய்து பார்த்ததிலும், ரணபாஸ்கரன் மொழிந்ததெல்லாம் உண்மையென்றே நிச்சயமாய்த் தோன்றுகிறது. எனக்கு அவன் யாதும் கெடுதி செய்ததாக நான் எண்ணவில்லை. என்னிடத்தில் காதலில்லாதவள்

எவனைக்கூடினால் எனக்கென்ன? எல்லாவற்றையும் மறந்து துறந்து இந்தப்பாபியையே நம்பினதற்கு, இவன் யோக்கியப் பொறுப்புடன், அவளை விவாகம் செய்துகொள்ளாமல் போகஸ்திரீயாகவா வைத்துக் கொள்ள எத்தனித்தான். உலகறிவில்லாத உத்தம குணம் வாய்ந்த, அப்பேதையை இப்படி செய்யத் துணிந்ததைக் காட்டிலும், கொலை செய்திருக்கலாமே. இவன் கொலை செய்துவிட்டு கைகூட அலம்பான் போலும்! இவனையா என்னுயுள் முழுதும் என்னுயிருக்குயிராய்ப்பாவித்து வந்தேன்? இவனைத் தொலைத்து விட்டு மறுவேலைபார்க்க வேண்டும். என தன்னை, தண்டோராவைக் கேட்டு, என்ன விசேஷமென்றுவினவ, நான் உடன் மறுமொழி யொன்றும் கூறாமல் வந்துவிட்டேன். எப்படியும ஸ்திரீஜாதியானதால், கடுமையான தண்டனை விதித்தால் சம்மதியாள். மேலும், அவன் எவ்வளவு அன்பாக இந்தப் பாம்புக்குப் பால் வார்த்து வந்தாள்! இப்பொழுது ஒரே போடாய்ப் போட்டுவிட்டதே! என்ன செய்கிறது? இவனை எங்கிருந்தாலும் கண்டு பிடித்து தக்கபடி சிட்சிக்கவேண்டும். இல்லாவிடில் இன்னும் எவ்வளவு குற்றமற்ற ஸ்திரீகளை மயக்கிக்கெடுத்து விடுவானோ? இவனை உடனே ஒழிக்காவிடில் இந்த இராஜ்ஜியத்தின் நீதியின் பெருமை யெல்லாம் அழிந்து விடும். இவன் செய்துவரும்குற்றங்களுக்கு என்னைக் கூட பாத்தியஸ்தனுக நினைப்பார்களே அறியா ஜனங்கள். அன்னை ஏது மறுபடியும் வருகிறுள்? இது விஷயமாகத்தான் இருக்கவேண்டும்.

(ஸுபாஷிணி வருகிறுள்.)

ஸ்ரீ.—அம்மா! என்ன விசேஷம் தேடிவந்தது?

ஸு.—ஸ்ரீகரா, என்ன சில தினங்களாகத் தனிமையாய் ஏதோ ஆலோசனைகள் செய்துகொண்டு இருக்கிறாய்? என்னிடம் தெரிவிக்கலாகா?

ஸ்ரீ.—அம்மணி! ஒன்றும் விசேஷமில்லை. கொஞ்சகாலமாய் இராஜரீகத்தில் கொஞ்சம் கவனம்செலுத்துவதால், ஏதாவது யோசிக்கவேண்டிய விஷயங்கள் ஏற்படுகின்றன.

ஸு.ஆம், குழந்தாய். நீ இப்பொழுது கொஞ்ச காலமாய் இராஜ்ஜியத்தின் நீதிகளை நன்குணர்ந்து, குடிபடைகளின் சுகதுக்கங்களையெல்லாம் ஆராய்ந்தறிந்து, அவரவர்களுக்குள்ள தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்து வருவதுடன் யுத்தத்திற்குச் சென்று, அத்விதீயன் என்று பெயர் பெற்று கீர்த்தி அடைந்ததெல்லாம் எனக்கு எவ்வளவோ திருப்தியைத் தந்தபோதிலும், நீ உலகநடையை அனுசரித்து மணங்கொள்ளாதது, என்மனதை எவ்வாறு வருத்துகிறது? நினைத்து, நினைத்து, நித்திரை நீத்து வருந்திவரும் உன் தந்தையின் மனவருத்தம் எப்பொழுது நீங்கும்?

ஸ்ரீ.—அம்மா! தாங்கள் தெரிவிக்காமலே உங்களுக்குள்ள குறைகளை யெல்லாம் நானறிவேன். ஆயினும் நான் புண்பட்டிருக்கும் விஷயம் தங்களுக்கு தெரிந்தது தானே? அப்படியிருக்க, என்னை நிர்ப்பந்தம் செய்வதில் என்ன பயன்? இந்த ஜன்மத்தில் இல்லற தர்மத்தை நடத்திச் சுகம் பெற நான் கொடுத்து வைக்கவில்லை. அதைப்பற்றி திருப்பித்திருப்பி பிரலாபித்துப் பேசுவதில் என்ன பிரயோசனம்? உங்களைக்காணும்

பொழுதெல்லாம், எனக்கு துக்கமாகத்தா னிருக் கிறது. நான் மன தொப்பிய ஸ்திரீ ஒருவளும் என் னிடம் காதலுள்ளவளாய்த் தெரியவில்லையே! அது என் தலைவிதி; அவ்வளவுதான். வேறு விஷயமிருந் தால் பேசுவோம்.

ஸு.—கண்ணே! என்ன இவ்வாறு மொழிந்தாய்? அப்படி ஒருவளும் இல்லையா? நிச்சயந் தானு?

ஸ்ரீ.—எனக்குத் தெரிந்தவரையில் இல்லை என்றுதான் தோன்றுகிறது.

ஸு.—கண்களை நன்ருய்த்திறந்து பார்.

ஸ்ரீ.—பார்த்தேன்.

ஸு.—யார் நிற்கிருள்? பார், உனக்கு கண்ணில்லையா?

ஸ்ரீ.—யார் நிற்கிருள்? குழந்தை மாதங்கி, நின்று நின்று எதையோ பார்த்துக்கொண்டு வருகிருள். வேறுயார் இருக்கிருள்? என் கண்ணுக்குப் புலப்படவில்லையே!

ஸு.—மாதங்கியை, நீ ஏன் விவாகம் செய்து கொள்ள லாகாது?

ஸ்ரீ.—அம்மணி! என்ன சொன்னீர்கள்? மாதங்கியையா? நானு?

ஸு.—ஆம், அதிலென்ன தவறு.

ஸ்ரீ.—முதலில் வயது வித்தியாசத்தை கவனித்தீர்களா?

ஸு.—இதொருபெரிய வித்தியாசமா? உனக்கும் அவளுக் கும் பன்னிரண்டு வயதுதானே வித்தியாசம்?

ஸ்ரீ.—ஆ! ஆ! வெகு நேர்த்தி! நான் அவளுடன் பழகிவரும் ரீதியைத் தாங்கள் அறியீர்களா?

ஸ—நன்ருய் அறிவேன். ஆனுல் அவளிடத்தில் உனக்கு பிரியமில்லேயோ?

ஸ்ரீ.—ஆம் பிரியந்தான். ஆனுல் என் கூடப்பிறந்தவள் போலத்தானே.

ஸ—அவள் என்ன நினேக்கிருள் அறிவாயா?

ஸ்ரீ.—என்ன, உங்களிடத்தில், என்னேவிவாகம் செய்து கொள்வதாகத் தெரிவித்தாளோ?

ஸ.—வேறுகுறிப்புகள் கிடையாதா? எங்களுக்குத்தெரியாதா?

ஸ்ரீ.—அம்மணி! பிதற்ருதேயுங்கள். இதெல்லாம் நன்ருய் இருக்காது; அதைவிட்டுப் பேசுங்கள்.

ஸ—ஐயோ! அஹிம்ஸனும் இல்லேயே! அவனேக் கொண்டாவது உனக்குச்சொல்லச் சொல்லலாமென்ருல்—,

ஸ்ரீ.—அம்மா! அவன்பேச்சையெடுக்காதேயுங்கள். ஒழிந்தானே அந்தமட்டில். எதிரிலிருந்தானுகில்—,

ஸ—என்ன செய்துவிட்டான், இவ்வாறு நீ கோபிக்க?

ஸ்ரீ.—தயவு செய்யவேண்டும். இப்பொழுது ஒன்றும் கேட்கவேண்டாம். எல்லாம் பின்புதெரிந்து கொள் வீர்கள்.

ஸ—ஸ்ரீகரா! உன்னுத்தரவுப்படி போடப்பட்ட விளம்பரத்தை நானறிவேன். அவனே ஏதோ சிக்ஷிக்க முயலுவதாய்த் தெரிகிறது. எதற்காக அவனேசிக்ஷிப்பது? முன் கேட்டதற்கு ஒன்றும் மறுமொழிகூருமல், விரைந்து சென்ருய். இப்பொழுதோ அவன்மீது மிகக் கடிந்து பேசுகிருய். ஒன்றுமாத்திரம் நிச்சயமாய் நம்பு. உன்னேப்போலவே, அவனேயும் குழந்தைமுதல் நான் அறி

வேனல்லவா ? அஹிம்ஸன் என்ன குற்றம் செய்து விட்டான் ? அவன் இழிவான தொழில் யாதும் புரியான் கனவிலும். நீ கோபித்தாலும் நான் சொல்லியே தீரவேண்டியது. நீ இரண்டுமூன்று நாளாய்த் தனிமையில் என்னவோ குருட்டு யோசனைகள் செய்துவருகிறாய். உனது புத்தியை யாரோ சுத்தமாய்க் கலக்கியிருக்கிறான். உனதுசித்தம் உனக்கு இப்பொழுது சுவாதீனமில்லையென்று நினைக்கிறேன். இல்லாவிடில் என்னிடத்தில்கூடவா உன்எண்ணங்களை ஒளிக்க முயலுவாய் ? உன்மனது இப்பொழுதிருக்கும் ஸ்திதியில் உண்மை எளிதில் விளங்காது.

ஸ்ரீ.—உங்களுக்கு நடந்திருக்கும் கதையெல்லாம் தெரிந்தாலும்,குழந்தைமுதல் வளர்த்து வந்த பாசத்தால்இப்படித்தான்பேசுவீர்கள். நான் எல்லாம் தீரவிசாரித்து விட்டேன். ஆ! ஆ! அந்த மாயாவி உங்களை எவ்வளவு மயிக்கியிருக்கிறான் ? நான்எல்லாம் பார்த்துக் கொள்கிறேன். தாங்கள் தயவுசெய்து இதில் பிரவேசிக்காமல் இருங்கள்.

ஸு.—நல்லது, ஆனால் ஒருவனையும் விசாரிக்காமல் யாதொரு தண்டனையும் விதிக்கலாகாது என்னும் நீதி உனக்குந்தெரிந்ததே. மேலும்அவன் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறான். அப்படி அவனை நேரில் விசாரித்து முடிவு செய்வதாக வாக்களி.

ஸ்ரீ.—நல்லது அப்படியே செய்கிறேன். கேட்டுக்கொண்டிருக்கிறானா? உங்களைக்கொண்டு தப்பிக்கலாமென்று முன்பே கேட்டுக்கொண்டிருக்கிறானோ ? நல்லது, ஆனால் எதற்காகக்கேட்டுக்கொண்டான்? எந்தசந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டான்?

ஸு.—நானும்எல்லாம் பின்பு தெரிவிக்கிறேன். நான் போய்வருகிறேன்.

ஸ்ரீ.—நல்லது நானும் கொஞ்சம் மாதங்கியிடம் பேசிவரு கிறேன் வேடிக்கையாய். (ஸுபாஷிணி போகிருள்) நல்லதுஇப்படி ஒருவழிவைத்துக்கொண்டிருக்கிருளு?

மாதங்கிவருகிருள்.

ஸ்ரீ.—மாதங்கி! வா, இப்படிஉட்கார், என்னவிசேஷம் ?

மா.—தாங்கள் விசேஷ முகமலர்ச்சியுடனிருப்பது தான் விசேஷம். என்னகாரணமோ?

ஸ்ரீ.—நீ இருக்குமிடத்து முகமலர்ச்சிக்கு என்னகுறைவு ?

மா.—அப்படிக்கல்ல, நானெப்பொழுதும் இருந்துகொண்டு தான் இருக்கிறேன். தாங்கள்தான் ஏதோநூதனமாய் ஒருகாரியத்திலிழிந்து, காரியசித்தியடைந்ததாக வல் லவோ தோன்றுகிறது ? அப்படியொன்றும் இராஜ ரீகத்தில் இருப்பதாகவும் தெரியவில்லையே !

ஸ்ரீ.—உம்.

மா.—என்னமுகத்தில் திடீரென்று இவ்வள்வு கடூரமும் கடுமையும்? என்னநடந்திருக்கிறது ? தெரிவிக்கலா காதா ?

ஸ்ரீ.—பெண்ணே ! நெஞ்சத்திலுள்ளதைப் பிளந்தெடுத்து விடுவாய் போலிருக்கிறது! இன்னும் என்னதோன்று கிறது ! சொல் பார்ப்போம் !

மா.—நான் குழந்தைதானே. எனக்கென்ன தெரியப்போ கிறது ? தாங்களும் என்னிடம் ஒன்றும்தெரிவிக்க மாட்டீர்கள். நான்போய்வருகிறேன்.

ஸ்ரீ.—குழந்தையானுலும் நீ மிகவும் புத்திசாலியாயிற்றே ! உன்னிடத்தில் தெரிவிக்கக்கூடாத தொன்றுமில்லை. எல்லாம் அற்பசமாசாரம்.

மா.—அப்படியானுல் ஏன்சொல்லலாகாது? தங்களைக் கேட்டுப் போவோமென்றுதான் இங்குவந்தேன்......***

ஸ்ரீ.—இதற்காகவா இங்கு வந்தாய்? சாவகாசமாய்ச் சொல்லுகிறேன்.

மா.—இப்பொழுதே சொன்னுலல்லது நான் ஒப்புக் கொள்ளேன். அப்படிதங்களுக்கு நம்பிக்கை யில்லாதிருக்குமாயின், நாங்கள் இங்கிருந்து என்ன? எங்களதுஇராஜ்ஜியம் போக உத்தரவுகொடுங்கள்.

ஸ்ரீ.—அப்படிக்கெல்லாம் கோபிக்காதே. என்ன தெரிவிக்க வேண்டுமென்கிருய்?

மா.—கேளுங்கள். தாங்கள் சிலதினங்களாக ஒருவரிடமும் கலக்காமல் ஏதோ தங்களுக்குள்ளேயேயோசித்துவருகிறீர்கள். இப்பொழுதோ ஒருமுடிவுக்கு வந்திருப்பதாய்த் தெரிகிறது.தாங்கள் இப்பொழுது முனைந்திருக்கும் வேலை மிகத்தீதென்று நினைக்கிறேன்.நான் நினைக்கிறபடி இருக்குமாயின், தங்களது மனம் எவ்வளவு ஒப்பினுலும், பெரியோர்கள் அதைத் தகாத காரியமென்றே சொல்லுவார்கள்.

ஸ்ரீ.—பின் நடக்கும் காரியங்களைக் கொண்டு நியாயந்தான் என்று அறிந்துகொள்வாய்.

மா.—தவறில்லாதிருக்குமாயின் இப்பொழுதே தெரிவித்தால் என்ன வந்துவிடும்?

ஸ்ரீ.—என்ன தொந்தரவு செய்கிருய்? இதெல்லாம் நீ எதற்காக அறிந்து கொள்வது?

மா.—அப்படியானல் நாங்கள் எங்கள் நாடுபோய்ச் சேருகிருேம்.

ஸ்ரீ.—இதோபார்! என்னகேட்கிருய்? என் மித்திரன் ஒருவன் என்னே மோசம் செய்ததுடன் ஓர் அறியாப்பெண்ணின் வாழ் நாட்கள் முழுவதையும் தொலேத்து விட்டான். அவன் செய்த குற்றத்திற்காக தக்க தண்டனே விதிக்க வேண்டியதாயிருக்கிறது.

மா.—அப்படியானல், குற்றவாளியை வரவழைத்து நியாயஸ் தலத்தில் நியாயாதிபதியின் முன்பாக விசாரித்து முடிவு செய்ய வேண்டியதுதானே? இவ்வளவு தீர்க்காலோசனேக்கு என்ன இடம்?

ஸ்ரீ.—அப்படிக்கல்ல. இராஜ்ஜிய தந்தரத்தை அனுசரித்து சில விஷயங்கள்தான் பொதுவான நியாயஸ்தலத்தில் முடிவடையக்கூடியது. இராஜரீகத்தில் எவ்வளவோ நடக்கும். அவைகளேயெல்லா மறிந்துகொள்ள நீ எத்தனப்படலாமோ?

மா.—ஆம். இராஜரீகத்தில் நடக்கும் விஷயங்களே அறிந்து கொள்ள எனக்கு என்ன பாத்தியமிருக்கின்றது? இருந்தாலும் இது தங்களுடைய சொந்த விஷயமென்றே நினேத்து கேட்கலானேன்.

ஸ்ரீ.—நீ எதற்காக இந்தவிஷயத்தில் இவ்வளவு ஊக்கத்துடன் உட்புகுந்து கேட்கிருய்?

மா.—தாங்கள் என்னே மன்னிக்கவேண்டும். தாங்கள் இவ்வாறு இதில் பிரவேசிப்பது உசிதமல்ல. தங்களிடத்தில் நாங்கள் விசேஷஉபகார மடைந்தோம். பிரதியுபகாரம் செய்யச்சமயம் வாய்க்காது என்று நினேத்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதோ எனக்கு

நல்ல வேளையாய் தருணம் வாய்த்திருக்கிறது. தாங்கள் கொஞ்சம் பொறுத்துக் கேட்கவேண்டும். தங்களுடைய மித்திரரது, முன்சரித்திரத்தை நான் கேட்டிருக்கிற அளவில் தங்களுக்கு துரோகம் செய்திருப்பாரென்றுவது, வேறு ஏதாவது பெரும்பிழை செய்திருப்பாரென்று எண்ணவாவது காரணமில்லை. அவருடைய நடத்தையில் யாதும் கல்மிஷம் இருக்குமென்று நினைக்கக் கொஞ்சமும் ஹேதுவில்லை என்று அம்மா சொல்லுகிறார்கள். தங்களது சுபாவ சித்தத்தை யாரோ கலக்கியிருக்கிறார்கள். தாங்கள் இப்பொழுது கோபமூண்டிருக்கிறீர்கள். தங்களுடைய இயற்கைக்குணம் மேலிடுமாயின் எல்லாம் உள்ளது போல் விளங்கும். தாங்கள் தீதானதொழில்புரிய ஒன்றும் யத்தனம் செய்யலாகாது. தங்களுடைய மேன்மைக்குக் குறைவுஏற்படுமென்பதை நிச்சயமாய்நம்புங்கள்.

ஸ்ரீ.—என்னகுறைவு ஏற்படக்கூடியது? அரசன் தீய தொழில் செய்கிறவர்களை தண்டித்தால் குறைவு வந்துவிடுமோ? நீ சொல்லுவது மிகவும் விநோதமாயிருக்கிறது!

மா.—தங்கள் மித்திரர் என்ன தீதுசெய்தார் என்று தெளிவாய் உரையுங்கள். பின்பு குறைவைத் தெரிவிக்கின்றேன்.

ஸ்ரீ.—ஓர் அபலையான ஸ்திரீயை மயக்கித் தன்னை நம்பும்படி செய்து, கடைசியாக அவளைக் கெடுத்து ஹதோகதியாக்கி விட்டான்.

மா.—அப்படியா? ஆனால் இதற்கெல்லாம் தங்களிடத்தில் தக்க ருசு இருக்கவேண்டுமே! இல்லாவிடில் தாங்கள் இதில் பிரவேசிக்க மாட்டீர்களே!

ஸ்ரீ.—ஆம். தக்கருசு விருக்கின்றது. நான் நன்ருய்விசாரித்திருக்கிறேன்.

மா.—யாரைக்கொண்டு எப்படி விசாரித்தீர்களோ? இதிலெல்லாம் சாதாரணமாய் அற்பஜனங்களால் ஏற்படும் லோகவதந்தியை நம்பக்கூடாதே!

ஸ்ரீ.—ஆம். எல்லாம் ரணபாஸ்கரன் என்னும் ஓர்உயர்ந்த போர்வீரனைக் கொண்டுதெரிந்து கொண்டேன். அவன் எள்ளளவேனும் அசத்தியம் சொல்ல நியாயமில்லை.

மா.—தங்களுடைய மித்திரர் பொய்யரென்று இதுவரையில் தோன்றிற்ருே?

ஸ்ரீ.—இல்லை.

மா.—இப்பொழுது ரணபாஸ்கரன் வார்த்தையைக்கொண்டுதானே, மித்திரரைப்பற்றிச் சந்தேகப்படுகிறீர்கள்?

ஸ்ரீ.—ஆம்.

மா.—ரணபாஸ்கரன் பொய் சொல்லான் என்பது என்ன நிச்சயம்?

ஸ்ரீ.—ரணபாஸ்கரன் எதற்காகப்பொய் சொல்லவேண்டும்?

மா.—ஆ! அதையல்லவோ விசாரிக்கவேண்டும்? அவனுக்கு என்ன ஆத்தரமோ!

ஸ்ரீ.—அவனுக்கு ஓர் ஆத்திரமும் இருக்க நியாயமில்லை.

மா.—அப்படியா? தங்களுக்கு நிச்சயமாய்த் தெரியுமா?

ஸ்ரீ.—எப்படியானுல் என்ன? அவன் குற்றம் செய்திருக்கிருன் என்பதற்கு எனக்குப் போதுமான ஆதாரங்களிருக்கின்றன.

மா.—அப்படியுரைத்தால் நான் ஒப்புக்கொள்ளேன்... * *
நான் தங்களை எவ்வளவோ உயர்வாய் மதித்துத் தங்

களை ஏதோ ஒரு தேவாம்சமென்றே பாவித்து வந்திருக்கிறேன். தங்களுடைய சகவாசத்தால் எனக்கேற்பட்டிருக்கும் புத்திவிசாலமின்னதென்று சொல்வதற்கில்லை. மேலும் நீதி சொரூபமாகிய, தாங்கள் நீடூழிகாலம் சிறப்புடன் அரசுபுரிந்து தர்மத்தையும் நியாயத்தையும் அசையாதபடி நிலை நாட்டுவீர்களென்றும் இதர அரசர்கள் தங்களைக்கண்டு நடு நடுங்குவார்களென்றும் ஆசைகொண்டிருந்தேன். அந்த எண்ணத்தை யெல்லாம் வீணாக்கலாகாது என்று தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தங்களைக் கண்ட மாத்திரத்தில் அநீதி யென்பது பறந்தோடிப்போமே! அப்படியிருக்க தாங்கள் மித்திரருக்கு அக்கிரமமாக தண்டனை விதிக்கலாகுமா ?

ஸ்ரீ.—மாதங்கி! நீ என்ன என்னைக்காட்டிலும் இதன் உண்மையை நன்றாய் அறிந்தவள்போலல்லவோ பேசுகிறாய்; நீ நினைக்கிறபடி அக்கிரமம் யாதுமில்லை. அவன் தண்டனைக்குப் பாத்திரன் என்பது எனக்கு நிச்சயம்.

மா.—தாங்கள் தயவுசெய்து என் கேள்விகளுக்கு சரிவர உத்தரம்கூறினால் தங்களுடையஎத்தனம் பிசகென்று மெய்ப்பிப்பேன்.

ஸ்ரீ.—நல்லது கேள் பார்ப்போம். பதிலுரைக்கிறேன்.

மா.—முதலில் மித்திரர்மீது யார் குற்றம் சாட்டுகிறார்கள் ? இந்தவிவகாரத்தில் வாதியைக்காணோமே! அப்பெண் தங்களிடம் ஏதாவது வந்து தெரிவித்துக்கொண்டாளோ ?

ஸ்ரீ.—இல்லை.

மா.—பிறகு தங்களுக்காகவேண்டியதென்ன? எதற்காக தண்டிக்கவேண்டும்? யார்பொருட்டு தண்டிக்கவேண்டும்?

ஸ்ரீ.—ஆனல் அப்பெண்ணைத் தொலைத்தது தீதன்றோ?

மா.—இருக்கலாம். ஆனல் அப்பெண்ணின்மீதுதான் பிசகோ அல்லது மித்திரர்மீதுதான் பிசகோ? யார்கண்டார்கள்?

ஸ்ரீ.—அப்பெண்ணின்மீது எள்ளளவும் பிசகிராது; அப்பெண் உத்தமகுணமுடையவள்.

மா.—எதனல் தங்களுக்கு அவ்வளவுநிச்சயமாய்த்தோன்றுகிறது? மித்திரரையோ பாலியமுதல் அறிவீர்கள். அவளை அறிந்ததோ சொற்பகாலந்தான்என்று நினைக்கிறேன். எப்படிமித்திரரைக்காட்டிலும்அப்பெண்ணை நன்ருய் அறிவீர்கள்என்றுநினைக்கிறது? அவளுடைய சுபாவத்தை அப்படிமுற்றிலும் அறிந்துகொள்ள தங்களுக்கு அவளிடத்தில் அதிகப் பழக்கம் மிருந்திருக்க நியாயமில்லையே.

ஸ்ரீ.—அப்படியல்ல. நீ இதன் உண்மையை எப்படி அறிவாய்? நீயோ பாலியம். உலகானுபவம் போதாது. இதையெல்லாம் அறிய உனக்கு தக்க வயதுவரவில்லை. இப்பொழுது சொன்னலும் விளங்காது. ஒருவன் ஒரு காரியத்தைச்செய்யத் தக்கவன அல்லவா என்று நிர்ணயிக்க லோகானுபவம் எவ்வளவோ வேண்டுமல்லவா?

மா.—தங்களுக்கு சரிவர உத்தரம்கூற இஷ்டமில்லாதிருக்குமாயின், அப்படி ஒருவார்த்தையில் சொல்லி விடுங்கள். எனக்கு விளங்காதென்ருவது, நான்பாலியமென்ருவது சொல்லிவிடுவது அழகாகுமா?

ஸ்ரீ.—அப்படியா நினைத்துக் கொண்டாய்? கேள் பார்ப்போம். என்றால் முடிந்தமட்டில் உனக்கு திருப்தி செய்து பார்க்கிறேன்.

மா.—தங்கள் மித்திரர்மீது தாங்கள் சாட்டுங்குற்றத்தை யார் மெய்ப்பிக்கிறார்கள்? ரணபாஸ்கரன் வார்த்தை தானே? இதெல்லாம் ஒரு சந்தேகத்தை உண்டு பண்ணுகிறதே ஒழிய வேறில்லையே. நிச்சயமாய் எப்படி ஏற்படுகிறது?...* * *

ஸ்ரீ.—மாதங்கி! அப்படியே வைத்துக்கொள்வோம். அவனை தண்டித்து நான் என்ன லாபம்அடையப்போகிறேன். அவனை இதுவரையில்என் னுயிருக்குயிராய்ப்பாவித்து வரவில்லையா? என்மனதிற்கு அவன் செய்தகுற்றம் தெளிவாய் இருப்பதனால்தான், நான்இதில் தீவிரமாய் இறங்கியிருக்கிறேன். அக்கிரமமான தொழிலில் என் புத்தி செல்லாது என்று உனக்குத்தெரியாதா? இதில் கொஞ்சமும் சந்தேகமில்லை என்னுள்ளத்திற்கு.

மா.—தாங்கள் சாதாரணமாய் நிர்மலமான சித்தத்துடன் இருக்குங்கால் பிசகில் பிருவிருத்திக்க மாட்டீர்கள் என்று எனக்கும் நம்பிக்கைதான். ஆனால் தாங்களோ இப்பொழுது மித்திரர்மீது அடங்காக்கோபம் கொண்டிருக்கிறீர்கள். ஐயோ! கோபாவேசத்தில் உண்மை விளங்காதே! நிதானமாய் யோசிக்குமளவில், முதலில் எல்லாவிபரங்களும் அறியாத ஜனங்கள் என்னநினைப்பார்கள்? ஏதோ தங்களுக்கு செய்த கெடுதியை முன்னிட்டுத்தான் இவ்வாறு மித்திரரை தண்டிப்பதாய் நினைக்கமாட்டார்களா? அதிலிருந்து தங்கள் கீர்த்தி மலினமடையாதா? மேலும் அப்பெண் யாதொரு குற்றமும் சாட்டாதிருக்க, தாங்களாக மேல்போட்டுக்

கொண்டு தாங்களே சிக்ஷிக்க ஆரம்பித்தால், இது எந்த நியாயத்தில் சேரும்? தாங்களே வாதியாகவும் நியாயாதிபதியுமாக ஆகுகிறீர்களே! அப்படிச்செய்ய நாகரிகமுள்ள நாட்டில் யாதொருசட்டமும் இருப்ப தாய்த் தெரியவில்லையே!

ஸ்ரீ.—(ஆத்ம) என்ன ஆச்சரியம்! ஆ! இப்பெண் எனக்கு புத்திமதிகளையும் நியாயங்களையும் எவ்வளவு அழகா யும் கோவையாயும் எடுத்துரைக்கிருள்? இவ்வளவு நேர்மையாய் நன்ருய்க்கற்றுணர்ந்த பண்டிதர்களும் ஆக்ஷேப சமாதானம் செய்யார்களே! என்மனமும் கொஞ்சங் கொஞ்சமாகப் பலவிதமாய் கலைப்படுகிறது. எனக்கு உலகவாழ்க்கையில் ஆசைகொள்ள, இன்னும் ஏதாவது நியாயம் இருக்கிறதா என்ன?

மாதங்கி! நீயேன் இந்தவிஷயத்தில் இவ்வளவு அக்கரைப்பட்டுப் பேசவேண்டும்?

மா.—தங்களுடைய உயர்ந்த புத்திக்கும் சித்தத்திற்கும் மாருட்டம் வாராமலிருக்க வேண்டுமென்பது ஒன்று தான்.

ஸ்ரீ.—நல்லது, என்புத்திக்கு யாதொரு மாருட்டமும் வர வில்லை. நான் இந்தவிஷயத்தில் கொஞ்சமும் நீதிதவறி நடக்கவில்லை. அவன்மிகக்கொடியவன். அவன் செய் திருப்பதோ பதினுயிரம் கொலைக்குச்சமானம். ஸ்திரீ ஹத்திசெய்தவனுக்கும் பரிந்துபேசுகிருயே! உன்புத் தியை எப்படி புகழ்வது?

மா.—ஐயோ! நான் இவ்வளவு சொல்லியும் தங்களுடைய புத்தியில் படவில்லையே! இன்னெரு நியாயம் சொல் லுகிறேன் கேளுங்கள் தயவுசெய்து. மித்திரர் இப்

பெரிய பாதகத்தைச் செய்தார் என்று நிச்சயமாய் நம்புவதற்கில்லையே ? எல்லாம் சமுசயந்தானே ? சமுசயமான விஷயத்தை எப்படி நிச்சயமாய் நம்புவது, பிரத்தியட்சப் பிரமாணங்களில்லாமல் ? ஒருவர் மீது சந்தேகத்திற் கிடமின்றி குற்றம் மெய்ப்பிக்கப்படாவிடில், அவனைக் குற்றமற்றவன் என்றே பாவிக்க வேண்டுமே! சட்டத்தின் சாராம்சத்தின்படி. சந்தேகத்தின் பேரிலேயே குற்றவாளி யாவதென்றால், எத்தனைபேர்கள் அநியாயமாய் குற்றவாளியாவார்கள்? ஐயோ ! உண்மை முழுதிலும் அறிய, ஈசுவரன் ஒருவனுக்குத்தானே சக்தி வாய்ந்திருக்கிறது. அப்படியிருக்கத் தெளிவாக ருசு வில்லாதிருக்குங்கால், தண்டனைசெய்ய அவர் ஒருவருக்குத்தானே அதிகாரம் ஏற்படும்? வேறு மானிடர்களுக்கு அவ்வதிகாரம் எவ்வாறு ஏலும் ? * ... ... ... ... ... ... * * இதற்கு வேண்டுமானல் போதுமான ஆதாரங்கள் எடுத்துக் காட்டுவேன். நான் ரொம்பும் வருந்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதை விட்டுவிடுங்கள்.

ஸ்ரீ.—(ஆத்ம) இவள் சொல்லச்சொல்ல, நான் எவ்வளவு சிறு புத்தியுடையவன் என்று நன்றாய்த்தெரிகிறது. இவளது கரத்தைக் கைப்பற்ற எந்த புண்ணியவான் கொடுத்து வைத்திருக்கிறானோ ?

மாதங்கி ! நான் எப்படிச்செய்தால் உனக்கென்ன ? நானறிந்த மட்டில் எது எனக்கு நியாயமென்று தோன்றுகிறதோ அப்படி செய்கிறேன். அது தவறாக முடியுமாயின், உனக்கென்ன நஷ்டம் ?

மா.—அப்படித்தவறாக முடியுமாயின் எனக்கு மிக்க நஷ்டமும் துக்கமும் உண்டாகும். அதை நான் எவ்வாறு

சகிப்பேன்? நான் மதிமோசம் போனவளாக ஆகு வேன். நான் ஆராதித்து வந்த தெய்வமல்லவோ பொய்யாகிறது.

ஸ்ரீ.—(ஆத்ம) இவள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லை யே?

இவள் என்ன நினைத்துப் பேசுகிருள்? ஆ! ஆ! வெகு நேர்த்தி! என்மன நோக்கத்தைக் கொண்டு இவளையும் நிர்த்தாரணம் செய்ய எத்தனித்து விட் டேனல்லவா? முதலில் வயது வித்தியாசத்தை கவ னித்தேனு? ஒருக்கால் இன்னெருமுறை ஏமாந்து போக இருக்கிறேனே? என்தலைவிதி அப்படியு மிருந் தால் நான் தொலைத்துத்தானே தீரவேண்டும். என் எண்ணங்கள்தான் கைகூடுவதில்லையே! ஆகையால் என்மனதிலுள்ள தடுமாற்றத்தை நான் ஒருநாளும் வெளியிடலாகாது. அவளுக்கு என்னிடம் இருக் கும் கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளக் கூடா தல்லவா? என்ன சங்கடம்? நான் எதற்காகப் பிறந் தேன்? இவளைக் கண்டித்துப் பேசவும் எனக்கு ஏன் மனம் வரவில்லை? ஆம்! ஆம்! நான் இவள் மீது கா தல் கொண்டேன்! காதல் கொண்டேன்! இது எப் படி முடியப் போகிறதோ தெரியவில்லை. இருக் கட்டும்.

பெண்ணே! நீ சொல்லுவதெல்லாம் ஒருவாறு உசித மென்றேவைத்துக் கொள்வோம். என்மீதோ உனக்கு சற்றும் தாக்ஷிண்ணியமில்லை. ஐயோ! நான் யாருக்கு உபகாரம் செய்தாலும், பிறகு அவர்கள் என் னிஷ்டத்திற்கு விரோதம் செய்கிருர்களே ஒழிய வேறில்லை. நான் உன்மீது பாராட்டிய அன்பிற்கெல்

லாம் நீ செய்யும் பிரதி என்னவென்றால் நான் எதை வெகுஆவலுடன் முடித்து திருப்தி யடைய வேண்டுமென் றிருக்கிறேனோ, அதைவந்து நீ கெடுக்கிறாய். என்னுடையஉயிர் அவனுடைய உயிர் இரண்டும் ஒன்றுதான் என்று நினைத்த ஒருமித்திரன் என்னை நம்பிக்கை மோசம்செய்தான் என்று நான் துன்புறவில்லை. ஒருபேதையான பெண்ணை யல்லவோ அவன் நாசம்செய்துவிட்டான்? அவனையே அடைக்கலமென்றடைந்த ஒரு ஜீவனுக்கு அவன் என்ன உத்தரவாதம் சொல்லுகிறான்? அவனை தண்டியாது விடமாட்டேன். அவனுக்கு என் வாக்கினால் தண்டனை விதிப்பேனாயின் எவ்வாறு களிப்படைவேன்? அவனோ எத்தண்டனைக்கும் பாத்திரன் என்பது எனக்குநிச்சயம். எனக்கு வாழ்க்கையில் யாதும் விருப்பமில்லை. நான் அரசன் ஸ்தானத்தில் பற்றில்லாமல் நீதி செலுத்திவரவேண்டியது ஒன்றுதான் எனக்கு இப்புவியிலிருக்கும் பொறுப்பு. என் கடமையை நான்தவறாமல் செலுத்தவேண்டியது. அதையும் வந்து நீ கெடுக்கிறாய். நான் என் மனோரதத்தை அடைவதில் உனக்கொன்றும் நஷ்டமில்லையே? நீ குறுக்கிடாதே. உனக்காக வேண்டியதொன்றுமில்லை. உன் வேலையைப் பார்.

மா.—இராஜனே! இன்னொருவார்த்தை சொல்லிவிட்டுப் பிறகு என்வேலையைப் பார்த்துக்கொண்டுபோகிறேன். எனக்கும் இப்பாரில் யாதுமலுவலில்லை. தங்களுக்கிஷ்டமில்லாதிருந்தாலும், ஹிதர்கள் அவரவர்கள் கடமைகளை ஒழிக்கவேண்டியதல்லவா? நானும் என் கடமையை எனக்குத்தெரிந்தமட்டில் ஒழித்து விட்டுச்

செல்லுகிறேன். பிறகு தங்களுடைய இஷ்டம்போல் நடப்பதில் யாதொருதடையும் என்னால் ஏற்படாது. எப்படியும் தாங்கள் தனிமையில் யோசிக்குமளவில் என்வார்த்தைகளெல்லாம் நியாயமென்றேதோன்றும். மனதுசுத்தமாயும், நிர்மலமாயுமிருக்குங்கால், எல்லா உண்மையும் உள்ளங்கைநெல்லிக்கனிபோல் விளங்கும். இப்பொழுதோ தங்கள் மனம் ஆத்திரத்தால் கலங்கியிருக்கிறது. தாங்கள் இப்பொழுது அந்தர்போலத்தான். உத்தமர்கள் ஆத்திரத்திற்கு இடம் கொடுக்கலாமா? ஐயோ! மித்திரர் பிசகுசெய்தார் என்றாலும் தான் என்ன? ஈசன் தண்டிக்கட்டுமே. மானிடராகிய தாம் மன்னிப்பதே மேலாகும் என்பதற்குக் கொஞ்சமும் நியாயமில்லை. நான்தெய்வப்பிறப்பு என்றுகொண்டாடிவந்த வியக்திமறைந்தால் எனக்கு நஷ்டமில்லையா? நான் பத்தரைமாத்துத்தங்கம் என்றுமதித்து வந்தது, சுத்தபித்தளையாகி மேலுக்கு பளபளப்பாயுள்ளதாகுமானால் எனக்கு நஷ்டமில்லையா? இதோ நமஸ்கரிக்கின்றேன். வேண்டாம்,வேண்டாம்; விட்டுவிடுங்கள். ரொம்பவும் கருணைசெய்யவேண்டும்.

ஸ்ரீ.-கண்ணே! எழுந்திரு. இதோ விடுவதற்குமுன் உலகில் வேறு பிடிப்பில்லாத எனக்கு என்ன தருவாய்? பதில் பிடிப்பு நான் கேட்டதை மறுக்கலாகாது. நீ சொல்லி வந்ததெல்லாம் உண்மையாயின் மறுக்காய்......***

மா.—தாங்கள் கேட்டுக் கொடாமலிருக்க எனக்கு சுவாதீனமா? என்னிடத்தில் யாதுமில்லையே!

ஸ்ரீ.—கேட்டதைக் கொடுப்பாயா? பதில்.

மா.—கொடுத்தேன்.

ஸ்ரீ.—பிறகு மறுக்காலாகாது. முழுமனதுடனும் அளிக்க வேண்டும். நிர்ப்பந்தமென்று அப்புறம் உரைக்கலாகாது.

மா.—நான் ஒருதரம் கொடுத்தேன் என்ருல், பிறகு மறுப்பது எப்படி என்று நானறியேன்.

ஸ்ரீ.—அப்படியாயின்—என்ன, புறம் திரும்பிக் கொண்டாய்? சம்மதம் இல்லேயோ? அதற்காகத்தான் அப்பொழுதே சொன்னேன்.

மா.—அப்படி பிரதிப்பிரயோசனத்தை உத்தேசித்தா, ஒப்புக்கொள்வது?

ஸ்ரீ.—அல்ல, மனமொப்பினுல்தான்.

மா.—நல்லது.

ஸ்ரீ.—அப்படியாளுல் சம்மதந்தானே?

மா.—எதற்கு?

ஸ்ரீ.—உனது அழகிய கரத்தைக் கைப்பற்ற.

மா.—(தலேகுனிந்து கைநீட்டுகிருள்)

ஸ்ரீ.—கண்ணே! நான் கொஞ்சமும் எதிர்பார்க்க வில்லேயே!

மா.—இவ்வளவுதானே? தங்களேக் கண்ட அன்றைக்கே எனதாத்மா தங்களதுஆயிற்றே! இதை அறிய தங்களுக்கு சக்தியில்லேயே! மேலும் குதிரைப்பந்தயத்தில் தோல்வியடையந்த பொழுதே, நான் தங்கள் அடிமையானேனே.

ஸ்ரீ.—நானல்லவோ அபஜெயப்பட்டேன்?

மா.—குதிரியைத்தட்டி ஓட்டுவது போலப் பாசாங்கு மட்டில் செய்து, குதிரையை அடைக்கிவந்ததை நான்

கவனிக்கவில்லையா? எப்படியும் தங்களைவெல்லமுடியுமா? நான் குழந்தைதானே?

ஸ்ரீ.—இனி அஹிம்ஸன் விஷயத்தில் என்ன செய்வது?

மா.—அவர்வந்ததும், நேரில் அவரைவிசாரணை செய்யுங்கள்; எல்லாம் தவறுஎன்று விளங்கும். அவர் ஒருக்காலும் குற்றவாளியாக மாட்டாரென்று எனக்கு ஏதோ ஒரு நிச்சயமான நம்பிக்கை. இல்லாவிடில் மன்னித்து விடுவதாய்ச் சொல்லி விட்டுவிடுங்கள்.

ஸ்ரீ.—எல்லாம் அவனை நேரில் கண்டபிறகு முடிவுசெய்து கொள்ளுவோம். நாளைக்காலையில் வந்துவிடுவான் என்று செய்தி வந்திருக்கிறது. அன்னைக்கு வாக்களித்தபடி விசாரித்து முடிவுசெய்வோம்.

மா.—நல்லது. அப்படியே ஆகட்டும். நெடுநேரமாய்விட்டது. அண்ணா காத்திருப்பார். போவோம்.

(போகிறார்கள்.)

## அங்கம்—நான்கு.

### 2-வது காக்ஷி.

இடம்—சிறைச்சாலை.

காலம்—காலை.

அஹிம்ஸன்.

அ.—நான் இந்தஇராஜ்ஜியத்தில்எவ்வளவு செல்வாக்குள்ளவனாய், எவ்வளவு மதிக்கப்பட்டு வந்திருக்கிறேன்! இந்த நகரத்தின் வீதிகளில் என்னைக்கண்டதும் கைகூப்பாதவர் யார்! இளவரசனுக்கும் எனக்கும் ஒரே

விதமான மரியாதையல்லவோ நடக்கும்! இந்த வீதிகளின் சிங்காரத்திற்கும் இந்த கோட்டையின் பந்தோபஸ்துக்கும் நான் எவ்வளவு பாடுபட்டிருப்பேன்! எனது மாளிகையோ சிறந்த சிற்பிகளால் அமைக்கப்பட்டு, எவ்வளவு அலங்காரமாய்க் காண்பது வழக்கம்! இப்பொழுதோ முற்றிலும் முன் பக்கம் அடைக்கப்பட்டு, முன்னிருந்த அடையாளங்கூட இல்லாது மாறுதல் அடைந்திருக்கிறது. என் ஞாபகம்கூட வராமலிருக்க வேண்டுமென்று, இளவரசன் செய்த உத்தரவோ? நானும் இந்த வீதிகளின் வழியே கால் நடையாய், பக்கத்தில் சேவகர்களுடன், விலங்கும் கையுமாய் அழைத்துச்செல்லப்பட்டனனே! சிலர் துக்கிக்கவும், சிலர் நகைக்கவும், இன்னும் சிலர் திகைத்து நிற்கவும், அறியாஜனங்கள் என்னைப்பற்றி என்னென்ன நினைத்தார்களோ? ஆனால் எனக்குக் கொஞ்சமும் துக்கமில்லை. என் கண்மணி, என் நண்பன் இருவரையும் இழந்த பிறகு எத்துக்கந்தான் என்னை வருத்தும்? நான் லஜ்ஜைகொள்ள யாதும் நியாயமில்லை. நான் மனப்பூர்வமாய் யாதொரு குற்றமும் செய்யவில்லை.

ஸ்ரீகரன் வருவதாகச் சொல்லி யனுப்பியிருக்கிருன். அவனுக்கிருக்கக்கூடிய குரோதத்தை நானறிவேன். வந்து என்ன நேர்ந்தபடி கோபிக்கிருனே தெரியவில்லை. ஒருசமயம் கண்டபடி திட்டுவான் என்று நினைக்கிறேன். எனக்கு ஏதாகிலும் கொடுந்தண்டனை விதித்தாலும் விதிப்பான். உதாசீனமாய் இருந்தால், கட்டாயம் ஏதாவது ஒருசமயம் கொலை செய்யும்படி உத்தரவு செய்தாலும் செய்வான்.

அப்படி அவன் வாக்கினல் உத்தரவளித்தால் எனக்கு திருப்திதான். பகவானைக்குறித்து கொஞ்சம் ஸ்தோத் திரம் செய்வோம்.................................. * * *

ஸ்ரீகரனும் சேவகர்களும் வருகிறார்கள்.

சே.—மஹாராஜ்! இதோ இருக்கிறார்.

ஸ்ரீ.—விலங்கைத்தெறித்து வெளியில் கொண்டுவா.

அஹிம்ஸன் வெளியில் கொண்டுவரப்படுகிறான்.

ஸ்ரீ.—ஆ! ஆ! என்ன காரியமடா செய்யத்துணிந்தாய்? நீ கற்றுணர்ந்த நீதிசாஸ்திரங்களெல்லாம் எதற்காக? என்னுடன் கூடி குருகுலவாஸஞ்செய்து குருவினது அனுக்கிரகம் பெற்றுத் திருப்புங்கால், இந்த இராஜ் ஜியத்திற்கு நீ ஒரு நடுநாயகம்போல் விளங்குவாயென் றிருந்தேனே! நான் இராஜ்ஜியம் வகிக்குங்கால் தேவ சபை பிரஹஸ்பதியினால் அலங்கரிக்கப்படுவதுபோல் உன்னால் என்னுடைய மந்திராலோசனைசபை அலங் கரிக்கப்படுமென்று ஆசைகொண்டிருந்தேனே!

இவ்வற்பதீய தொழிலுக்கு உன்மனம் எவ்வா றடா உடன்பட்டது? நீ இவ்வளவு மோசக்காரன் என்று யாரும் அறியாதபடி, இதுகாறும் எவ்வாறு வேஷம் பூண்டுவந்தாயடா? (ஆத்ம) இவனை எதிரில் கண்டதும் என்மனதிலுள்ள காடின்யமெல்லாம் கரைந்து தளர்ச்சியடைகின்றன். கடுமையாய்ப்பேசுவ தற்கு நாவெழவில்லையே! இவனை நேரில் கண் ணால் கண்டவர்கள் எவர்தான் இவனைக் குற்றவாளி என்று நினைப்பார்கள்? ஒருக்கால் மாதங்கியின் சித் தாந்தந்தான் சரியாயிருக்கலாமோ?

ஒன்றும்பதிலில்லே. அஹிம்ஸா! அப்பெண் உன்மீது காதல் கொண்டாள் என்று உரைத்திருந் தால், உடனே ஒப்புக்கொண்டு சரி சொல்லியிருப்பே னே! எனக்கு நேர்ந்த துன்பத்திற் கெல்லாம் நீயல்ல வோ காரணமாகிருய்? உனதுசெய்கை வளர்த்தகிடா மார்பில் பாய்ந்தாற்போ லல்லவோ ஆயிற்று?—

அ.—ஸ்ரீகரா!—

ஸ்ரீ.—எல்லாமறிவேன். உனக்கு வாய்திறக்கவும் தகுதி இருக்கிறதா? நான் ஆசைகொண்ட ஸ்திரீயை நீ அடைந்தாய் என்னும் அசுயைகொண்டு பேசுவதாகக் கொஞ்சமும் நினையாதே. என்மீது காதலில்லாதவள் எவனைக்கூடினுல் எனக்கென்ன? அப்பெண்ணின் முடிவை கவனித்தல்லவோ, உனக்கு சிக்ஷை விதிக்க வேண்டியதாயிருக்கிறது. உலகநடையறியாது காட் டின்கண் வளர்ந்துவந்த ஒருபேதையை மயக்கி-அவள் வாழ்நாட்கள் முழுவதையுங் கெடுத்து, அவளை ஒரு விலைமாது போலல்லவோ நடத்த முயன்ருய்? என்ன பாபம் செய்யத்துணிந்தாய்? அவள் மனிதர்கண்ணுக் குப்படாமல் எங்காவதுதான் ஓடிப்போனுளோ? அல் லது பாழுங்கிணற்றில்தான் விழுந்து இறந்தாளோ? எக்கதி அடைந்தாளோ? என்னசொல்லுகிருய்? பிரம்மனுல் படைக்கப்பட்டு, உன்னிடம் ஒப்புவிக்கப் பட்ட ஓர் உயிரை கொலை செய்தாயே! உன்னையே ரக்ஷகன் என்று அடைக்கலம்புகுந்த ஜீவனுக்கு என்ன உத்தரவாதம்சொல்லுகிருய்?

அ.—ஸ்ரீகரா! இனி யான் பொறுக்கேன். ஆகாயமும் பூமியும் சந்திரனும் சூரியனும் திக்குப்பாலகர்களும் சாக்ஷியாக சாஸ்திரோக்தமாய் நான் விவாகம் செய்து

கொண்ட எனது தர்மபத்தினியை அவதூறாய்ப் பேசு வாயாயின் என் நண்பனென்றும் இனிப் பாரேன். யாதுகாரணம்பற்றி இக்கொடிய வார்த்தைகளைப் பேசத் துணிந்தாய்? என் கண்மணி உயிருடன் இருந்தாலும், இனி என்னைக் கண்ணேக்காள் என்பது நிச்சயம். ஆதலின் உயிர்வாழ்வதில் எனக்குக்கிஞ்சித்தும் ஆசையில்லை; நான் உயிருக்குத்துணிந்தவன். இனி தர்மராஜன் ஒருவனுக்கே உத்தரவாதம் சொல்லக் கடமைப்பட்டவன். அவர் என்மீது யாதும் குற்றம் சாட்டார்; என்றும் நிர்மலமான மனச்சாட்சி யுடையவர். உன்னிடத்து என் நடத்தை விஷயமாய் யாதொரு உத்தரமும் கூறக்கடமைப்பட்டவனல்லன். ஆனது பற்றி, உனது இராமபாணம் போன்ற மொழிகளையெல்லாம் சற்றுங் கவனித்து பதிலுரையேன். எனது பத்தினியைப்பற்றி இழிவாய்ப் பேசியதால் வாய் திறக்கலானேன். இனியும் மறுமுறை அப்படிக்கெல்லாம் கூறுவாயாயின்—

ஸ்ரீ.—அஹிம்ஸா! ஜாக்கிரதை. பொய்பேசாதே. நான் எல்லாவற்றையுந் தீரவிசாரித்து விட்டேன். நீ இப்படிக்கெல்லாம் நிஜம்பேசுவதுபோல நடிப்பாய் என்று அப்பெண்ணையும் அழைத்து வரும்படி ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். நீ பொய் சொல்வதாக ஏற்படுமாயின், பிறகு தப்பும்மார்க்கம் உண்டாகாது. இப்பொழுதே உன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டு, உயிர் தப்பி அந்நியதேசம் போய்ச்சேரு. எனதன்னையிடம் இதற்காகத்தான் அப்பொழுதே கேட்டுக்கொண்டாயோ?

அ.—ஸ்ரீகரா ! நான் உன்னை மன்னிப்பு கேட்க வேண்டிய அம்சம் யாதுமில்லை. நீதான் அறியாமையால் என்னை ஏசியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டிய வனாயிருக்கிறாய். ஆனால் என்மீது நீ கோபித்தாய் என்று நான் கொஞ்சமும் துக்கிக்கவில்லை. உன்னை மன்னித்து விடுவதென்று எப்போழுதே தீர்மானித்து விட்டேன்.

ஸ்ரீ.—லலிதை வந்துவிடுவாள்; உன் வஞ்சமெல்லாம் வெளியாய் விடும். சீக்கிரம்! எங்கிருந்தாலும் வந்து விடுவாள் சொன்னேன் !—இப்பொழுதே மன்னிப்பு கேட்டுக்கொள் பிறகு அவள் வந்து கேட்டாலும் விட மாட்டேன்.

அ.—அப்படியா? வந்துவிடுவாளா ? ஐயோ! ஸ்ரீகரா ! நான் சொல்லுகிறேன் கேள். அவள் வந்தால் உனக்குத்தான் கொடுங்கஷ்டம் நேரிடும். நீ செய்த பிழைகளை எல்லாம் ஒப்புக்கொண்டு, பச்சாத்தாபம் மேலிட்டு என்னை மன்னிப்பு கேட்பதுடன் உன்னையே நீ மிகவும் வெறுத்துக்கொள்ளும்படி ஆகும். ஐயோ! செய்ததெல்லாம் தவறு என்று நீ தாங்கக்கூடா துக்கமனுபவிக்குங்கால் உன்னை நான் எவ்வாறு காண்பது? உன்னைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்குமே !

ஸ்ரீ.—உன்னுடன் பேசுவதில் யாதும் பயனில்லை. அன்னையின் பொருட்டு உன்னை மன்னித்து விடலாமென்றிருந்தேன். அதற்கும் நீ பாத்திரனல்லவென்று தெரிகிறது. காவலர்காள்! இவனைக் கொண்டு போங்கள்.

[போகிறார்கள்.]

## அங்கம்—நான்கு

### 3-வது காக்ஷி

இடம்—உத்தியானவனம்.
காலம்—மாலே.

ஸ்ரீகரனும் மாதங்கியும்

ஸ்ரீ.—கண்மணி! புஷ்பச்செடிமிருந்து, சண்பகம், மல்லி முல்லே முதலிய மலர்கள் விகஸித்து, நறகந்தத் தைத்தூவ, இன்னும் பிரகாசித்துவரும் சந்திரன், உன் முகங்கண்டு வெட்கி, மேகத்தினிடத்து மறைவதைப் பார்த்தனேயா? இன்னும் உனது அழகிய கரத்தை நான்பிடித்து உலாவிவர, உனது முகாரவிந்தத்தை அடிக்கடி உற்றுப்பார்த்து, ஆனந்த பரவசமடையும் என்னேக்கண்டுபொறுக்காத இத்தென்றல் உனதுகருங் குழல்போன்ற கூந்தலே என்கண்களின்மீது விசிறி, என்னே அடிக்கடி கண்மூடும்படி செய்கிறதை கவ னித்தனேயா? மாதங்கி! என்ன பாக்கியம் பெற்றேன்? கண்ணே! எப்பொழுது நான்உன்னே முறைப்படி என்னுடைய அதீனமாக்கிக்கொள்வேன்?....... * * *

மா.—அரசே! நான்என்ன சொல்லுவேன்? தாம் இன்னும் நான் புகார் நகரத்தில் கண்டு காதலுற்ற புருஷோத்த மராக இல்லேயே! தங்களே இன்னும் கோபதாபங்கள் கவர்ந்துகொண்டிருக்கின்றனவே! தங்களுடைய கலங் கியசித்தம் இன்னும் தெளிவடையவில்லேயே! தங்க ளுடையநண்பரை விசாரிக்கவாவது வேண்டும்; அல் லது மன்னித்தாவது விடவேண்டும். இன்னும் ஒரு வழியும் செய்யாமலிருக்கிறீர்களே! இது நியாயமா? எனக்கு என்ன வாக்குக்கொடுத்தீர்கள்?

ஸ்ரீ.—அந்தவிஷயத்தில் ஒன்றும் பாக்கிவைத்துக் கொள்ள வில்லை. இன்றுகாலையிலேயே உன் கக்ஷிக்காரனைக் கண்டுவந்தேனே !

மா.—என்னமுடிவுசெய்தீர்கள் ? மன்னித்துவிட்டீர்களா? அப்படிசெய்வதுதான் யுக்தம். விசாரணைசெய்தால் தங்களுக்குத்தான் அவமானம் நேரும். ஆகையால் தான் மன்னித்து விடுங்கள் என்றேன்.

ஸ்ரீ.—உனக்கு எவ்வளவு பிடிவாதம்? ஆயினும் உன்னிஷ்டப்படியே முடித்து விடுவதாய் அவனிடம் சென்றேன். உனதிஷ்டம் நிறைவேறுவதற்குக் கொஞ்சமும் இடங்கொடாமல் பேசுகிறான். குற்றத்தை ஒப்புக் கொண்டால் மன்னித்து விடலாமென்று நினைத்தேன். அவனோ மிகவும் துணிந்தவனானதால் தான்குற்றஞ் செய்யவில்லையென்று திடமாய்ச் சாதிக்கிறான். மேலும் நான்தான் அவனைமன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டுமாம்! —

மா.—அப்படியா? மேலே சொல்லுங்கள்! எதற்காக தங்களை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி தெரிவித்தார்?—

ஸ்ரீ.—அவனைக்கண்டு பலவாறாக தூஷித்தேன்; இன்னும் மிகவும் கொடிய வார்த்தைகள் சொல்ல இருந்தேன். ஆனால் அவனைஎதிரில்கண்டதும் பரிதாபம் மேலிட்டு என்மனமுருகிவிட்டது. கொஞ்சம் அடக்கிக் கொண்டேன். நான்அவனைக் கடிந்துபேசியதற்காக நான் மன்னிப்பு கேட்கவேண்டுமாம்!

மா.—ஆனால் குற்றம் சாட்டியதற்கு ஒன்றும் பதிலுரைக்க வில்லையோ ?

ஸ்ரீ.—வெகுநேரம் ஒன்றும் பேசாமல் ஸ்தம்பம்போல் நின்றுகொண்டிருந்தான். என்னைத் திரும்பிகூடப் பாராமல், ஆகாசத்தை நோக்கி இரண்டொருமுறை பெருமூச்செறிந்தான்.

மா.—பிறகு?

ஸ்ரீ.—பிறகு லலிதையை விவாகம்செய்து கொள்ளாமலே உனதுபோகஸ்திரீயாகமட்டும் வைத்துக்கொள்ள எத்தனித்தாயே என்று நான் ஆரம்பித்ததும், மிகவும் ரோஷமுள்ளவன்போல கோபித்துத் தன் தர்மபத்தினியை அவதூறுகப் பேசினதைப் பொருதவனுய் ஏதோ பயமுறுத்துவது போல் பேசினுன். ஆனல் எனக்கு எல்லா வேஷமுந் தெரியுமென்றும், தன்னைக் காத்துக் கொள்ளும்பொருட்டு எதுவேண்டுமானுலும் பேசுவானென்றும் இவன் போகிறமட்டும் போகட்டும் என்றும் விட்டு விட்டேன். அவன் மிகவும் அலக்ஷியமாய்ப் பேசினுன்.

மா.—தமது தர்மபத்தினி என்ரு உரைத்தார்?

ஸ்ரீ.—ஆம். அதை நான் நம்பிவிடுவேனென்று நினைத்தான் போலும்!

மா.—ரணபாஸ்கரன் சாக்ஷயமிருக்குங்கால், தாங்கள் நம்புவீர்களா? நம்பமாட்டீர்கள். ஆனல் தம்முடைய விவாகத்திற்கு யார் சாக்ஷியென்று தெரிவித்தாரோ?

ஸ்ரீ.—மாதங்கி! உனக்கு இன்னும் பிரமையா? சாக்ஷி ஏது? எங்கிருந்து வருவார்கள்? தனக்கு சூரியசந்திரரும் திக்குப்பாலகர்களும் ஆகாயமும் பூமியுந்தான் சாக்ஷி என்கிருன். எப்படியிருக்கிறது சாக்ஷிகள்? பார்த்துக்கொள். பொய்க்காரனெல்லாம் ஈசுவரனைத் தான் சாக்ஷியாகக் கோருவது வழக்கம்.

மா.—இன்னும் என்னசெய்யலாம்? லலிதைவந்தால்தான் உண்மை வெளியாகும்.

ஸ்ரீ.—ஒளிப்பதில் பயனில்லையென்று, என்னால் இயன்ற மட்டும் சொல்லிப்பார்த்தேன். அவன் கேட்பானா? கேடுகாலம்வந்தால், நல்லபுத்திகள் செவிகளில் ஏறுவே! லலிதை வந்துவிடுவாள் என்று கூட சொல்லிப் பார்த்தேன். அதற்கு அவள் வரட்டுமென்றும், வந்தால் நான் அவளை நடத்தியதற்கு விசேஷமான பச்சாத்தாபம் அடைவேனென்றும், என்னிடத்தில் பரிதபிப்பதுபோல் பேசினான்.

மா.—தங்களுக்கு இன்னும் சந்தேகமா? இன்னும் தங்களுடைய நண்பர் மனநிலையைத் தாம் அறியவில்லையே! தமது காதலியை இழந்தபின், உலகத்தை வெறுத்தவராய்க்கொண்டு, தங்கள் வார்த்தைகளையெல்லாம் தம் மனதிற்குக் கொஞ்சமும் வாங்கிக்கொள்ளாமல், கடைசியாகத் தமது பத்தினியைப்பற்றிக் குறைவாய்ப் பேசியதும், அவளது மானத்தைத் தான் காப்பாற்றவேண்டியது தன் கடமையென்று கண்டு வாய்திறந் திருக்கிறார். இதை எப்படி தங்களுக்கு மெய்ப்பிக்கிறது? அவ்வுத்தம ஸ்திரீ புருஷர்களைப் பிரித்த பாழுந் தெய்வம், இப்பொழுது வந்து இரக்ஷிக்காமல்போனால், எதற்காக இருப்பது? எப்படியாவது அவளை இப்பொழுது கண்டுபிடிக்க வேண்டுமே! அவள் வாக்கினால் விவாகத்தை ஒப்புக் கொண்டாலல்லது தாங்கள் நம்பமாட்டீர்களே! எப்படி கண்டுபிடிப்பது? எங்கு சென்றிருப்பாள்? ஒன்றும் தெரியவில்லையே! என்ன செய்வது? தங்களுக்கு ஏதாவது தோன்றுகிறதோ?

ஸ்ரீ.—அவளைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றுதான் நானும் முயலுகிறேன். ஐயோ! அவள் வராவிடில், அஹிம்ஸன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் நீ ஒப்பமாட்டாய்போ லிருக்கிறதே! அவளை இப்பொழுது எங்கே கண்டுபிடிப்பது?—ஆம்! ஆம்! அவளுடைய தந்தை அடிக்கடி காசிக்குப் போவதாய் நான் அப்பொழுதே கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருக்கால் அங்கே சென்றிருப்பாளோ?

மா.—இருக்கலாம்! இருக்கலாம்! கண்டுபிடித்தாலும் அவளை இங்கே எப்படி வரவழைப்பது? மேலும் புருஷன்மீது கோபித்துச் சென்றிருப்பவள் எளிதில் திரும்பிவரச் சம்மதியாள். தாங்கள் அழைக்கலாகா தென்பதையும் தாங்கள் அறிவீர்கள். இதற்கு என்ன உபாயம் செய்யலாம்? ஆனல் காசியில்தான் இருப்பாளென்று எனக்கும் தோன்றுகிறது. யாராவது பெரியோரை அனுசரித்துக் காலங்கழித்துவருவாள் என்று தோன்றுகிறது. தங்களுடைய அபிப்பிராயம் என்னவோ?

ஸ்ரீ.—என்னுடைய அபிப்பிராயமும் ஒத்தே இருக்கிறது. ஏற்கனவே வைராக்கிய மார்க்கத்தில் இருந்ததாகத் தெரிகிறபடியால் அப்படியே இருக்கலாம்.

மா.—ஆம்! ஆம்! எனக்கு ஓர் உபாயந் தோன்றுகிறது, தாங்கள் சொல்லிவந்ததை யெல்லாம் நன்ருய் ஆராய்ந்து பார்த்ததில் அவள் ஒரு மஹா உத்தம ஸ்திரீயாகக் காண்கிருள். பதிவிரதைகள் பர்த்தாமீது எவ்வளவு கோபிப்பதற்கு இடமிருந்தாலும் புருஷனுக்கு ஆபத்துக்காலம் என்று தெரிந்தால் எங்கிருந்

தாலும் வந்துசேருவார்கள் என்பதற்குச் சந்தேக மில்லை.

ஸ்ரீ.—வந்தால் எனக்கு திருப்திதான். ஆனால் அஹிம்ஸன் அவளை நடத்தியிருப்பதற்கு அவன் முகத்தில் மறு படியும் விழிப்பாளா ? ஒருநாளுமில்லை.

மா.—காந்தா ! உத்தம ஸ்திரீகளுடைய சுபாவத்தைத் தாங் கள் அறியீர்கள்......... * * * தயவுசெய்து நான் சொல்லுகிறபோல் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகி றேன். உடனே காசிநகர் முழுதும் ஒரு தண்டோராப் போடச் சொல்லுங்கள்.

ஸ்ரீ.—என்னவென்று போடச் சொல்வது ?

மா.—தொண்டைநாட்டு இளவரசனது மித்திரன் அஹி ம்ஸனுக்குப் பிராண வியோககால மென்றும், அவ ருக்கு உத்திரகிரியைகள்செய்யக் கடமைப்பட்டவர் கள் வந்து சேரலாமென்றும், எட்டுநாளில் வந்தால் அவரை உயிருடன் ஒருக்கால் காணலாமென்றும் பிரசுரம் செய்யச் சொல்லுங்கள்.

ஸ்ரீ.—இது போதுமா ?

மா.—இன்னும் அவருக்கு ஐவேஜி யொன்றுமில்லை என் றும் போடச்சொல்லுங்கள். இல்லாவிடில் வெகுபேர் வார்சுகளென்று சண்டையாடிவருவர்.

ஸ்ரீ.—அப்படியே செய்விக்கிறேன். ஆனால் இதெல்லாம் வீண் பிரயத்தனம் என்று எனக்கு நன்றாய்த் தெரி யும். இருந்தாலும் உன்னிஷ்டத்திற்கு விரோதம் செய்வதில்லை.

மா.—நாதா ! தாங்கள் அப்படி நினைக்கவேண்டாம். இன் னும் தங்களுடைய இராஜ்ஜியமுழுதிலும் விளம்பரம்

போடச்சொல்லுங்கள். எங்கிருந்தாலும் வந்துவிடுவாள்.

ஸ்ரீ.—அப்படியே ! கண்ணே ! நாம் எப்பொழுது விவாகம் வைத்துக்கொள்ளுகிறது ?

மா.—அஹிம்ஸனும் லலிதையும் சேர்ந்தவுடன்.

ஸ்ரீ.—அப்படியென்றால் ஒருநாளுமில்லை.

மா.—வேண்டுமென்றால் பாருங்கள். வெகு சீக்கிரத்தில் வந்துவிடுவாள். அவர்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்டது மெய்க்காதலாயின் ஈசனிருப்பதும் உண்மையாயின் இச்சமயம் வந்து காத்தருளுவார்.

ஸ்ரீ.—வந்தால் அஹிம்ஸனுக்கு ஆபத்துத்தான்.

மா.—ஒருக்காலும் அப்படி நேராது. ஒருவேளை தாங்கள் நினைப்பதுபோல், அவனை அவள் முறைப்படி விவாகம் செய்துகொள்ளாம லிருந்தாலும், தன் காதலரை காப்பதன் பொருட்டு செய்துகொண்டதாகவே ஒப்புக்கொள்ளுவாள்.

ஸ்ரீ.—அப்படியானால், அவள் வந்தால்தானே எனக்கு விவாகம் ? சொல்லிவிடு. எங்கேயாவது போய் நானே அவளை அழைத்துவருகிறேன்.

மா.—போதும் ! தாங்கள் மறுபடியும் அவளைத் தேடிச் செல்லவேண்டாம் ; அவளே வந்துவிடுவாள்.

ஸ்ரீ.—கண்ணே ! விடையளிப்பாய். அன்னையிடம் சென்று நடந்ததையெல்லாம் தெரிவித்து வருகிறேன்.

மா.—நல்லது. நானும் கொஞ்சம் அண்ணாவிடம்போய் எங்கள் இராஜ்ஜியம் போக ஏற்பாடுகள் செய்கிறேன்.

ஸ்ரீ.—நீ இப்பொழுது போகலாகாது. நான் கொஞ்சமும் சம்மதியேன்.

மா.—விவாகம் சீக்கிரம் வைத்துக்கொள்ள வேண்டுமானால் நாங்கள் புகார்போய்ச் சேரவேண்டாமோ?

ஸ்ரீ.—அப்படியானால் நானும் வருகிறேன். இல்லாவிடில் இங்கேயே விவாகம் செய்துகொண்டால் என்ன? நானே உன்னாதீனமானால், இது உன் இராஜ்ஜியமல்லவோ?

மா.—நல்லது. வேண்டுமானால், அண்ணாவைக் கேட்டுக்கொண்டு அப்படியே செய்வோம்.

ஸ்ரீ.—நான் போய் வருகிறேன்.

(போகிறார்கள்.)

## அங்கம்—நான்கு.

### 4-வது காக்ஷி.

இடம்—ஒருராஜ வீதி.
காலம்—மாலை.

லலிதை வருகிறாள்.

........................................ * * *

ல.—என்பதிக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்கக்கூடும்? சர்வேசா! அவரை நீ இவ்வளவு பாலியத்தில் அழைப்பது தர்மமாகுமா? ஐயோ! நான்பத்தினியாயிருந்தும் அவருடைய அந்திகாலத்தில் உதவாமற்போனேனே! உயிருடனிருந்தும் பயனென்ன? உல்லாஸமான காலங்களில் புருஷர்கள் பல விடங்களுக்குச்சென்று காலங்கழித்தாலும் ஆபத்துக்காலங்களில் கடமைப்பட்டு உதவுகிறவர்கள், முறைப்படி ஏற்பட்டதாரங்

கள் தானே? ஐயோ! இன்னொருமுறை நான் அவரை உயிருடனும் காண்பேனோ? சீக்கிரம் போகவேண்டும். எப்படியிருக்குமோ? எந்த விதிக்குப் பெண் பிறந்தேனோ? ஜகதீசா! உன்னையே நம்பினேன். நீ விட்டதுதான் வழி.

கேசவைய்யா வருகிறான்.

ல.—அப்பா! நீ இந்த ஊர்தான்போ லிருக்கிறதே?

கே.—மல்லியப்!—அம்மா நான் இந்த ஊர்தான். தாங்கள் யார்? எந்த ஊர்? நான் ஒரு பூக்காரன். நல்ல பூ இருக்குதுங்க. இப்பதான் பர்ச்சுக்கிட்டுவாரேன். கொஞ்சம் வாங்கிக்குங்க. மல்லியப்!

ல.— அப்பா! என்னிடம் துட்டில்லே; எனக்கு வேண்டாம்.

கே.—அம்மா! இல்லிங்க, உங்களைப்பாத்தா கோயிலே இல்லிங்க, தேவம், அதுபோலே இருக்குங்க. எனக்கு துட்டுவாணும். இரண்டு சரம் வாங்கிக்குங்க, சும்மா. மல்லியப்!

ல.—நல்லது (வாங்கிக் கொள்ளுகிறாள்) இது ஒரு நற் சகுனம். என்மனம் எவ்வளவு நொந்திருந்தாலும் வேண்டாமென்று தள்ளக்கூடாது.

கே.—மல்லியப்!

ல.—அப்பா! உன்னைப்பார்க்க நீ மிகவும் நல்லவனாகக்காண்கிறாய். இளவரசரது தோழர் ஜாகை அறிவாயோ?

கே.—அம்மணி! தாங்கள் அவருக்கு என்னவேண்டும்?

ல.—நான் அவரது சமீப பந்து. அவருக்குப் பிராண வியோக காலம் என்று தெரிந்து, அவரைப்பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன். அவர் இன்

னும் உயிருடன் இருக்கிருரா? அவரது ஜாகை எது? அறிவாயா?

கே.—மல்லியப்! அம்மணி! எனக்குத் தெரியாதுங்க. ஐயோ! தங்களுக்கு நடக்கக்கூட சக்தியில்லேயே! பாவம்! ஏன் நடந்து வந்தீங்க? கொஞ்சம் இருங்க; கெஞ்சம் வித்துட்டு கூடவேவந்து விசாரிச்சுச் சொல் றேனுங்க. மல்லியப்!

ல.—அப்பா! வேண்டாம். உன்வேலேயைப்பார். நான் விசாரித்துக் கொண்டே போகிறேன்.

கே.—இல்லிங்க, [நானும் கூடவேவந்து ஊடுகாட்டுவேன். ஆனுப்பாருங்க] இந்தப்பூவை எதினுச்சியும் நாலு பணத்துக்கு வித்துகிட்டு ஊட்டுக்குப்போனு போச்சு, இல்லாட்டி தொடப்பக்கட்டை தான். ரொம்ப சர சங்க! நீங்களே வாங்கிக் கிட்டாலும் சரி. பொற கூட வே. வர்ரேன். மல்லியப்!

ல.—அப்பா! உன்னேத்தாமதிப்பதில்லே. நீ உன் வியா பாரத்தை கவனி. நான் போகிறேன்.

(கொஞ்சதூரம் போகிருள்)

கோபாலராவ் வருகிருன்.

கோ.—மஜதேதே (என்று பாடிக்கொண்டு உற்றுப்பார்த்து நிற்கிருன்). (ஆத்மகதம்) பலஷோக்! பலஷோக்!

ல.—ஐயா, இளவரசரது தோழர் இருப்பிடம் அறிவீரா?

கோ.—(ஆத்ம) என்ன, குயில் தோத்ததுபோ! இள வரசன் தோழன் அஹிம்ஸன் என்று இருந்தானே,—

ல.—என்ன இருந்தான் என்கிறீர்களே? ஆம்; அவர்தான்.

கோ.—(ஆத்ம) என்ன! கண்ணேப் பறிக்கிறது! இல்லே அவர் ஓடிப்போனுரே அதான். பிறகு அவர் இருக்

காரோ செத்தாரோ யார் கண்டார்கள்? அதான் இருந்தானே என்றேன். (மஜதேதே)

ல.—யாரைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்?

கோ.—தெரியும்! தெரியும்! அவரை அறியாதவர் யார்? இளவரசு கல்லியாணம் பண்ணிக்கொள்ள இருந்தாரே அந்தப் பெண்ணே அடிச்சுண்டு போய்ட்டானே அந்த ஆசாமி தானே? தெரியும்! தெரியும்! (ஆத்ம) என்ன டால்வீசுகிறது!

ல.—ஆம், அவர்தான்.

கோ.—அவர் வீடுதானே? (மஜதேதே)

ல.—என்ன பாடுகிறீர்களே?

கோ.—இல்லே பாடிக் கொண்டே, யோசித்துப்பார்த்தேன். (ஆத்ம) சபாஷ்! சபாஷ்!

ல.—தெரிந்ததா?

கோ.—தெரியவில்லே. ஆனல், நான்கூட வேவந்து விசாரித்துச் சொல்லுகிறேன், வாருங்கள்.

ல.—வேண்டாம். நான்விசாரித்துக் கொண்டே போகிறேன்.

கோ.—நான் சொல்வதைக் கொஞ்சம்கவனித்துக் கேட்க வேண்டும்.

ல.—என்ன?

கோ.—கால்நடையாய் ரொம்பசிரமப்பட்டு வந்திருக்காப் போலே இருக்கே! அவர் ஜாகையும் இன்னும் ஒரு மைலுக்கு மேலிருக்குமே!

ல.—இருந்தால்?—

கோ.—நம்மவீடிருக்கு, ரொம்பசௌக்கியம். வீட்டிலேயும் ஒத்தருமில்லே. கொஞ்சம்வந்து—தங்கிட்டு, நாளைப் போகலாமே என்றேன்.

ல.—அடேமூடா.............................. * * *
யாரைப்பார்த்து—என்னவார்த்தை சொன்னாய்? உன் நாக்கை அறுத்தால் என்ன? கேடுகாலம் வந்துவிட்ட தோ? சீ! சீ! போ.

கோ.—என்னம்மா! நீங்களாகக் கூப்பிட்டுப் பேசிவிட்டு என்ன ரொம்ப கோபமாப் பேசுகிறீர்களே? நல்லது கூட்டங் கூடப்போகிறது. போங்க உங்கள் வழியைப் பார்த்துண்டு. (போகிறாள்) ஆ! ஆ! ஜில்! ஜில்! முதலி யார் கிட்டே கொண்டேச் சேத்தா, கேட்டது கொடுப் பார். என்ன பண்ணரது? அதிர்ஷ்டமில்லே. (மஜ தேதே.) (போகிறான்)

திம்மப்பன் வருகிறான்.

ல.—அப்பா இளவரசர் தோழர்?

தி.—எங்கிணச்சியும் கண்டிங்களா?

ல.—ஆனால் அவர் இந்த ஊரிலில்லையோ?

தி.—இல்லிங்க, அதான்கேட்டேன்.

ல.—நீ ஏன் இவ்வளவு ஆவலுடன் கேட்கிறாய்?

தி.—இல்லிங்க, உங்களைப்பார்த்தா ரொம்ப எளியவங்களாட் டியும் தோணுது. அவரைப்பிடிச்சாந்தாக்கா, ரொம்ப லாபம் இருக்குதேன்னேன்!

ல.—என்னலாபம்?

தி.—அவரைக்கண்டுபிடித்தவர்களுக்குப்பதனாயிரம்பொன் எனும் கொடுக்கிறதாகச் சின்னராசு உத்தரவு போட் டிருக்காங்க. அதான் கேட்டேன்.

ல.—ஏன் அப்படி உத்தரவு செய்யவேண்டும்?

தி.—யார் கண்டாங்க? ஆனா, அம்மணி! அந்தப் பொன்னும் வாண்டாம்; அவரைப்பிடிக்கவும்வாணும்.

ல.—ஏன் அப்படி சொல்கிறாய்?

தி.—பாவம்! சின்னராசா ரொம்பரொம்பகோவிச்சுக்கிட்டிருக்காங்களாம். கண்டா, எதிராச்சியும் கொலைசெய்ய உத்தரவுபோட்டா? அவங்களோ ரொம்ப நல்லவங்க; ஏழைங்ககிட்ட ரொம்ப தயவு; ரொம்பதயவு.

ல.—அப்படி எதற்காகக் கோபித்துக்கொள்ளவேணும்? அவர் என்ன குற்றம் செய்தார்?

தி.—யார்கண்டாம்மா? அல்லாம் ராசாங்கத்து ரவசியம். நான் போய்வருகிறேன்; எனக்கு வேலையிருக்கு.

ல.—அப்படியே; போய்வா. (போகிறார்கள்)

சொர்ணம் வருகிறாள்.

ல.—அம்மா! நீயார்? இந்த ஊர்தானா?

சொ.—ஆம் இந்த ஊர்தான்; நான் ஒரு கூலிக்காரி. தங்களுக்கு என்ன செய்யவேண்டும்?

ல.—உனக்கு இளவரசு தோழரிருப்பிடம் தெரியுமா?

சொ.—யார் கண்டாம்மா? அந்தப்பாவியை ஏன்கேக்கிறீங்க? எங்கே தொலைஞ்சானோ? அவன் ஊட்டைக்கூட மூடிட்டாங்க.

ல.—அவர் என்ன செய்துவிட்டார்?

சொ.—என்ன செய்தாங்களா? ஒரு பெண்ணைக் கெடுத்துட்டாரம்மா.

ல.—யாரைக் கெடுத்தார்? எப்பொழுது கெடுத்தார்?

சொ.—கேளுங்கம்மா. இந்தகாட்டிலே இருந்த சாமியார் பொண்ணு ஒண்ணு ;—அறியாப்பொண்ணுங்க. அவ ளைக்கண்ணாளம் பண்ரேனு கூடிட்டு, உட்டுட்டுப்போ ய்ட்டாம்மா பாவி. அந்தப்பொண்ணு என்னாச்சுகங் களோ? ஆத்திலே குளத்திலேதான் உளுந்து செத் திச்சோ என்னமோ ? சாமிக்குதான் தெரியும்.

ல.—உனக்கு தெரியுமா ? யார் சொன்னார்கள் ?

சொ.—எனக்கல்லாம் தெரியுமம்மா. அவளை வச்சிருந் தானே அந்த ஊர்தானுங்க எனக்கு. எங்கக்கா, அந்த ஊடு கூட்டிக்கிட்டிருந்தா, அந்த ஊரிலே போய் கேளுங்க, பச்சைப்புள்ளைகூட சொல்லும்.

ல.—ஏன் உண்மையறியாமல் ஒருவரை தூஷிக்கிறாய் ?

சொ.—இல்லிங்க, எனக்கு என்னாத்துக்குத் தூஷிக்கணும்? அப்படி ஒருபொண்ணை செயலாங்களா? பாவமில்லே?

ல.—அதுகிடக்கு, அவர்வீடு தெரியுமா ?

சொ.—தெரியாதம்மா. நான்போரேனுங்க. (போகிறாள்)

வடிவேலுபிள்ளை வருகிறான்.

வ.—அம்மணி! தாங்கள் யார் ? எந்த ஊர் ?

ல.—நானிந்த ஊரல்ல. இளவரசர் தோழரிருப்பிடம் அறி வீரா ?

வ.—ஏனம்மா கேட்கிறீர்கள் ?

ல.—அவரைப் பார்த்துப் போகவேண்டும்.

வ.—எதற்காக ?

ல.—நான் அவருடைய சமீப பந்து. அவருக்குப் பிராண வியோக காலமென்று தெரிந்து பார்த்துவிட்டுப் போக லாமென்று வந்தேன்.

வ.—(ஆத்ம) இந்தம்மாவாகத்தான் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அம்மணி! என்னுடன்கூட வாருங்கள். நான் அழைத்துச் செல்லுகிறேன். அவர் அரண்மனையில் இருக்கிறார்.

ல.—அவர் இன்னும் உயிருடன் இருக்கிறாரா? பேசுகிறாரா?

வ.—இருக்கிறார்; பேசுகிறார். ஒன்றும்அதைரியப்படவேண்டாம். (அரண்மனைவாயில் வந்து) உட்செல்லுவோம்.

ல.—அப்படியே. இதென்ன அரண்மனைக்குள் அழைத்துச் செல்லுகிறீர்களே ?

வ.—இங்குதானிருக்கிறார்.

ல.—உட்செல்லச் சரீரம் நடுங்குகிறதே! எப்படியிருக்குமோ? நல்லப் பிரக்ஞையிருக்கிறதா? நன்றாய்த் தெளிவாய்ப் பேசுகிறாரா?

வ.—அம்மணி! மிகவும் ஜாஸ்திதான். ஆனால், நல்ல ஞாபகமிருக்கிறது. விழித்துக்கொள்ளும் பொழுதெல்லாம், லலிதா! லலிதா! என்கிறார்.

ல.—ஐயோ! நான் என்னசெய்வேன்? இந்தக்கோலத்திலா நான் உங்களைப் பார்க்கவேண்டும்? அப்பா! சீக்கிரம் அழைத்துச் செல்லு. அங்கு இன்னும் யார் இருக்கிறார்கள் ?

வ.—அம்மா! இளவரசும் மகாராணியும் பக்கத்திலேயே இருக்கிறார்கள்.

ல.—ஐய்யய்யோ! அவர்களை எப்படிகாண்பது? (ஆத்ம) என்மீது மிகச் சினங்கொண்டிருப்பார்களே! ஆயினும் போய்த்தான் தீரவேண்டும். என்னசெய்வது? அப்பா சீக்கிரம்நட. (போகிறார்கள்.)

ல.—எதற்காக என்னை இங்கு கொண்டுவந்தார்கள்? என் பிராணநாதரை நான் இன்னும் காணவில்லையே போனவன் இன்னும் வரவில்லையே!

வ.—(திரும்பிவந்து) அம்மணி! இளவரசர் உத்தரவுப்படி தாங்கள் கொஞ்சநேரம் நான் காண்பிக்கும் அறையில் தங்கியிருக்கவேண்டும். அஹிம்ஸருக்கு இனி யாதொருபயமுமில்லையாம். ஆனால் தாங்கள் திடீரென்று வரக்கூடாதாம். அப்படி வைத்தியர் உத்தரவாம். ஆகையால் நீங்கள் வந்துவிட்டதாய்மட்டும் அவரிடத்தில் தெரிவித்திருக்கிறோம்.

ல.—அப்படியாயின் என்னை வேண்டி, தாங்கள் ஓர் உபகாரம் செய்யவேண்டும். அவரறியாது நான் அவர் முகத்தை ஒருமுறை பார்த்துவிட்டுத் திரும்பி விடுகிறேன். போதும். இந்த உபகாரம் செய்யலாகாதா?

வ.—அப்படியல்ல. அரண்மனையில் உத்தரவின்றி ஒன்றும் செய்யலாகாது. தயவு செய்து இன்னும் அரை நாழிகைதான், காத்திருங்கள். பிறகு அழைத்துச் செல்லுகிறேன். அதற்குள் தாங்களும் சற்று இளைப்பாருங்கள். (போகிறான்)

ல.—என்ன ஒன்றும் புரியவில்லையே? ஆனால் உயிருக்கு பயமில்லை என்று நல்லசெய்தி சொன்னானே, அதுவே போதாதா? இனி இங்கு நமக்கென்ன வேலை? எப்படியாவது அவரறியாது அவரது முகத்தை ஒருமுறை தரிசித்துவிட்டு, பிறகு செல்ல என்ன செய்யலாம்? அவர் என்னை எவ்வளவு கொடுமை பண்ணினாலும், இவ்வளவுதூரம் வந்த பிறகு ஒருமுறை பார்த்தால் திருப்தியாயிருக்கும்போலிருக்கிறது. எனது வெட்

கங்கெட்ட மனம் அவரிடத்தில் இன்னும் ஆசை வைக்கிறதே! என்ன ஆச்சரியம்! அவர் என்னைக் கண்டால், என்னை ஏமாற்றிவிட முயலுவார். நானும் ஏமாந்து விடுவேன். ஆகையால்தான் அவர் என்னைப் பார்க்கக்கூடாது. என்ன செய்யலாம்? ஒன்றுந்தோன் றவில்லை. கொஞ்சம் பொறுத்துத்தான் ஆகவேண்டும்.

## அங்கம்—ஐந்து

### 1-வது காக்ஷி

இடம்—அரண்மனையில் ஓர் அறை

காலம்—மாலை.

லலிதை ஓர் ஆஸனத்தின்மீது சாய்ந்திருக்கிறாள்.

ல.—யோசித்துப் பார்க்குமளவில், இதெல்லாம் என்ன விநோதமாயிருக்கிறது! நான் வீதியின் வழியாய் வரும்பொழுது நாலுபேர் நாலுவிதமாய்ச் சொல்ல, என்னை அழைத்து வந்தவனோ மிகவும் ஜாஸ்தியாய் இருக்கிறதென்றும், ஆனால் இனி பயமில்லையென்றும் சொன்னான். ஒருவன் இளவரசர் இவரைக் கொடுந்தண் டனைக் குட்படுத்துவார் என்றான். இங்கேயோ இவர் கள் இளவரசரும் மகாராணியும் பக்கத்தில் உட்கார்ந் திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஒருக்கால் இதிலெல்லாம் ஏதாவது சூதிருக்குமோ? ஒருவேளை ஸ்ரீகரன் இங்கே என்னைச் சூதாக வரவழைத் திருப் பனோ? ஒன்றுந் தெரியவில்லையே! ஆனால் என்பதி யிருக்கு மிடத்து, மற்றவர்களிடத்திலிருந்து ஒன்றும் மோசம் நேராது. மேலும் ஸ்ரீகரர் அப்படிக்கெல்லாம்

செய்யத்தக்கவரல்ல. எனது பதியைப்போய்ப்பார்ப்போ மென்ருல், பெரிய நகர் போன்ற இந்த அரண்மனைக் குள் எங்குபோவது,எங்குவருவது, எங்கு தேடுவது? ஒன்றும் சாத்தியமில்லை. அதோ யாரோ ஒருவள் இங்கு நோக்கிவருகிருள். விசாரித்துப்பார்ப்போம்.

ஒரு தோழிவருகிருள்.

ல.—அம்மா! இங்கு சற்று வரலாமோ?

தோ.—அம்மணி! இங்கு தான் வருகிறேன். தங்களுக்கு சிரமபரிகாரமாகக் கொஞ்சம் பலகாரம் கொண்டுவந் திருக்கிறேன், மகாராணியின் உத்தரவுப்படி.

ல.—மிகவும் வந்தனம். எனக்குக்கொஞ்சமும் தேவை யில்லை. இப்பொழுது எனக்கு ஒன்றும் செல்லமாட் டாது. அம்மா! இள்வரசின் தோழருக்கு எப்படி யிருக்கிறது? உனக்கேதாவது தெரியுமா?

தோ.—அம்மணி! இங்கிருக்கிருரா அவர்? எனக்கு ஒன் றுந் தெரியாதே! அவரைக் கண்டுபிடித்து வரும்படி யல்லவோ கடுமையான உத்தரவு பிறந்திருக்கிறது!

ல.—(ஆத்ம) ஐயோ! இதென்ன இது? நான் பூலோகத்தில் தான் இருக்கிறேனு அல்லது ஏதாவது பேயுலக மடைந்தேனு? இங்குதானிருப்பதாக என்னை ஒரு வன் அழைத்து வந்தான். இவளோ அவர் இங்கு இருக்கிருரா என்று கேட்கிருள். எல்லாம் ஏதோ ஒரு பெரு மோசமாயிருக்கிறது. இவ்விடம் விட்டுச் சீக்கிரம் வெளிப்படவேண்டும்

அம்மா! என்னை இங்கே யாரோ ஒருவன் மோ சக்கருத்துடன் கொண்டு வந்து சேர்த்திருக்கிருன். அறியாமையால் அகப்பட்டுக் கொண்டேன். என்னை

எப்படியாவது வெளியில் அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மிகப்புண்ணிய முண்டு. ஜகதீசா! இதெல்லாம் உனது திருவிளையாட்டா?

மற்றொருதோழி வருகிறாள்.

தோ.—அம்மா! இளவரசர் தம்முடைய அன்னையுடன் இங்குவருவதாகத் தெரிவிக்கிறார்கள். இப்பொழுது வரலாமா?

ல.—வரலாம்.யாதுந்தடையில்லை (தோழிகள்போகிறார்கள்)

ஐயோ! இவர்கள் எதற்காகவருகிறார்கள்? எனது பர்த்தாவை எப்பொழுது பார்ப்பேன்?

ஸ்ரீகரனும் மாதங்கியும் வருகிறார்கள்.

ஸ்ரீ.—லலிதா! முதலில் நீ என்னை மன்னிக்கவேண்டும். நான் உன்னை மோசக்கருத்தோடு இங்குவரவழைத்த தாய் நினைக்கவேண்டாம். என்மீது யாதும் கோபிக்கா மலிருந்து, சற்று பொறுமையாய் நான் சொல்வதைக் கேட்க வேண்டும். உனக்கு அஹிம்ஸனிடத்துக் காதல் ஏற்பட்ட விஷயமும் நானறிவேன். உன்னிடத்து எனக்கு ஒருசகோதரி பாவமே தவிர வேறில்லை என்பதை நிச்சயமாய் நம்பு. எனது மனதையும் மற்றொருவள் கவர்ந்து கொண்டாள். அப்படித்தானே, கண்மணி! உனது காதலனும் சௌக்கியமாயிருக்கிறான். நீ யாதும் சஞ்சலமடைய வேண்டியதில்லை. உன்னை வரவழைத்த காரணம் இன்னதென்று இதோ தெரிவிக்கிறேன்.

ல.—அரசே! தாங்களும் என்னிடத்தில் தயவுகூர்ந்து நான் செய்ததாக எண்ணிய அபராதங்களை யெல்லாம் க்ஷமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளு

கிறேன். தாங்கள் மன்னிப்பு கேட்க வேண்டிய அம்சம் யாது மில்லை.

ஸ்ரீ.—என் பிரியை சொல்வதுபோல் உன்மீது குற்றமிருப்பதாக நான் கொஞ்சமும் எண்ணவில்லை. அது போகட்டும். வேறுவிஷயமாய் நான் இப்பொழுது உன்னை இங்கு தருவித்தேன்.

ல.—அரசே! இந்த இராஜகுமாரியை, நான் யாரென்று கேட்கலாமா? தங்களுடைய காதலி என்று மட்டும் தெரிந்துகொண்டேன். விவாகமாய் விட்டதா?

ஸ்ரீ.—இவள் புகார் நகரத்தரசன் மகள். என்னை விவாகம் செய்து கொள்வதாய் ஒப்புக் கொண்டிருக்கிறாள். உன்னால் தான் தாமதம்.

ல.—அப்படியா? புகார் நகரமா? புகார் நகரமா? நிஜந்தானா?

ஸ்ரீ.—ஆம். ஏன்? என்ன?

ல.—ரொம்பசந்தோஷம்! ரொம்பசந்தோஷம்! விபரம் பின்பு சொல்லுகிறேன். என்னால் எப்படி தாமதம்? இதென்ன வேடிக்கையாய் இருக்கிறது!

ஸ்ரீ.—லலிதா! இதோ செல்லுகிறேன். அதற்கு முன், நீ என் மீது வைத்த சகோதரபாவம் உண்மையாயின் நான் கேட்டபிறகு ஒன்றும் ஒளிக்காமல், உனக்கும் அஹிம்ஸனுக்கும் நடந்த விருத்தாந்த மெல்லாவற்றையும்என்னிடம் தெரிவிக்கவேண்டும். அவன் என் விஷயமாய் நடந்து கொண்டதை நான் கவனிக்கவில்லை. ஆனால் உன் விஷயமாய் நடந்துகொண்டதை முன்னிட்டு அவன் பெரிய குற்றவாளியாகிறான். அவனுக்குச் சட்டப்படி தண்டனை விதிக்கவேண்டியதாயிருக்கிறது. தயவுசெய்து உண்மையெல்லாம்

உரைப்பாய். உன்னிடத்து எவ்வாறு நடந்து வந்து, கடைசியாக உன்னையும் நிராகரித்து உன் வாழ்நாட்களெல்லாம் தொலைத்தான்?

ல.—அரசே! முறைப்படி கைபிடித்த கணவன்மீது, குற்றம் சாட்டுபவள் பத்தினியல்ல. ஆகவே, அவர்மீது நான் குற்றம் சாட்டுவேனென்று தாங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்க நியாயமில்லை. அவரது காதலைப் பெற்றுஅவருடன்கூடி இன்புற நான் கொடுத்துவைக்காமற் போனாலும், அது எனது ஜன்மாந்தரீயமான கரும பலனே ஒழிய, அவரைத் தவிர்த்து, எனக்கு வேறுதெய்வமுமுண்டோ?

மா.—பிராணநாதா! பார்த்தீர்களா? நான் அப்பொழுதே சொல்லவில்லையா? இதில் யாரோ ஒருவன் ஏதோ அக்கரைகொண்டு இப்படிக்கெல்லாம் முடிந்துவிட்டான் என்பதற்குக் கொஞ்சமும் சமுசயமில்லை.

ஸ்ரீ.—மாதங்கி! கொஞ்சம் பொறு. ஆனால், லலிதா! உன்னை முறைப்படி விவாகம் செய்துகொண்டானா?

மா.—இதிலென்ன இன்னும் சந்தேகமா?

ஸ்ரீ.—விவாகம் எப்படி நடந்தது? எங்கேநடந்தது? யார் சாக்ஷிகள்? எல்லாவற்றையும் கொஞ்சம்தெளிவாயுரைக்கலாகாதா?

ல.—எங்களது விவாகத்திற்குப் பகவானும், நானிருந்த நந்தவனத்திலுள்ள பூமலர்களுந்தான் சாக்ஷிகள். அவர் என்னைக் காந்தர்வமுறைப்படி கைபிடித்ததும் சுற்றுமுள்ள மொக்குகளெல்லாம் விகசரித்தன. வேறு சாக்ஷிகள்கிடையா.

ஸ்ரீ.—இதுஉண்மைதானா? நான் எவ்வாறு நம்புவது?

ல.—வேறுவிதம் தங்கள் சமுசயத்தைப் போக்க எனக்கு சக்திவாய்க்கவில்லை. அவரோ என்னை விவாகம் செய்து கொண்டதாக ஒருநாளும் ஒப்புக்கொள்ளமாட்டார் என்று எனக்குத்தெரியும். இருந்தாலும் வேறுசாக்ஷி கள் எனக்கில்லை.

ஸ்ரீ.—இது என்னவிநோதம்! எல்லாம் கண்கட்டி வித்தை போலல்லவோ இருக்கிறது? அஹிம்ஸனும் உன்னை விவாகம்செய்து கொண்டதாகத்தான் சாதிக்கிறான். ஆயினும் தன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டு அவ்விதம் சாதிக்கிறான் என்று நினைத்தேன். நீயும் இப்பொழுது அப்படியே உறுதியாய்ச் சொல்ல, எனக்கு ஒன்றும் புரியவில்லை.

ல.—அவராவது ஒப்புக்கொள்ளவாவது? என்னை எதற்காக ஏமாற்றப் பார்க்கிறீர்கள்? அவர் என்னை ஒருநாளும் விவாகமான பத்தினி என்று ஒப்புக்கொள்ளமாட் டார் என்று எனக்குத் தெரியும்.

மா.—நாதா! எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? எவ்வளவு பெரியதவறு செய்தீர்கள்? இன்னும் எவ்வளவு பெரிய தவறு செய்ய இருந்தீர்கள்? நல்லவேளையாய்இப்பொழு தாவது உண்மை எல்லாம் வெளியாயிற்றே! அந்த கலகக்காரன் எவ்வளவு யுக்தியாயும், பொருத்தமாயும் முடிந்திருக்கிறான்!

ஸ்ரீ.—அப்படித்தான் தோன்றுகிறது. லலிதா! அவன் உன் னுடைய முறைப்படி ஏற்பட்டகணவனாயின் நீயும் அவனும் எப்படி பிரியும்படி நேர்ந்தது? தயவுசெய்து சொல்வாய்.

ல.—ஏன் வீணில் அந்தக்கதையையெல்லாம் தொடர்ந்து கேட்கிறீர்கள் ? அதெல்லாம் சொல்லி இப்பொழுது என்ன ஆகவேண்டும் ?

மா.—ஒன்றுமில்லை அக்கா, அவருடைய நண்பர், தங்களை ஏதோவிவாகம் செய்துகொள்வதாய் ஒப்புக்கொண்டு அப்படிசெய்யாமல் தங்களை ஏமாற்றிவிட்டுக் கூடின தாயும், நீங்கள் அதிலிருந்து ஓடிவிட்டதாயும் நினைத்து, தங்களது வாழ்நாட்களைக் கெடுத்த குற்றத்திற்காக, உமது பதியை உக்கிரமாய் சிக்ஷிக்கத் தீர்மானித்திருந் தார். இப்பொழுதோ தாமும் தங்கள் பதியும் ஒன்ருக விவாகம் நடந்தது என்று சொல்ல, ஒன்றும் புரி யாமல் சிலைபோல் நிற்கிருர். இதில் அவமானம் வரும் என்று சொன்னேனேகேட்டீர்களா ? அக்கா ! நான் அப்பொழுதே விவாகமாயிருக்க வேண்டுமென்று சொன்னேன். அவர் இல்லை என்ருர். நான் உங்களை வரவழைத்து நிரூபிக்கிறேன் என்றும் அதற்குப் பிறகுதான் நான் விவாகம் செய்துகொள்வேனென் றும் சொன்னேன். நான் குழந்தைஎன்று என்வார்த் தையைத் தள்ளினர். நாதா! இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள் ? இப்பொழுதே சென்று, எப்படியா வது மன்னிக்கும்படி மித்திரரைக் கேட்டுக்கொள்ளுங் கள்.

ஸ்ரீ.—லலிதா! அப்படியாயின், நீ ஏன் ஓடிப்போக வேண் டும்? அதைத் தெரிவித்தால் தான் எனக்கு சந்தேகம் தெளிவடையும்.

ல.—சொல்லத்தான் வேண்டுமோ?

மா.—ஆம். இல்லாவிடில் இவருக்குப் பைத்தியம் பிடித்து விடும்போலிருக்கிறது!

ல.—நல்லது. சொல்லுகிறேன் கேளுங்கள். என்னை முறைப் படி மணந்தவுடன், உண்மை யெல்லாம், தங்களிடம் வந்து தெரிவித்து விடுவதுதான் உசித மென்று தோன்றி அப்படியே தங்களிடம் தெரிவிக்கும்படி நான் கேட்டுக்கொண்டதற்கு, தங்களுடைய தேகஸ்திதியை உத்தேசித்து, அச்சமயம் தெரிவிக்கலாகாதென்றும், பிறகு கொஞ்சகாலங்கழித்துத் தெரிவிக்கலாமென்றும், விவாகத்தைக் கொஞ்சகாலம் மறைத்து வைத்திருப் பது தான் சரியென்றும் அவர் அபிப்பிராயங் கொண் டார். அதை அனுசரித்துக் கொஞ்சகாலம் அவருக்குச் சொந்தமாயுள்ள வேறு இடத்தில் ஒரு மாளிகையில் என்னை வைத்துவிட்டு, கொஞ்சகால மிங்குமங்குமாக இருந்துவந்தார். தங்களுக்கு சௌக்கியமானதும் விவாகத்தை பகிரங்கப்படுத்துவதாய்ச் சொன்னவர் அவ்வாறு செய்யாமல் காலஹரணம் செய்து கொண் டேவந்தார். தங்களுக்கு சௌக்கியமாகியும், வேறு இடங்களில் காலங்கழித்து வந்தாரென்று நான் தெரி ந்து கொண்டேன். பிறகு நானும் அறியாத ஊரில் வசித்து வர, ஊராரும் என்னைக் கொஞ்சம் அவதூரா கப் பேசத் தொடங்கினர்கள் என்று தெரிந்தது. உட னே வந்து விவாகத்தை பகிரங்கம் செய்ய வேண்டு மென்று நான் எழுதியதற்கு, உடனே வருவதாக பதில் எழுதியவர் வரவேயில்லை. காத்திருந்தும் வராதிருக்க, தங்களுக்கும் அனுகூலமாயிருக்க, என்னைத்திரஸ் காரம் செய்யத் தீர்மானித்து விட்டார் என்று அறிந்து கொண்டு நான் அவருடைய இஷ்டத்திற்குக் குந்தகமாய் அங்கிருந்துவருவது சரியல்லஎன்றுநினைத்துத் தந்தை யிடம் காசிக்ஷேத்திரம் போய்ச்சேர்ந்தேன். தங்கள்

நண்பருக்குப் பிராண வியோககாலமென்று தண்டோராமூலமாய்த் தெரிந்து எனதுகடமைகளை ஒழிக்க வேண்டுமென்றெண்ணி இங்கே வந்து சேர்ந்தேன். இப்பொழுது அவர் சௌக்கியக் குறைவின்றி இருப்பதாய் தெரிந்து கொண்டேன். இங்கு நான் வரும்படி நேர்ந்ததிலும் எனக்கு வருத்தமில்லை. எனக்கு விடையளியுங்கள். நான் வந்திருப்பதாகத் தங்கள் நண்பர் அறிவாராயின் நான் ஏதாவது தொந்தரவு கொடுப்பேனோ என்று கலங்குவார். ஆகையால் சீக்கிரம் உத்தரவு கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ.—நீ ஓடிப் போனதற்கு இன்னும் காரணம் ஏறபடவில்லையே? நீ ஏன் இராஜாங்கத்தில் வந்து, என்னிடமாவது மகாராஜாவினிடத்திலாவது தெரிவித்திருக்கலாகாது?

ல.—இளவரசே! என்னுடைய சுபாவத்தைத் தாங்கள் இன்னுமறியீர் போலும்! நான் அப்படிக் கொல்லாம் செய்யத்தக்கவளல்ல. அவருடைய காதலே பொய்யாகுமாயின், பிறகு எனக்காகவேண்டியதென்ன? மேலும் பதிவிரதைகள் பர்த்தாவின் மீது பழிசாட்டலாகுமோ?

மா.—மேலும் தங்களுக்கும் மித்திருக்கும் உள்ள நட்புக்குத் தாங்கள் அக்காள் வார்த்தைகளை நம்புவீர்கள் என்று எப்படி நினைக்கிறது? கோபங்கொண்டு இவளுக்கு வேண்டுமென்று நினைத்திருந்தாலும், நினைத்திருப்பீர்கள். ஊராரும் மித்திரர் வார்த்தையைத் தள்ளி இவள் வார்த்தையை எப்படி ஏற்றுக்கொள்வார்கள்?

அதிருக்கட்டும், அக்கா! தங்கள் பர்த்தா தங்களை மண மார பத்தினி என்று ஒப்புக்கொள்ளமாட்டாரென்று சொன்னீர்களே? ஏன் அப்படிச் சொன்னீர்கள்?

ல.—குழந்தாய்! இராஜரீகத்தில் உயர்ந்த பதவிகளுக்கு ஆசைப்பட்டுக்கொண்டிருப்பவர் ஏழையாகிய என்னை எப்படி தன் பத்தினி என்று ஒப்புக்கொள்வது? உனக்கு இவ்வளவு தெரியாதா? அப்பதவியிலுள்ள வர்கள் தனக்கு அந்தஸ்தில் சமானமானவர்களை யல்ல வோ பத்தினியாகக் கொள்ளவேண்டும்?

மா.—தங்கள் பதியின் குணத்தை நான் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிற மட்டில், அவர் அப்படி செய்யத் தக்கவரல்லவென்று நான் நினைக்கிறேன். என்னை வேண்டி தயவுசெய்து, அவர் தங்களுக்குக் கடைசி யாக எழுதியலிகதம் இருந்தால், கொடுக்கலாமென்றால் கொடுங்கள்.

ல.—இதோ அவர் கடைசியாக எழுதிய கடிதம் இருக்கி றது. அதை மாத்திரம் ஒரு ஞாபகமாக வைத்திருக்கி றேன். இதில் எவ்வளவு நம்பிக்கை வரும்படி எழுதி யிருக்கிறார் பார்.

மா.—நாதா! இந்தத் தேதியை கவனியுங்கள். அந்தத் தேதி யில் தங்கள் தேகஸ்திதி எப்படி யிருந்தது?

ஸ்ரீ.—அன்றையதினம் நோய் அதிகரித்து மிகக் கடுமை யாய் இருந்தது.

மா.—அக்கா! இந்தக் கடிதம் எழுதும் காலத்திற்கு முன்ன தாகவே இளவரசுக்கு வியாதி அனுகூலமாகி விட்ட தென்று சொன்னீர்களல்லவா?

ல.—ஆம். அதற்கு இரண்டு மூன்றுதினம் முதல் சௌக்கியத்திற்கு வந்துவிட்டதென்று நானறிந்து கொண்டேன்.

மா.—நாதா! பார்த்தீர்களா? இன்னும் பாருங்கள். இந்தக் கடிதத்தின் தேதிக்குப் பிறகு தங்களுடைய தேகஸ்திதியைப்பற்றிச் சொல்லுங்கள்; நன்றுய் நினைத்துச் சொல்லுங்கள்.

ஸ்ரீ.—அன்றையதினம் இரவு எனக்கு நோய் அதிகரித்து, எல்லோருக்கும் கவலைமேலிட்டு வைத்தியர்கூட இன்னும் மூன்றுநாள் அதிகாரம் என்றும், அஹிம்ஸன் எனது அறையை விட்டு அகலவே கூடாதென்றும் கட்டளையிட்டார்.

மா.—ஆகவே, இந்தக் கடிதம் எழுதினதினத்திலும், பிறகு மூன்றுநாளும், உங்கள் நண்பர் உங்களைவிட்டுப் பிரியவேயில்லை?

ஸ்ரீ.—ஆம். பிரியவே இல்லை; ஒரு நிமிஷங் கூடப் பிரியவில்லை.

ல.—இது என்ன! நிஜந்தானு? நான் தெரிந்து கொண்ட மட்டில் அப்படிக்கல்லவே! நான் தீர விசாரித்துப் பிறகு தானே தந்தையிடம் போகத் தீர்மானித்தேன்!

ஸ்ரீ.—தேதியில் யாதும் வித்தியாசமில்லை. இதோ பார்த்தனையா? உன்னைக் கண்டதுமுதல், நடந்ததை எல்லாம் தேதிவாரியாகக் குறித்து வைத்திருக்கிறேன். உனக்கு யார் சொன்னது?

ல.—எல்லாம் ரணபாஸ்கரன் மூலமாய்த் தெரிந்துகொண்டேன். அவன்தான் என் நிலைக்கிரங்கி தங்களது நண்பர், முன் சரித்திரத்தைப்பற்றியும், நான் புறப்படுவ

தற்கு நன்ருய் எடுத்துச்சொன்னுர். அவர் பொய் சொல்லக் கொஞ்சமும் நியாயமில்லையே!

மா.—வேடிக்கை யெல்லாம் பார்த்தீர்களா? தாங்களும் ரணபாஸ்கரன் அரிச்சந்திரன் என்று சொன்னீர்களே!

ஸ்ரீ.—ஆம் கண்ணே! அந்தப்பாபிதான் இப்படிக்கெல்லாம் செய்து விட்டான்.

ல.—ஆனுல் உண்மையிலேயே, தங்களுக்கு அந்தச் சமய மெல்லாம் அசௌக்கியந் தானே?

ஸ்ரீ.—பெண்ணே! நான் சொல்லுவது பிரமாணம். அவனை வரவழைத்து சீக்கிரம் தக்கபடி சிக்ஷிக்கிறேன்.

ல.—அவன் எப்படியாவது போகிருன். பகவான் சிக்ஷை செய்யட்டும். தாங்கள் விட்டுவிடுவதே மேல்.

ஸ்ரீ.—லலிதா! என்னென்ன செய்ய இருந்தேன்? எல்லா வற்றி னின்றும் கண்மணி மாதங்கி தான் தப்புவித்தாள். மாதங்கி! நம்முடைய விவாகத்திற்கு இனி நாள் குறிப்பிடலாமே! என்ன சொல்லுகிருய்? இனித் தாமதியேன்.

மா.—எனக்குத் தாயில்லாததற்கு, அக்காளைக்கேட்டுச் செய்யுங்கள்.

ல.—கண்ணே! தங்காய்! எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. பகவானைக் குறித்து உண்மையிலேயே பக்தி செய்தால், அவர் கைவிடுவதில்லை என்பது மாத்திரம் நிச்சயம். அரசே! இன்னும் கொஞ்சநேரம் கழித்து உங்களுடைய காதலியை அனுப்புகிறேன். தயவுசெய்து கொஞ்சம் உத்தரவு கொடுக்கவேண்டும்.

ஸ்ரீ.—நல்லது நானும் என் நேசனைப்பார்த்து வருகிறேன்.

ல.—எங்கிருக்கிறார்?

ஸ்ரீ.—சீக்கிரம் அழைத்துச்செல்லுகிறேன். மாதங்கி! நான் போகவா? (மாதங்கியிடம் தனித்துப் பேசிவிட்டுப் போகிறான்.)

ல.—தங்காய்! தங்காய்! என்றுகட்டிக்கொள்ளுகிறாள்.

மா.—என்னக்கா இது? என்னசமாசாரம்? நானல்ல அஹிம்ஸா.

ல.—என்ன பரிகசிக்கிறாயே? நான் யார் தெரியுமா? உன் அக்காதான். உயிர் உறவுமறியுமாதால், என்னை அறியாமலே, எனக்காக நீ இவ்வளவு பாடுபட்டிருக்கிறாய். என்னையும் முதலில் அக்காவென்றழைத்தாய்.

மா.—அதென்ன அது? விபரமாய்ச்சொல்லுங்கள்.

ல.—ஸ்ரீசாபவர்ம ராஜன் பெண்தானே.

மா.—ஆம்.

ல.—அவருடைய ஜேஷ்ட பிதா ஆதித்தியவர்மன் என்று இருந்தார்.

மா.—ஆம். கேள்வியுண்டு. அவர் ஏதோ தன் மனைவி யிறந்ததும், இராஜ்யத்தை விட்டுவிட்டு ஒருதுறவியுடன்கூட சென்றதாயும் நான்கு வயதுள்ள தன் பெண்ணைமட்டும் விட்டுவிட்டுப் பிரிய சம்மதமில்லாமல் எடுத்துக்கொண்டு எங்கேயோ ஒருவரிடமும் சொல்லாமல் போய்விட்டதாயும் அவர்கள் இரண்டுபேரும் இறந்திருக்க வேண்டும் என்றும், அநேக இடங்களில் அநேகமுறை தேடிப் பார்த்ததாகவும் அண்ணா சொல்லியிருக்கிறார்.

ல.—ஆம். அண்ணா இறந்தது வாஸ்தவந்தான். காட்டுக்கு வந்து ஆறுமாதத்திற்கெல்லாம் இறந்துவிட்டார் அன்னாகாரம் உட்கொள்ளாமல். என்னை மட்டும் தன் குருவாகிய ஒரு துறவியிடம் ஒப்புவித்தார். அவரால் நான் வளர்க்கப்பட்டு வந்தேன். ஒருக்கால் என்னை இராஜ்யத்திற்குக் கொண்டுபோய் விடுவதாய்ச் சொன்னார். ஆனால் நான் அவர்வழியேவளர்க்கப்பட்டு வந்ததாலும், வைராக்கிய மார்க்கத்தை அனுஷ்டிக்க ஆசைகொண்டிருந்ததாலும் நான் உடன்படவில்லை. என்னுடைய சரித்திரத்தையெல்லாம் என்தந்தையே எழுதி வைத்திருக்கிறார். இன்னும் அநேக அடையாளங்களிருக்கின்றன.

மா.—அப்படியானால்! அக்கா, இப்பொழுதேஅண்ணாவிடம் தெரிவித்துத் தங்களுடைய இராஜ்ஜியத்தைத் தங்களிடம் ஒப்புவிக்கும்படி செய்கிறேன்.

ல.—இதற்காகவா நான் இதெல்லாம் சொன்னேனென்று நினைத்தாய்? எனக்கு ஒருக்காலும் வேண்டுவதில்லை. இராஜ்ஜியத்தில் இருந்தால் நான் கரையேறிய மீன் போல இறந்துவிடுவேன்.

மா.—அக்கா! அக்கா அக்காவென்று கூப்பிட எனக்கு எவ்வளவு ஆசையாயிருக்கிறது! அக்காவென்றாவது அம்மாவென்றாவது நான் கூப்பிட்டறியேனே!

ல.—அப்படித்தான் நானும்.

மா.—நல்லது அக்கா, அண்ணாவிடம் போவோம். வா.

ல.—இதோ உன் நாதன் நம்மை அழைத்து வரும்படி உத்தரவனுப்பி யிருக்கிறார். பிறகு போவோம் அண்ணாவிடம். (சேவகன் வருகிறான்.)

சே.—இளவரசு அழைத்துவரச் சொன்னார்கள்.

மா.—நல்லது. வா, அக்கா.

ல.—நானெதற்காக?

மா.—வா சொல்லுகிறேன். (போகிறார்கள்)

## அங்கம்—ஐந்து.

2-வது காக்ஷி

இடம்—சிறைச்சாலை.

காலம்—முன்னிரவு.

அஹிம்ஸன் தரையில் உட்கார்ந்திருக்கிறான்.

அ.—ஸ்ரீகரன் எதற்காக இந்த வேளையில், வருவதாகச் சொல்லியனுப்புகிறான்? கொஞ்சம் உறங்கலாமென்றிருக்க, சேவகன் வந்து இளவரசு அவசரமாக வருவதாய்த்தெரிவிக்கிறான். எவ்வளவுநாள் இப்படி சிறைச்சாலையில், விசாரணையின்றியும் என்னகுற்றம் செய்தேன் என்று தெரிவிக்கப்படாமலும் வாசம் செய்துவருகிறது? ஏதாவது, விசாரிக்காமல் போனாலும் ஒருமுடிவு செய்துவிட்டால் போதும். சீக்கிரத்தில் ஏதாவது ஒருமுடிவு செய்து விடும்படியாகவாவது கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீகரன் வருகிறான்.

ஸ்ரீ.—(அஹிம்ஸனை அணைந்துகொண்டு) நான் செய்த அபராதங்களையெல்லாம், நீ மன்னிப்பாயாக. நான் கேவலம் அறியாமையால் உன்னை எவ்வாறு தண்டிக்க இருந்தேன்! உன்மீது எவ்வாறு குற்றம் சாட்ட

இருந்தேன்! உன்மீது எவ்வளவு பெரியபழியைத் தூக்கி வைக்க இருந்தேன்! ஐயோ! என்ன பாபம் செய்யத்துணிந்து விட்டேன்! அந்தப் பாபி ரண பாஸ்கரன், வெகு பொருத்தமாயும் கோர்வையாயும் உண்மைபோல எனக்குரையேற்றி, என்மனதை முற்றிலும் கரைத்துவிட்டான். அதுபோலவே உன் மனேவியின் மனதையும் கலேத்து, மூன்று பேரும் ஒருவரை யொருவர் காணுதபடி செய்துவிட்டான். அந்தத்துரோகி எங்கேயோ ஓடிவிட்டானும். இல்லா விடில் அவனே இந்நேரம் சித்திரைவதைசெய்து, காக்கைக்கும் கழுகுக்கும் இரையாக்கி யிருப்பேன்.

அப்பா! அஹிம்ஸா! நான் அன்றையதினம் உன்னேத் திட்டியபொழுது, நீ சொன்னதெல்லாம் பொய்யென் றும், உன்னேக்காத்துக் கொள்ளும்பொருட்டுப் பொய் பேசினுய் என்றும் நினேத்தேன். எல்லாம் நிஜ மென்று தெரிந்தபின், நீ சொன்னபடி பச்சாதாபம், என்னே எவ்வாறு வருத்துகிறது! அஹிம்ஸா! என்ன, ஒன்றும் மறுமொழிகூருமல் நிற்கிருய்! நான் குழந்தையாயிருந்ததுமுதல், என் முன்கோபத்தை எல்லாம் எவ்வாறு பொறுத்து வந்திருக்கிருய்? அது போலவே, இப்பொழுதும் என்னேமன்னித்து விடலா காதா? மன்னித்ததாக ஒரு வார்த்தை சொல்ல லாகாதா? நீ மன்னிக்காவிடில் இதோ உனது பாதங் களில் வீழ்ந்து உயிர்விடுவேன்.

அ.—என் கண்ணே! எழுந்திரு! எழுந்திரு! உன்னேயும் உனதன்னேயையும், இஜ்ஜன்மத்தில் மறுபடியும் அடையப்பெற்றேனே! நீயல்லவோ நான்செய்தபிழை யையெல்லாம் க்ஷமித்தருளவேண்டும்? நான் உன்னி

டத்து என்விவாகத்தை ஒளித்த விஷயத்தை நீ சட்டைசெய்யலாகாது. உனது கேவலமான தேகஸ்திதியை உத்தேசித்து அக்காலம் உண்மையைத்தெரிவிக்கத்துணியவில்லை. எல்லாம் பின்னுரைத்து விடலாமென்று இருந்துவந்தேனே ஒழிய வேறில்லை. ஐயோ! நீ கண்ணீர்விட நான் சகிக்கிப்பேனோ? கண்ணைத்துடைத்துக்கொள்.

ஸ்ரீ.—ஐயோ! அஹிம்ஸா! இக்கைகள் பாலியத்தில் எவ்வளவு முறை நான் வருமளவும் உயர்ந்ததின்பண்டங்களை மூடிவைத்திருக்கின்றன? என்னை எவ்வளவு அடங்கா ஆசையுடன் அணைந்திருக்கின்றன? என்னை எவ்வளவு முறை வேட்டையில் உயிருடன் காத்திருக்கின்றன? ஐயோ! இக்கைகளின்மீது விலங்கணிந்த குறிகள் தெரிகின்றனவே! அப்பா! அஹிம்ஸா! எனக்கு பகவான் நல்வழிவிடுவாரா?

அ.—கண்மணி! நான் சொல்லி நீ தட்டுவதில்லையே! அழவேண்டாம்; அழாதே. நீ யாதும் தவறு செய்யவில்லை. எல்லாவற்றையும் நான் உன்னிடத்து வந்து தெரிவிக்காத குற்றந்தான். அது போகிறது; அற்ப விஷயம். அடிக்கடி நினைத்து வருந்தாதே. அன்னையிடம் போவோம்வா. அன்னையைப்பார்த்து விட்டுப்போக வேண்டும்.

ஸ்ரீ.—அஹிம்ஸா! முன்னமேயே, அப்பெண் உன்மீது காதலுற்ருள் என்று தெரிவித்திருந்தால் நான் அவளிடம் சென்றே இருக்கமாட்டேனே! அவளாவது என்னிடத்தில் அறிவித்திருக்கலாகாதா? எல்லோரும் எனக்கிருந்த மோகத்தைக்கண்டு சொல்லத்துணியவில்லை போலும்!

அ.—ஸ்ரீகரா! இதோ சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேள். முதலில் நீ என்னை யனுப்பியபொழுது, நான் அவளை நன்றாகக் கூடப்பார்க்கவில்லை. அவளுடன் நான் தலை குனிந்தவண்ணமே சம்பாஷித்து வந்தேன். அதற்கு நல்ல வேளையாய் என்னிடம் அச்சமயம் என்னைப் போல் வரையப்பட்ட ஒரு படம் இருக்கிறது. அந்தப் படத்தின் சாஷியத்தைக் கொண்டு நீ உண்மையை அறிந்துகொள். பிறகு அவளை விட்டுப் பிரியும் பொழுது என் மனம் கொஞ்சம் தடுமாட்டத்தை அடைந்ததை நான் அறிந்து கொண்டேன். ஆனதுபற்றித்தான் நான் இரண்டாம் முறை, நீயும் அன்னையும் எவ்வளவு பிடிவாதமாய்ச் சொல்லியும் போக எளிதில் ஒப்புக்கொள்ளவில்லை. என்சித்தத்தை நான் நம்புவதற்கில்லை என்று தெரிந்து கொண்ட பொழுது, நான் எப்படி அங்கே போகத் துணிவேன்? ஆகையால்தான் நான் இனி அங்கே செல்லேன் என்றேன். உனக்கு ஞாபகம் இல்லையா?

ஸ்ரீ.—நன்றாய் ஞாபகமிருக்கிறது. உன் எண்ணத்தைச்சந்தேகித்து நான்பேசியதும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

அ.—பிறகு நீ ஏசியதும் ரோஷம் பொறுக்கமாட்டாமல், என் மனதை ஒருவாறுதிடப்படுத்திக்கொண்டு, அப் பெண் என் மீது ஒருக்காலும் காதல் கொள்ளமாட்டாள் என்றெண்ணி, நான் முடிவில் அங்கு செல்ல தைரியம் கொண்டேன். அங்கோ, நான் கொஞ்சமும் எதிர்பாராதபடி, அவள் என்னுடைய படத்தை மடியில் வைத்துக் கொண்டு, கண்ணும் கண்ணீருமாய் நிற்க, நான் என்ன செய்வேன்? அகப்பட்டுக் கொண்டேன் ஆபத்தில்! எல்லாம் உன்னிடத்து பின் தெரி

வித்து விடவேண்டியதென்றிருந்தேன். சமயம் வாய்க்கவில்லை.

ஸ்ரீ.—நீயேன் ஒருவருமறியாதபடி ஓடிப்போக வேண்டும்?

அ.—ஒருவரிடமும் சொல்லக்கூடாதென்பதுமில்லை; ஓடிப்போகவுமில்லை. உனக்குக் கொஞ்சம் சௌக்கியமானதும், இனி பயமில்லை என்று தெரிந்ததும், என் கண்மணியை ஒரு முறை பார்த்துவிட்டு வரலாமென்று போனேன். அங்கோ நான் அவளை அனுதரவு செய்ததாக எண்ணி, என்னைத்துறந்து, எங்கேயோ போய்விட்டாளென்று, அவள் எழுதிவைத்திருந்த ஒரு கடிதத்தின் மூலமாய் தெரிந்துகொண்டு, அவளைத் தேடி அவள்போனவழியே நானும்போனேன். காணுவிடில் உயிர் விடுவது என்று தீர்மானம். அப்படிப் போகும் வழியில், இங்கு கொண்டு வரப்பட்டேன். ஆனல் மனதிலுள்ள ஒரு பெருங்குறை நீங்கிற்று. உன்னன்பை மறுபடியும் அடைந்தேனே! அவளையும் கண்டு ஒருமுறைஅழுதுவிட்டுப்பிறகு உயிர்விடவேண்டும். அவளைப்பிரிந்து, நான் இனி உயிர்த்தரிப்பதில்லை. ஐயோ! நானெரு மகாபாபி. அவள் என் நடத்தையை ஒருக்காலும்ஒப்பாள். என்றாலும் ஒருமுறைகண்டால் போதும். பிறகு நெஞ்சத்தில் யாதும் குறையிராது. என் மீது அவளுக்குள்ள காதலுக்கு, என்னை நேரில் கண்டால், ஒருக்கால் என்னை மன்னித்தாலும் மன்னிப்பாள்.

ஸ்ரீ.—அஹிம்ஸா! நானே உனக்கு விசேஷ தீங்கு செய்து விட்டேன். அதற்கெல்லாம் பிரதியாக, இதோ உன் காதலியை உன்னிடம் சேர்ப்பித்தேன்.

(ஒரு பக்கத்தில் ஒரு கதவு திறக்க, லலிதையும், மாதங்கியும் தோன்றுகிறார்கள்.)

அ.—இதல்லவோ, எனக்குத்தக்க சிக்ஷை ? கண்மணி !

ல.—பிராணநாதா !

எல்லோரும் மறைகிறார்கள்.

## அங்கம்—ஐந்து

### 3-வது காக்ஷி

இடம்—சபாமண்டபம்.

காலம்—பிற்பகல்.

ஸோமதத்தன், ஹிதோபதேசன், சுத்தபிரம்ம சர்மன், சாபவர்மன், ஸ்ரீகரன், அஹிம்ஸன், ஸுபாக்ஷிணி, மாதங்கி, லலிதா.

ஸோம.—சபையோர்களே ! நாம் இந்நீண்டகாலமாய் இராஜ்ஜியபாரம் வஹித்து வந்ததில் நமது ஆளுகைக்கடங்கிய சகல பிரஜைகளும் விசேஷத் திருப்தியுடனும் மிகுந்த இராஜவிசுவாசத்துடனும் இருந்துவந்து, நமது செங்கோலுக்குட்பட்ட சகலநாடுகளும், அதிவிருஷ்டி, அநாவிருஷ்டி முதலிய ஈதி பாதைகளில்லாமல், ஸுபிக்ஷமாயிருந்து வந்து, நம்மைக்கண்டு அந்நிய நாட்டார் பொறாமை கொள்ளும்படி ஏற்பட்ட இத்யாதி பெருமைகளுக்கெல்லாம் எனது குரு மந்திரி முதலியவர்கள் நமக்கெப்பொழும் ஹிதத்தையே எடுத்துரைத்து, இராஜாங்கத்தை நடத்தி வந்ததே காரணம். நமததிர்ஷ்ட வசத்தால் நாம்

விசேஷ பகவத் பிரஸாதத்திற்குப் பாத்திரராகி, இவ்வுத்தமமான ஆலோசனை சபை நமக்கேற்பட்டது. இனி நாம் மூப்படைந்தமையால், நமது குலாசாரத்தை அனுசரித்து, நானும் என் பத்தினியும் இராஜ்ஜியத்தைப் புத்திரனிடத்தில் அர்ப்பணம் செய்து விட்டு, வானப்பிரஸ்தாசிரமமடைந்து, ஈசுவர கைங்கரியத்தில் ஈடுபட்டு, காலங்கழிப்பதாய்த் தீர்மானித்திருக்கிறோம். இதுதான் உசிதம் என்று எனது குலகுருவும் ஒப்புகிறார். சபையோர்களே! நாம் இதுகாறும் செங்கோல் செலுத்தியதில், குற்றங்குறைகளிருந்தாலும் தங்களது ஆலோசனைகளை எப்பொழுதாவது அசட்டைசெய்திருந்தாலும் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குப் பிறகும் எனது மகனது இராஜ்ஜியபாரத்தையும், கடவுளுக்கொப்பாக நடத்திவைக்க வேண்டியது உங்களது கடமை. அரசன் நீதி தவறி நடப்பானாயின், அந்தப் பழியின் ஒருபாகம் மந்திரி குரு முதலானவர்களையும் சேருமல்லவா? ஆகவே தெய்வத்திற்கும் பாபத்திற்கும் பயந்துஇனியும் இந்த இராஜ்ஜியத்தை நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். எனது மைந்தனது விவாககோலத்துடன், அவனுக்கு முடி சூட்ட எத்தனித்திருப்பது, தங்கள் அனைவருக்கும் சம்மதந்தானே?

சுத்த.—ஸோமதத்த இராஜனே! எல்லாம் பகவத்சங்கல்பம். உனக்குப்பிறகும் ஸ்ரீகரனது இராஜ்யபாரம் இன்னும் விசேஷ கீர்த்தியுடன் நடைபெறும் என்பதற்கையமில்லை. ஆனால் உன்னைவிட்டுப்பிரிய எனக்கு சற்றும் மனமில்லை. எங்களுக்கேற்பட்ட விசேஷ வாழ்வும்,

பெருமையும் பிறவும் எங்களுக்கு யாதும் பாத்தியமில்லை. அவைகளுக்கெல்லாம் காரணம், உன்னுடைய விசேஷபுத்தி ஸூக்ஷ்மமும் உனது பத்தினியின் அபரிமிதமான தெய்வபக்தி, பெருந்தன்மை முதலிய நற்குணங்களுமே காரணம். எனக்கொரு வரமளிப்பாய். எனது புத்திரனும் சாஸ்திரத்தில் விசேஷப் பாண்டித்தியமடைந்திருப்பதுடன், நல்லொழுக்கமுள்ளவனும் சிஷ்டனும் ஆசார சீலனுமிருக்கிறான். இனி அவனைக் குலகுருவாக வைத்துக்கொண்டு, ஸ்ரீகரனை இராஜ்யபாரம் செய்யும்படி ஸ்ரீகரனுக்கு உத்தரவளிப்பாய். நானும் உன்னைக்காட்டிலும் விரக்திடைந்தவன். உன்னுடன் என்னையும் கூட்டிப்போவாய்.

ஸோ.—அப்படியே. ஸுபாக்ஷிணியும் தங்களை அழைத்துப்போக வேண்டித்தான் பிடிவாதமாய்ச் சொல்லுகிறாள்.

ஸுபா.—ஆம். குலகுருவை அழைத்துப்போவதாய் நான் முன்னமேயே வாக்குக்கொடுத்துவிட்டேன். அழைத்துத்தான் செல்லவேண்டும்.

ஹிதோ.—மகராஜ்! எனக்கொரு வரம் அளிக்கவேண்டும்.

ஸோ.—அமாத்தியா நீயும் வந்துவிடுகிறாயோ?

ஹிதோ.—தாங்கள் பட்டத்திற்கு வருவதற்கு இரண்டு வருஷம் முன், எனக்கு தங்கள் தந்தை மந்திரிப் பட்டமளித்தார். ஆனதுபற்றி நானும் கொஞ்சம் விச்ராந்தியடைய விரும்புகிறேன்.

ஸோ.—மந்திரி! நீயும் இராஜ்யத்தைவிட்டு வருவதானால், முழுதும் சிறுபிள்ளைகளைநம்பி எவ்வாறு இராஜ்ஜியத்தைவிட்டு விலகுகிறது?

சாப.—இராஜனே, முன்னுடியே நான் என் இராஜ்யத்தைத் தங்கள் மகனிடம் தங்களின்பொருட்டு ஒப்புவித்து விட்டேன். ஆகையால் இருண்டு இராஜ்யத்தின் கொடிகளை ஒன்ருக்கி, ஒரு மகுடாபிஷேகம் செய்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எனது அண்ணன் மகளுக்கும் மருமகனுக்கும் அது சம்மதிதான். அப்படியே செய்யவேண்டும். வேனிற்காலத்தில் ஒரு மாதத்திற்குச் சமுத்திரக்கரையோரமாய் புகார் நகரத்தில் இராஜ்யம் நடத்தலாம்.

ஹிதோ.—மகராஜ்! தாங்கள் கவலைப்படவேண்டாம். முதலில் ஸ்ரீகரன் இராஜ்ஜியம் வகிக்குங்கால் மந்திரி முதலானவர்கள் அங்கத்திற்கு மட்டுந்தானே ஆவார்கள்? மேலும் இராஜ்ஜிய தந்திரத்தில் அனுபவமுள்ள மாதங்கியுமிருக்க, என்ன கவலை? என் ஸ்தானத்திற்கு வேண்டுமானுல், ஸ்ரீகரனிடத்தில் விசேஷ அன்பும் நட்புமுள்ள அஹிம்ஸனிருக்குங்கால், தாங்கள் அவசியம் எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். இப்பொழுதே அஹிம்ஸனுக்கு முதன் மந்திரிப்பட்டம் கட்டவும். குருமஹராஜ்! நான் சொல்வது அங்கீகரிக்கத் தக்கதுதானே?

சுத்த.—ஆம் முற்றிலும் அங்கீகரிக்க தக்கதுதான். ஆனுல் எனக்கு ஒரு நியாயம் தோன்றுகிறது. அஹிம்ஸனுக்கு மந்திரிப்பட்டம் கட்டுவதைவிட, புகார் இராஜ்ஜியத்துக்குச் சிற்றரசனுக முடிசூட வேண்டுமென்று தோன்றுகிறது.

அ.—குரோ! மன்னிக்கவேண்டும். எனக்கு இராஜ்ஜியம் வேண்டாம். நான் இனி ஸ்ரீகரனைவிட்டு அரை நிமிஷங்கூடப் பிரியேன். என்னை மன்னிக்கவேண்டும்.

ல.—என்ன நாதா! என்னை விட்டு அரை நிமிஷங்கூடப் பிரிவதில்லை என்று இருந்து இரவு சத்தியம் செய்து கொடுத்தீர்களே!

அ.—ஆம். அதனால், என்ன? இரண்டுபேரையும் விட்டுப் பிரிவதில்லை.

மா.—என்ன நாதா! இதற்காகத்தானோ இவ்வளவு பாடு? உங்களை நண்பர் அடித்துக்கொண்டுபோய் விடுகிற தோ? அப்புறம் நானெங்கே போகிறது?

அ.—மாதங்கி! உனக்குப் பிறகுதானே என் பாத்தியம் ஏற்படும். கவலைப்படாதே.

ஸ்ரீ.—பிதா, குரோ, மந்திரிமுதலிய பெரியோர்களே! நான் ஒரு வார்த்தை சொல்லத் துணிகிறேன். எனது பிதாவையும், மாதாவையும் திடீரென்று விட்டுப்பிரிய நான் ஒருக்காலும் சம்மதியேன். குரு மந்திரி முதலான விசேஷ இராஜ்ஜிய அனுபவமுள்ள பெரியோர்கள் உடன் விலகினால், நான் எவ்வாறு இப்பெரும் பாரத்தைச் சுமப்பேன்? இராஜ்ஜியத்தைக் குடியரசாக விட்டு நானும் பின்தொடருகிறேன்.

சுத்த.—ஸ்ரீகரா! கொஞ்சமும் அதைரியப்படவேண்டாம். நீயும் உனக்கு வாய்த்திருக்கும் மாதங்கியுமிருக்க, அஹிம்ஸனது பலத்தைக்கொண்டு, உனது இராஜரீகம் விசேஷ சிறப்புடன் நடைபெறும்என்பதற்குச்சந்தேகமில்லை. ஆயினும்உனதிஷ்டத்தை அனுசரித்து நாங்கள் சமீபத்திலுள்ள கானகத்தில் ஆசிரமம் ஏற்படுத்திக் கொண்டு, சிறிதுகாலம் வசித்து வருகிறோம்.

நீயும்அடிக்கடி வந்து இராஜாங்கத்தின் விசேஷங்களையெல்லாம் தெரிவித்துக் கொண்டிருப்பாய். நாங்களும் எல்லாம் விசாரித்து உனக்கு அனுபவமில்லாக் குறையை நிவர்த்தித்துவருகிறோம். ஸ்ரீகரா! உனக்கு தீர்க்காயுசும், சர்வமங்களமு முண்டாகுக. இதோ, உனது தந்தையால் அர்ப்பணம்செய்யப்படும் இராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்.

ஜய, ஜய, ஜய, ஜய என்ற கோஷ்டம்.




PRINTED AT THE COMMERCIAL PRESS, MADRAS S. E.